

மகா பெரியவாளின் **தெய்வத்தின் குரல்** தொகுப்பாசிரியர்

பூஜ்ய **ரா. கணபதி அண்ணா** பற்றிய

**சில நினைவுகள்**

## உள்ளே...

ஓர் அறிமுகம்

1. நவீன வியாசர் ரா. கணபதி
2. ஆரம்ப கால சந்திப்புகள்
3. அண்ணாவுடன் நெருக்கம்
4. அண்ணா சொன்ன மூன்று சம்பவங்கள்
5. ஸ்வாமி லீலைகள் சில
6. அண்ணாவின் நூல்கள் சில
7. அண்ணாவின் எழுத்து - சில முக்கிய விஷயங்கள்
8. அண்ணாவும் நானும்
9. பெண்மை என்பதைக் காப்பாற்ற வேண்டும்
10. எம்எஸ், ராஜாஜி - சில தகவல்கள்
11. இது தான் ஸ்வாமி
12. பெரியவா, அண்ணா - சில தகவல்கள்
13. பெரியவா கருத்துகள் - ஒரு கண்ணோட்டம்
14. சாஸ்திரம் என்பது என்ன?
15. தெய்வத்தின் குரல் - சில தகவல்கள்
16. துறவு என்பது
17. அண்ணாவின் அனுக்கிரகம்
18. நந்தவனத்தில் ஓர் ஆண்டி

**ஓர் அறிமுகம்**

அனைவருக்கும் நமஸ்காரம்.

ரா. கணபதி அண்ணாவைப் பற்றிப் பல விஷயங்களை அனைவருடனும் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்ற ஆவல் நிறையவே உண்டு. ஆனாலும், அது தவறு என்றே இது வரை கருதி வந்திருக்கிறேன். அண்ணாவைப் பற்றி எழுதுவது அண்ணாவுக்கு விருப்பம் இல்லாத செயல் என்பதே இதற்கான முக்கியக் காரணம்.

அண்ணா எந்தச் சூழ்நிலையிலும் தன்னை முன்னிலைப்படுத்திக் கொள்ள விரும்பியதில்லை - அவரது மாபெரும் பணியாகிய தெய்வத்தின் குரல் உட்பட, எதிலுமே அவர் தன்னைப் பற்றிப் பெரிதாக எதுவும் எழுதியதில்லை. தன்னை முன்னிறுத்திக் கொள்வதோ தனது பணிகளுக்காக ஏதாவது அங்கீகாரம் தேடிக்கொள்வதோ அவருக்குப் பிடிக்காத விஷயங்கள். வாழ்க்கைத் தேவைகளுக்குப் பணம் வேண்டும். அதைத் தேடிக் கொள்வதற்கு அவரிடம் இருந்த ஒரே கருவி எழுத்துப் பணி மட்டுமே. எனவே, தனது எழுத்துக்கு அவர் பணம் பெற்றுக் கொண்டார். கிடைத்த தொகை அல்பம் என்பது மட்டுமல்ல, அந்தப் பணத்திலும் சொற்பமான அளவை மட்டுமே அவர் தனது தேவைகளுக்காகப் பயன்படுத்தினார்.

ஓர் உதாரணத்தை இங்கு அவசியம் குறிப்பிட வேண்டும். அண்ணா பற்றிய இரங்கல் கட்டுரை கல்கியில் வெளியாகி இருந்தது. அதில் வெளியிடுவதற்கு அவரது ஃபோட்டோ அவர்களுக்குக் கிடைக்கவில்லை. அண்ணாவின் எழுத்து ஆரம்பமானதற்குக் காரணமே கல்கி சதாசிவம் தான். தெய்வத்தின் குரலுக்கான விஷயங்களை அண்ணா சேரிக்க ஆரம்பித்ததும் கல்கி பத்திரிகைக்காகத் தான். எனினும், கல்கி நிர்வாகத்தினரிடம் அவரது புகைப்படம் இல்லை. வேறு வழி இல்லாமல், அவர்கள் தினமணியில் பயன்படுத்தி இருந்த ஃபோட்டோவைத் தங்களது இரங்கல் கட்டுரையில் பயன்படுத்தினார்கள். காரணம், அண்ணாவுக்குப் புகைப்பட நாட்டம் கூடக் கிடையாது. மிகச்சில சந்தர்ப்பங்களில் மிகச்சிலர் மட்டுமே தன்னைப் புகைப்படம் எடுக்க அவர் அனுமதித்திருக்கிறார்.

அவரது இறுதி நாட்களில் அவரைப் பற்றிய விவரங்களைச் சேகரித்து வெளியிட வேண்டும் என்று இரண்டு அன்பர்கள் என்னைத் தொடர்பு கொண்டு கேட்டனர். ஒருவர் பெரியவா பக்தர். அண்ணாவுக்கு நன்கு பரிச்சயமானவர். அவர் அண்ணாவின் விரிவான பேட்டி தேவை என்று என்னிடம் கேட்டார். "என்னிடம் கேட்பானேன், அண்ணாவிடமே கேளுங்கள்" என்று கூறினேன். "அண்ணா அதை விரும்ப மாட்டார். நீ சம்மதம் வாங்கித் தா" என்று அவர் கேட்டார். நான் மறுத்து விட்டேன்.

பின்னர், அந்த மனிதர், "அண்ணாவிடம் சாதாரணமாகப் பல்வேறு விஷயங்கள் பற்றி உரையாடுகிறேன், அவருக்கே தெரியாமல் அந்த உரையாடலை வீடியோ ரெகார்ட் பண்ணிக் கொள்கிறேன்" என்று என்னிடம் தெரிவித்தார். "அது உங்கள் விருப்பம், ஆனால், எனக்கு அதில் உடன்பாடு இல்லை" என்று கூறி விட்டேன். எனினும், அவர் இந்த முயற்சியில் இறங்கவில்லை. காரணம் தெரிந்து கொள்ளும் ஆர்வமும் எனக்கு இல்லை.

இரண்டாவது நபர் ஒரு பத்திரிகையாளர். அண்ணாவைப் பற்றி எனக்குத் தெரிந்த விஷயங்கள் அனைத்தையும் நான் அவரிடம் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று அவர் விரும்பினார். அண்ணாவைப் பற்றி ஒரு புத்தகம் வெளியிட வேண்டும் என்பது அவரது ஆவல். அதிலும் எனக்கு உடன்பாடு இல்லை.

அண்ணாவின் பூத உடலைத் தரிசிக்க வந்த பக்தர் ஒருவர், தனது இயக்கம் நடத்தும் பத்திரிகையில் அண்ணாவைப் பற்றி ஓர் இரங்கல் கட்டுரை எழுதுமாறு கேட்டுக் கொண்டார். நான் எழுதவில்லை.

அண்ணா மறைவுக்குப் பின் அவரைப் பற்றிப் பொதுவெளியில் எழுத வேண்டும் என்று எனக்கு ரொம்பவே ஆசை. ஆனாலும் எழுதவில்லை.

அண்ணா மறைந்த சில நாட்கள் கழித்து ஸ்வாமி ஓங்காராநந்தர் சென்னை வந்திருந்தார். அண்ணாவைப் பற்றி வேதநெறியில் (ஸ்வாமிஜி ஓங்காராநந்தரின் ஆசிரமப் பத்திரிகை) எழுதுமாறு அவர் எனக்கு

உத்தரவிட்டார். உடனே ஆசை ஆசையாக ஒருசில விஷயங்களை எழுதிக் கொடுத்தேன். அதன்பிறகு இரண்டு சந்தர்ப்பங்களில் எழுதியதும் உண்டு. அண்ணா நினைவு நாள் நிகழ்ச்சி ஒன்றும் நடத்தியதுண்டு.

ஆனாலும், அண்ணாவுக்குப் பிடிக்காத விஷயத்தைச் செய்கிறோமே என்ற மனசாட்சி உறுத்தல் நிறையவே இருந்தது. இப்போதும் இருக்கிறது.

என் தயக்கத்துக்கு வேறுசில காரணங்களும் உண்டு.

அண்ணாவைப் பற்றி எழுதுவது என்றால், நான் அவரைப் பார்த்த கோணத்தில் மட்டுமே என்னால் எழுத முடியும். இதில், அவருக்கும் எனக்கும் இடையே நிலவிய அந்நியோன்னியமும் உண்டு. ஊடல்களும் உண்டு. (அந்நியோன்னியத்தின் உச்சபட்சம் தான் ஊடல்.) சாக்ஷாத் அம்பாள் வடிவம் என்று மனதளவில் அவரை நான் தஞ்சமடைந்ததும் உண்டு, அடிவயிற்றில் இருந்து அவரைச் சபித்ததும் உண்டு. இரண்டுமே பெர்சனல் விஷயங்கள். இதையெல்லாம் நான் ஏன் பொதுவெளியில் சொல்ல வேண்டும்?

மேலும், அண்ணா என்பவர் ஒரு தனிமனிதர் அல்ல. என்னதான் அவர் தனிமைக் குகைக்குள் அடைந்திருந்தாலும் அவரைச் சுற்றி ஏராளம் பேர் இருந்தனர், அவ்வப்போது எத்தனையோ விஷயங்கள் அலையடித்தன. அவற்றை எல்லாம் எழுதுவது சம்பந்தப்பட்ட நபர்களுக்கு உவப்பான விஷயமாக இருக்காது என்பதும் ஒரு காரணம். (அண்ணா பெரியவாளின் சரிதம் எழுத ஆரம்பித்ததும், அதற்கு ஆசி அளித்த பெரியவாளே அதைப் பிரசுரம் பண்ண வேண்டாம் என்று தடை போட்டதும் உங்களுக்குத் தெரிந்திருக்கலாம். அதற்குப் பெரியவா சொன்ன காரணமும் இத்தகையதே.)

இவற்றைப் பற்றியெல்லாம் சொல்லாமல் அண்ணாவைப் பற்றி வேறு என்ன தான் சொல்வது?

எனினும், இப்போது அண்ணா பற்றி விரிவாக எழுத விரும்புகிறேன். இதற்குக் காரணம் ஸ்ரீ மோகனராமன்.

ராமபிரானையும் கிருஷ்ணனையும் ஒப்பிட்டு அண்ணாவிடம் பெரியவா கூறிய கருத்துகளைச் சில மாதங்கள் முன்பு, **பூஜ்ய மகா பெரியவா பார்வையில் கிரேடா தன்பர்க், திஷா ரவி** என்ற தலைப்பில் சமூக வலைத்தளங்களில் எழுதி இருந்தேன். இதைத்தொடர்ந்து ஸ்ரீ மோகனராமன் அவர்கள், அண்ணா என்னிடம் கூறிய இதர விஷயங்கள் பற்றியும் எழுதுமாறு மெயில் அனுப்பி இருந்தார். அதன் பின்னரும், எனது தயக்கம் நீடித்தது.

அண்ணா வாழ்வில் திரு மோகனராமன் மிக முக்கியமானவர். அண்ணாவின் கையெழுத்து மனிதர்களை ரொம்பவே படுத்தி விடும். எழுபதுகளில் அண்ணாவிடம் வந்து சேர்ந்த மோகனராமன், அண்ணாவின் கையெழுத்துப் பிரதிகளைப் படிப்பவர்களுக்குப் புரியும் விதத்தில் எழுதிக் கொடுத்தார். சில வருடங்கள் அண்ணா அவரது இல்லத்தில் தங்கியும் இருக்கிறார். அவரும் அவரது மனைவியும் அண்ணாவைத் தங்கள் குடும்பத்தில் ஒருவராகவே பாவிப்பவர்கள். பெரியவாளுக்கு அண்ணா எப்படியோ, அதுபோலவே, அண்ணாவுக்கு மோகனராமன் என்பது என் கருத்து.

அண்ணா பற்றி எழுதுவது அண்ணாவுக்குப் பிடிக்காது என்பது எனக்கே தெரியும் போது, மோகனராமனுக்குத் தெரியாதா? அதில் தவறு இல்லை என்று அவர் நினைப்பதால் தானே என்னை எழுதச் சொல்கிறார்? அவரே தவறு இல்லை என்று நினைக்கும் போது எனக்குத் தயக்கம் தேவை இல்லை, அல்லவா? எனவே தைரியமாக எழுதலாம் என்ற எண்ணம் தோன்றியது.

ஸ்வாமி ஓங்காரானந்தரின் ஆசிரமப் பத்திரிகையில் நான் எழுதிய கட்டுரையைப் படித்த ஓர் அன்பர், "அண்ணாவைப் பற்றிப் பத்திரிகைகளில் வெளியான இரங்கல் செய்திகள் அனைத்தையும் படித்தேன். அவற்றில் அவரைப் பற்றிய தகவல்கள் குறைவாகவே இருந்தன. உனது கட்டுரையில் மட்டும் தான் அண்ணாவைப் பற்றி நிறைய செய்திகள் இருந்தன" என்று தெரிவித்தார். அந்தக் கட்டுரையில் நான் எழுதிய விஷயங்கள் தவிர இன்னும் நிறைய விஷயங்களை நான் எழுத முடியும்.

எனது கல்லூரிப் பேராசிரியர் ஸ்ரீ. ஏ.டி. ராமஸ்வாமி ஒரு சாயி பக்தர். அவர் வேதநெறி கட்டுரையைப் படித்ததும் என்னைத் தொடர்பு கொண்டு பேசினார். "அவருடைய புஸ்தகங்கள் நிறைய படிச்சிருக்கேன்ப்பா.

ஆனால், அவரது பெயர் ரா. கணபதி என்பதற்கு மேல் அவரைப் பற்றி எதுவும் தெரியாது. உன்னுடைய கட்டுரையைப் படிச்சதும் தான் அவர் எவ்ளோ பெரிய மகான்-னு புரிஞ்சுது" என்று தொலைபேசியில் கூறினார். உணர்ச்சி வேகத்தில் அவரால் சரியாகப் பேசக் கூட முடியவில்லை. இவரைப் போல ஏராளமான சாயி பக்தர்களும், பெரியவா பக்தர்களும் அண்ணாவைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டாமா? அண்ணாவுடன் சுமார் 17 ஆண்டு காலம் இருந்தவன் என்ற முறையில் அவரைப் பற்றிய பல விஷயங்களை பக்தர்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டிய கடமை எனக்கு இருக்கிறது அல்லவா?

இத்தகைய காரணங்களால் அண்ணாவைப் பற்றி எழுதுவது நியாயம் என்ற சிந்தனையும் இருந்தது. கூடவே, தயக்கமும் இருந்தது.

இடையில் திரு. கணேஷ் சர்மாவைச் சந்திக்க வேண்டி வந்தது. அவரிடம் இந்த விஷயம் குறித்துப் பேசிக் கொண்டிருந்தேன். அப்போது அவர், சிவன் சார் (மகா பெரியவாளின் பூர்வாசிரமத் தம்பி) வாழ்க்கையில் நடந்த ஒரு சம்பவத்தை விளக்கினார். சிவன் சார் சீடரான ஓர் அன்பர் ஒருமுறை வெளியூர் சென்றிருக்கும் போது யாரோ ஒருவர் சிவன் சார் பற்றி அவரிடம் விசாரித்தாராம். இந்த மனிதருக்குக் குஷி தாங்கவில்லை. சார் குறித்து அவரிடம் நீண்ட நேரம் உணர்ச்சி பொங்கப் பேசிக் கொண்டிருந்தாராம். பின்னர் ஊர் திரும்பியதும் சிவன் சார் தரிசனத்துக்காகப் போகிறார். மனசுக்குள் ஒரே உதறல். 'சாரைப் பற்றிப் புகழ்ந்து பேசுவது சாருக்குக் கொஞ்சம் கூடப் பிடிக்காத விஷயம். அவரைப் பற்றி நான் நீண்ட நேரம் பேசிக்கொண்டிருந்தேன். நான் செய்தது சார் மனசுக்குப் பிடிக்காத செய்கை என்ற மனசாட்சி உறுத்தலுடன சாரைப் பார்ப்பதற்காகப் போகிறார். 'நீ செய்தது தவறு' என்று சார் திட்டவில்லை. மாறாக, "குருவின் பெருமைகளைப் பற்றிப் பேச வேண்டியது சிஷ்யனின் கடமை" என்று சார் அவரிடம் சொன்னாராம்.

அதுபோலவே தான் எனக்கும் அண்ணாவுக்குமான உறவு என்று என் மனம் நம்புகிறது. அண்ணா என்னைத் தன்னுடைய சிஷ்யன் என்று ஒருபோதும் சொன்னதே இல்லை. ஆனால், நான் அவரை என்னுடைய குருவாகத் தான் கருதுகிறேன். எனவே, சிவன் சார் சொன்னது போல, அண்ணாவைப் பற்றிப் பேசுவதும் எழுதுவதும் என் கடமை என்று என் மனம் நம்புகிறது. இது அண்ணாவுக்குப் பிடிக்காத விஷயம் என்றாலும், எனது கடமையைத் தானே நான் செய்ய விரும்புகிறேன்?

இதெல்லாம் ஒருபுறம் இருக்கட்டும். அண்ணா செய்யச் சொன்ன விஷயங்கள் எல்லாவற்றையும் நான் செய்து விட்டேனா? அல்லது, செய்யாதே என்று சொன்ன விஷயங்களைச் செய்யாமல்தான் இருக்கிறேனா? இரண்டுமே இல்லை. பின்னர் அண்ணாவைப் பற்றி எழுதுவதில் மட்டும் ஏன் எனக்குத் தயக்கம் இருக்க வேண்டும்? இது போலித்தனமான அடக்கமோ என்ற கேள்வியும் எழுகிறது.

எனவே, ஒருவழியாக, தயக்கத்துக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு, அவரைப் பற்றி எழுதலாம் என்று முடிவெடுத்தேன்.

இதைத்தொடர்ந்து, அவ்வப்போது மனதில் தோன்றிய விஷயங்களை, **அண்ணா என் உடைமைப் பொருள்** என்ற தலைப்பில் சமூக வலைத்தளங்கள் மூலம் சில அன்பர்களுடன் பகிர்ந்து கொண்டேன். அவற்றை முறைப்படுத்தி அமைத்து ஒரு புத்தகமாக இப்போது வெளியிடுகிறேன். அண்ணாவின் அன்புத் தம்பியரில் ஒருவரான ஸ்ரீ பால மோகன்தாஸ் எழுதியுள்ள நவீன வியாசர் ரா. கணபதி என்ற கட்டுரையையும் இத்துடன் சேர்த்திருக்கிறேன்.

அண்ணாவைப் பற்றி எழுதுவதில் தயக்கம் இருந்தது போலவே, அவரது புகைப்படத்தை வெளியிடுவதிலும் தயக்கம் இருந்தது. இருப்பினும், ஒருசிலர் தங்கள் பூஜையறையில் அவர் படத்தை வைக்க விரும்பலாம். எனவே, அவர்களுக்கு உதவும் விதத்தில் அவரது புகைப்படத்தையும் வெளியிட்டிருக்கிறேன்.

தெய்வத்தின் குரல் என்ற பிரசாதத்தை நமக்கு விநியோகம் செய்தவர் அண்ணா. அவரது வாழ்க்கையே நம் அனைவருக்கும் பிரசாதம் தான். எனவே, அவரைப் பற்றி எழுதுவதும் பிரசாத விநியோகமே.

இந்தப் பிரசாத விநியோகம் டிஜிடல் நூல் வடிவில் வெளியாகிறது. விருப்பம் உள்ள அன்பர்கள் இதைப் பிறருக்கும் விநியோகிக்கலாம்.

நமஸ்காரத்துடன்,

**வேதா. டி. ஸ்ரீதரன்**

## 1. நவீன வியாசர் ரா. கணபதி

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தின் 68வது பீடாதிபதியாக விளங்கிய ஜகத்குரு சங்கராச்சாரியார் ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் மீது அளவிலா பக்தி கொண்ட ஸ்ரீ ராமச்சந்திர ஐயர் - ஸ்ரீமதி ஜெயலட்சுமி அம்மாள் தம்பதியருக்கு, 1935ம் ஆண்டு விநாயகர் சதுர்த்தி அன்று மகனாகப் பிறந்தவர் ரா. கணபதி. ராமச்சந்திர ஐயர் சிதம்பரத்தையும், ஜெயலட்சுமி அம்மாள் கடலூரையும் சேர்ந்தவர்கள். இந்த தம்பதியருக்கு இரண்டு குழந்தைகள். முதலில் பிறந்த பெண் குழந்தைக்கு த்ரிபுரசுந்தரி எனப் பெயரிட்ட பெற்றோர், விநாயகர் சதுர்த்தியன்று பிறந்த இரண்டாவது குழந்தைக்கு கணபதி எனப் பெயரிட்டனர்.

பகவத் கீதை குறித்த ஆதிசங்கரரின் பாஷ்ய உரையை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர் ராமச்சந்திர ஐயர். அவரது இந்த ஆங்கில நூலுக்கு முகவுரை எழுதியவர் ஸ்வாமி ரங்கநாதானந்தர். இந்த நூலை வெளியிட்டவர் அன்றைய பிரதமர் ஸ்ரீ ராஜிவ் காந்தி.

மகா பெரியவாளுக்கும் ஸ்வாமிக்கும் மிகவும் நெருக்கமாக இருந்த அவருக்கு, ராமகிருஷ்ணரின் நேரடிச் சீடரான பிரம்மானந்தரிடம் மந்திரோபதேசம் கிடைத்தது. அவர் ராமகிருஷ்ணா மாணவர் இல்லத்தில் தங்கி ப்ரெசிடென்சி கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த போது பிரம்மானந்தர் சென்னை வந்திருந்தார். மடத்தில் ராமச்சந்திரனின் சிரத்தை மிகுந்த பணிவிடைகளால் அகமகிழ்ந்த பிரம்மானந்தர் மிகுந்த மன எழுச்சியுடன் தானாகவே அவருக்கு மந்திர உபதேசம் செய்திருக்கிறார்.

குடும்பச் சூழல் காரணமாகப் படித்து வேலைக்குப் போனாலும், ராமசந்திர ஐயரது வாழ்க்கை பெரும்பாலும் ஆன்ம சாதனையிலேயே கழிந்தது. சுமார் 300 வருடங்களுக்கு முன்பு இவரது மூதாதையர் இல்லத்துக்கு ஒரு துர்கா பரமேஸ்வரி விக்கிரகம் வந்து சேர்ந்தது. அது பாரம்பரியமாக இன்றளவும் அந்தக் குடும்பத்தினரால் வழிபடப்பட்டு வருகிறது. ராமச்சந்திர ஐயர் தினசரி மிகுந்த சிரத்தையுடன் அந்த அம்பாளுக்குப் பூஜை பண்ணுவதுண்டு. அவர் எப்போது தரிசனத்துக்கு வந்தாலும் பெரியவா அவருக்கென்று பிரத்தியேகமாகச் சிறிது நேரம் ஒதுக்கி அவருடன் உரையாடுவாராம். தேவி உபாசனையில் அவ்வப்போது தனக்கு ஏற்படும் ஐயங்களுக்கான விளக்கத்தை அவர் பெரியவாளிடம் கேட்டுத் தெரிந்து கொள்வார்.

ரா. கணபதி திருமணம் செய்து கொள்ளாததால், தனது அப்பாவுக்குப் பின்னர், குடும்ப தேவதையின் வழிபாட்டைத் தொடர முடியாமல் போனது. (கிருஹஸ்தர்களுக்கு மட்டுமே அந்த பாத்தியதை உண்டு.) எனவே, அவரது ஒண்ணு விட்ட தம்பி ஒருவர் உபாசனைகளைத் தொடர்கிறார்.

சாயிபாபாவின் அனுக்கிரகமும் பரிபூரணமாகப் பெற்றவர் ராமசந்திர ஐயர். அவரது இறுதி நிமிடங்களில் மிகவும் எதிர்பாராத விதமாக சாயிபாபாவின் விபூதி அவரை வந்தடைந்தது. விபூதியைத் தரித்துக் கைகூப்பியவாறே அனாயாசமாக அவர் உயிர் நீத்தார்.

ரா. கணபதியின் தாயார், ஜெயம்மா என்று அழைக்கப்பட்ட ஜெயலட்சுமி அம்மாள், கிரஹலட்சுமியாக இருந்து குடும்பத்தைக் காத்தவர். தேவியின் பூஜைகள் கிரமம் தவறாமல் நடப்பதற்கு நைவேத்தியங்களைத் தயார் செய்த பாக்கியசாலி.

ரா. கணபதி, சென்னையில் உள்ள இந்து உயர்நிலைப் பள்ளியில் பள்ளிப் படிப்பை முடித்தார். மாநிலக் கல்லூரியில் ஆங்கில இலக்கியத்தில் ஹானர்ஸ் பட்டம் பெற்றார்.

இந்தக் காலகட்டத்தில் தான் ஓரிருக்கையில் முதல் தடவையாக அவர் மகா பெரியவாளை தரிசனம் செய்தார். அந்த நாட்களில் ரா. கணபதிக்கு ஆசார - அனுஷ்டானம், சடங்கு சம்பிரதாயங்கள் முதலியவற்றின் மீது நம்பிக்கை இல்லை. ஆனால், பெரியவாளின் தரிசனத்திற்குப் பிறகு வீடு திரும்பிய கணபதியின் மனம் முழுவதும் பெரியவா ஆட்கொண்டு விட்டார். இதைப் பிற்காலத்தில் தடுத்தாட்கொண்ட புராணம் என்ற தலைப்பில் அவர் விரிவாக எழுதியுள்ளார்.

தனது மகன் ஐஏஎஸ் படிக்க வேண்டும் என்பது ராமச்சந்திர ஐயரின் விருப்பம். ஆனால், ரா. கணபதி இளவயதில் நுரையீரல் பாதிப்பால் சுமார் நான்கு ஆண்டுகள் அவதிப்பட்டார். இதைத்தொடர்ந்து அவர்

பத்திரிகைத் துறையைத் தேர்ந்தெடுத்தார். தினச்செய்தி என்ற நாளிதழில் அவரது பத்திரிகைப் பணி ஆரம்பமானது. எனினும், அவரது எழுத்து முதன்முதலில் அச்சில் ஏறியது கல்கி பத்திரிகையில் தான். கல்கியில் அவர் எழுதிய ஜய ஜய சங்கர தொடர் தான் அவரது முதல் எழுத்துப் பணி.

கல்கியில் இணைந்த ரா. கணபதி அவர்கள், அதன்பிறகு பத்தாண்டு காலம் அந்த பத்திரிகையில் பணியாற்றினார். ஜய ஜய சங்கர-வில் தொடங்கிய அவரது எழுத்துப் பணி, பின்னர் கங்கை போல் பிரவாகம் எடுத்து ஓடியது.

ரா. கணபதி எழுதிய சுவாமி விவேகானந்தர் புத்தகம் 1964 ஜனவரியில் ராமகிருஷ்ணா மடத்தால் வெளியிடப்பட்டது. ரா. கணபதி மீதும் அவரது எழுத்து மீதும் பெரிதும் மரியாதை கொண்டிருந்த ராஜாஜி, சாகித்ய அகாதமியின் விருதுக்கு அந்தப் புத்தகத்தைப் பரிந்துரைத்தார். எனினும், ரா. கணபதி, சிறிய வயதினராக இருப்பதைக் காரணம் காட்டி அவரது பெயர் நிராகரிக்கப்பட்டது. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்த ராஜாஜி, தான் அந்த வாரியத்தில் வகித்து வந்த பதவியை ராஜினாமா செய்தார்.

சுவாமி விவேகானந்தர் நூலைத் தொடர்ந்து பகவான் ராமகிருஷ்ண பரமஹம்சரின் வாழ்க்கை வரலாற்றை விவரிக்கும் அறிவுக்கனலே அருட்புனலே,

தூய அன்னை ஸ்ரீ சாரதா தேவியரின் நெஞ்சையள்ளும் சரிதையை விரிவாக வர்ணிக்கும் அம்மா,

காமாக்ஷி அம்மன் குறித்த காமாக்ஷி கடாக்ஷி,

ஸ்ரீ துர்கா தேவியின் சரிதை குறித்தும் மகிமைகள் குறித்தும் விளக்கும் நவராத்திரி நாயகி,

ஸ்ரீ லலிதா தேவியின் சரிதையையும் மகிமைகளையும் விளக்கும் ஸ்ரீமாதா,

ஸ்ரீ ஆஞ்ஜநேய சுவாமியின் அருமை பெருமைகளைக் கூறும் ஜய ஹநுமான்,

மெய்யடியார்களின் சிறப்பியல்புகளை எடுத்துக்கூறும் ஸ்ரீ வைஷ்ணவ ஜனதோ,

பக்த மீராவின் வாழ்க்கையை விவரிக்கும் காற்றினிலே வரும் கீதம்,

ஸ்ரீ ரமண மகரிஷியின் வாழ்க்கை நிகழ்ச்சிகளை இலக்கிய நயத்துடன் பற்பல கோணங்களில் விளக்கும் ஸ்ரீ ரமண மணம், ரமணரின் வாழ்க்கை வரலாற்றை விவரிக்கும் ஞானச்செல்வர் ரமணமகரிஷி,

ஆன்மீகக் கதைகள், கட்டுரைகள் நிறைந்த தரிசனம்,

காஞ்சி காமகோடி பீடத்தை அலங்கரித்த ஸ்ரீ போதேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகளின் வரலாற்றையும் உபதேசங்களையும் விளக்கும் காமகோடி ராமகோடி,

காஞ்சி காமகோடி பீடத்தின் 68வது பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள் பற்றிய மஹா பெரியவாள் விருந்து, காஞ்சி முனிவர் நினைவுக் கதம்பம், சொல்லின் செல்வர் ஸ்ரீ காஞ்சி முனிவர், சங்கரர் என்ற சங்கீதம், கருணைக் காஞ்சி கனகதாரை, மைத்ரீம் பஜத, கருணைக் கடலில் சில அலைகள்,

பகவான் ஸ்ரீ ஸத்ய ஸாயிபாபா குறித்த ஸ்வாமி (இந்த நூலின் ஆங்கில மொழிபெயர்ப்பு Baba : Satya Sai), லீலா நாடக ஸாயி, தீராத விளையாட்டு ஸாயி, அன்பு அறுபது, அறிவு அறுபது, அற்புதம் அறுபது, ஸ்ரீ ஸாயி 108, ,

அகத்தியர்: ஐக்கிய சக்தியின் அவதாரம்

- என நாற்பதுக்கு மேற்பட்ட நூல்களை இயற்றியவர் ரா. கணபதி.

இவை அனைத்துக்கும் சிகரம் வைத்தது போல் விளங்குவது தெய்வத்தின் குரல் நூல் தொகுதி. மஹாபெரியவர் உரைகளைத் தொகுத்து 7 பகுதிகளாக வெளியிட்டுள்ளார்.

"தெய்வத்தின் குரலை எழுதுவதே உனது பிறவிப் பணி. நீ தொகுக்கும் தெய்வத்தின் குரல் உபநிஷத்துக்கு சமானமாக இருக்கப் போகிறது" என்று ரா. கணபதிக்கு சாயிபாபா ஆசி வழங்கியுள்ளார்.

ரா. கணபதிக்கு ஒன்று விட்ட தம்பிகள் ஜாஸ்தி. அவர்கள் அனைவரும் அவரை அண்ணா என்று அழைப்பது வழக்கம். அவரைப் பார்க்க வரும் அன்பர்களும் அவரை அண்ணா என்றே அழைக்க ஆரம்பித்தனர். இதனால் அவரது பெயர் அண்ணா என்றே ஆகி விட்டது.

அண்ணா ஒரு தனிமை விரும்பி. ஆனால், அவரது எழுத்துக்களால் ஈர்க்கப்பட்ட எத்தனையோ பேர் அவரை அடிக்கடி சந்திக்க வந்தனர். பார்வையாளர்களின் எண்ணிக்கை கட்டுக்கடங்காமல் இருந்ததால் அவரது எழுத்துப் பணி பெரிதும் தடைபட்டது. வாரத்தின் மூன்று நாட்கள் மௌன விரதம் இருக்கும் போது தான் அவரால் எழுத முடிந்தது. தெய்வத்தின் குரல் ஏழாம் பாகத்துக்குப் பிறகு அவர் எழுதுவது பெருமளவு குறைந்துவிட்டது.

கடைசி பத்தாண்டுகள் மிகுந்த உடல் உபாதைகளால் அவதிப்பட்ட அவர் தனது அக்காவின் இல்லத்தில் தங்கி சிகிச்சை எடுத்துக் கொண்டார். 2012 ஆம் ஆண்டு சிவராத்திரியன்று மாலையில் சித்தியடைந்தார்.

**- பால மோகன்தாஸ்**

## 2. ஆரம்ப கால சந்திப்புகள்

நான் டிப்ளமா படித்தவன். படிப்புக்குப் பின்னர் சில ஆண்டுகள் ஏதேதோ இடங்களில் வேலை பார்த்தேன். எனக்குச் சுமார் இருபத்தி மூன்று வயது ஆகும்போது, ஆர்எஸ்எஸ் ஸ்தாபகர் டாக்டர் ஹெட்கேவார் நூற்றாண்டு விழா சமயத்தில் ஆர்எஸ்எஸ் முழு நேர ஊழியன் ஆனேன். மதுரை மாவட்டம், எழுமலை கிராமத்தில் இருந்த ஓர் ஆசிரமத்தில் தங்கி சங்கப் பணி செய்து வந்தேன். விரைவில் என்னை விஜயபாரதம் பத்திரிகையின் ஆசிரியர் ஆக்குவது என்று சங்கத்தில் முடிவு செய்திருந்தார்கள்.

சிறு வயதில் எனக்கு ஸ்வாமி விவேகானந்தர் மீது ஓரளவு ஈடுபாடு இருந்தது. விவேகானந்தர் வாழ்க்கை பற்றிச் சுருக்கமாக ஸ்வாமி சித்பவானந்தர் எழுதிய புத்தகம் படித்திருந்தேன். ஸ்வாமிஜியின் உரைகள் அதிகம் வாசித்ததில்லை. சென்னை வருவதற்குச் சில மாதங்கள் முன்பு ஒருநாள், ஓர் ஆர்எஸ்எஸ் அன்பர், "திரு. ரா. கணபதி என்பவர் எழுதியுள்ள ஸ்வாமி விவேகானந்தர் என்ற புத்தகம் தான் விவேகானந்தர் வாழ்க்கையை முழுமையாக விளக்கும் புத்தகம்" என்று என்னிடம் குறிப்பிட்டார். அந்தப் புத்தகத்தை வாங்கிப் படிக்க வேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டது. எனினும், அந்தக் காலத்தில் புத்தகம் விலை கொடுத்து வாங்கும் நிலையில் நான் இல்லை.

இதற்குச் சில நாட்கள் பின்னர், எழுமலையைச் சேர்ந்த ஒருவர் இல்லத்தில் அந்தப் புத்தகம் இருப்பதைப் பார்த்தேன். புத்தகத்தை இரவல் வாங்கிக் கொண்டு எனது அறைக்குச் சென்றேன். ஒரு பெரிய புத்தகத்தைப் படிப்பதென்றால், முதலில், குத்துமதிப்பாக ஏதாவது ஒரு பக்கத்தை எடுத்துப் படித்துப் பார்ப்பது எனது வழக்கம். வாசிப்பதற்கு எளிமையான புத்தகமா என்பதைத் தெரிந்து கொள்வதற்கு இது ரொம்ப உபயோகமாக இருக்கும். பின்னர் பொருளடக்கத்தைப் பார்ப்பேன். புத்தகத்தில் உள்ள விஷயங்கள் எனக்கு எந்த அளவு தேவை என்பது புரியும். இந்த இரண்டு அம்சங்களின் அடிப்படையில் அந்தப் புத்தகத்தை ஆழ்ந்து படிப்பதா, மேலோட்டமாகப் பார்த்தால் போதுமா அல்லது படிக்கவே வேண்டாமா என்பதை முடிவு செய்வேன்.

அதுபோலவே, ஸ்வாமி விவேகானந்தர் என்ற அந்தப் புத்தகத்தையும் குருட்டாம் போக்கில் புரட்டினேன். ஸ்வாமிஜி பரிவ்ராஜகராக தேசம் முழுவதும் சுற்றி அலைந்த காலகட்டத்தைப் பற்றிய பகுதி கண்ணில் பட்டது. படிக்க ஆரம்பித்தேன். நூலில் காணப்பட்ட அதீத வர்ணனை எரிச்சலூட்டுவதாக இருந்தது. நூலாசிரியரின் எழுத்து நடையை என்னால் ரசிக்க முடியவில்லை.

இந்தப் புத்தகத்தைப் படிக்க வேண்டாம் என்று முடிவெடுத்தேன்.

புத்தகத்தைப் படிக்க வேண்டாம் என முடிவு செய்ததற்கு இன்னொரு முக்கியமான காரணமும் உண்டு. நூலாசிரியர், ஸ்வாமி விவேகானந்தரை தெய்வத்துக்கு இணையாக வர்ணித்திருந்த விதம் எனக்கு ஏற்புடையதாக இல்லை என்பதுதான் அந்த மிக முக்கியமான காரணம். என்னைப் பொறுத்த வரை, "ஸ்வாமிஜி ஓர் அவதார புருஷராக இருக்கலாம். ஆனாலும், அவர் ஓர் உதாரண புருஷர். என்னைப் போன்ற லட்சக்கணக்கான சாமானிய மனிதர்களுக்கு முன்னுதாரணமாகத் திகழ்ந்தவர். நல்ல வழிகாட்டி. என்னைப் போன்றவர்கள் அவரைப் பின்பற்றி நடந்தால் வாழ்வில் மேம்பட்ட மனிதர்களாக வாழலாம்."

ஆனால், இந்த நூலாசிரியரின் பார்வையில் அவர் மாபெரும் அவதாரம். இந்தப் புத்தகத்தைப் படித்தால், தெய்வமே பூமியில் ஸ்வாமிஜி வடிவத்தில் மனிதக் கால்களுடன் நடமாடியது என்ற உணர்வு என் மனதில் விதைக்கப்படும். பின்னர் ஸ்வாமிஜியை எங்கோ தொலை தூரத்தில் இருப்பவராக என் மனம் கருத ஆரம்பித்து விடும். ஸ்வாமிஜி எனக்கு அன்னியமாகி விடுவார். எனக்கு எட்டாத தொலைவில், மிக உயரத்தில் இருக்கும் ஒரு மாபெரும் தெய்விக புருஷரை நான் எவ்வாறு எனது வாழ்க்கையின் வழிகாட்டியாகக் கருத முடியும்?

இந்தக் காரணத்தால் நான் அந்தப் புத்தகத்தைப் படிக்க வேண்டாம் என்று முடிவெடுத்தேன். அதேநேரத்தில் இந்தப் புத்தகத்தைப் பற்றி என்னிடம் உயர்வாகக் கூறிய நண்பர், ரா. கணபதி என்னும் இந்த நூலாசிரியர் பெரிய ஆன்மிக எழுத்தாளர் என்றும், அவர் நிறைய ஆன்மிக நூல்கள் எழுதியுள்ளார் என்றும்

குறிப்பிட்டிருந்தார். இத்தகைய ஆன்மிக எழுத்தாளர்கள் மீது எனக்கு எரிச்சல் ஏற்பட்டது. சாதாரண நாலாந்தர எழுத்தாளர்கள் கூட எளிமையாக, சுவையாக, படிப்பவர்கள் ரசித்துப் படித்துப் புரிந்து கொள்ளும் விதத்தில் எழுதுகிறார்கள். ஆனால், தரமான, நல்ல விஷயங்களை எழுதும் இந்த ரா. கணபதி போன்ற ஆன்மிக எழுத்தாளர்கள் ஏன் வாசிப்பதற்குக் கடினமான மொழிநடையில் எழுத வேண்டும் என்ற கேள்வி எனக்குள் பூதாகாரமாக எழுந்தது. அதிலும், பத்திரிகை ஆசிரியராகப் பொறுப்பேற்கப் போகிறவன் என்பதால், இதுபோன்ற எழுத்தாளர்களின் எழுத்தில் இருக்கும் குறைகளைச் சரி செய்யும் தார்மிகக் கடமை எனக்கு இருப்பதாகவும் நினைத்தேன். எனவே, சென்னைக்குப் போய் விஜயபாரதம் ஆசிரியராகப் பொறுப்பேற்ற பின்னர், நேரம் கிடைக்கும்போது, இந்த ரா. கணபதி என்ற எழுத்தாளரைப் பார்த்து அவரிடம் எனது வருத்தத்தைத் தெரிவிக்க வேண்டும் என்றும் நினைத்தேன்.

எனினும், அந்த எழுத்தாளரையும், அவர் எழுதிய (நான் படிக்க விரும்பாத - அதனால் படிக்காத - ஸ்வாமி விவேகானந்தர் புத்தகத்தையும் காலப்போக்கில் மறந்தே போய் விட்டேன்.

நான் சென்னை வந்த சூட்டிலேயே விஜயபாரதத்துக்கு ஸ்ரீ நம்பி நாராயணன் ஆசிரியராக நியமிக்கப்பட்டார். இதனால், ஆர்எஸ்எஸ்ஸின் புத்தக வெளியீடுகளைக் கவனிக்கும் பணி எனக்கு வழங்கப்பட்டது.

இந்தக் காலகட்டத்தில், அந்த ரா. கணபதி என்ற அந்த எழுத்தாளருக்கு விஜில் அமைப்பு சார்பில் விருது வழங்கப்பட்டது. அந்த விருது அவருக்கு வழங்கப்பட்ட செய்தி விஜயபாரதத்தில் நிச்சயம் வெளியாகி இருக்கும். விஜயபாரதம் வாசித்தே ஆக வேண்டிய நிர்ப்பந்தம் எனக்குக் கிடையாது. விருப்பம் இருந்தால் படிப்பேன். சில இதழ்கள் படிக்காமல் இருந்ததும் உண்டு. இதனால், அந்த எழுத்தாளருக்கு ஆர்எஸ்எஸ்ஸின் சகோதர இயக்கமாகிய விஜில் அமைப்பு விருது வழங்கி கௌரவித்த செய்தியும் எனக்குத் தெரியாமலேயே போய்விட்டது.

***

இதற்குச் சுமார் ஐந்தாண்டுகளுக்குப் பின்னர் எனது வியாபாரத்துக்காகப் புத்தக ஆர்டர்கள் கேட்டு நான் அதே ரா. கணபதி என்ற எழுத்தாளரிடம் சென்றதும், அவரைச் சுற்றி இருந்த எல்லோரையும் போலவே நானும் அவரை அண்ணா என்று அழைக்க ஆரம்பித்ததும், படிப்படியாக அவர் மீது மிகுந்த ஈடுபாடு ஏற்பட்டதும், விரைவிலேயே அவருக்கு மிகவும் நெருக்கமாக ஆனதும் யதேச்சையாக நடந்த சம்பவங்கள் என்று நான் முதலில் நினைத்திருந்தேன். ஆனால், இவை அனைத்தும் அண்ணாவின் சங்கல்பமே என்பது நீண்ட நாட்களுக்குப் பின்னர் எனக்குப் புரிந்தது. அண்ணாவின் வார்த்தைகளில் சொல்வதானால், "புரிய வைக்கப்பட்டது".

***

அண்ணாவிடம் வர ஆரம்பித்து சுமார் நாலைந்து வருடங்களுக்குப் பின்னர் ஒருநாள் யதேச்சையாக நண்பர் ஒருவரது அலுவலகத்தில் ஸ்வாமி விவேகானந்தர் புத்தகத்தைப் பார்க்க நேரிட்டது. பழைய நினைவுகள் மனதில் அலையடித்தன. அண்ணாவை மதிப்பிடும் அளவு எனக்கு மமதை இருந்தது என்ற எண்ணம் எனக்கு அருவருப்பைத் தந்தது. மனதில் குற்ற உணர்ச்சி தலை தூக்கியது. கண்களில் நீர் திரண்டது. அங்கிருந்து நேராக ராமகிருஷ்ணா மடம் சென்று ஸ்வாமி விவேகானந்தர் புத்தகப் பிரதி ஒன்றை வாங்கினேன். ஒரே மூச்சில் படித்து முடித்தேன். இப்போது அந்த நூலின் மொழிநடை எனக்கு அன்னியமாகத் தெரியவில்லை. மாறாக, பிரமிப்பையே தந்தது. புத்தகம் மாறவில்லை, மாற்றம் என்னிடம் தான் என்பது புரிந்தது.

அடுத்த முறை அண்ணாவைப் பார்க்கச் சென்றிருந்த போது பழைய நினைவுகளைப் பற்றி அவரிடம் தகவல் தெரிவித்தேன். அந்த நாட்களில் அண்ணா திருவான்மியூரில் அவருக்காகப் பிரத்தியேகமாகக் கட்டப்பட்டிருந்த மாடி அறை ஒன்றில் தங்கி இருந்தார். மாலையில் மருந்தீஸ்வரர் கோவிலுக்குச் செல்வது அவரது அந்நாளைய வழக்கம். அன்றும் அதேபோல கோவிலுக்குச் செல்வதற்காக வெளியே வந்தார். படி இறங்கும்போது நான் அவரிடம் இந்தத் தகவலைப் பகிர்ந்து கொண்டேன்.

அண்ணா அதைப் புன்முறுவலுடன் கேட்டுக் கொண்டார். நான் சொல்லி முடித்ததும், "பரவாயில்லையே! என்னைப் பத்தி ரொம்ப உசத்தியா தான் நினைச்சிருக்கே" என்று சொல்லி, அவரது உறவினர் ஒருவரைப் பற்றிக் குறிப்பிட்டார். "அண்ணா, உங்க புத்தகத்துக்குள்ளே தக்ஷிணை (பணம்) வச்சு ரோட்டில தூக்கிப் போட்டாலும் ஒருத்தனும் சீந்த மாட்டான்-னு அவன் சொல்லுவான். நீயானா பரவாயில்லை. என்னைப் பத்தி அவ்ளோ மட்டமா நினைக்கலை. பெருமையாத் தான் நினைச்சிருக்கே" என்று சொன்னார்.

அண்ணா சொன்னதைக் கேட்டு எனக்கும் சிரிப்பு வந்தது. பெரிதாகச் சிரித்தேன். ஆனால், இப்போது, உணர்ச்சி மேலீட்டால், இந்தப் பகுதியை டைப் பண்ணக் கூட முடியாமல் தடுமாறுகிறேன். இதற்குக் காரணம் அண்ணாவின் ஞானமோ, அவரே வலிந்தும் விரும்பியும் ஏற்ற எளிமையோ, சாமானியர்களால் கடைப்பிடிக்கவே முடியாத அவரது உபவாசப் பழக்கமோ, அவரது மௌன விரதமோ, இடைவிடாத மந்திர ஜபமோ, இதுபோன்ற எதுவுமே இல்லை. மாறாக, என்னைப் போன்ற ஓர் அல்பனைத் தன்னுடன் வைத்திருந்தாரே என்கிற எண்ணமும் அதனால் ஏற்படுகிற உணர்ச்சியும்தான் காரணம்.

அண்ணாவின் ஒண்ணு விட்ட தம்பியரில் ஒருவர், அண்ணா நினைவு நாள் நிகழ்ச்சி வீடியோக்களைப் பார்த்தவுடன் எனக்கு ஒரு மெயில் அனுப்பி இருந்தார். அதில், "It's highly impossible not to become emotional when hearing about Anna." என்று அவர் குறிப்பிட்டிருந்தார். ஆம், அண்ணாவைப் பற்றிக் கேட்கும்போது மட்டுமல்ல, அவரைப் பற்றி நினைக்கும் போதும் மனதில் உணர்ச்சி பொங்குவதைத் தவிர்க்க முடியவில்லை.

***

சென்னைக்கு வந்த சில வருடங்களுக்குப் பின்னர், ஆர்எஸ்எஸ் முழு நேரப் பணியில் இருந்து விலகி, திருமணம் செய்து கொள்ளலாம் என்று முடிவெடுத்தேன். வாழ்வாதாரத்துக்காக, சிலருடன் சேர்ந்து ஸ்ரீசக்ரா என்ற ஒரு வியாபாரம் ஆரம்பித்தேன். இது அச்சுப் பணி தொடர்பானது. ஆஃப்ஸெட் ப்ரின்டிங்குக்குத் தேவையான ஃபிலிம்கள் எடுத்துத் தரும் மையம் இது. மேலும், ப்ரின்டிங் ஆர்டர்கள் வாங்கி அச்சிட்டுத் தரும் வேலைகளையும் செய்து வந்தோம்.

செய்து வந்தோம் என்று சொல்வதை விட, செய்யத் தீர்மானித்திருந்தோம் என்று சொல்வதே சரி. ஏனெனில், எந்த ஆர்டரும் கிடைக்காமல், அன்றாட ஜீவனத்துக்கே கஷ்டப்படும் நிலையில் இருந்தோம்.

அண்ணாவின் ஒன்று விட்ட தம்பியான கண்ணன் என்பவர் திவ்ய வித்யா ட்ரஸ்ட் என்ற அறக்கட்டளை மூலம் அண்ணாவின் புத்தகங்களை வெளியிட்டு வருகிறார் என்பதும், அந்த நூல்களை அச்சிடுவதில் அவருக்கு உதவி தேவைப்படுகிறது என்பதும் தெரிய வந்தது. அவரைத் தொடர்பு கொண்டேன். அவர் என்னை அண்ணாவிடம் அழைத்துச் சென்றார்.

அது ஒரு ஞாயிற்றுக் கிழமை என்று ஞாபகம். அண்ணா, பாண்டி பஜாருக்கு அருகே தனது அக்கா இல்லத்தில் இருந்தார். காரில் போகும்போது கண்ணன் அண்ணாவைப் பற்றி மிகவும் உயர்வாகப் பேசிக் கொண்டே வந்தார்.

அமெரிக்காவில் வசித்து வந்த ஒரு பக்தருக்குத் திடீரென மனநிலையில் ஏதோ பெரிய பாதிப்பு. இதன் விளைவாக, திடீர் திடீரென அவர் சுயநினைவை இழந்து விடுவார். அந்தச் சமயத்தில் புத்தகங்களில் இருந்து பக்கங்களைக் கிழித்துச் சுருட்டிச் சுருட்டிப் போட்டுக் கொண்டே இருப்பாராம். சில நாட்கள் தொடர்ச்சியாக இதேபோல இருப்பது, பின்னர் இயல்பு நிலை என்று மாறி மாறி இந்த மனோவியாதி தொடரவே, அவர் வேலையை ராஜினாமா பண்ணி விட்டு இந்தியாவுக்குத் திரும்பி வந்து விட்டார், சென்னையில் உமேஷ் அவர்களைச் சந்தித்துத் தன்னுடைய பிரச்சினையை முறையிட்டார். உமேஷ் அவரை அண்ணாவிடம் அனுப்பி வைத்தார். அண்ணா அவரைச் சில நாட்களுக்குப் பின்னர் வருமாறு சொல்லி அனுப்பி விட்டார். அந்த அன்பர் கிளம்பிப் போனதும் அண்ணா தனது அறையை மூடிக் கொண்டு விட்டாராம். சுமார் இரண்டு வாரங்கள் வரை வெளி உலகத் தொடர்பு இல்லை. அறைக்குள் அண்ணா ஏராளமான புத்தகங்களைக் கிழித்துச் சுருட்டிச் சுருட்டிப் போட்டிருக்கிறார். அதாவது, அந்த அன்பரின்

கர்மவினையை அண்ணா ஏற்றுக் கொண்டு அதன் விளைவுகளை அனுபவித்திருக்கிறார். இதனால் அந்த அன்பரின் மனப்பிரச்சினை முழுமையாக மறைந்தது. அதன்பின்னர் அந்த அன்பர் தமிழ்நாட்டிலேயே நல்ல வேலையில் சேர்ந்தார்.

இது காரில் போகும்போது கண்ணன் தெரிவித்த விஷயம்.

இந்தச் செய்தி எனக்கு மிகுந்த பிரமிப்பைத் தந்தது.

நாங்கள் அண்ணா இருந்த வீட்டுக்குச் சென்றபோது அந்த வீட்டுக் கூடத்தில் நிறையப் பேர் இருந்தார்கள். அவர்களில் பெரும்பாலோர் பெண்கள். மேலும், ஏதோ கட்டட வேலையும் நடைபெற்றுக் கொண்டு இருந்ததால் சந்தடி அதிகம் இருந்தது. அண்ணா அறைக்குள் இருந்தார். கண்ணன் அவரை நமஸ்கரித்தார். எனவே, நானும் நமஸ்காரம் பண்ணினேன்.

அண்ணா மிகவும் ஒல்லியாக இருந்தார். அனேகமாக, அறுபது பிராயம் கடந்தவர் என்பது புரிந்தது. மாநிறம். சாதாரண ஜிப்பா அணிந்திருந்தார். துணி கசங்கி இருக்கவில்லை என்றாலும் அயர்ன் பண்ணப்படவில்லை என்பது நன்றாகவே புரிந்தது. அவர் பிரம்மசாரி என்பதையும், மிகமிக எளிமையான வாழ்க்கை வாழ்ந்து வருபவர் என்பதையும் யாரும் சொல்லாமலேயே புரிந்து கொள்ள முடிந்தது. அவரது உடலில் ஏதோ ஒளி வீசுவது போல எனக்குத் தோன்றியது.

கண்ணன் என்னை அண்ணாவுக்கு அறிமுகம் செய்து வைத்தார். ப்ரின்டிங் விஷயம் தவிர நான் அவருடன் பேசுவதற்கு எதுவும் இல்லை. எனவே ஒரே நிமிடத்தில் நான் வந்த காரியம் முடிந்தது. அண்ணாவும் கண்ணனும் நாட்டு நடப்பைப் பற்றிக் கொஞ்ச நேரம் பேசிக் கொண்டிருந்தார்கள். குறிப்பாக, அப்போது பெரிதும் பேசப்பட்டு வந்த ஜெயலலிதா ஊழல் பற்றிப் பேச்சு வந்தது.

“நூறு, நூத்தைம்பது கோடி சம்பாதிச்சிருப்பான்னு சொல்றாளே! அவ்ளோ பணம் எப்படிப்பா திருட முடிஞ்சது?” என்று அண்ணா பெரு வியப்புடன் கேட்டார்.

“என்ன அண்ணா, உங்க எஸ்டிமேட் ரொம்பக் கம்மியா இருக்கு? ஆயிரத்து நானூறு கோடிக்குக் கீழே யாருமே மதிப்பிடலை” என்றார் கண்ணன்.

அரசியல் தலைவர்கள் மாவட்டம் தோறும் அடியாட்களை வைத்துப் பராமரிப்பது முதலான ஒருசில விஷயங்களைப் பற்றிக் கேள்விப்பட்டிருப்பதாக அண்ணா அப்போது தெரிவித்தார். அவரால் இத்தகைய விஷயங்களை நம்பவே முடியவில்லை என்பதை என்னால் புரிந்து கொள்ள முடிந்தது.

அதன்பிறகு அவர் சொன்னது என் வாழ்க்கையில் மறக்கவே முடியாத விஷயம். “ஒரு வீட்டுக்குப் பதிலா ரெண்டு வீடு, மூணு வீடு வச்சிண்டிருக்கான்னா கூடப் புரிஞ்சுக்க முடியறது. ஆனா, ஊருக்கு ஊர் வீடு வாங்கிப் போட்டு என்னப்பா பண்றது? ஒரு நேரத்தில ஒரு படுக்கையிலதானேப்பா படுத்துத் தூங்க முடியும்? இத்தனை வீட்டையும் வச்சிண்டு என்ன பண்ணுவா? ஏதோ ஒரு காருக்குப் பதிலா ரெண்டு மூணு கார் இருந்தாக் கூடப் புரியறது. வரிஸ்..ஸையா கார் வச்சிண்டு என்ன பண்ண முடியும்? ஒரு நேரத்தில ஒரு கார்ல தானப்பா போக முடியும்? எதுக்குப்பா மனுஷா இவ்ளோ சொத்துச் சேர்க்கறா?”

சற்று நேரம் கழிந்த பின்னர் நாங்கள் இருவரும் அவரிடமிருந்து விடைபெற்றோம். அண்ணா வாசல் வரை வந்து எங்களை வழியனுப்பினார். நாங்கள் கிளம்பும் போது, அன்று வீட்டுக்கு வந்திருப்பவர்கள், அவர்கள் பேசிக்கொண்டிருக்கும் விஷயங்கள் முதலியவை பற்றிப் பேச்சு வந்தது. அப்போது அண்ணா, “எனக்கு இவா பேசற பாஷையே புரிய மட்டேங்கறது, கண்ணா!” என்று சொன்னது பசுமரத்தாணி போல என் மனதில் பதிந்து விட்டது. அதை இப்போது நினைத்தாலும் குபீரென்று சிரிப்பு வருகிறது.

இந்த முதல் சந்திப்பு என்மீது மூன்று வகையான தாக்கத்தை ஏற்படுத்தியது.

முதலாவது விஷயம் பிரமிப்பு.

அமெரிக்க அன்பரின் கர்மவினையை அண்ணா ஏற்று அனுபவித்த சம்பவத்தைக் கண்ணன் மூலம் அறிந்ததால் ஏற்பட்ட பிரமிப்பு மேலும் சில வருடங்கள் தொடர்ந்தது. பிற்காலத்தில், ஸ்வாமி பற்றி

அண்ணாவின் நூல்களில் தரப்பட்டுள்ள மிரகிள்களைப் படிக்கப் படிக்க இன்னும் அதிகமானது. அண்ணாவின் அதீந்திரிய சக்தியைப் பிற்காலத்தில் நானே ஓரளவு நேரடியாகப் பார்த்ததும் உண்டு. இதனால், எனக்கும் அவர் இதேபோல அனுக்கிரகம் பண்ண வேண்டும் என்ற எதிர்பார்ப்பு ஏற்பட்டு வளர்ந்தது. அண்ணா எதுவும் பண்ணவில்லை என்று அவர் மீது கோபமும் வந்தது.

இரண்டாவது விஷயம் அவரது தனிமை உணர்வு.

அன்றைய சந்திப்பில் நான் முக்கியமாகக் கவனித்த விஷயம் தமிழக அரசியல் சூழலை அவரால் நம்பவே முடியவில்லை என்பது. இதன் பின்னரும் நிறைய சந்தர்ப்பங்களில் அவரிடம் இதைக் கவனித்திருக்கிறேன். அவரது அறிவை ஞானம் என்று சொல்லாமல் வெறும் படிப்பறிவு என்றே வைத்துக் கொண்டால் கூட, ஒரு மனிதரால் இவ்வளவு படிக்க முடியுமா என்ற வியப்பு ஏற்படுவது தவிர்க்க முடியாது. அதையும் விட, அவர் ஒருசில இடங்களில் ஆங்கில, தமிழ் இலக்கியங்களில் இருந்து மேற்கோள் காட்டியிருக்கும் விதத்தைப் பார்க்கும்போது, இது வெறும் படிப்பு அல்ல, இலக்கியத்தை அணுஅணுவாக ரசிக்கும் அழகு என்பது புரியும். அவர் ஆழ்ந்து படித்தவர் மட்டுமல்ல, அனுபவித்தும் படித்தவர். ஆனால், இவ்வளவு படித்த அவரால் எத்தனையோ சாதாரண வாழ்வியல் விஷயங்களைப் புரிந்து கொள்ள முடியவில்லை. சில சம்பவங்களை அவரால் நம்பவே முடியவில்லை என்பதும் உண்மை.

இவா பேசற பாஷையே எனக்குப் புரிய மாட்டேங்கறது என்று அவர் சொன்னதை என்னால் ஒருபோதும் மறக்க முடியாது. பல விஷயங்களில் இருந்தும், பல மனிதர்களிடமிருந்தும் அவர் விலகியே இருந்தார். அவரது வேலைக்குத் தனிமை அவசியமானது என்பது நன்றாகவே புரிந்தது. ஆனால், தனது பணிகளுக்கான தேவையாக மட்டும் அவர் தனிமையைப் பார்க்கவில்லை. அவர் எந்நேரமும் தனியாக இருப்பதையே விரும்பினார்.

மூன்றாவது விஷயம் அவரது எளிமை.

பிற்காலத்தில் இந்த எளிமையை ரொம்பவே ரசித்ததும் உண்டு. எரிச்சல் பட்டதும் உண்டு. நிறைய கேலி செய்ததும் உண்டு. அண்ணா, போஸ்ட் கார்டில் முடிய வேண்டிய வேலைக்கு இன்லேண்ட் லெட்டரைப் பயன்படுத்த மாட்டார். அதேநேரத்தில், பிறருக்காக அவர் பணம் செலவு பண்ணுவது இதற்கு நேர்மாறாக இருக்கும். உண்மையில் அவரது எளிமைக்குக் காரணம் துறவு மனப்பான்மை என்பது பின்னர் தான் புரிந்தது.

***

அண்ணாவைச் சந்தித்துத் திரும்பிய பின்னர் ரொம்ப நாட்கள் கழித்து முதல் புத்தக ஆர்டர் கிடைத்தது. அப்போதும் கண்ணனுடன் தான் அண்ணாவைப் பார்க்கச் சென்றிருந்தேன். இது தான் அண்ணாவுடன் எனது இரண்டாவது சந்திப்பு.

அச்சிட வேண்டிய புத்தகத்தின் பெயர் காஞ்சி முனிவர் நினைவுக் கதம்பம்.

உள் பக்கங்களுக்கான லேசர் ப்ரின்ட் அவுட் ரெடி. நேரடியாக ஃபிலிம் எடுத்து விடலாம்.

அட்டையில் போடுவதற்கான. பெரியவா படத்தையும், உள்ளே கலர் பக்கத்துக்கான பெரியவா பாதம் படத்தையும் அண்ணா என்னிடம் தந்தார். புத்தகத்தின் தலைப்பு, அண்ணா பெயர், பெரியவா படம் மூன்றையும் டைப்செட் பண்ணி, உரிய இடத்தில் போட்டு முன், பின் அட்டைப் படங்களையும் உள்ளே வரும் கலர்ப் பக்கத்தையும் நான் ரெடி பண்ண வேண்டும்.

புத்தகத்தின் முன் அட்டையில் ரா. கணபதி என்ற பெயர் நன்றாகப் பெரியதாகவும், பளிச்சென்று தெரிவது போலவும் இருக்க வேண்டும் என்று அண்ணா என்னிடம் கூறினார். “புத்தகம் பெரியவா பத்தினது தான். பெரியவாளைப் பத்தித் தெரிஞ்சுக்கணும்னு நினைக்கறவா தான் வாங்கப் போறா. இருந்தாலும் புத்தக ஆசிரியர் பெயருக்கும் ஒரு வால்யூ இருக்கு. ரா. கணபதிங்கற பெயரைப் பார்த்துட்டு வாங்கறவாளும்

இருப்பா. அதனால, என்னோட பெயரும் நன்னா பளிச்சுன்னு தெரியறா மாதிரி போடு” என்று தெரிவித்தார். நானும் சரி என்று சொல்லி, லேசர் ப்ரின்ட் அவுட்டுகளை வாங்கிக் கொண்டேன்.

ப்ரின்ட் அவுட்டுகளுடன் நேரே ஸ்ரீசக்ராவுக்கு வந்தேன். லேசர் ப்ரின்ட்களை ஃபிலிம் எடுப்பதுதான் முதல் வேலை. இதற்கு சுமார் நாலைந்து மணி நேரம் ஆகும்.

இந்த ஆர்டர் வரும் வரை சக்ராவில் ஒரு நாளைக்கு அதிகபட்சம் இருநூற்றைம்பது ரூபாய் பில் அளவுக்குக் கூட ஃபிலிம் எடுக்கும் வேலை கிடைக்காது. பல நாட்களில் நூறு ரூபாய்க்கும் குறைவாகவே வேலை இருக்கும்.

ஆனால், அன்று வேலை மிக மிக அதிகமாக இருந்தது. சுமார் ஆயிரத்தி இருநூறு ரூபாய்க்கு மேல் வேலை நடந்தது. இரவு ஒன்பது மணி வரை வேலை தொடர்ந்தது. எனவே, அண்ணா புத்தகம் ஃபிலிம் எடுக்க முடியவில்லை. மறு நாளும் அதேபோன்ற நிலை. மூன்றாவது நாளும் அதே நிலை.

எங்களுக்கு ரொம்ப மகிழ்ச்சியாக இருந்தது. ஒரு பெரிய மகானின் புத்தக ஆர்டர் கிடைத்திருக்கிறது. அதனால், நமது வியாபாரம் அமோக வளர்ச்சி அடையும் என்ற நம்பிக்கை எங்களுக்கு ஏற்பட்டது.

அதேநேரத்தில் அச்சமும் ஏற்பட்டது. முதன்முதலாக அண்ணா புத்தகம் அச்சிடும் ஆர்டர் வந்துள்ளது. ஃபிலிம் எடுப்பதில் சுமார் ஐநூறு ரூபாய் லாபம் கிடைக்கும். அதுபோக, அச்சு வேலைகளுக்கான கமிஷன் வகையில் சுமார் நாலாயிரம் ரூபாய் கிடைக்கும். இவற்றையெல்லாம் விடப் பெரிய விஷயம், திவ்ய வித்யா ட்ரஸ்டில் இருந்து இன்னும் நிறைய புத்தக ஆர்டர் எங்களுக்குக் கிடைக்கும் வாய்ப்பு இருக்கிறது என்ற நம்பிக்கை.

ஃபிலிம் எடுப்பது எங்கள் அலுவலகத்தில் நடைபெறுகிற வேலை. ஆனால், அச்சிடுவது வேறிடத்தில். அவர்கள் எந்தக் காலத்திலும் உரிய நேரத்தில் வேலைகளை முடித்துத் தந்தது இல்லை. இதனால் வேலை ரொம்பவும் தாமதமானால் அண்ணாவிடம் நற்பெயர் கிடைக்காமல் போய்விடுமோ என்ற அச்சம் ஏற்பட்டது.

நான்காவது நாள் சுமார் இரண்டாயிரம் ரூபாய் அளவுக்கு ஃபிலிம் வேலை வந்தது. எனவே, அன்றும் அண்ணா புத்தகத்துக்கான ஃபிலிம் எடுக்க முடியவில்லை. வேறு வழியில்லாமல் அன்று இரவு அலுவலகத்தில் தங்கி அண்ணா புத்தகப் பக்கங்களுக்கான ஃபிலிம்கள் எடுத்து முடித்தோம்.

(இதன் பின்னர் பெரும்பாலும் சக்ராவில் தினசரி ஃபிலிம் வேலைகள் பெருமளவு நன்றாகவே நடந்தன. இது அண்ணாவின் அனுக்கிரகம் என்றே நாங்கள் நம்பினோம்.)

புத்தக உருவாக்கத்தில் இன்னொரு முக்கிய வேலை புத்தக அட்டைக்கான ஃபிலிம் எடுப்பது. இது நான்கு வண்ணங்களில் அச்சிடப்படும். இதற்கான ஃபிலிம்கள் எடுக்கும் வேலையை ஸ்கேனிங் என்று சொல்வார்கள். இந்த வேலையை வடபழனியில் இருக்கும் ஒரு பெரிய நிறுவனத்தில் கொடுத்திருந்தோம். அந்த வேலையும் முடிந்து ஃபிலிம் வந்தாகி விட்டது.

ஒருவழியாக புத்தக உள் பக்கங்கள் ப்ரின்டிங் முடிந்து அட்டைப்படம் அச்சிடும் வேலை ஆரம்பமானது. மொத்தம் நான்கு வண்ணங்கள் அச்சிட வேண்டும். பெரும்பாலும் இந்த வேலைக்கு நான்கு கலர்களையும் ஒரே நேரத்தில் அச்சிடும் இயந்திரங்கள் பயன்படுத்தப்படும். ஆனால், அந்த அச்சகத்தில் சிங்கிள் கலர் இயந்திரம் தான். எனவே, ஒரே காகிதத்தை நான்கு தடவை திரும்பத் திரும்ப அச்சு இயந்திரத்தில் செலுத்தி அச்சிட வேண்டும்.

அட்டையின் முதல் இரண்டு கலர்கள் அச்சிட்ட பின்னர் மூன்றாவது கலர் அச்சு ஆரம்பமானது. அட்டைக்கான ஸ்கேனிங்கில் ஏற்பட்டிருந்த பெரிய கோளாறு அப்போது தான் தெரிய வந்தது. ப்ரின்ட் ஆன காகிதத்தில் அண்ணாவின் பெயரும் அதைச் சுற்றி இருந்த பகுதிகளும் ஒரே வண்ணத்தில் இருந்தன. இதனால் அண்ணாவின் பெயரே வெளியே தெரியாத மாதிரி ஆகிவிட்டது. இந்தப் பிரச்சினைக்குக் காரணம்

அண்ணாவின் பெயர் எத்தகைய வண்ணத்தில் வர வேண்டும் என்பதைப் பற்றி நான் கொடுத்த குறிப்புகள் தான் என்பது புரிந்தது.

இப்போது இதைச் சரி செய்வதென்றால் எங்களுக்குக் கிடைக்கும் கமிஷன் தொகையை விட அதிகத் தொகை செலவு செய்தாக வேண்டும். லாபம் கிடைக்காவிட்டால் கூடப் பரவாயில்லை. நஷ்டத்தைத் தாங்கும் நிலையில் நாங்கள் இல்லை. எப்படியும் கண்ணன் போன்ற ஒரு மனிதர் நாலு திட்டுத் திட்டினாலும் கோபத்தில் பணம் தராமல் இருக்கப் போவதில்லை. மன வருத்தம் இருந்தாலும் இந்தத் தவறை யாரும் குற்றமாக எடுத்துக் கொள்ளப் போவதில்லை என்று நான் நம்பினேன்.

எனவே, அதே லட்சணத்தில் அட்டையை முடித்து புத்தகப் பிரதிகளை திவ்ய வித்யா ட்ரஸ்ட் அலுவலகத்தில் டெலிவரி பண்ணினோம்.

ஐந்து பிரதிகள் மட்டும் எடுத்துக் கொண்டு தயக்கத்துடன் அண்ணாவைப் பார்க்கச் சென்றேன். புத்தகப் பிரதியை எடுத்துப் பார்த்ததுமே அண்ணா, "என்னப்பா இது என்னோட பெயரையே காணோம்!" என்றார்.

நான் அசடு வழிந்தேன். தவறு என் மீது தான் என்பதை ஒப்புக் கொண்டேன். நான் திட்டு வாங்குவதற்குத் தயாராகவே இருந்தேன். ஆனால், அண்ணா திட்டவில்லை. பெரிதாகச் சிரித்தார். "என் பெயரை ப்ராமினென்ட்டா போடச் சொன்னேன். நீயானா பெயரே தெரியாத மாதிரி போட்டுட்டே. சந்தோஷம்" என்றார்.

என்னைத் திட்டாமல் இருந்தது அவரது பெரிய மனிதத் தன்மையாக இருக்கலாம். அது ஒரு பெரிய விஷயம் அல்ல. ஆனால், அவர் முகத்தில் வருத்தத்தின் சாயல் கொஞ்சம் கூட இல்லை என்பதை நான் கவனித்தேன். அவரது சிரிப்பு யதார்த்தமாக இருந்தது. எனது மனம் வருத்தப்பட்டு விடக் கூடாதே என்பதற்காக அவர் ஒப்புக்குப் பேசியதாக என்னால் நினைக்க முடியவில்லை.

அன்றைய தினம் இதை என்னால் நம்ப முடியவில்லை. ஆனால், இதன்பின்னர் பல முறை அண்ணாவிடம் இதே விஷயத்தைக் கவனித்திருக்கிறேன்: அண்ணா தனது பெயரை ஒரு பொருட்டாக நினைத்ததே இல்லை.

அண்ணா மறைந்த பின்னர், அண்ணா செய்த பணிகளுக்கு உரிய அங்கீகாரம் கிடைக்கவில்லை என்று சொல்லி ஒரு பிரபலமானவர் என்னிடம் ரொம்பக் குறைப்பட்டுக் கொண்டார். நல்ல வேலை செய்பவர்களை இந்த சமுதாயம் மதிப்பது இல்லை என்று அவர் மீண்டும் மீண்டும் கூறினார். அவர் மனம் புண்படக் கூடாது என்பதற்காக நான் அவரிடம் தலையாட்டி வைத்தேன்.

"அண்ணாவுக்கு இந்த சமுதாயம் எத்தகைய அங்கீகாரத்தைத் தந்திருக்கும்?" என்று எனக்குள் யோசித்துப் பார்த்தேன். ஏதாவது அமைப்புகள் பணமுடிப்புக் கொடுத்திருக்கலாம், விருது, பட்டயம் என்று ஏதாவது கொடுத்திருக்கலாம். அல்லது, இதுபோன்று வேறு ஏதாவது செய்து அவரை ஒரு பொதுவெளியில் பாராட்டி இருக்கலாம். அங்கீகரிப்பது என்றால் இதுதானே? இதற்கு மேல் வேறு என்ன செய்திருப்பார்கள்? இதுபோன்ற எதையுமே அண்ணா ஒரு பொருட்டாக மதித்ததில்லை. அதிலும், அவரை மேடையில் உட்கார்த்தி வைத்து இவரைப் போல யாருண்டு என்ற ரீதியில் யாராவது பேசினால், அது அண்ணாவுக்கு வழங்கப்பட்ட கௌரவமாக இருக்காது, உச்சபட்ச தண்டனையாகவே இருந்திருக்கும்.

சில அன்பர்கள் அவரது 60வது பிறந்த நாளைக் கொண்டாட விரும்பினார்கள். முன்னாள் குடியரசுத் தலைவர் ஆர். வெங்கட்ராமன் தலைமையில் ஒரு குழு அமைத்து, பிரம்மாண்டமான முறையில் பிறந்தநாளைக் கொண்டாடவும், விழா மலர் வெளியிடவும் விரும்பினார்கள். ஆனால், அண்ணா அதற்குச் சம்மதிக்கவில்லை.

ஒருசில விருதுகளை அண்ணா பெற்றுக் கொண்டதும் உண்டு. அதற்குக் காரணம் விருது வழங்கிய அமைப்புகளின் மீது அவருக்கு இருந்த மரியாதையும், அந்த அமைப்புகளுக்கு சமுதாயத்தில் இருக்கும் நற்பெயரும் தான். இத்தகைய அமைப்பு வழங்கும் அங்கீகாரத்தை நாம் மறுத்தால் அது அந்த அமைப்பின்

கௌரவத்துக்கு ஹானி விளைவிக்கும் செயல் என்று அவர் நினைத்ததால் வேறு வழியின்றி ஒப்புக் கொண்டார்.

அண்ணாவின் கடைசி காலத்தில் இதுபோல வழங்கப்பட இருந்த ஒரு விருதை அவர் நேரில் சென்று வாங்க முடியாததால் என்னை நேரில் போய் வாங்கி வருமாறு கூறினார். அந்த விருதுடன் பத்தாயிரம் ரூபாய் பரிசுத் தொகையாகத் தருவார்களாம். நானும் சம்மதம் தெரிவித்தேன். விழாவுக்கான தேதி இன்னும் முடிவாகவில்லை, தேதி தெரிய வந்ததும் சொல்கிறேன் என்றார். அதற்கடுத்து அவரும் எதுவும் சொல்லவில்லை, நானும் கேட்கவில்லை.

சுமார் ஒரு வருடத்துக்குப் பின்னர் அவருக்கு அருகே புத்தகங்கள் வைக்கப்பட்டிருந்த குட்டி மேசையின் அடிப்பகுதியில் அந்த விருதுக்கான கேடயம் அனாதையாகக் கிடந்ததைப் பார்த்தேன். அது எப்போது வழங்கப்பட்டது, யாரும் போய் வாங்கி வந்தார்களா அல்லது அந்த அமைப்பினர் யாராவது வந்து கொடுத்தார்களா என்ற விவரம் எதுவும் எனக்குத் தெரியாது. இதுபற்றிக் கேட்டுத் தெரிந்து கொள்ளவும் பிரியமில்லை.

விருதுப் பணம் பத்தாயிரம் ரூபாயை அண்ணா என்ன பண்ணினார் என்பது தெரியாது. ஆனாலும், அண்ணாவிடம் வரும் பணம் ரிஷி கர்ப்பத்துக்கு ஒப்பானது என்பது மட்டும் தெரியும்.

3. **அண்ணாவுடன் நெருக்கம்**

காஞ்சி முனிவர் நினைவுக் கதம்பம் தான் அண்ணாவுக்கு முதன்முதலாக நாங்கள் அச்சிட்டுத் தந்த புத்தகம். முதன் முதலாக நான் முழுமையாகப் படித்த அண்ணா புத்தகமும் இதுதான்.

ஸ்ரீராமஜயம் எழுதி அனுப்பினால் டாலர் அனுப்பும் உம்மாச்சித் தாத்தா என்ற வகையில் மிகச் சிறு வயதிலேயே பெரியவா எனக்கு அறிமுகமாகி இருந்தாலும், அதுவரை அவரைப் பற்றி அதிகம் கேள்விப்பட்டதில்லை ஞானி என்ற ஒரே ஒரு புத்தகம் மட்டுமே படித்திருந்தேன். அவர் ஒரு பெரிய மகான், அதிசயமான ஆற்றல்கள் படைத்தவர் எட்ஸெடராவுக்கு மேல் அவரைப் பற்றி எதுவும் தெரியாது. பார்க்கப்போனால், நிறைய துறவியர் பெருமக்களிடம் இதுபோன்று இயற்கைக்கு அப்பாற்பட்ட ஆற்றல் இருக்கும் என்று நான் நம்பியதும் உண்டு. யோகப் பயிற்சி மூலம் மனிதர்கள் அதிசய ஆற்றல்களைப் பெற முடியும் என்று கேள்விப்பட்டிருந்ததால் விளைந்த நம்பிக்கை இது என நினைக்கிறேன்.

எனவே, மிரகிள் விஷயம் அதிகம் இருக்கும் என்ற எதிர்பார்ப்புடன் தான் நினைவுக் கதம்பம் புத்தகத்தைப் படிக்க ஆரம்பித்தேன். அத்தகைய ஓரிரு சம்பவங்கள் அந்த நூலில் இருக்கத்தான் செய்தன. குறிப்பாக, வறண்ட குளத்தில் தேங்கி இருந்த மிகச்சிறிய அளவு நீரில் பெரியவா தமது திருப்பாதங்களை நனைத்து, அந்த ஜலத்தைத் தமது தலையில் ப்ரோக்ஷணம் செய்து கொண்டு ப்ரார்த்தனை செய்ததையும், இதனைத் தொடர்ந்து பெருமழை பொழிந்ததையும், நாகை நீலாயதாக்ஷி ஆலய உற்சவம் தடைப்படாமல் விமரிசையாக நடந்ததையும் பற்றி அண்ணா இந்தப் புத்தகத்தில் விரிவாக எழுதி இருக்கிறார்.

இருந்தாலும், புத்தகத்தைப் படிக்கும்போது, அத்தகைய அதீதமான ஆற்றல்களை விட பெரியவாளின் குண மகிமைகளே மனதில் அதிக தாக்கத்தை ஏற்படுத்தின. பெரியவாளை ஸ்ரீசரணாள் என்று அழைப்பதற்குக் காரணமாக அமையும் அவரது பாத மகிமைகளை விவரிப்பதே இந்த நூலின் முக்கிய நோக்கம். மேலும், பெரியவா பீடாதிபதியாகப் பொறுப்பேற்றது குறித்த செய்திகளும் இதில் விரிவாகத் தரப்பட்டுள்ளன. கான்வென்டில் படிக்கும் சிறுவன் ஸ்வாமிநாதன், குருவும் பரமகுருவும் இல்லாத நிலையில் பீடாதிபதியாகப் பொறுப்பேற்றது பற்றி இந்த நூலில் அண்ணா எழுதியுள்ள பகுதிகள் மிகவும் உணர்ச்சி பூர்வமானவை. அதிலும், பிற்காலத்தில் பெரியவாளிடம் அண்ணா அந்த நினைவுகளைப் பற்றித் தூண்டித் துருவி விசாரிப்பதும், அப்போது பெரியவா மழுப்பலாக ஏதேதோ பேசுவதும் படிப்போர் உள்ளத்தை உருக்குபவை.

ஸ்வாமி விவேகானந்தர் புத்தகம் புரட்டிப் பார்த்ததையும், அப்போது அண்ணாவின் மொழிநடை எனக்கு மிகவும் எரிச்சலைத் தந்தது என்ற தகவலையும் முதல் பதிவில் குறிப்பிட்டிருந்தேன். ஆனால், இப்போது அண்ணாவின் எழுத்து நடை போரடிக்கவில்லை. எனினும், படிப்பதற்குக் கொஞ்சம் கஷ்டமாகத் தெரிந்தது. மொழிநடை மட்டுமல்ல, நூலில் உள்ள விஷயங்களுமே ரொம்ப கனமானவை. எனவே, அந்தப் புத்தகத்தை என்னால் மேலோட்டமாக மட்டுமே புரிந்து கொள்ள முடிந்தது.

***

ப்ரின்டிங் வேலைகள் - அதிலும், ஆஃப்செட் ப்ரின்டிங் - உண்மையில் எரிச்சலூட்டும் வேலை தான். காரணம், புத்தக உருவாக்கம் என்பது நிறைய சின்னச் சின்ன வேலைகளை உள்ளடக்கியது. ஒவ்வொரு வேலைக்காகவும் ஒவ்வொரு திசையில் ஓட வேண்டும். இதனால் அலைச்சலும் தாமதமும் தவிர்க்க முடியாதவை.

இதனால் பெரும்பாலும், யாரிடமாவது இந்த வேலைகளை ஒப்படைப்பது எளிய தீர்வாக இருக்கும். இவ்வாறு ப்ரின்டிங் ஆர்டரை ஏற்கும் நபர் அனைத்து இடங்களுக்கும் சென்று எல்லா வேலைகளையும் முடித்துக் கொடுப்பார். உரிய பில்களுடன் தனது கமிஷனையும் சேர்த்து அவர் பணம் பெற்றுக் கொள்வார். அண்ணா புத்தகங்களுக்கு இவ்வாறு ப்ரின்டிங் பணிகளை முடித்துத் தரும் வேலையைத் தான் நாங்கள் செய்து தந்தோம்.

புத்தகம் எழுதி முடித்ததும், அதை கம்ப்யூட்டரில் டைப் பண்ணி, பக்க வடிவமைப்பை முடித்து, ப்ரூஃப் படித்துத் திருத்தங்கள் போட்டு, ஃபைனல் லேசர் ப்ரின்ட் அவுட் முடிப்பது தான் முதல் கட்ட வேலை. அந்த ப்ரின்ட் அவுட்டை எங்களிடம் தருவார்கள். அடுத்தடுத்த வேலைகளை நாங்கள் முடித்து, இறுதியாக, புத்தகப் பிரதிகளை டெலிவர் பண்ணுவோம்.

இந்த இடத்தில், அண்ணாவின் வேலைமுறை குறித்த ஒரு தகவலைப் பகிர்ந்து கொள்ள வேண்டியது அவசியம். அண்ணா பெரும்பாலும், தனது வேலைகளைத் தானே செய்து கொள்ள வேண்டும் என்று விரும்புவார். அதிலும், அவரது கட்டுரைகளை மற்ற யாராவது ப்ரூஃப் படித்தால் அவருக்குத் திருப்தி ஏற்படாது. இது அவருக்கும் வேலைப்பளுவை அதிகரித்தது. மற்றவர்களுக்கும் சிரமம் தருவதாக இருந்தது. பத்திரிகைகளில் வெளியாகும் தன்னுடைய கட்டுரைகளைக் கூட அண்ணாவே ப்ரூஃப் படிப்பார். திவ்ய வித்யா ட்ரஸ்ட் புத்தக விஷயத்திலும் அப்படியே. கடைசிவரை பிழைத் திருத்தம் முழுமையாகச் செய்து முடிக்கப்பட்டு அவர் பார்த்து ஓகே சொன்ன பிறகு தான் புத்தகத்தை அச்சிட முடியும்.

நாங்கள் அச்சுப் பணியை ஏற்றதும் இதில் ஒரு சிறிய மாற்றம் வந்தது. அண்ணா கடைசி ப்ரூஃப் படித்து முடித்ததும், நாங்களே பிழைத் திருத்தம் போட்டு அச்சு வேலைகளைத் தொடங்க அனுமதித்தார். இந்த நிலையில், அனேகமாக, பத்துப் பதினைந்து திருத்தங்கள் பாக்கி இருக்கும். நாங்களே டிடிபியில் போய் அந்தத் திருத்தங்களைப் போட்டு வாங்கிக் கொள்வோம். அந்தத் திருத்தங்களை நான் சரி பார்த்தால் போதும், அண்ணாவிடம் காட்ட வேண்டிய அவசியமில்லை.

இதுதான் அண்ணா தன்னுடைய பணிகளில் என்னைச் செய்ய அனுமதித்த முதல் வேலை.

இதன்பின்னர், படிப்படியாக என்னை ப்ரூஃப் படிக்க அனுமதித்தார். சில வருடங்களுக்குப் பின்னர், அண்ணா மட்டும் படித்தால் போதாது, ஸ்ரீதர் ப்ரூஃப் படித்தே ஆக வேண்டும் என்று சொன்னார். தெய்வத்தின் குரல் ஏழாம் பகுதி டைப்செட் ஆகி வந்திருந்த போது அண்ணா உடல்நிலை பாதிப்புகள் ஆரம்பம். "எனக்கு உடம்பு முடியல. அதனால நீ மட்டும் படிச்சா போறும். ப்ரூஃப் மட்டுமில்லை, எடிட் பண்ணுவது, தலைப்புகள் போடுவது உட்பட மொத்த வேலைகளையும் நீயே பார்த்து விடு" என்று கூறினார்.

எனக்கு வாழ்க்கையில் கிடைத்த மிகப் பெரிய அங்கீகாரம் இது.

என்னிடம் முழுமையாகப் பொறுப்பை ஒப்படைத்தாலும் அண்ணாவும் ஒரு தடவை ப்ரூஃப் படித்தார்.

இதற்கு அடுத்த நாட்களில் அண்ணா புதிதாக எழுதுவது முழுமையாக நின்று விட்டது. பழைய நூல்கள் மறு அச்சு மட்டுமே. எனவே, ப்ரூஃப் வேலைகளும் குறைந்தன. ஃபிலிம் இல்லாத புத்தகங்களுக்கு மட்டுமே புதிதாக டைப்செட்டிங் செய்ய வேண்டிய தேவை வரும். இந்த நாட்களில் நான் மட்டுமே ப்ரூஃப் படிப்பேன். அண்ணா ப்ரூஃப் படிப்பதை அறவே நிறுத்தி விட்டார்.

### 4. அண்ணா சொன்ன மூன்று சம்பவங்கள்

ஆரம்ப நாட்களில் புத்தக வேலைகளுக்காக மட்டுமே அண்ணாவைச் சந்திப்பேன். சில மாதங்களுக்குப் பின்னர், அண்ணாவைப் பார்க்க வேண்டும் என்ற ஆசையால் உந்தப்பட்டு ஒரு தடவை அவரைப் பார்க்கச் சென்றேன்.

அது ஒரு ஞாயிற்றுக் கிழமை. அண்ணா திருவான்மியூரில் தங்கி இருந்தார். நான் அங்கே சென்றிருந்தபோது அண்ணாவைச் சுற்றி நிறைய இளைஞர்கள் இருந்தார்கள். அவர்கள் அண்ணாவுடன் ரொம்பவும் சகஜமாகச் சிரித்துப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

அண்ணாவிடம் இத்தனை பேர் கூட்டமாக அமர்ந்து நண்பர்களைப் போல பெருத்த குரலில் ஜாலியாக அரட்டை அடித்துக் கொண்டிருந்த காட்சி எனக்கு வினோதமாக இருந்தது. அண்ணா ரொம்ப சீரியஸ் மனிதரோ, உம்மணா மூஞ்சியோ இல்லை. சந்தோஷமாகப் பேசுவார். முகத்தில் புன்சிரிப்பு இருக்கும். அவ்வப்போது ஜோக் அடிப்பதும் உண்டு. இருந்தாலும், அன்றைய அரட்டைக் கச்சேரியைப் போல ஒரு ஜாலியான காட்சியை அதற்குப் பின்னர் நான் அவரிடம் பார்த்ததே இல்லை.

சற்று நேரத்தில் அண்ணா கண்களை மூடி மௌனமானார். உடனேயே அனைவரும் அமைதியாகி விட்டனர். சில வினாடிகளில் கண்ணைத் திறந்த அண்ணா, பெரியவா வாழ்க்கையில் நடந்த மூன்று சம்பவங்களை விவரித்தார். அண்ணா பேசி முடித்ததும் அனைவரும் மிகுந்த மகிழ்ச்சியுடன் புறப்பட்டுப் போனார்கள். அந்த இளைஞர்கள் அண்ணாவிடமிருந்து இதுபோல ஏதாவது செய்தியைக் கேட்பதற்காகவே வந்திருந்தார்கள் என்பதை யூகிக்க முடிந்தது.

பிரம்மசாரி அன்பர் ஒருவர் மடத்துக்கு தினசரி வில்வம் பறித்துத் தருவார். பெரியவா அவரை ஒருபோதும் கண்டு கொள்ளவதில்லை. அவரும் பெரியவா தரிசனத்துக்காகவோ, பிரசாதத்துக்காகவோ வந்து நின்றதில்லை. தனது வாழ்க்கையே மடத்துப் பூஜைக்கு வில்வம் பறித்துத் தருவதுதான் என்பது போல் கர்ம சிரத்தையாக வில்வம் பறித்துக் கொண்டு வருவார்.

ஒருநாள் பெரியவா நடந்து போய்க் கொண்டிருக்கும் போது அந்த பிரம்மசாரி எதிரில் வந்து கொண்டிருந்தார். பெரியவா அவரைச் சொடக்குப் போட்டுக் கூப்பிட்டார். அவரது பணியைப் பாராட்டினார். இவ்வளவு உயரிய பணியைச் செய்து தரும் அந்த மனிதருக்கு மடத்தில் இருந்து கைம்மாறு பண்ண வேண்டும் என்றும், இல்லாவிட்டால் மடாதிபதியாகிய தனக்கு தோஷம் வந்து சேரும் என்றும் தெரிவித்தார். "உனக்கு என்ன வேணும்னு கேள்" என்று பெரியவா சொன்னார்.

பெரியவா வாயில் இருந்து இத்தகைய வரம் தரும் வார்த்தைகள் வரும் என்று அந்த பிரம்மசாரி பல வருடங்களாக ஏங்கி இருந்தார் போலும்! உடனடியாகப் பெரியவா பாதத்தில் வீழ்ந்த அவர் பெருத்த விம்மலுக்கிடையே "இந்த ஜன்மா தான் கடைசியா இருக்கணும். பெரியவா அதுக்கு அனுக்கிரகம் பண்ணணும்" என்று பிரார்த்தனை செய்தார். பெரியவா அபய ஹஸ்தம் காட்டியவாறு மௌனமாக அந்த இடத்தை விட்டு அகன்றார்.

இதற்குச் சில வருடங்கள் பின்னர் பெரியவா ஆந்திர மாநிலத்தில் ஏதோ ஓர் ஊரில் முகாமிட்டிருந்த போது திடீரென ஒருநாள் பனிரண்டு பவித்திரம் கொண்டு வரச் சொன்னாராம். ஒவ்வொன்றாக விரலில் அணிந்து குளத்தில் முழுக்குப் போட்டாராம். பின்னர் அதே நீரில் அந்த தர்ப்பையை அர்க்யம் பண்ணினாராம். இப்படியே பவித்ரம் அணிந்து கொள்ளுதல், முழுக்கு, பவித்திரத்தை அர்க்யம் விடுதல் என்று பனிரண்டு தடவை பண்ணினாராம். பின்னர் தனது வழக்கமான பணிகளில் ஈடுபட்டார். பெரியவாளின் இந்த வித்தியாசமான செய்கைக்கான காரணம் யாருக்கும் புரியவில்லை.

சில நாட்களுக்குப் பின்னர் அனைவரும் மடத்துக்குத் திரும்பினர். பெரியவா முழுக்குப் போட்ட அதே தினம், அதே நேரத்தில் இங்கே வில்வ பிரம்மசாரி இயற்கை எய்தி இருக்கிறார் என்ற தகவல் தெரிய வருகிறது. எனினும், பிரம்மசாரியின் மரணத்துக்கும் பெரியவாளின் அர்க்யத்துக்கும் ஏதாவது தொடர்பு இருக்கிறதா என்று பெரியவாளிடம் கேட்கும் தைரியம் யாருக்கும் எழவில்லை. பெரியவாளிடம்

தைரியமாகப் பேசும் ஒரு நபர் அவரிடம் இது குறித்துக் கேட்டாராம். “அந்த பிரம்மசாரிக்குப் பன்னெண்டு ஜன்மா பாக்கி இருந்ததா? பெரியவா துடைச்சுப் போட்டுட்டேளா?” என்று அவர் கேட்டாராம். “அப்படித்தான் வச்சுக்கோயேன்” என்று பெரியவா சொன்னாராம்.

***

சில வருடங்கள் பின்னர் நான் இந்தச் சம்பவம் குறித்து ஒரு சிறு பத்திரிகையில் எழுதினேன். “அவனுக்குப் பன்னெண்டு ஜன்மா பாக்கி இருந்தது, துடைச்சுப் போட்டுட்டேன்” என்று பெரியவா சொன்னதாக அதில் நான் எழுதி இருந்தேன். அதைச் சுட்டிக் காட்டிய அண்ணா, “பெரியவா ஒருபோதும் தன்னைப் பற்றி இப்படிச் சொல்லிக் கொண்டதே இல்லை” என்று தெரிவித்தார்.

மேலும், அதில் பெரியவாளிடம் விசாரித்தது அண்ணா என்று பொருள் வருமாறு எழுதி இருந்தேன். ஆனால் அது தான் அல்ல என்றும், முகவூர் ஸ்வாமிகள் (அண்ணா அப்படிச் சொன்னதாகத் தான் ஞாபகம்.) என்பவர் தான் பெரியவாளிடம் விசாரித்தவர் என்றும் அண்ணா தெரிவித்தார்.

இதற்குப் பல வருடங்கள் பின்னர் - அண்ணாவின் இறுதி நாட்களில் - நங்கநல்லூர் ஆஞ்சநேயர் கோயில் ரமணியின் பெயரில் ஒரு பத்திரிகையில் இதே சம்பவம் வேறு விதமாக வெளியாகி இருந்தது. அவர் கட்டுரையில், ஆந்திரத்தில் ஒரு சமயம் பூஜைக்கு வில்வம் கிடைக்க வழியே இல்லாத நேரத்தில் மிகவும் ஆச்சரியம் தரும் வகையில் புரந்தரன் என்னும் ஓர் அப்பாவி ஆடு மேய்க்கும் இளைஞன் (உசிலம்பட்டியைப் பூர்விகமாகக் கொண்டவன்) யாருக்கும் தெரியாமல் தினசரி வில்வம் பறித்து மடத்து அன்பர்கள் கண்ணில் படுமாறு வைத்து விட்டுப் போய் விடுவான் என்றும், சில நாட்களுக்குப் பின்னர் பெரியவா மடத்து ஊழியர்கள் மூலம் அவனைக் கண்டு பிடித்து விசாரித்ததாகவும் அவர் எழுதி இருந்தார்.

பனிரண்டு பவித்ரம் அர்க்யம் செய்த விஷயத்திலும் அவர் வேறு விதமாக எழுதி இருந்தார். பெரியவா தியானம் செய்ததாகவும் ஒரு மணி நேரத்துக்கு ஒரு தடவை என ஆறு முறை முழுக்குப் போட்டதாகவும் அவர் எழுதி இருந்தார். மேலும், பெரியவா முழுக்குப் போட்டது காஞ்சிபுரத்தில் என்றும், அந்தப் பையன் மரணம் பற்றியும், அவனுக்கு மோக்ஷம் வேண்டும் என்று தான் பிரார்த்தனை செய்ததாக மடத்து காரியதரிசியிடம் தெரிவித்தாகவும் அவர் எழுதி இருந்தார்.

(புத்தகத்தில் இந்தச் சம்பவத்தைப் படித்த போதே, இதில் ஒரு பெரிய முரண்பாடு இருப்பதாக எனக்குப் பட்டது. அந்தச் சம்பவத்தில் குறிப்பிட்டிருப்பதைப் போலப் பெரியவா தம்மைப் பற்றியும், தமது அதீந்திரிய அனுக்கிரகம் பற்றியும் வாய் திறந்து பேசி இருக்க வாய்ப்பே இல்லை. சொல்லப்போனால், இந்தக் கிழவர் தம்மைப் பற்றியும் தமது அவதார ரகசியம் பற்றியும் தன்னிடம் பிரஸ்தாபிக்க வேண்டும் என்று அண்ணா தவம் கிடந்ததையும், தூண்டித் துருவி பெரியவாளிடம் இதுகுறித்துக் கேள்வி கேட்டதையும் சில இடங்களில் விரிவாகவே எழுதி இருக்கிறார். எனவே, அந்தப் புத்தகத்தில் குறிப்பிடப்பட்டிருந்த சம்பவம் தவறு என்று என் மனம் நம்பியது. எனினும், அதைப் பற்றி நான் அண்ணாவிடம் எதுவும் கேட்கவில்லை. அண்ணாவும் அதைக் கவனித்ததாக என்னிடம் காட்டிக் கொள்ளவில்லை.)

எனினும், இரண்டு வெர்ஷன்களுக்கும் இடையே பெருத்த வித்தியாசம் இருப்பதைப் பற்றி மட்டும் அண்ணாவிடம் கேட்டேன். இந்தச் சம்பவத்தை யார் தன்னிடம் கூறினார் என்பதே அண்ணாவுக்கு மறந்து விட்டது. சம்பவமே சரியாக நினைவில்லை. எது சரி என்று தெரியவில்லை என்று அண்ணா சொல்லி விட்டார்.

இந்த முகவூர் ஸ்வாமிகள் யார் என்று அண்ணாவின் காலத்துக்குப் பின்னர் ஒருசில காஞ்சி அன்பர்களிடம் விசாரித்தேன். அப்படி யாரும் இல்லை, அநேகமாக அது மேட்டூர் ஸ்வாமிகளாக இருக்கும் என்று ஓர் அன்பர் தெரிவித்தார். இதன்பின்னர் ஒரு தடவை மேட்டூர் ஸ்வாமிகளை தரிசனம் செய்யப் போயிருந்தபோது அவரிடம் விசாரித்தேன். அது, தான் அல்ல என்று அவர் சொல்லி விட்டார்.

***

அண்ணா சொன்ன இரண்டாவது சம்பவமும் வில்வம் தொடர்பானதே. திடீரென ஒரு நாள் மகா பெரியவா சத்தமாக மானேஜரை அழைத்து, ஒரு சாமானிய பக்தரின் விலாசத்தைத் தேடிக் கண்டுபிடிக்கச் சொல்கிறார். எனவே, அது யாருக்கு என்று ஒருவராலும் யூகிக்க முடியவில்லை. அந்த விலாசத்துக்கு ஒரு குறிப்பிட்ட தொகை டெலிக்ராஃபிக் மனி ஆர்டர் அனுப்புமாறு உத்தரவிடுகிறார்.

சில நாட்கள் கழிந்த பின்னர் அந்த விலாசத்தில் இருந்து ஒரு கடிதம் வருகிறது. அதன் மூலம் தான் மடத்தில் இருந்த அனைவருக்கும் விஷயம் புரிகிறது. மடத்துக்குப் பல வருடங்கள் வில்வம் பறித்துத் தந்த வைத்தா என்ற அன்பர் (பில்வம் வைத்தா என்று மடத்து வட்டாரத்தில் அறியப்பட்டவர்.) காலமாகி விட்டார். அவரது இறுதி யாத்திரைச் செலவுகளுக்குப் பணம் இல்லாமல் அவரது மகன் செய்வதறியாமல் திகைத்து நின்றபோது மடத்தில் இருந்து மணி ஆர்டர் பணம் அவர் கைக்குக் கிடைக்கிறது.

ஏற்கெனவே அவர் அக்கம்பக்கத்தில் உள்ள பலரிடம் சிறுசிறு தொகை கடன் வாங்கி இருந்தார். திருப்பித் தரும் நிலையில் அவர் பொருளாதாரம் இல்லை. மேலும், அவருக்குத் தெரிந்தவர்களும் வசதி இல்லாதவர்களே. இதனால் அப்பாவின் இறுதி யாத்திரைக்குப் பணம் புரட்ட முடியாத சூழ்நிலை. வீட்டுக்குள் அப்பா பிணம். வீட்டு வாசலில் கையறு நிலையில் கலங்கி நிற்கும் பிள்ளை. இத்தகைய சூழ்நிலையில், மடத்தில் இருந்து மணி ஆர்டர் பணம் வந்து சேர்ந்தது.

பில்வம் வைத்தா, ஒருமுறை பாடசாலை மாணவர்கள் திருட்டுத்தனமாக சினிமா போவதற்கு ஒத்தாசை செய்து பெரியவாளிடம் திட்டு வாங்கியதால் அவரிடம் கோபித்துக் கொண்டு ஊருக்குப் போய் விட்டாராம், வில்வப் பணியையும் பெரியவாளையும் பிரிந்திருக்க முடியாததால் சில மாதங்களுக்குப் பின்னர் மடத்துக்குத் திரும்பி வந்தார். இந்தச் சம்பவத்தையும் டெலிக்ராஃபிக் மணி ஆர்டர் சம்பவத்தையும் அண்ணா, கருணைக் கடலில் சில அலைகள் புத்தகத்தில் எழுதி இருக்கிறார்.

ஆனால், மணி ஆர்டர் தொகை அதில் குறிப்பிடப்படவில்லை. மகனின் பொருளாதாரச் சூழல் பற்றியும் அதில் விவரம் ஏதும் இல்லை. அந்த விலாசம் பீகாரைச் சேர்ந்தது என்றும், பதினைந்து ரூபாய் தொகை அனுப்பப்பட்டதாகவும் அண்ணா சொன்னதாக ஞாபகம்.

***

காஞ்சியில் அபீத் என்றொரு பையன் வசித்து வந்தான். பிறப்பால் அவன் ஒரு முஸ்லிம். இருந்தாலும், அவனுக்கு மகா பெரியவா மீது அளவு கடந்த அன்பு. மடத்தில் நடைபெறும் சந்திர மௌலீச்வர பூஜைக்காக அவன் ஆர்வத்துடன் கொன்றை மலர்கள் பறித்து வந்து கொடுப்பான். இதனால் மடத்தைச் சேர்ந்த அன்பர்கள் அவனை 'கொன்னை அபீத்' என்றே அழைப்பார்கள்.

மகா பெரியவா அவ்வப்போது அவனுக்குப் பழங்களும் கல்கண்டும் தந்து ஆசீர்வதிப்பார். பிறப்பால் முஸ்லிமான அவன் பிற மத தெய்வங்களின் பிரசாதத்தை ஏற்பது தவறு. எனவே, பெரியவா அவனுக்கு ஒருபோதும் பூஜைப் பிரசாதங்கள் கொடுக்க மாட்டார்.

இந்நிலையில் கொன்னை அபீத்தின் தந்தைக்கு இடமாறுதல் உத்தரவு வந்தது. அவர்கள் குடும்பம் காஞ்சியை விட்டு இடம் பெயர வேண்டிய சூழ்நிலை. இனிமேல் மடத்துப் பூஜைக்குப் பூக்கள் பறித்துத் தர முடியாது என்ற வருத்தம் அபீத்தை வாட்டியது.

ஊரை விட்டுக் கிளம்ப வேண்டிய நாளும் வந்தது. வழக்கம் போல அன்றைய தினமும் மலர்களைப் பறித்துப் பூக்குடலையில் எடுத்துக்கொண்டு மடத்துக்கு வந்தான், அபீத். எப்படியாவது பெரியவாளை நேரில் பார்த்து, ஊரை விட்டுக் கிளம்பும் செய்தியை அவருக்குத் தெரியப்படுத்த வேண்டும் என்பது அவனது ஆசை.

ஆனால் பாவம், அவனால் அன்று மடத்துக்குள் நுழைய முடியவில்லை. காரணம், மடத்தில் ஒரு வித்வத் ஸதஸ் நடைபெற்றுக் கொண்டிருந்தது. பெரியவாளைத் தூரத்தில் இருந்தாவது பார்த்துவிட்டுச் செல்லலாம்

என்றால் அதற்கும் வழியில்லை. சிறுவனான அவனுக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. வாசலிலேயே நின்று கொண்டிருந்தான்.

இப்படியே சில நிமிடங்கள் நகர்ந்தன.

ஸதஸில் அமர்ந்திருந்த பெரியவா, திடீரென மடத்து ஊழியர் ஒருவரை அழைத்து, "ஸதஸில் பங்குபெறும் அனைவரையும் வழிவிட்டு உட்காரச் சொல். வாசலில் பூக்குடலையுடன் ஒரு பையன் நின்று கொண்டிருக்கிறான். அவனை உள்ளே வரச்சொல்லு" என்று உத்தரவிட்டார்.

ஸதஸில் அமர்ந்திருந்தவர்கள் நகர்ந்து அமர, சபையின் நடுவே நடைபாதை உருவானது. வெளியே பூக்குடலையுடன் நின்று கொண்டிருந்த அபீத்திடம் வந்த ஊழியர் அவனைப் பெரியவா அழைப்பதாகத் தெரிவித்தார். மிகுந்த கூச்சத்துடன் மடத்தின் உள்ளே நுழைந்த அபீத், பூக்குடலையைப் பெரியவா பக்கத்தில் வைத்துவிட்டு ஓரமாக ஒதுங்கி நின்றான்.

கருணையே வடிவெடுத்த பெரியவாளின் கண்கள் கொன்னை அபீத்தின் மீது பதிந்தன. மெதுவாகப் பூக்குடலைக்குள் கையை விட்ட பெரியவா கைநிறையப் பூக்களை அள்ளினார். அபீத்தைப் பார்த்துப் புன்னகைத்துக்கொண்டே, "எனக்கோசரம்தானே கொண்டு வந்தே, (எனக்காகத்தானே கொண்டுவந்தாய்)!" என்று சொல்லியவாறே அந்தப் பூக்களைத் தனது தலை மீது அபிஷேகம் செய்துகொண்டார். ஸதஸில் இருந்த அனைவரும் வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருக்க, பெரியவாளோ 'எனக்கோசரம்தானே கொண்டு வந்தே' என்று சொல்லி மீண்டும் மீண்டும் பூக்களை அள்ளித் தலையில் சொரிந்துகொண்டார்.

மிதமிஞ்சிய உணர்ச்சிப் பெருக்கில் இருந்த அபீத்தின் கண்களில் இருந்து தாரைதாரையாகக் கண்ணீர் வழிந்தது. சபையெங்கும் ஹரஹர சங்கர ஜயஜய சங்கர கோஷம் ஒலித்தது.

பெரியவா வாழ்வில் எத்தனையோ வினோதமான சம்பவங்கள். இவற்றில் பல சம்பவங்கள் நூல்களிலும் பத்திரிகைகளிலும் வெளிவந்துள்ளன. வெளிவராதவையும் ஏராளம்.

ஆனாலும், மகா பெரியவா கொன்றை மலர்களைத் தனது தலை வழியே அபிஷேகம் செய்துகொண்ட இந்தச் சம்பவம் மிகவும் விதிவிலக்கான ஒன்று. இது பெரியவாளின் இயல்புக்கு விரோதமான சம்பவம் என்பதை அன்று அண்ணா சுட்டிக் காட்டினார்.

பெரியவா சாக்ஷாத் சிவபெருமானே என்பதில் பக்தர்கள் யாருக்கும் மாற்றுக் கருத்துக் கிடையாது. ஆனால், மகா பெரியவா தன்னை எப்போதாவது அவதார புருஷர் என்று சொல்லிக்கொண்டதுண்டா என்றால், "இல்லவே இல்லை" என்பதுதான் ஒரே பதில். அவர் தமது அவதார ரகசியத்தைத் திரை போட்டு மறைத்தே வந்தார்.

ஆனாலும், எப்போதாவது விதிவிலக்கான ஒருசில சூழ்நிலைகளில் தன்னையறியாமல் அவர் தனது அவதார ரகசியத்தை வெளியிட்டதுண்டு. அத்தகைய சந்தர்ப்பங்களில் ஒன்று தான் இந்தச் சம்பவம்.

கொன்றை மலர் சிவபெருமானுக்கு ப்ரீதி. மடத்து ஆசாரங்களில், குறிப்பாக, பூஜை விஷயங்களில், மகா பெரியவா எள்ளளவும் விதிமீறிச் செயல்பட்டதே இல்லை என்பதை அனைவரும் அறிவோம். ஆனால், அன்றைய தினம் மகாபெரியவா, மடத்து பூஜைக்கான புஷ்பங்களை எடுத்துத் தனது தலை மீது அபிஷேகம் செய்துகொண்டார். அதுமட்டுமல்ல, சந்திர மௌலீச்வரருக்காக அபீத் கொண்டு வந்த புஷ்பங்களைத் தனக்கானவை என்று சொன்னார், மகா பெரியவா. "எனக்கோசரம்தானே கொண்டு வந்தே எனக்கோசரம்தானே கொண்டு வந்தே" என்று அவர் திரும்பத் திரும்பக் கூறினார்.

"பெரியவா மீது பக்தி இருப்பதாக நம்மைப் போல எத்தனையோ பேர் சொல்லிக் கொள்கிறோம். ஆனால், நம் யாரிடமும் பெரியவா தன்னை சிவபெருமானின் அவதாரம் என்று ஒருபோதும் காட்டிக்கொண்டதில்லை. ஆனால், அந்தச் சிறுபையன் அபீத்திடம் - இவ்வளவுக்கும், அந்தப் பையன் பிறப்பால் ஹிந்து கூடக் கிடையாது. ஒரு முஸ்லிம் பையன் - பெரியவா மிகவும் ஸ்பஷ்டமாக, தனது

அவதார ரகசியத்தை வெளிப்படுத்திக் கொண்டார். சந்திர மௌலீச்வரருக்கான புஷ்பத்தைத் தனது தலையில் சொரிந்துகொண்டு, 'எனக்கோசரம்தானே கொண்டு வந்தே... எனக்கோசரம்தானே கொண்டு வந்தே...' என்று சொன்னதன் மூலம், 'நான்தாண்டா அந்த சந்திரமௌலி' என்று அவர் எவ்வளவு தெளிவாகச் சொல்லிவிட்டார். அந்தப் பையனின் பக்திக்கு ஈடு இணையே கிடையாது என்று சொல்லி முடித்தார் அண்ணா.

<u>பின்குறிப்பு 1:</u>

கொன்னை அபீத் பற்றிய இந்தத் தகவலை அண்ணா எந்தப் புத்தகத்திலும் எழுதவில்லை என்றே நினைக்கிறேன். வேறு எழுத்தாளர்கள் யாரும் எழுதி இருப்பதாகவும் தெரியவில்லை.

<u>பின்குறிப்பு 2:</u>

இந்த மூன்று சம்பவங்களுமே எந்தக் காலகட்டத்தில் நடந்தவை என்று அண்ணா தெரிவிக்கவில்லை. இருந்தாலும், பில்வம் வைத்தா சம்பவம் ஆயிரத்துத் தொள்ளாயிரத்து அறுபதுகளில் அல்லது அதற்கு முற்பட்ட காலத்தில் நடந்திருக்கலாம் என்பது என் அனுமானம். (மணி ஆர்டர் தொகை ரூபாய் பதினைந்து என்று அண்ணா சொன்னதை வைத்து நானாக யூகித்த விஷயம் இது.)

<u>பின்குறிப்பு 3:</u>

இந்த மூன்று சம்பவங்களையும் ஒரு பிரபல பத்திரிகைக்கு நான் எழுதி அனுப்பி இருந்தேன். சம்பவங்களின் பின்னணி, நங்கநல்லூர் ரமணி எழுதி இருந்த விஷயம், பில்வம் வைத்தா பற்றிய கூடுதல் விவரங்கள் முதலானவை அதில் இடம்பெறவில்லை. எனவே, பிற்பாடு இவற்றை எல்லாம் சேர்த்து விரிவாக எழுதலாம் என்ற எண்ணத்தில் "அந்தக் கட்டுரையைப் பிரசுரிக்க வேண்டாம்" என்று அந்தப் பத்திரிகை ஆசிரியரிடம் கேட்டுக் கொண்டேன். ஆனால், அவர் அதைத் தங்கள் பத்திரிகையின் இணையதளத்தில் வெளியிட்டு விட்டார். அது பொதுவெளியில் பல்வேறு வடிவங்களில் பயணித்துக் கொண்டிருக்கிறது. அவ்வப்போது அதன் ஏதாவது ஒரு வடிவம் எனக்கும் வாட்ஸ்அப்பில் வருவது உண்டு.

## 5. ஸ்வாமி லீலைகள் சில

பல வருடங்களாக எனது வாழ்க்கை விரக்தியிலேயே கழிந்தது. எப்போதுமே மனதில் நிறைய ஏக்கங்கள் உண்டு. பல சமயங்களில் அவை பொருளாதாரம், அங்கீகாரம், உயர் ஸ்தானம் சார்ந்தவையாக இருக்கும். எப்போதாவது சில சமயம் சுய தேடல் சார்ந்தவையாக இருந்ததும் உண்டு.

நான் எழுமலையில் இருந்த நாட்களில் ஒருமுறை திடீரென அத்தகைய ஏக்கம் வழக்கத்தை விட மிகவும் அதிகமாக இருந்தது. ஏதேதோ குழப்பமான நினைவுகள். இடையிடையே, சாய்பாபா, பெரியவா முதலிய மகான்கள் சம்பந்தம் வேண்டும் என்ற ஏக்கம் பிறந்தது. குறைந்தது, இந்தப் பிறவியில் இந்த இருவரையும் தொலைவில் இருந்து பார்த்துக் கை கூப்பும் பாக்கியமாவது கிடைக்குமா என்ற ஏக்கமும் எழுந்தது.

இதற்குச் சில நாட்கள் கழித்து ஒரு நிகழ்ச்சிக்காகக் கொடைக்கானல் போயிருந்தேன். மாதாந்தரக் கூட்டமாகிய அந்த நிகழ்ச்சி அந்த மாதம் கொடைக்கானலில் நடைபெற்றது. எங்கள் குழுவில் இருந்த ஸ்ரீ சிவராமன் என்பவருக்குத் தெரிந்த ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் என்ற மதுரை அன்பர் அன்று காலையில் அந்தப் பக்கமாக வந்து கொண்டிருந்தார். அவர் மூலம் ஸ்வாமி கொடைக்கானல் வந்திருப்பது தெரிய வந்தது. எங்கள் கூட்டத்தை ஒத்தி வைத்து விட்டு நாங்கள் அனைவரும் தரிசனத்துக்காகக் கிளம்பினோம். குளியல், சாப்பாடு முடிந்து நாங்கள் கிளம்புவதற்கு ரொம்ப தாமதமாகி விட்டது. நேரம் முதலான விவரங்கள் சரியாக நினைவில்லை. ஆனால், தரிசன நேரம் முடிந்த பின்னர்தான் நாங்கள் போய்ச் சேர்ந்தோம் என்பது மட்டும் நன்றாக நினைவிருக்கிறது.

அப்போது கொடைக்கானல் ஆசிரமத்தில் திறந்த வெளியில் தான் தரிசனம். நிறையப் பேர் - குறிப்பாக, வெளிநாட்டினர் - ஏற்கெனவே தரிசனத்துக்காக வந்து அமர்ந்திருந்தார்கள். நாங்கள் போய்ச் சேர்ந்து சிறிது நேரம் கழித்துத் தான் ஸ்வாமி அங்கே வந்தார். தொலைவில் இருந்தாவது அவரை தரிசிக்க முடிந்தது எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது.

தரிசனத்துக்காக அங்கே காத்திருந்தவர்களில் பலர், கையில் ஏதோ காகிதத்தை ஏந்தியவாறு ஸ்வாமியையே பார்த்துக் கொண்டிருந்ததைப் பார்த்தேன். அவர்கள் முகங்களில் மிகுந்த ஏக்கம் இருப்பதாக எனக்குத் தோன்றியது. அவர்களில் ஓரிருவரிடமிருந்து மட்டும் அத்தகைய காகிதங்களை ஸ்வாமி எடுத்துக் கொண்டார். மற்றவர்களிடம் இருந்த காகிதங்களை அவர் கண்டுகொண்டதாகவே காட்டிக் கொள்ளவில்லை. அவர்கள் கைகளில் இருந்த காகிதம் என்ன என்று ஸ்ரீ சிவராமனிடம் கேட்டேன். "ஒரொருத்தரும் சொந்தக் கதை, சோகக் கதையெல்லாம் பக்கம் பக்கமா எழுதி எடுத்துண்டு வந்திருப்பாங்க" என்று அவர் விளக்கினார்.

"அதை ஏன் சாய்பாபா அவங்க கிட்டேர்ந்து வாங்கிக்கலை?"

"ஸ்ரீதரா, அதெல்லாம் அவரோட சாய்ஸ். அவரை யார் கேள்வி கேட்கறது? அவருக்குத் தோணறதை எடுத்துப்பார். தன்னோட லெட்டரை அக்ஸெப்ட் பண்ணிக்க மாட்டாரான்னு நிறைய பேர் வாரக் கணக்கா காத்திருப்பாங்க."

'ஆகா, இவரை தரிசிக்கும் பாக்கியம் கிடைக்குமா என்று நினைத்தேன். சில நாட்களிலேயே இப்படி எதிர்பாராத விதமாக தரிசனம் கிடைத்து விட்டது' என்று அதுவரை மகிழ்ச்சியில் இருந்த எனக்கு அந்த மகிழ்ச்சி உடனடியாக மறைந்து விட்டது. 'பாவம், இவர்கள் எவ்வளவு தூரத்தில் இருந்து வந்திருக்கிறார்களோ! இவர்கள் தரும் கடிதங்களை வாங்கிக் கொண்டால் இந்த சாய்பாபா எந்த வகையில் குறைந்து போய் விடுவார்?' என்ற கேள்வி எனக்குள் பெரிதாக எழுந்தது. அதுவரை என் மனதில் மகான் ஸ்தானத்தில் வீற்றிருந்த ஸ்வாமி அப்போது கல் நெஞ்சக்காரராகக் காட்சியளித்தார்.

***

இந்த தரிசன அனுபவத்தில் இரண்டு அம்சங்கள் வியப்புக்குரியவை. முதலாவது அம்சம் சில மாதங்கள் கழித்துப் புரிய வந்தது. இரண்டாவது அம்சம் சில வருடங்களுக்குப் பின்னரே புரிந்தது.

ஸ்வாமியின் கொடைக்கானல் விஜயம் பற்றி எங்களுக்குத் தகவல் தெரிவித்த மீனாட்சி சுந்தரம் என்ற அந்த மதுரைவாசி விரைவிலேயே சென்னைவாசி ஆகி விட்டார். அப்போது நானும் சென்னைவாசி ஆகியிருந்தேன். இருவருக்கும் இடையே ஓரளவு பரிச்சயமும் ஏற்பட்டிருந்தது.

பகுத்தறிவுப் பாசறைகளின் வார்த்தைகளின் மூலமாகத் தான் ஸ்வாமி எனக்கு முதலில் அறிமுகமானார். சாய்பாபா படத்தின் முன்பாக நைவேத்யமாக வைக்கப்படும் பொருட்களில் கொஞ்சம் கொஞ்சம் மாயமாகி விடும் என்று சிலர் சொல்லிக் கேள்விப்பட்டதும் உண்டு. அதுவரை எனக்கு ஸ்வாமி பற்றிய அறிமுகம் இவ்வளவு தான்.

இந்நிலையில், சாயி பக்தரான இந்த மீனாட்சி சுந்தரம் தான் முதன் முதலாக என்னிடம் ஸ்வாமி பற்றி ஒருசில விஷயங்களைப் பகிர்ந்து கொண்டவர். அவர் மூலம் நான் கேள்விப்பட்ட முதல் சாயி லீலை தாராபுரம் நடராஜன் வாழ்வில் நடந்தது.

தாராபுரம் நடராஜன் வறிய குடும்பத்தைச் சேர்ந்தவர். அப்பா இல்லை. அம்மா ஏதேதோ வீடுகளில் வேலை செய்து சம்பாதித்து நடராஜனைப் பள்ளியில் படிக்க வைத்தார். அம்மாவுக்குத் தீராத வியாதி ஏற்பட்டது. மரணத் தறுவாயில் அவர் நடராஜனிடம் அங்கிருந்த காலண்டரைத் தன் வயிற்றில் வைக்குமாறு கூறினார். நடராஜன் கைகளைப் பிடித்து, காலண்டரில் இருந்த முருகன் படத்தின் மீது வைத்த அவர், “முருகா, நீ தாண்டா என் மகனுக்குச் சோறு போடணும்!” என்று மீண்டும் மீண்டும் புலம்பியவாறே உயிர் நீத்தார்.

அம்மாவின் மரணத்துக்குப் பின்னர் தூரத்து உறவினர் ஒருவரது ஆதரவில் வளர்ந்த நடராஜன், பள்ளிப் படிப்பை முடித்து ஆசிரியப் பயிற்சியும் பெற்று ஆசிரியராகப் பணியில் இணைந்தார். திருமணம் ஆகி இரண்டு குழந்தைகளும் இருந்தன.

இந்நிலையில் ஸ்வாமி பற்றி யதேச்சையாகக் கேள்விப்பட்ட அவருக்குள் ஒருவித ஏக்கம் - ஸ்வாமியை தரிசிக்க வேண்டும் என்று. இதற்குச் சில நாட்களுக்குப் பின்னர் ஒருநாள் மாலை அவர் சாலை வழியே நடந்து வந்து கொண்டிருந்தார். தூரத்தில் யாரோ அவரைப் பெயர் சொல்லி அழைப்பதைக் கேட்டுத் திரும்பிப் பார்க்கிறார். ஏதோ பெரிய காரில் இருந்து யாரோ தலையை வெளியே நீட்டி இவரை அழைப்பது புரிந்தது. காருக்கு அருகே சென்றால், ஸ்வாமி உள்ளிருந்து இறங்குகிறார்.

திடுதிடுப்பென்று ஸ்வாமியைப் பார்த்த அதிர்ச்சி மட்டுமல்ல, அடுத்தடுத்து நடராஜனுக்குப் பல அதிர்ச்சிகள் காத்திருந்தன. ‘இவருக்கு எப்படி என் பெயர் தெரியும்?’ என்பது இரண்டாவது அதிர்ச்சி. “என்ன அப்படிப் பார்க்கிறாய்? நீ தானே நினைத்தாய். அதனால் தான் வந்திருக்கிறேன்” என்று ஸ்வாமி சொன்னது மூன்றாவது அதிர்ச்சி. ஒரு காகிதத் துண்டில் பொள்ளாச்சி விலாசம் ஒன்றை எழுதி நடராஜன் கையில் கொடுத்த ஸ்வாமி, மறுநாள் காலை ஒன்பது மணிக்கு அங்கு வருமாறு மிகவும் வற்புறுத்திச் சொன்னது அடுத்த அதிர்ச்சி. நடராஜன் திக்குமுக்காடிப் போய் விட்டார்.

உணர்ச்சி மிகுதியால் இரவு சாப்பிடவோ உறங்கவோ முடியாமல் தவித்த அவர், விடியற்காலையில் மனைவியையும் குழந்தைகளையும் அழைத்துக் கொண்டு ஸ்வாமி தந்திருந்த பொள்ளாச்சி விலாசத்துக்குச் சென்றார். சற்று நேரத்தில் வேகமாக வெளியே வந்த ஸ்வாமி, நடராஜனின் கைகளைப் பற்றி வேகமாக உள்ளே அழைத்துச் சென்றார். அங்கே நடராஜனுக்குத் தன் கையால் இலை போட்டு உணவு பரிமாறினார். நடப்பவை எதையும் நம்ப முடியாமல் தவித்துக் கொண்டிருந்த நடராஜனால் உணவருந்தவும் முடியவில்லை. “நீ ராத்திரியும் சாப்பிடலையே! நல்லாச் சாப்பிடு” என்று வற்புறுத்தி அவரைச் சாப்பிட வைத்தார், ஸ்வாமி. கை அலம்புவதற்கும் அவரே நீர் வார்த்தார். பின்னர் ஒரு வாழைப்பழத்தையும் தன் கையாலேயே உரித்துத் தந்தார்.

அதன்பின்னர் நடந்தது தான் க்ளைமாக்ஸ். நடராஜன் வாழைப்பழம் சாப்பிட்டு முடித்ததும், “அப்பப்பா, எவ்ளோ வருஷம் ஆச்சு உங்கம்மா ப்ரார்த்தனை பண்ணி...” என்றாராம் ஸ்வாமி.

மீனாட்சி சுந்தரம் இந்தச் சம்பவத்தைச் சொன்ன போது உணர்ச்சி மிகுதியில் எனக்குக் கண்ணீர் பெருகியது. மேலும், ஸ்வாமியைத் தரிசிக்க முடியுமா என்ற ஏக்கம் எனக்குள் பிறந்த வெகு சில நாட்களிலேயே

அவரது தரிசனம் கிடைத்ததும் பளிச்சென நினைவு வந்தது. தாராபுரம் நடராஜனின் மனதில் தோன்றிய எண்ணத்தைப் போலவே தான் எனக்கும் தோன்றியது என்ற ஒற்றுமை புரிந்தது. ஸ்வாமியை தரிசிக்க வேண்டும் என்ற ஏக்கம் தானாகவே எனக்குள் ஏற்பட்டதா அல்லது எனக்குள் எழுந்த எண்ணமே அவருடைய சங்கல்பம் தானா என்ற கேள்வி பிறந்தது.

கொடைக்கானல் தரிசனத்துக்குக் காரணமான அதே மீனாட்சி சுந்தரம் வாயிலாக நடராஜன் வாழ்க்கைச் சம்பவத்தை எனக்குச் சொல்ல வைத்தது ஸ்வாமியின் லீலையோ என்ற கேள்வியும் எழுந்தது. அவனருளாலே அவன் தாள் வணங்கி என்ற திருவாசக வரி நினைவில் ஓடியது.

கொடைக்கானல் தரிசனம் யதேச்சையானதா அல்லது அதில் எனக்கென்று பிரத்தியேகமான செய்தி உள்ளதா என்ற கேள்வி பல நாட்கள் என் மனதில் உறுத்திக் கொண்டே இருந்தது.

சில வருடங்கள் கழிந்த பின்னர் அண்ணாவுடன் அறிமுகம் ஏற்பட்டது. பெரியவா மீதும், ஸ்வாமி மீதும் அண்ணா எழுதிய நூல்களை விரும்பிப் படித்தேன் கொஞ்சம் கொஞ்சமாக அண்ணாவுடன் நெருக்கம் வளர்ந்தது. ஸ்வாமி தரிசனங்களுக்கும் சென்றதுண்டு. ஒருமுறை வொயிட்ஃபீல்டில் சர்வீஸ் பண்ணச் சென்றதும் உண்டு.

இந்தக் காலகட்டத்தில் தான் எனக்கு ஸ்வாமியின் பங்சுவாலிடி தெரிய வந்தது. ஸ்வாமி எந்த வேலையிலும் - குறிப்பாக, தரிசனம் தருவது போன்ற நிகழ்வுகளில் - நேரம் தவறியதே இல்லை. ஆனால், கொடைக்கானலில் நாங்கள் தரிசனத்துக்குச் சென்றிருந்த போது நாங்களும் லேட், ஸ்வாமியும் லேட்.

அன்று நாங்கள் இருந்த சூழ்நிலையில் தாமதமாகவாவது தரிசனத்துக்குப் போக முடிந்ததே பெரிய விஷயம் தான். உண்மையில் ஸ்வாமி லேட்டாக வந்தார் என்பது தான் நம்பவே முடியாத அதிசயம். இது புரிந்த போது, அவர் எனக்காகவே தாமதமாக வந்தார் என்பது எனக்கு ஸ்பஷ்டமாகப் புரிந்தது.

***

அச்சு வேலைகளின் முதல் கட்டம் டிடிபி தான். டிடிபி காரர்கள் லேசர் ப்ரின்ட் எடுப்பதற்கு ரொம்பத் தயங்குவார்கள். செலவு அதிகமாகும் என்பதே இதற்குக் காரணம். (அவர்களுக்குத் தரப்படும் கூலி மிகக் குறைவானது.) பெரும்பாலும் சென்னையில் ஒரு ப்ரூஃப் + ஒரு ஃபைனல் என இரண்டு லேசர் ப்ரின்ட் அவுட் மட்டுமே தருவார்கள்.

அண்ணாவோ இரண்டு தடவை ப்ரூஃப் படிப்பார். எனவே, ஃபைனல் ப்ரின்ட் எடுத்த பின்னரும் திருத்தம் போட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும். டிடிபியில் இந்தத் திருத்தங்களைப் போட்டு மொத்தப் புத்தகத்தையும் இன்னொரு ப்ரின்ட் எடுத்துத் தர மாட்டார்கள். மாறாக, திருத்தம் போட்ட வரிகளை மட்டும் தனியாக ப்ரின்ட் எடுத்துத் தருவார்கள். அனேகமாக பத்துப் பதினைந்து வரிகள் இதுபோல இருக்கும். முந்தைய ப்ரின்டில் உள்ள தவறான வரிகளின் மீது இந்தப் புதிய வரிகளை ஒட்டுவது எங்கள் வேலை.

பசையை வைத்து ஒட்டினால் ப்ரின்ட் அழுக்காகி விடும். ஃபிலிம் தரமாக இருக்காது. எனவே, டேப் வைத்து ஒட்ட வேண்டும். ஏற்கெனவே உள்ள வரியின் மீது புதிய வரியை கோணல் இல்லாமல் வைத்து ஒட்ட வேண்டும். மேலும், பின்னால் உள்ள தவறான வரியை வெட்டி நீக்க வேண்டும். மிகவும் கவனமாகச் செய்யப்பட வேண்டிய வேலை இது.

கருணைக் காஞ்சி கனகதாரை புத்தகம் அச்சிடும் போது இந்த வேலையில் ஒரு சிறிய தவறு நடந்து விட்டது. பிழையுள்ள பழைய வரியை முழுமையாக வெட்டி நீக்காமல் பாதி மட்டும் நீக்கி இருந்தோம்.

இது பெரிய குற்றம் அல்ல என்றாலும், அந்த வாக்கியம் படிப்பதற்கு அபத்தமாக இருந்தது.

அச்சுப் பணிகள் நிறைவடைந்த போது மணி ஏழு இருக்கும். அண்ணாவுக்குத் தருவதற்காகக் கையில் இரண்டு பிரதிகளை மட்டும் எடுத்துக் கொண்டேன். மீதிப் பிரதிகளை திவ்ய வித்யா ட்ரஸ்ட் அலுவலகத்துக்கு அனுப்ப வேண்டும்.

அண்ணாவிடம் வர ஆரம்பித்த சில மாதங்களில் சுந்தரம் பஜன்ஸ் எனக்கு அறிமுகமானது. ஞாயிற்றுக் கிழமைகளில் தவறாமல் சுந்தரம் போய் விடுவேன். கருணைக் காஞ்சி புத்தகம் கைக்கு வந்த தினம் சிவராத்திரி. அன்று இரவு கண் விழித்திருக்கலாம் என்று சுந்தரம் போய் விட்டேன். அங்கே தொடர்ச்சியாக ஏதேதோ நிகழ்ச்சிகள் இருந்தன. நான் இடையிடையே வெளியே வந்து மைதானத்தில் சும்மா அமர்ந்திருந்தேன். சும்மா இருக்கும் போது புத்தகத்தைப் படித்து முடித்து விடலாம் என்று கருணைக் காஞ்சி புத்தகத்தைப் படிக்க ஆரம்பித்தேன். சுமார் மூன்று மணி நேரத்தில் படித்து முடித்தேன்.

அப்போது தான் அந்தப் பிழையான வரி கண்ணில் பட்டது.

அதைப் பார்க்கும் போது எனக்கு மிகவும் வெட்கமாக இருந்தது. இருந்தாலும், ஒரே ஒரு வாக்கியத்தில் தானே பிழை! வாசகர்கள் கண்ணில் படத்தான் செய்யும். என்னதான் தவறான வாக்கியமாக இருந்தாலும் பொருள் புரிந்து கொள்வதில் சிரமம் இருக்காது. அச்சான பின்னர் அண்ணா இந்தப் புத்தகத்தை வாசிப்பாரா என்பது சந்தேகம் தான். எனவே, அண்ணா கண்ணில் இந்தப் பிழை தென்பட வாய்ப்பே இல்லை. யாராவது கண்டு பிடித்துக் கேட்டால், அப்போது பார்த்துக் கொள்ளலாம், நாமாகப் போய் யாரிடமும் இதைப் பற்றிச் சொல்ல வேண்டாம் என்று முடிவு பண்ணினேன்.

அந்த நாட்களில் அண்ணா தண்டையார்பேட்டையில் மோகனராமன் இல்லத்தில் தங்கி இருந்தார். மறுநாள் அவரை நேரில் பார்த்து அந்த இரண்டு பிரதிகளையும் கொடுத்தேன். ரொம்பவும் சந்தோஷமாகப் பிரதிகளைக் கையில் வாங்கிய அண்ணா, அவற்றைத் தலையில் வைத்துக் கொண்டார். பின்னர், ஒரு பிரதியைப் பிரித்து ஏதோ பக்கத்தைப் பார்த்தார். அடுத்து ஏதோ இன்னொரு பக்கத்தை எடுத்தார். அந்தப் பக்கத்தில் தான் அந்தத் தவறான வரி இருந்தது. பக்கத்தைத் திறந்ததுமே முதலில் அவர் கண்ணில் பட்டது அதுதான். “ஐயய்யோ என்னப்பா இது! ஏடாகூடமா ப்ரின்ட் ஆகியிருக்கு!” என்றார்.

நான் அசடு வழிந்தது பெரிய விஷயம் அல்ல. ஆனால், இதன் பின்னர் தான் அண்ணாவுக்கு எங்கள் மீது நம்பிக்கை கூடியது என்பது ரொம்பவே விசேஷமான செய்தி. இந்த நம்பிக்கையின் விளைவாக அண்ணா எடுத்த சந்தோஷமான முடிவு தான் தீராத விளையாட்டு சாயி புத்தகம்.

அண்ணாவின் புத்தகங்கள் என்றாலே சாயி அன்பர்களுக்கு ‘ஸ்வாமி’ (ஆங்கிலத்தில் Baba Satya Sai) புத்தகம் தான் நினைவு வரும். ஆனாலும், தீராத விளையாட்டு சாயி புத்தகத்தை அண்ணா ரொம்ப முக்கியமாகக் கருதினார். காரணம், அதில் இடம்பெற்ற புகைப்படங்கள்.

இந்த நூல் கல்கியில் பல வருடங்களுக்கு முன்பு தொடராக வெளியானது. இந்தத் தொடரில் அண்ணா குறிப்பிட்டிருக்கும் சம்பவங்களுடன் தொடர்புடைய சில அரிய புகைப்படங்களுடன் இதை நூலாக வெளியிட வேண்டும் என்று அண்ணா விரும்பினார். இந்தப் புகைப்படங்களில், ஸ்வாமி சிறு வயதில் மரத்தின் மீது அமர்ந்திருக்கும் படமும், ஸ்வாமி கையில் அமர்ந்திருக்கும் கிளியின் உடலுக்குள் ஸ்வாமியின் கண் தெரிவதும் அண்ணாவுக்கு மிகவும் பிடித்தவை. முதன்முதலாக எடுக்கப்பட்ட புட்டபர்த்தி சாடிலைட் புகைப்படம் சாயி அன்பர்கள் மத்தியில் பிரபலம். அந்தப் புகைப்படத்தில் ஸ்வாமியின் உருவம் புட்டபர்த்தியைப் பார்த்தவாறு இருக்கும். அந்தப் புகைப்படத்தையும் இந்த நூலில் அச்சிட விரும்பினார் அண்ணா. இந்தப் புகைப்படங்களை ஆர்ட் பேப்பரில் எட்டுப் பக்கங்கள் அச்சிட்டு அந்த நூலில் இணைக்க வேண்டும் என்று அவர் ஆசைப்பட்டார்.

அச்சுத் தரம் என்பது இயந்திரங்களையும் அச்சுமுறையையும் மட்டுமே சார்ந்தது அல்ல. அவற்றுக்கு அப்பாற்பட்ட ஏராளமான அம்சங்கள் உண்டு. நிறைய நடைமுறைச் சிக்கல்களும் உண்டு. எனவே, புத்தகங்களைத் தரமாக அச்சிடுவது கொஞ்சம் கடினமான விஷயமே.

அச்சுத் தரம் குறித்த பயம் காரணமாகவே அண்ணா இந்தப் புத்தகத்தை வெளியிடத் தயங்கி வந்தார். எங்கள் மீது நம்பிக்கை பிறந்ததால் இந்தப் புத்தகத்தை வெளியிடலாம் என்று முடிவு செய்தார்.

புத்தகம் குறித்த அண்ணாவின் கண்ணோட்டம் பற்றி இந்த இடத்தில் சொல்ல வேண்டியது அவசியம்.

பத்திரிகைகளுக்கு வழவழ பேப்பரில் அட்டை போடுவதும், லேஅவுட், புகைப்படம் முதலியவற்றில் விசேஷ கவனம் செலுத்துவதும் வீண் வேலை என்று ராஜாஜி சொல்வாராம். சொல்ல வரும் விஷயத்தை வாசகர்களுக்குப் புரியும் விதத்திலும் பிழையில்லாமலும் சொல்ல வேண்டும் என்பதில் மட்டுமே முழு கவனமும் இருக்க வேண்டும் என்பது அவர் கருத்து.

ராஜாஜியின் இந்த அபிப்பிராயம் அண்ணாவுக்கு மிகவும் பிடித்திருந்தது. எனவே, தான் எழுதியுள்ள விஷயங்கள் பிழையில்லாமல் அச்சிடப்பட வேண்டும் என்பதில் மட்டுமே அண்ணா அதிக கவனம் செலுத்துவார். அட்டைப்படம், லேஅவுட் முதலியவை புத்தகத்தின் தவிர்க்க முடியாத அம்சங்கள். இருந்தாலும், அண்ணா இவற்றைப் பற்றி அதிகம் அலட்டிக் கொள்வதில்லை.

அதேநேரத்தில், அட்டைப்படம், புகைப்படங்கள் முதலியவை புத்தகத்தில் உள்ள விஷயங்களின் தொடர்புடையவையாக இருக்க வேண்டும் என்பதில் அண்ணா மிகவும் கவனமாக இருப்பார். அவற்றைத் தேர்ந்தெடுப்பதில் மிகுந்த அக்கறையும் காட்டுவார். தனது எதிர்பார்ப்புக்கு ஏற்ற புகைப்படங்கள் கிடைக்கவில்லையெனில் ஓவியர்கள் மூலம் படம் வரையச் சொல்வதும் உண்டு. ஆனால், புகைப்படங்கள், அட்டைப்படம் முதலியவை ரொம்ப அழகாகவும் அலங்காரமாகவும் இருக்க வேண்டும் என்றெல்லாம் அவர் எதிர்பார்த்தது இல்லை. அச்சுத் தரம் குறித்து அதிகம் கவலைப்பட்டதும் இல்லை.

இந்த விஷயத்தில் தீராத விளையாட்டு சாயி ஒரு விதிவிலக்கு. இதில் புகைப்படங்கள் ரொம்ப அழகாக அச்சிடப்பட வேண்டும் என்று அண்ணா மிகவும் ஆசைப்பட்டார். எங்கள் மீது ஏற்பட்ட நம்பிக்கை காரணமாகவே அண்ணா இந்தப் புத்தகத்தை வெளியிட முன்வந்தார்.

தீராத விளையாட்டு சாயி புத்தகம் விஷயமாகப் பேசுவதற்காக நான், திவ்ய வித்யா ட்ரஸ்டைச் சேர்ந்த ஸ்ரீ யஷோத், ஸ்ரீ கண்ணன் (இருவருமே அண்ணாவுக்கு ஒண்ணு விட்ட தம்பிகள்), ஓவியர் மணியன் செல்வம் ஆகிய நால்வரும் அண்ணா அழைப்பின் பேரில் அவரைத் தண்டையார்பேட்டையில் சந்தித்தோம்.

அப்போது, அந்த நூலின் புகைப்படங்களை சாயி அன்பர்கள் ரொம்பவே போற்றுவார்கள் என்று அண்ணா கூறினார். அந்தப் புத்தகத்தை அச்சிடுவதற்கு ரொம்ப வருஷம் தயங்கியதையும், ஸ்ரீசக்ரா மீது ஏற்பட்டுள்ள நம்பிக்கை காரணமாக மட்டுமே அதை வெளியிடத் தீர்மானித்ததாகவும் தெரிவித்தார். “சாயி டிவோடீஸ் அத்தனை பேரும் உன்னைத் தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடுவார்கள். அதனால் நன்றாக ப்ரின்ட் பண்ணித் தா” என்று திரும்பத் திரும்ப என்னிடம் கூறினார்.

இங்கே இன்னொரு முக்கிய விஷயத்தையும் குறிப்பிட வேண்டும்.

அத்தனை புகைப்படங்களையும் உரிய சைஸ் காகிதத்தில் ஒட்டுவதுதான் முதல் கட்ட வேலை. இந்த வேலையைச் செய்வதற்கு ஓவியர் தேவை இல்லை. அதிலும், மணியம் செல்வனைப் போன்ற ரொம்பத் திறமையான ஓவியர் இந்த வேலையைச் செய்ய வேண்டிய அவசியம் இல்லவே இல்லை. இந்த வேலையை ஸ்ரீசக்ராவில் நாங்களே செய்து விட முடியும். இந்தப் புகைப்படங்கள் ரொம்ப நல்ல விதத்தில் அச்சிடப்பட வேண்டும் என்ற அக்கறை காரணமாகவே அவரிடம் அண்ணா இந்தப் பணியை ஒப்படைத்தார். மணியம் செல்வன் மீது அண்ணாவுக்கு ரொம்ப பிரியம் உண்டு என்பதும் ஒரு காரணமாக இருக்கலாம்.

புகைப்படப் பகுதியின் பக்க வடிவமைப்பு நன்றாக இருக்க வேண்டும் என மணியன் செல்வத்திடம் அண்ணா ரொம்ப வலியுறுத்தினார்.

நாங்களும் ரொம்ப சிரத்தையுடன் புத்தக வேலைகளைக் கவனித்தோம். இருந்தாலும், புத்தகம் அச்சிடும் போது ஒரு பெரிய தவறு ஏற்பட்டு விட்டது. “ப்ரின்டிங் முடிந்தாகி விட்டது என்றால் ஒண்ணு ஃபாரம். இல்லேன்னா ஜெல்லி” என்று நான் அடிக்கடி சொல்வதுண்டு. “அச்சிடப்பட்ட காகிதத்தை அப்படியே புத்தகத்தில் பயன்படுத்தியாக வேண்டும். அவ்வாறு பயன்படுத்த முடியாமல் போனால், அதில் எந்த மாற்றமும் செய்து மீண்டும் பயன்படுத்த முடியாது. தூக்கிக் குப்பையில் போடுவது தான் ஒரே வழி” என்பது இதன் பொருள்.

தீராத விளையாட்டு சாயி புத்தகத்தின் புகைப்படங்களை அச்சிடும் போது ஏற்பட்ட தவறும் இத்தகையதே. ஒரு புகைப்படத்தில் ஸ்வாமியின் உதட்டுப் பகுதியில் ஒரு சிறிய கறை படிந்து விட்டது. மூன்று கலர்கள் அச்சாகி விட்ட பின்னர் தான் இந்தக் குறைபாடு தெரிய வந்தது. அந்தப் படத்தைப் பார்த்தால், ஸ்வாமியின் பல் உடைந்து வாயில் ரத்தம் வழிவது போல இருக்கும்.

இப்போது நாங்கள் என்ன செய்வது? அச்சான காகிதம் முழுவதையும் கழித்துக் கட்ட வேண்டும் அல்லது இந்தக் குறைபாட்டுடன் புத்தக வேலைகளை முடிக்க வேண்டும். இந்த இரண்டைத் தவிர எங்களுக்கு வேறு வழி கிடையாது. பெருத்த நஷ்டத்தைத் தாங்கும் நிலையில் நாங்கள் இல்லை. எனவே, அந்தக் குறையுடன் புத்தக வேலைகளை முடித்தோம்.

எங்கள் மீது எவ்வளவு நம்பிக்கையுடன் அண்ணா இந்தப் புத்தகத்தைக் கொடுத்தார். அது பொய்யாகி விட்டதே என்று நாங்கள் ரொம்பவே வருந்தினோம்.

புத்தக வேலை முடிந்ததும் சில பிரதிகளை எடுத்துக் கொண்டு அண்ணாவிடம் சென்றேன். புத்தகத்தைக் கையில் வாங்கியதுமே அண்ணா புகைப்படப் பகுதியைத் தான் பார்வையிட்டார். நான் அதில் இருந்த குறைபாட்டை அண்ணாவிடம் காட்டினேன். எனது வருத்தத்தைத் தெரிவித்தேன். ஆனால், அண்ணாவுக்கு அது குறையாகவே தெரியவில்லை. அவர் அதைப் பொருட்படுத்தவும் இல்லை. மாறாக, குழந்தை ஸ்வாமி மரத்தின் மீது அமர்ந்திருக்கும் படத்தை அண்ணா பார்த்துக் கொண்டே இருந்தார். அதைக் கையால் தடவியவாறே என்னிடம், "ரொம்ப நன்னா வந்திருக்குப்பா. டிவோடீஸ் உன்னைத் தலை மேல வச்சுக் கொண்டாடுவா. எல்லாப் பெருமையும் ஸ்ரீசக்ராவுக்குத் தான்" என்று பாராட்டினார். இதற்குப் பின்னரும் பல்வேறு சந்தர்ப்பங்களில் அந்த பால சாயி புகைப்படத்தைக் குறிப்பிட்டு அண்ணா எங்களைப் பாராட்டியதுண்டு.

இந்தக் குறைபாட்டில் வியப்புக்குரிய இன்னொரு செய்தியும் உண்டு.

அந்த அச்சுக் குறைபாடு எவ்வாறு ஏற்பட்டது என்பது பற்றி நாங்கள் ஆராய்ந்து பார்த்தோம். ஃபிலிம் எடுக்கும் போது அல்லது ப்ளேட் போடும் போது ஏற்படும் தவறு காரணமாக மட்டுமே ப்ரின்டிங்கில் இத்தகைய குறைபாடு வர முடியும். ப்ளேட் போடும் போது தவறு ஏற்படவில்லை என்பதைப் புரிந்து கொள்ள முடிந்தது. ஃபிலிமில் கோளாறு இல்லை என்பதையும் கவனித்தோம். (அடுத்த தடவை இந்தப் புத்தகம் அச்சிடும் போது அந்த ஃபிலிம்களையே பயன்படுத்தினோம்.)

அப்படியானால், தவறு எங்கே ஏற்பட்டது?

அந்த சாயிநாதனுக்கே வெளிச்சம்.

நாங்கள் ரொம்பவும் பெருமைப்பட்டு விடக் கூடாது என்பதற்காக ஸ்வாமி எங்கள் தலையில் தட்டினாரோ, என்னவோ! ஆனால், இந்தத் தவறே எனக்கு ரொம்பப் பெருமையாக அமைந்து விட்டது.

ஆம், ஸ்வாமியின் பல்லை உடைத்த பெருமை யாருக்குக் கிடைக்கும்?

***

எனக்கு எப்போதுமே மனக்குழப்பம் தான். சில சந்தர்ப்பங்களில் திடீர் திடீரென குழப்பம் அதிகரிக்கும். இதுபோன்ற ஒரு சூழலில் ஸ்வாமி தரிசனத்துக்காகக் கொடைக்கானல் போயிருந்தேன். மதுரையில் ஆரப்பாளையம் பஸ் ஸ்டாண்டுக்கு நான் வந்து சேர்ந்த போது கொடைக்கானல் செல்லும் பஸ் தயாராக நின்று கொண்டிருந்தது. டீ குடித்து விட்டு அதில் ஏறலாம் என்று நினைத்தேன். அதற்குள் பஸ் கிளம்ப ஆயத்தமானது. எனவே, டீயைத் தியாகம் செய்து விட்டு பஸ் ஏறி விட்டேன்.

கொடைக்கானல் ஏரிக்கரையில் இறங்கி நேரே ஆசிரமம் போனேன். அனேகமாக, மணி பனிரண்டு அல்லது ஒன்று என ஞாபகம். தரிசன க்யூ ஆரம்பமாகி விட்டது. ஆசிரமத்து கேட் திறக்க இன்னும் இரண்டு மணி நேரமாவது ஆகும். அதுவரை திறந்த வெளியில் க்யூ.

அருகில் ஹோட்டல் எதுவும் இல்லை. டீ மட்டும் தான் கிடைத்தது. முந்தைய நாள் இரவு எதுவும் சாப்பிடவில்லை. காலையிலும் பட்டினி. எனவே, நன்றாகப் பசி எடுத்தது. இருந்தாலும் பரவாயில்லை என்று க்யூவில் நிற்க ஆரம்பித்தேன்.

ஸ்வாமியின் தரிசனம் கிடைப்பதற்குக் காரணம் அவரது சங்கல்பம் மட்டுமே என்று கேள்விப்பட்டிருக்கிறேன். இந்தக் கொடைக்கானல் விஜயத்துக்கு முன்பே இரண்டு தடவை புட்டபர்த்தி போயிருக்கிறேன். புட்டபர்த்தியில் முன்னால், பின்னால் - என்றெல்லாம் வேறுபாடு கிடையாது. ஹாலுக்குள் ஸ்வாமி எந்தப் பகுதிக்கு வேண்டுமானாலும் போவார். அவர் எந்தத் திசையில் நடந்து போய் யாருக்குப் பக்கத்தில் நின்று தரிசனம் கொடுப்பார் என்பது அவருக்கு மட்டுமே வெளிச்சம்.

இருந்தாலும், "ஏனோ" உணவைப் புறக்கணித்து க்யூவில் நிற்க ஆரம்பித்தேன்.

எனக்குப் பின்னால் யாரோ ஒரு பெரியவர் தன் பையனுடன் நின்றிருந்தார்.

சாலையில் ஒரு வியாபாரி ஐந்து ரூபாய் விலைக்கு ப்ளாஸ்டிக் கவர் விற்றுக் கொண்டிருந்தார். நிறைய பேர் அதை வாங்கினார்கள். மழை பெய்தால் போர்த்திக் கொள்வதற்கு உபயோகப்படும்.

"ஏனோ" எனக்கு அதை வாங்கத் தோன்றவில்லை.

சற்று நேரத்தில் தூறல் போட ஆரம்பித்தது. அதுவரை ஐந்து ரூபாய்க்கு ப்ளாஸ்டிக் கவர் விற்பனை செய்த அந்த வியாபாரி இப்போது அதன் விலையை இருபது ரூபாய் ஆக்கி விட்டார். எனக்கு பயங்கர ஆத்திரம். இது அநியாயம், நான் இந்த கவரை வாங்க மாட்டேன் என்று, தூறலில் நனைந்தவாறே க்யூவில் நின்றிருந்தேன்.

கொஞ்ச நேரத்தில் தூறல் வலுத்து மழை கொட்ட ஆரம்பித்தது. ஏற்கெனவே நல்ல பசி. பெரு மழையிலும் நனைகிறேன். இப்போது நான் எங்கேயாவது ஒதுங்க வேண்டும் அல்லது எனது உடலைப் போர்த்திக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால், இந்தக் கடும் குளிரில் உடல்நிலை பாதிப்பு ஏற்படும் என்ற பயம் எழுந்தது. ஆனாலும், "ஏனோ" க்யூவை விட்டுச் செல்லவும் மாட்டேன், கவர் விலைக்கு வாங்கவும் மாட்டேன் என்ற எண்ணமும் வலுத்தது.

நம்மைச் சுற்றி அன்றாடம் எத்தனையோ அநியாயங்கள் நடந்து கொண்டு தான் இருக்கின்றன. நம் வேலை உண்டு நாம் உண்டு என்று எதையும் கண்டு கொள்ளாமல் தான் வாழ்கிறோம். நானும் இப்படிப்பட்ட மனிதன் தான். அதிலும், வயிற்றுப்பாட்டுக்காகக் கஷ்டப்படும் அந்த ஏழை வியாபாரி மீது அன்று எனக்கு வந்த ஆத்திரத்தில் கொஞ்சம் கூட நியாயம் இல்லை.

இருந்தாலும், அன்று "ஏனோ" தேவையற்ற பிடிவாதம். சாப்பிடாமல் இருந்தது, க்யூவில் நின்றது உட்பட அன்று நடந்த எல்லாமே இந்த "ஏனோ" வகையைச் சேர்ந்தவைதான்.

இந்த "ஏனோ" தான் ஸ்வாமி அன்று நிகழ்த்திய லீலைக்கு அஸ்திவாரமாக அமைந்தது.

சற்று நேரத்தில் பின்னால் இருந்து யாரோ என்னைத் தட்டினார்கள். குளிரில் நடுங்கிக் கொண்டே திரும்பிப் பார்த்தேன். எனக்குப் பின்னால் ஒரு வெள்ளைக்காரர் நின்று கொண்டிருந்தார். அவர்தான் என்னை முதுகில் தட்டியவர் என்பது புரிந்தது. "I have got two. Would you take one?" என்று சொல்லியவாறு தனது சட்டைக்கு உள்ளிருந்து ஒரு ப்ளாஸ்டிக் கவரை எடுத்து என்னிடம் நீட்டினார். அவசர அவசரமாக அதை வாங்கிப் போர்த்திக் கொண்டேன். உடை முழுவதுமாக நனைந்து போயிருந்தாலும் அந்த கவரைப் போர்த்திக் கொண்டதுமே குளிர் குறைந்தது. நடுக்கம் மறைந்தது. இதுவுமே அந்த "ஏனோ" வகையைச் சேர்ந்ததுதான். காரணம், கொடைக்கானலில் மழை பெய்யும் போது நனைந்த உடையுடன் திறந்த வெளியில் நிற்பது ரொம்பவே கடினம். ஆனால், அன்று "ஏனோ" எனக்குக் குளிரவில்லை.

நான் க்யூவில் நிற்க ஆரம்பித்த போது வேறு ஏதோ மனிதர் தான் எனக்குப் பின்னால் நின்று கொண்டிருந்தார். அவருடன் அவர் பையனும் நின்றிருந்தான். அந்த வெள்ளைக்காரர் எப்போது வந்தார் என்பது தெரியவில்லை. அந்த வெள்ளைக்காரர் கால்களில் நலங்கு இடப்பட்டிருந்தது. பார்ப்பதற்கு அது

ரொம்பவே வித்தியாசமாக இருந்தது. ஹிந்துக்களே அதிகம் நலங்கு இட்டுக் கொள்ளாத இந்தக் காலத்தில் ஒரு வெள்ளைக்காரர் கால்களில் நலங்கு இருப்பது எனக்கு வினோதமாகத் தெரிந்தது.

விரைவிலேயே கேட் திறந்தது. வரிசையாக உள்ளே போனோம்.

(கொடைக்கானலில் வெளிநாட்டினரும் இந்தியர்களும் தனித்தனியே உட்கார வைக்கப்படுவார்கள். வெளிநாட்டினர் அமர்ந்திருக்கும் ஹாலில் தான் ஸ்வாமியும் உட்காருவார். ஸ்வாமியின் சொற்பொழிவும் அங்கேயே நடக்கும். ஸ்வாமி ஹாலுக்குள் போகும் போதும், திரும்ப வரும் போதும் மட்டுமே உள்நாட்டினருக்கு அவர் தரிசனம் கிடைக்கும். கொடைக்கானல், ஊட்டி ஆகிய இரண்டு இடங்களிலும் வெளிநாட்டினருக்குத் தான் முன்னுரிமை. அவர்களுக்கு இந்திய வெயில் ஒத்துக்கொள்ளாது என்பதால் அவர்களுக்காக மட்டுமே ஸ்வாமி இந்த இரண்டு இடங்களுக்கும் வருவார். இவையெல்லாம் அதுவரை எனக்குத் தெரியாது.)

தரிசனம் முடிந்ததும் முதலில் வெளிநாட்டினரைத் தான் வெளியே செல்ல அனுமதித்தார்கள். எனவே, நான் சற்றுத் தாமதமாகத் தான் வெளியே வர முடிந்தது. இருந்தாலும், வேகமாக ஓடி வந்து முதல் ஆளாக வெளியே வந்து வாசலில் நின்றேன். தரிசனம் முடித்துத் திரும்பிய அனைத்து வெள்ளைக்காரர்களின் கால்களையும் பார்த்தவாறு அங்கேயே காத்திருந்தேன். (ப்ளாஸ்டிக் கவரைத் திருப்பித் தருவதற்காக.)

நலங்கு ஆசாமியைக் காணோம்.

கொஞ்சம் வியப்பாக இருந்தது. அவர் எங்கே போயிருக்க முடியும் என்பது புரியவில்லை. திரும்பிப் போகும் வழியில் ஒரு குஷ்ட ரோகிப் பிச்சைக்காரர் கண்ணில் பட்டார். அவர் மீது அந்த ப்ளாஸ்டிக் கவரைப் போர்த்தி விட்டு என் வழியில் போய் விட்டேன்.

அன்று இரவு கொடைக்கானலில் தங்கினேன். மறு நாள் மதுரை போய் விட்டு மூன்றாவது நாள் காலை சென்னை திரும்பினேன்.

அலுவலகத்தில் நுழைந்ததுமே, "புதுசா ஒரு புத்தகம் ப்ரின்ட் பண்ணணும்னு அண்ணா சொன்னார். புத்தக பிரதி கொடுத்தனுப்பி இருக்கிறார்" என்ற தகவல் கிடைத்தது. அச்சுக்காக வந்திருந்த நூல் -

"ஸ்வாமி - இரண்டாம் பகுதி".

அதை லேசாகப் புரட்டிப் பார்த்து விட்டு மீண்டும் மேசை மீது வைத்தேன். புத்கத்தின் பின் அட்டை கண்ணில் பட்டது. அதில், ஸ்வாமி பாத தரிசனம் காட்டும் இரண்டு புகைப்படங்கள் இருந்தன. ஒரு புகைப்படத்தில் ஸ்வாமியின் பாதத்தில் நலங்கு இருந்தது. கொடைக்கானலில் ப்ளாஸ்டிக் கவர் கொடுத்த வெள்ளைக்கார ஆசாமி பாதத்தில் இருந்த அதே நலங்கு.

அப்படியானால், வெள்ளைக்கார ஆசாமி வடிவத்தில் வந்தது ஸ்வாமி தானா?

எனக்குத் தெரியாது.

அந்த நாட்களில் இந்தச் சம்பவம் குறித்துப் பலரிடம் வியப்பாகப் பேசியதுண்டு. ஆனால், ஸ்வாமியின் லீலைகள் பற்றிய அண்ணாவின் புத்தகங்களைப் படிக்கப் படிக்க, நாளாவட்டத்தில் லீலைகள் மீதான வியப்பு மறைந்து விட்டது. ஸ்வாமியின் உண்மையான லீலா வினோதம் அவரது அன்பர்களிடம் ஏற்படும் பக்குவமே என்பது புரிய ஆரம்பித்தது. ("புரிந்தது" என்றால் "புரிய வைக்கப்பட்டது" என்று பொருள் என அண்ணா அடிக்கடி சொல்வார்.)

ஸ்வாமியைப் பற்றி எழுதும்போது ஓரிடத்தில் அண்ணா, **"அவனாம் இவனாம் மற்றும்பர் அவனாம் என்றிராதே. அவனாம் அவனே எனத் தெளிந்து கண்ணனுக்கே தீர்ந்தால் அவனே எவனேலும் ஆம்"** என்ற ஆழ்வார் பாசுரத்தை மேற்கோள் காட்டி இருப்பார்.

அவனாம் அவனே என்று ஸ்வாமியை நான் பார்க்க வேண்டும் என்ற ஆவல் எனக்குள் எழுந்தது உண்மை. இதே காலகட்டத்தில் பெரியவா மீதும் இதேபோன்ற பக்தி ஏற்பட்டது. பிற்காலத்தில் யோகி ராம்சுரத் குமார் மீதும் இதேபோன்ற பக்தி எழுந்தது. ஆனால், எதுவுமே நிலைக்கவில்லை.

மிக வித்தியாசமாக, வினோதமாக, என் மனம் அண்ணா மீது மட்டுமே லயித்தது.

ஆனால், சில வருடங்களில் அண்ணா மீதான பக்தியும் மறைந்து விட்டது. பக்தி ஏற்பட்டதற்கும் காரணம் புரியவில்லை. அது மறைந்ததற்கும் காரணம் புரியவில்லை.

விளக்கின் அடியில் இருள் இருப்பது இயற்கையின் நியதி என்பது மட்டும் புரிகிறது.

***

அண்ணாவுக்காக நான் முதன் முதலில் ப்ரூஃப் படித்தது நவராத்திரி நாயகி புத்தகமே.

நவராத்திரி நாயகி புத்தகம் ப்ரூஃப் படித்துக் கொண்டிருந்த காலத்தில் புட்டபர்த்தி போயிருந்தேன். இது எனது மூன்றாவது புட்டபர்த்தி விஜயம். முதல் தடவை போயிருந்த போது பிரசாந்தியில் தங்குமிடம் இருப்பதே தெரியாமல் வெளியில் அறை எடுத்துத் தங்கினேன். (சென்னையில் இருந்து புட்டபர்த்திக்கு நேரடி பஸ் சர்வீஸ் இருந்தது என்ற தகவல் கூட அப்போது எனக்குத் தெரியாது.)

இரண்டாவது தடவை பிரசாந்தியில் டார்மிடரியில் தங்கினேன். ஆகா, ஒரு ஆளுக்கு வெறும் இரண்டு ரூபாய் மட்டுமே! ஆனால், கொசுக்கடி தாங்க முடியவில்லை.

இந்தத் தடவையும் டார்மிடரியிலேயே தங்கலாம் என்று முடிவு செய்தேன் டார்மிடரிக்கான க்யூவில் நின்றேன். ரசீது போடும் ஊழியரிடம், "டார்மிடரியில் ஏதாவது போர்வை கிடைக்குமா?" என்று கேட்டேன். அவ்வளவுதான்! அந்த மனிதர் ஏதோ அசிங்கத்தை மிதித்தவர் போலத் திடுக்கிட்டுப் போனார். எனக்கு பிரசாந்தியில் தங்க அனுமதி இல்லை என்று சொல்லி விட்டார். எனக்கு இதற்கான காரணம் புரியவில்லை. காரணம் என்ன என்று அவரிடம் கேட்டேன். இடம் தர முடியாது என்பதற்கு மேல் அவர் எந்த பதிலும் சொல்லத் தயாரில்லை. மாறாக, நான் சாய் சமிதி உறுப்பினரா என்பதைத் தெரிந்து கொள்வதிலேயே அவர் குறியாக இருந்தார். (நான் சமிதி உறுப்பினர் என்றால் யாரிடமும் புகார் செய்து விடுவேன், இதனால் தனக்கு எதுவும் பிரச்சினை வரலாம் என்ற அச்சமோ என்னவோ!)

காரணம் தெரியாமல் இடத்தை விட்டு நகர மாட்டேன் என்று நான் அங்கேயே நின்று விட்டேன். ஆனால் அந்த மனிதரோ, "நோ ஆர்க்யுமென்ட்ஸ்" என்று கத்துகிறார். இதற்குள் பல விநாடிகள் கடந்து விட்டன. எனக்குப் பின்னால் நின்றிருப்பவர்கள் பொறுமை இழக்க வாய்ப்பு உண்டு. அதையும் விட முக்கியமான காரணம், எனது கோபம். எனக்குக் கோபம் வந்து விட்டால் ஏடாகூடம் ஆகிவிடும். எனவே, என்னை மிகவும் கட்டுப்படுத்திக் கொண்டு அந்த இடத்தை விட்டு வெளியேறினேன்.

சாயி பெயரில் அனைத்து ஊர்களிலும் இயங்கும் அனைத்து அமைப்புகளுக்கும் ஸ்வாமி ஒருவர் தான் சொந்தக்காரர். அவருக்காக மட்டுமே அனைவரும் வருகிறார்கள். வசதி இருப்பவர்கள், இல்லாதவர்கள் எல்லோருமே காணிக்கை தருகிறார்கள். சமுதாயத்தில் உயர் அந்தஸ்தில் இருப்பவர்கள் கூட சாயி ஸ்தாபனங்களில் எல்லா மட்டங்களிலும் - செருப்பு அடுக்கி வைப்பது உட்பட - சேவை செய்து கொண்டிருப்பார்கள். ஸ்வாமியின் சூப்பர் ஸ்பெஷாலிடி ஆஸ்பத்திரி இந்தியாவின் மிகப் பெரிய மருத்துவமனைகளில் ஒன்று. அதில் பெரும்பாலானோர் சம்பளம் வாங்காமல் தன்னலமின்றி சேவை செய்பவர்கள்.

இவர்கள் எல்லோருக்கும் ஒரே ஒருவரைத் தான் தெரியும். அது ஸ்வாமி, ஸ்வாமி, ஸ்வாமி மட்டுமே. அவருக்காகவே அனைவரும் பணிபுரிகிறார்கள். ஸ்வாமி தனது ஆசிரமத்தில் பக்தர்களுக்காக ஏதேதோ வசதிகளை ஏற்படுத்தினால், இந்த ஆசாமியைப் போன்ற சிலர் ஸ்வாமியின் பெயருக்குக் களங்கம் விளைவிக்கும் விதத்தில் நடந்து கொள்கிறார்களே என்ற ஆத்திரம் எனக்கு. ஸ்வாமியின் பணத்தை இந்த

ஆசாமி எனக்குப் பிச்சை போடுவதாக நினைத்துக் கொண்டாரோ என்ற கேள்வி எனக்குள் மீண்டும் மீண்டும் தலை தூக்கியது.

நேரம் செல்லச் செல்ல, அந்த ஊழியர் மீதான ஆத்திரம் ஸ்வாமி மீதான கோபமாக உருவெடுத்தது. ஆம், அவரது ஸ்தாபனத்தில் நடக்கும் தவறுகளுக்கு அவர் தானே பொறுப்பாளி! அவரது சங்கல்பம் இல்லாமலா இதுபோன்ற ஒரு சம்பவம் நடக்க முடியும்? நான் பிரசாந்தியில் தங்கக் கூடாது என்பது அவரது சங்கல்பமா? இதுதான் அவரது சங்கல்பம் என்றால், நான் தெருவோரத்தில் தங்குகிறேன். அவருக்கு ரொம்பவே சந்தோஷமாக இருக்கட்டும் என்று தோன்றியது

அடுத்த நாள் மாலை வரை புட்டபர்த்தியில் இருப்பதாக உத்தேசம். என்னிடம் ஓரளவு பணம் இருந்தது. லாட்ஜில் தங்கி இருக்கலாம். ஆனால், விரும்பவில்லை. ஸ்வாமி என்னைப் பிச்சைக்காரனைப் போலத் தானே நடத்தினார்? பிச்சைக்காரனைப் போலவே தெருவில் தங்குகிறேன். அவர் ரொம்பவே சந்தோஷப்பட்டுக் கொள்ளட்டும். அன்று இரவு கொசுக்கடி எனது தூக்கத்தைக் கொள்ளையடித்து விடும் என்பது நன்றாகவே உறைத்தது. அதுவும் நல்லது தான். கொசுக்கடியில் இருந்து தப்பிப்பதற்காகப் போர்வை இருக்குமா என்று விசாரித்ததால் தானே ஸ்வாமி என்னைத் துரத்தினார்? மேலும், அந்த இரு நாட்களிலும் சாப்பிடாமல் இருப்பது என்று முடிவு செய்தேன். எனது பட்டினி அவருக்கு போனஸ் சந்தோஷமாக இருக்கட்டுமே!

நான் ஏகாதசி முதலான விரதங்கள் ஒருபோதும் இருந்ததில்லை. எவ்வளவோ வறுமையில் இருந்த நாட்களில் கூட பட்டினி இருந்தது கிடையாது. வேலை அல்லது பயண நிமித்தமாக எப்போதாவது சாப்பிட முடியாமல் போனது உண்டு. சில சந்தர்ப்பங்களில் சில இடங்களில் ஓட்டல் சாப்பாடு பிடிக்காமல் உணவைத் தவிர்த்தது உண்டு. எனினும், இதுபோன்றவை மிகவும் விதிவிலக்கான சம்பவங்களே. பெரும்பாலும் நான் பட்டினியே அறியாதவன். எனவே, இரண்டு நாள் பட்டினி என்பது எனக்கு ரொம்பவே கஷ்டமான விஷயம். இருந்தாலும், எனது உள்ளத்தில் ஸ்வாமியின் மீது ஏற்பட்ட ஆத்திரத்துக்கு அதுபோன்ற வடிகால் தேவையாக இருந்தது

அன்று தரிசன நேரம் தவிர மற்ற சமயங்களில் வெளியே சுற்றித் திரிந்தேன். அவ்வப்போது ப்ரூஃப் படித்தேன். இருட்டியதும் தெரு விளக்கு வெளிச்சத்தில் ப்ரூஃப் படித்துக் கொண்டிருந்தேன். அப்போது ஒரு பையன் - சுமார் இருபது வயது இருக்கலாம் - என் பக்கத்தில் வந்து உட்கார்ந்தான். நான் அவனைக் கண்டுகொள்ளவில்லை. ஆனால், அவன் என்னைப் பற்றி ஆர்வமாக விசாரித்தான். பகல் முழுவதும் நான் வெளியிலேயே இருந்திருக்கிறேன் என்பதை அந்தப் பையன் கவனித்திருக்கிறான். அதற்கான காரணத்தைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆவல் அவன் பேச்சில் தெரிந்தது. கையில் பணம் இல்லையா என்று கேட்டான். பணம் பிரச்சினை இல்லை. லாட்ஜில் தங்க விருப்பம் இல்லை என்று பொத்தாம் பொதுவாகச் சொன்னேன். அவனைப் பற்றி விசாரித்தேன்.

அந்தப் பையன் ஹைதராபாதைச் சேர்ந்தவன். ஸ்வாமி தரிசனத்துக்காக வந்திருக்கிறான். அவன் பர்த்தி வருவது இதுவே முதல் தடவை. பஸ்ஸில் இருந்து இறங்கியதும் பார்த்தால் பர்சைக் காணோம். மொத்தப் பணமும் போய் விட்டது. சட்டைப் பையில் ஏதோ சில்லறைக் காசுகள் மட்டுமே. என்ன செய்வது என்று தெரியாமல் போலீஸ் ஸ்டேஷனில் போய் உதவி கேட்டிருக்கிறான்.

(அந்தக் காலத்தில் பெரிய பெரிய ஸ்தாபனங்களில் மட்டும் ஈமெயில் ஓரளவு புழக்கத்தில் இருந்தது. மொபைல், பேஜர் முதலானவை அறிமுகமாகவில்லை.)

அவனுக்குத் தெரிந்த ஏதோ ஓர் உறவினர் வீட்டில் தொலைபேசி உண்டு. போலீஸ் உதவியுடன் அந்த எண்ணைத் தொடர்பு கொண்டு எஸ்டிடியில் பேசி விஷயத்தைத் தெரியப்படுத்தி இருக்கிறான். அங்கிருந்து யாராவது அவனது வீட்டுக்குப் போய்த் தகவல் சொல்ல வேண்டும். வீட்டில் இருந்து யாராவது பணம் எடுத்துக் கொண்டு புட்டபர்த்திக்கு வர வேண்டும். அதுவரை அந்தப் பையன் கேர் ஆஃப் ப்ளாட்ஃபார்ம். நானும் அதேபோல இருந்ததால் அவனுக்கு என்னைப் பற்றித் தெரிந்து கொள்ளும் ஆர்வம் ஏற்பட்டிருக்கிறது.

அந்தப் பையன் பாவம்! யாரிடமும் உதவி கேட்க விரும்பாமல் நாள் முழுவதும் பட்டினி இருந்திருக்கிறான். அவனை ஹோட்டலுக்கு அழைத்துச் சென்று டிஃபன் வாங்கிக் கொடுத்தேன். இரவு நாங்கள் இருவரும் ஏதோ ஒரு கடை வாசலில் கொசுக்கடிக்கு நடுவே உறங்க முயற்சி செய்தோம். மறு நாள் மூன்று வேளையும் அவனுக்குச் சாப்பாடு வாங்கிக் கொடுத்தேன்.

நான் சாப்பிடாமல் இருப்பதற்கான காரணம் கேட்டான். விவரம் சொன்னேன். தனக்கு உதவி செய்ய ஆள் வேண்டும் என்பதற்காகவே ஸ்வாமி என்னை வெளியே தங்க வைத்து விட்டார் என்று அவன் நம்பினான்.

ஊருக்குத் திரும்பும்போது அவன் கையில் கொஞ்சம் பணம் கொடுத்தேன். பணத்தை வாங்கிக் கொள்வதற்கு அவன் மிகவும் கூச்சப்பட்டான். ஆனாலும், அவன் குடும்பத்தில் இருந்து எப்போது ஆட்கள் வந்து சேர்வார்கள் என்பது தெரியவில்லை. எனவே, அவனை வற்புறுத்திப் பணத்தைக் கொடுத்தேன். வாங்கிக் கொண்டான்.

அண்ணா வாரத்தில் மூன்று நாட்கள் மௌன விரதம் இருப்பார். இதுதவிர, வருடம் ஒருமுறை ஒரு மாதம் முழுவதும் மௌன விரதம் இருந்ததும் உண்டு. தனது வேலைக்கு மௌனம் அவசியம் என்று அவர் எல்லோரிடமும் சொல்லுவார். ஆனால், பார்வையாளர்களிடமிருந்து தப்பிப்பதற்காக அவர் பயன்படுத்திய கருவியே மௌனம் என்பது என் யூகம். மௌனம் என்றாலும், நாம் பேசுவதைக் கேட்டுக் கொள்வார். அவரது கருத்துகளை எழுதிக் காட்டுவார்.

சென்னை திரும்பியதும் அண்ணாவைப் பார்க்கச் சென்றேன். அன்று அண்ணா மௌனம். பர்த்தியில் நடந்ததைப் பற்றி அவரிடம் சொன்னேன். புன்முறுவலுடன் அண்ணா, “ரொம்ப சந்தோஷம். உபவாசமும் அடியார் சேவையும் லபித்தன (கிடைத்தன)” என்று எழுதிக் காட்டினார்.

பணத்தைத் தொலைத்த பையனுக்கு உதவுவதற்காகவே ஸ்வாமி என்னை வெளியே நிறுத்தினார் என்று அதுவரை நம்பி இருந்தேன். அதாவது, என் மூலம் ஸ்வாமி அந்தப் பையனுக்கு அனுக்கிரகம் பண்ணினார் என்பது என் எண்ணம். ஸ்வாமி எனக்கு என்ன அனுக்கிரகம் பண்ணினார் என்பதை அண்ணா புரிய வைத்தார். எனக்கு உபவாசம் கிடைத்தது, எனக்கு அடியார் சேவை கிடைத்தது. அண்ணா சொல்வதற்கு முன் இது எனக்கு உறைக்கவே இல்லை.

அந்தப் பையனுக்கு என்னால் ஏதோ பிரயோஜனம் கிடைத்திருக்கலாம். ஆனால், உண்மையான பிரயோஜனம் எனக்குத் தான் என்பது புரிந்தது (புரிய வைக்கப்பட்டது).

**6. அண்ணாவின் நூல்கள் சில**

அம்மா புத்தகம் ப்ரூஃப் படித்த பின்னர் அண்ணாவைப் பார்க்கப் போயிருந்தேன்.

“அம்மா புத்தகம் ப்ரூஃப் படிச்சியே, எப்படி ஃபீல் பண்ணினாய்?” என்று கேட்டார், அண்ணா.

“அன்னையார் பற்றி இதுவரை படிச்சதில்லை. புது ஸப்ஜெக்ட். அண்ணா எழுதின புக் படிக்கறோம்ங்கற சந்தோஷம். இது தவிர, ஸ்பெஷலா வேற ஒண்ணும் இல்லை அண்ணா!”

“ஏண்டா குழந்தை அப்படிச் சொல்றே!” என்று கேட்ட அண்ணா, “அந்தப் புஸ்தகத்தை நான் ரொம்ப அனுபவிச்சு எழுதினேன்ப்பா” என்று கூறினார்.

குருமகராஜ்-சாரதா திருமணம் முடிந்த பின்னர் இருவரும் குருமகராஜ் வீட்டுக்கு வந்து சேர்ந்தனர். மறு நாள் காலையில் குருமகராஜ் ஏரிக்கரையில் பல் தேய்த்துக் கொண்டிருந்தார். சற்றுத் தொலைவில் அன்னையார் குடத்தில் நீர் எடுத்துக் கொண்டிருந்தார். குருமகராஜுக்கு அருகே தரையில் ஒரு சிறு குட்டையாக நீர் தேங்கி இருந்தது. அதில் ஒரு சிறு மீன் இருந்தது. பகல் வெயிலில் அந்த நீர் காய்ந்து விட்டால் மீன் இறந்து விடும். குருமகராஜ் தனது கால் கட்டை விரலால் தரையைக் கீறி நீர்ப்பாதை அமைத்து, காலால் அந்த மீனை ஏரிக்குள் கொண்டு சேர்க்கிறார். இதன் பின்னர் அன்னையாரும் அவரும் சேர்ந்து வீடு திரும்புகிறார்கள். அவர்கள் இருவரும் வீட்டுக்கு வெளியே முதல் முறையாக சந்தித்தது இப்போது தான். (இந்தச் சம்பவத்தை அம்மா புத்தகத்தில் அண்ணா விரிவாக எழுதி இருக்கிறார்.)

இந்தச் சம்பவத்தை அப்போது என்னிடம் குறிப்பிட்ட அண்ணா, ஆங்கில நூலில் இந்தச் சம்பவத்தைப் படித்துக் கொண்டிருந்த போது தன்னையறியாமல் நிஷ்டை நிலையை அடைந்ததாகவும், அப்போது தன் எதிரில் அந்தக் காட்சி விரிந்ததாகவும் குறிப்பிட்டார். அப்போது அந்தச் சம்பவத்தை நேரில் பார்த்த அனுபவம் கிடைத்தது என்று தெரிவித்தார்.

மேலும், அந்தச் சரிதம் கல்கியில் தொடராக வந்தபோது பல வீடுகளில் போட்டி போட்டுக் கொண்டு முதல் ஆளாக அந்தத் தொடரை வாசித்தார்களாம். கல்கி இதழ் கைக்கு வந்ததுமே அம்மா தொடரை வாசிக்க வேண்டும் என்ற ஆர்வம் காரணமாக ஏராளமான வீடுகளில் நாலைந்து பிரதிகள் வாங்குவார்களாம்.

இந்தத் தொடர் கல்கியில் வெளிவந்த போது அண்ணா ஒருமுறை ராமகிருஷ்ணா மடம் சென்றிருந்தார். அப்போது ராமகிருஷ்ணா மடத்து அண்ணாவைச் சந்தித்தார்.

ராமகிருஷ்ணா மடத்து அண்ணாவின் இயற்பெயர் சுப்பிரமணியம். ராமகிருஷ்ணா மடம் எத்தனையோ மந்திரங்களையும் சுலோகங்களையும் நூல் வடிவில் வெளியிடுவதற்கு உறுதுணையாக இருந்தவர் இவரே. இவர், அண்ணாவின் அப்பாவுக்கு நெருங்கிய நண்பரும் கூட. அண்ணாவுக்கு இவர் மீது மிகுந்த பக்தி உண்டு.

கணபதி அண்ணாவைப் பார்த்ததுமே அன்புடன் கட்டித் தழுவிக் கொண்ட ராமகிருஷ்ணா மடத்து அண்ணா, “ரொம்ப ரொம்ப சந்தோஷம்ப்பா. அன்னையார் சரிதம் எழுதறே, இன்ட்யூடிவா புரிஞ்சுண்டு எழுதற போல” என்று பாராட்டிச் சொன்னாராம். இதை அண்ணா மிகுந்த பெருமையுடன் என்னிடம் குறிப்பிட்டார்.

இதற்கு முன்பாக அண்ணாவின் முதல் நூலான ஜயஜய சங்கர வெளியீட்டின் போது ராஜாஜி, “My colleague Ra. Ganapati...” என்று குறிப்பிட்டதையும் அப்போது நினைவு கூர்ந்தார்.

இந்த இரண்டு பாராட்டுகளையும் அண்ணா தனது எழுத்துக்குக் கிடைத்த மிகப்பெரிய அங்கீகாரமாகக் கருதினார்.

இதற்குச் சில வருடங்கள் பின்னர் ஒரு நண்பர் இல்லத் திருமணத்துக்காகப் பெரியகுளத்துக்குச் சென்றிருந்தேன். அப்போது அந்த நண்பர், “சாரதா தேவி பத்தி ரா. கணபதி எழுதிய அம்மா புஸ்தகம் படிச்சிருக்கீங்களா?” என்று கேட்டார். அண்ணாவுடன் எனக்கு உள்ள தொடர்பை அவரிடம் விவரித்தேன். அதைக் கேட்டு மிகவும் மகிழ்ச்சியடைந்த அவர், “அந்தப் புத்தகம் எனக்குள் இனம் புரியாத

உணர்வலைகளை ஏற்படுத்தியது. மிகுந்த உணர்ச்சிப் பெருக்குடன் அந்த நூலை வாசித்தேன். அதுவரை எனக்குக் கடுமையான முதுகுவலி இருந்தது. அந்தப் புத்தகம் வாசிக்க வாசிக்க வலி குறைந்தது. புத்தகத்தை வாசித்து முடித்த போது முழுமையாக வலி மறைந்து விட்டது" என்று குறிப்பிட்டார்.

***

சிலருக்கு எழுத்து நடை இயல்பாகவே வாய்த்திருக்கும். வேறுசிலர் காலப்போக்கில் எழுதக் கற்றுக் கொண்டிருப்பார்கள். அனேகமாக, இதுபோலக் கற்றுக் கொண்டவர்களின் எழுத்து நடையில் தனித்தன்மை இருக்காது. பெரும்பாலும் அவர்கள் எழுத்து ஜனரஞ்சக வகையைச் சார்ந்ததாகவே இருக்கும். தற்கால ஊடகங்களில் எழுதுபவர்கள் பெரும்பாலோர் இந்த வகையைச் சேர்ந்தவர்களே.

ஆனால், அண்ணாவின் எழுத்து இந்த வகையைச் சேர்ந்தது அல்ல. எனவே, அவரது எழுத்து நடை இயல்பாகவே அவருக்கு அமைந்த ஒன்று என்று எனக்குத் தோன்றியது. இருந்தாலும், அவரது ஆரம்ப கால நூல்களைப் படித்துப் பார்த்து அவரது நடை முதலில் எப்படி இருந்தது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆவல் எழுந்தது.

அண்ணாவிடம் வர ஆரம்பித்துப் பல மாதங்களுக்குப் பின்னர், அண்ணாவின் முதல் நூலாகிய ஜய ஜய சங்கர படிக்கும் வாய்ப்புக் கிடைத்தது. அந்த முதல் நூலிலேயே அண்ணாவின் தனித்துவம் மிக்க எழுத்து நடை மிளிர்வதைக் காண முடிந்தது.

அண்ணாவின் தாயார், தனது பிள்ளைக்கு சதாசிவம்-எம்எஸ் தம்பதியினரிடம் வேலை கிடைக்க வேண்டும் என்று மனதுக்குள் பெரியவாளிடம் பிரார்த்தனை செய்தாராம். கூடிய விரைவிலேயே பெரியவா அனுக்கிரகத்தில் அண்ணாவுக்குக் கல்கி பத்திரிகையில் ஜய ஜய சங்கர தொடர் எழுதும் பணி கிடைத்தது. (பிற்பாடு அங்கேயே உதவி ஆசிரியராகப் பணியில் இணைந்தார்.) அண்ணாவோ எழுத்துப் பணிகளுக்கு ரொம்பப் புதுசு. அவரது படிப்பும் தமிழ்ப் படிப்பு அல்ல. அவர் ஆங்கில இலக்கியத்தில் பிஏ ஹானர்ஸ் படித்தவர். வயதும் குறைவு. இப்படிப்பட்ட ஒருவரை கல்கி அதிபர் சதாசிவம் அந்தப் பணிக்குத் தேர்ந்தெடுத்ததே அதிசயம் தான். அதுமட்டுமல்ல, எடுத்த எடுப்பிலேயே அண்ணாவுக்குக் கல்கி அலுவலகத்தில் ஒரு பிரத்தியேக அறையும் ஒதுக்கித் தந்தாராம்.

தனது தாயாரின் மானசிக பிரார்த்தனையையும், பெரியவா அனுக்கிரகத்தில் அந்த வேண்டுகோள் பூர்த்தி ஆனதையும் பற்றி அண்ணா ஜய ஜய சங்கர நூலின் முகவுரையில் எழுதியுள்ளார். அண்ணாவுக்கு ஒதுக்கப்பட்ட அறையும் இருக்கையும் எழுத்துலக ஜாம்பவான் கல்கிக்கு உரியவை. "அது கல்கியவர்களே ஒரு காலத்தில் பணியாற்றிய அறை; நாற்காலி கூட அன்றளவும் மாறவில்லை என்று பிற்பாடு அறிந்த போது அச் சிங்காசனமே எலிக்குட்டி ஆஸனமானதில் பெருமிதம் அடைந்தேன்" என்று இந்த விஷயத்தைப் பற்றி அண்ணா அந்த நூலின் முகவுரையில் எழுதி இருக்கிறார்.

பிற்கால நூல்களில் இருப்பதைப் போன்றே தனித்துவமான எழுத்து நடையில் ஜய ஜய சங்கர நூல் இருந்தது என்பது மட்டுமல்ல, அந்த நூலில் காணப்பட்ட சிந்தனை ஆழமும் அவரது பிற்கால நூல்களில் இருப்பதைப் போலவே அமைந்துள்ளது. எழுத்து அனுபவமோ, ஆன்மிகப் பின்னணியோ, தமிழ்ப் பின்னணியோ இல்லாத, ஆங்கில இலக்கியம் படித்த இளைஞரின் முதல் நூல் அது என்பதை நம்புவது கொஞ்சம் சிரமம் தான். இந்த நூல் எழுதுவதற்கு மூன்று வருடங்கள் முன்பு வரை அண்ணாவுக்கு தெய்வ நம்பிக்கை இல்லை என்பதும் குறிப்பிடத்தக்க விஷயம்.

ஜய ஜய சங்கர நூலின் அட்டைப்படம் தொடர்பான ஒரு வினோதமான சம்பவமும் உண்டு. கல்கியில் அது தொடராக வெளிவந்து பிற்பாடு கலைமகள் பதிப்பகத்தால் நூலாக வெளியிடப்பட்டது. கல்கியில் தொடராக வெளியான போதே பெரியவா வாராவாரம் தவறாமல் அதைப் படித்து வந்தார். புத்தகம் வெளிவரும் போது அதற்கு அவர் ஸ்ரீமுகம் வழங்கினார். ஆனால், "ஜய ஜய சங்கர" என்ற அந்த நூலுக்கு அளித்த ஸ்ரீமுகத்தில், அந்த நூலின் பெயரைப் பெரியவா, "ஜய ஜய சங்கர ஹர ஹர சங்கர" என்று தவறுதலாக (?) குறிப்பிட்டிருந்தார். ஸ்ரீமுகத்தில் நூலின் பெயர் தவறுதலாக இருக்கிறதே என்ன செய்யலாம் என்று அண்ணா யோசித்துக் கொண்டிருந்த வேளையில் ஓவியர் மணியம் வரைந்த அட்டைப்படம் வந்து

சேர்கிறது. நூலின் முன் அட்டைக்கான படத்தில் ஜய ஜய சங்கர என்றும் பின் அட்டைக்கான படத்தில் ஹர ஹர சங்கர என்றும் அவர் எழுதி இருந்தார்.

ஜய ஜய சங்கர, ஹர ஹர சங்கர ஆகிய இரண்டும் எப்போதும் சேர்த்தே சொல்லப்படுபவை. எனவே, ஓவியரிடம் அட்டைப் படம் வரையச் சொல்லும் போது பின் அட்டையில் ஹர ஹர சங்கர என்று தலைப்பு போடுமாறு அண்ணா சொல்லி இருந்தார். ஆனால், அது அவருக்கே நினைவில்லை.

ஆக மொத்தம், பெரியவா ஸ்ரீமுகத்தில் இருந்த பெயரும் புத்தக அட்டையில் இருந்த பெயரும் ஒன்றாகவே இருந்தன.

ஜய ஜய சங்கர தொடர் கல்கியில் வெளியான காலத்தில் தமிழ்நாட்டில் அதற்கு மிகுந்த வரவேற்புக் கிடைத்தது. ஜய ஜய சங்கர அண்ணாவைப் புகழ் பெற்ற எழுத்தாளர் ஆக்கி விட்டது. அதன் விளைவாக, ஸ்வாமி விவேகானந்தர் சரிதம் எழுதுமாறு அவரை ராமகிருஷ்ணா மடத்தினர் கேட்டுக் கொண்டார்கள். அவரும் எழுதினார்.

தமிழகத்தின் திரைத்துறையில் சிவாஜி கணேசன் மிகவும் பிரபலமாக இருந்த நாட்கள் அவை. அப்போது, சிவாஜியின் நடிப்பை வெளிப்படுத்தும் விதமாக ஒரு புராணக் கதை எடுக்க வேண்டும் என்று சிலர் முயற்சி செய்தார்களாம். அவர்களது முதல் சாய்ஸ் ஜய ஜய சங்கர. ஆனால், ஏதோ காரணத்தினால் அந்த முயற்சி கைவிடப்பட்டது. ஆசார்யாளுக்குப் பதிலாக, இதிகாச பாத்திரம் கர்ணனைப் பற்றி எடுக்கலாம் என்று முடிவு செய்து விட்டார்கள்.

அண்ணா இந்தச் சம்பவத்தைப் பற்றி என்னிடம் சொன்னபோது, "நல்ல வேளை ஆசார்யாள் தப்பித்தார்!" என்றுதான் நினைக்கத் தோன்றியது. தப்பித்தது அண்ணாவும் தான்.

***

கதை என்பதைப் புனைவு, கற்பனைச் சம்பவம் என்ற பொருளிலேயே நாம் பயன்படுத்தி வருகிறோம். எனினும், கதா என்ற சொல்லுக்கு "சொல்லப்பட்டது, மொழியப்பட்டது" என்று தான் பொருள். கதை சொல்வது என்பது நம் தேசத்தின் கல்விப் பாரம்பரியத்தில் ஒரு முக்கிய அம்சம். நமது கல்விமுறையே வாய்மொழிப் பாரம்பரியம் தான்.

மேற்கத்திய நாட்டு மனிதர்களின் ஒழுங்குப்பாட்டை - குறிப்பாக, போக்குவரத்து விஷயங்களில் அவர்கள் விதிமீறாமல் செயல்படுவதை - மிகவும் வியப்புடன் பார்த்திருக்கிறேன். வியப்புக்கு உண்மைக் காரணம் அவர்களது கட்டுப்பாடு அல்ல. இத்தகைய கட்டுப்பாட்டுணர்வை தேசத்தின் கடைக்கோடி மனிதன் வரை அனைவருக்கும் ஏற்படுத்த முடிந்தது எவ்வாறு சாத்தியமானது என்பதே என் வியப்புக்குக் காரணம். குடிமகன்கள் அனைவரையும் பயிற்றுவிப்பது என்பது நடைமுறையில் சாத்தியமாகிற காரியமா? நமது நாட்டில் ஏன் அதைச் செய்ய முடியவில்லை என்ற ஆதங்கமும் உண்டு.

உண்மையில், மக்களைப் பயிற்றுவிப்பதில் ஒரு மகோன்னதமான சாதனையைச் செய்திருந்த தேசம் இந்தியா தான் என்பது இப்போது புரிகிறது. இங்கே அதை சாத்தியப்படுத்திய கருவி தான் கதைகள்.

புராணம், இதிகாசம் என்பவை கட்டுக் கதைகள் என்று தான் நம்முடைய தற்காலத்திய கல்விமுறை நம்மை நம்ப வைத்திருக்கிறது. உண்மையில், புராணம், இதிகாசம் ஆகிய இரண்டு சொற்களுக்குமே வரலாறு என்பது தான் பொருள். கடலின் மீது வானரங்கள் பாலம் கட்டினார்கள் என்பதும், பத்துத் தலை ராவணனை ராமன் பாணம் வீசிக் கொன்றான் என்பதும் தற்கால வரலாற்று ஆசிரியர்களின் மூளைக்கு ஒத்து வராத விஷயங்களாக இருக்கலாம். ஆனால், காலங்காலமாக, இந்தியர்களின் மனம் இவற்றை நம்பியே வந்திருக்கிறது.

புராண இதிகாசங்கள் மட்டுமல்ல, மகான்களின் சரிதமும் கதைப் பாரம்பரியத்தில் அடங்கும்.

கடைக்கோடி மனிதன் வரை போக்குவரத்து ஒழுங்கைச் சொல்லிக் கொடுப்பதே பெரிய சாதனை என்று தோன்றுகிறதே, இங்கே கடைக்கோடிக் குடும்பத்துக்கும் வைத்திய முறை தெரிந்திருந்ததே! இந்தியாவில்

நாட்டு வைத்தியமே பாட்டி வைத்தியம் தானே! அது எப்படி சாத்தியமானது? கடைக்கோடி கிராமத்தின் ஊர் நாட்டாமைக்கு நீதி சாஸ்திர அறிவு இருந்ததே, அவருக்குக் கட்டுப்படும் சமுதாய ஒழுக்கம் அனைவரிடமும் இருந்ததே, இவையெல்லாம் எவ்வாறு சாத்தியமானது?

இதுபோன்ற விஷயங்களை நடைமுறையில் கொண்டு வந்தவை நமது பாரம்பரியக் கதைகளே.

முன்பெல்லாம், இத்தகைய கதைப் பாரம்பரியத்தில் பௌராணிகர்களும் தாத்தா பாட்டிகளும் முக்கியப் பங்கு வகித்தார்கள். கூத்தும், இதர கலைகளும் செய்தது இதே பணியைத் தான். காந்தர்வக் கலை என்பது உபவேதங்களில் ஒன்று என்பதைப் பெரியவா சுட்டிக் காட்டி இருக்கிறார். வேதங்களுக்கு இணையான அந்தஸ்து கலைகளுக்கும் உண்டு என்பதாலேயே பக்தி மையங்களான ஆலயங்கள் கலை வளர்க்கும் இடங்களாகவும் இருந்தன.

தற்காலத்தில் கதை என்பது பத்திரிகைகளின், எழுத்தாளர்களின் பணியாகி விட்டது.

அண்ணாவும் இத்தகைய கதை நூல்களைத் தந்திருக்கிறார்.

குறிப்பாக, நவராத்திரி நாயகி இத்தகையதே. அது தேவி சரிதம்.

அண்ணாவின் காமாக்ஷி கடாக்ஷி, அகத்தியர் உள்ளிட்ட வேறு சில நூல்களிலும் புராணம் அதிகம் உண்டு.

ஆனால், அவற்றை விட அதி முக்கியமானவை என்று நான் கருதுவது காற்றினிலே வரும் கீதம், காமகோடி ராமகோடி ஆகிய இரண்டு நூல்களையும் தான். இரண்டும் சமீப கால வரலாற்றைப் பற்றியவை. காற்றினிலே வரும் கீதம் என்பது மீரா சரிதம். காமகோடி ராமகோடி என்பது போதேந்திராளைப் பற்றியது.

இள வயது முதல், கிரிதாரி கண்ணன் ஒருவனுக்காக மட்டுமே உடலையும் மனதையும் வைத்திருந்த மீராவை ஒரு மனிதப்பிறவிக்கு மனைவியாக்கிய கொடுமை கூடப் பரவாயில்லை, கைப்பிடித்த கணவனுக்கும் கூட இந்த உடலும் மனமும் உரிமைப் பொருள் ஆக முடியாது, கண்ணன் ஒருவனுக்கே அந்தப் பாத்தியதை உண்டு என்று வாழ்ந்த அந்தத் துறவிப் பெண்ணின் மீது களங்கம் சுமத்தப்பட்டதையும், அவளுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டதையும் வாசிக்கும் போது குமுறிக் குமுறி அழுதிருக்கிறேன். தேசத்து ராஜாவான அவளது மணாளன் அவளைச் செத்துப் போகச் சொல்லி உத்தரவிட்டான். அவளும் மகிழ்ச்சியாகவே மரணிக்கத் தயாராக இருந்தாள். ஆனால், அவளது கிரிதாரி கிருஷ்ணன் அவளைச் சாக விடவில்லை! அந்த அப்பாவி பட்ட வேதனையில் அந்தப் பரந்தாமனுக்கு அப்படி என்ன ஆனந்தமோ!

வாசிக்கவே வேதனையாக இருக்கும் இத்தகைய வாழ்க்கையை அவளால் எப்படி வாழ முடிந்தது - அதுவும், கண்ணன் நினைப்பில் அதி ஆனந்தமாகவே வாழ முடிந்தது - என்பது கற்பனைக்கெட்டாத அதிசயம் என்றால், அந்தக் கொடூரங்களை அண்ணாவால் எப்படி எழுத முடிந்தது என்பதும் அதிசயமே.

காற்றினிலே வரும் கீதம் நூலில் அண்ணா சில மீரா பஜன்களைத் தமிழில் மொழிபெயர்த்துத் தந்திருக்கிறார். அவை அனைத்தும் ஒரிஜினல் பாடல்களின் அதே ராகத்தில் அமைந்தவை. மொழிபெயர்ப்பு முடிந்த பின்னர் தான் இந்த விஷயம் அண்ணாவுக்கே தெரிய வந்ததாம். மைத்ரீம் பஜத பாடலும் அப்படியே! இந்தப் பாடல்களை அவர் உள்ளெழுச்சியின் மூலம் மட்டுமே மொழிபெயர்த்ததாக என்னிடம் தெரிவித்தார்.

மீரா சரிதமும் அவ்வாறு உள்ளெழுச்சியின் தூண்டுதலால் எழுதப்பட்டது என்பதையும் அந்த நூலுக்கான முகவுரையில் தெரிவித்திருக்கிறார். இந்த நூலைப் பற்றி நினைக்கும் போதெல்லாம் எனக்கு மகா பெரியவாள் விருந்து புத்தகம் நினைவுக்கு வரும். தியாகையரின் காஞ்சி விஜயம் குறித்துப் பெரியவா சொன்ன யூகத்தைப் பற்றி அண்ணா அதில் எழுதி இருக்கிறார். வந்திருப்பார், பார்த்திருப்பார், கேட்டிருப்பார் என்று பெரியவா சொன்ன அனைத்தையும் வந்தார், பார்த்தார், கேட்டார் என்றே அண்ணா புரிந்து கொண்டாராம். பெரியவா நேரில் பார்த்ததையே விவரித்ததாக அண்ணா அந்த நூலில் எழுதி இருக்கிறார்.

காற்றினிலே வரும் கீதமும் அதுபோலவே, அண்ணா நேரில் பார்த்ததையே எழுதி இருக்கிறார் என்றே என் மனம் நம்புகிறது. எனது இந்த நம்பிக்கைக்கு நிறையக் காரணங்கள் உண்டு. மற்றவர்கள் மீரா பற்றித்

தந்திருக்கும் பல தகவல்கள் அண்ணா நூலில் இல்லை என்பதும் ஒரு காரணம். மீராவின் காலம், அவளது கணவன் பெயர் முதலான பல அம்சங்கள் அண்ணாவால் மாற்றப்பட்டுள்ளன என்பதும் ஒரு காரணம்.

மீரா சரிதத்தை நாடக வடிவில் எழுதிய ஜேம்ஸ் ஹெச். கஸின்ஸ் என்ற ஐரிஷ் கவிஞனைப் பற்றி அந்த நூலின் முகவுரையில் அண்ணா குறிப்பிட்டுள்ளார். அந்தக் கவிஞரும் இதேபோல உள்ளெழுச்சியால் தூண்டப்பட்டு மீரா சரிதம் எழுதியவர் தான்.

அண்ணா எழுத்தில் ஆங்காங்கே ஆங்கிலக் கவிதை வரிகள் அலையடிக்கும். சில இடங்களில் கவிஞரின் பெயரைக் குறிப்பிடாமல் கவிதை வரிகளை மட்டும் மேற்கோள் காட்டி இருப்பார்.

அண்ணா, தனக்குள்ளே தானாகவே உதித்த கருத்துகளைப் பற்றிச் சொல்லும் போது அலெக்சான்டர் போப், ஜான் ட்ரைடன் முதலானோரின் வரிகளைக் குறிப்பிட்டிருக்கிறார். இந்த வரிசையில், அகத்தியர் புத்தகத்தில், ஜேம்ஸ் ஹெச். கஸின்ஸ்-ன் கவிதைகளில் ஒன்றான Inspiration and Expression என்ற கவிதைக்குத் தன் அனுபவத்தின் மூலம் விளக்கம் தந்து எழுதியுள்ளார். ஏனோ, அங்கேயும் கவிஞனின் பெயரை அவர் குறிப்பிடவில்லை. கவிதைக்கு உரிமையாளன் கவிஞன் அல்ல, வார்த்தைகள் மட்டுமே அவனுக்குச் சொந்தம் என்பதை விளக்குவதே அந்தக் கவிதை.

காற்றினிலே வரும் கீதம் புத்தகத்துக்கும் அது பொருந்தும்.

அண்ணாவின் நூல்கள் என்றாலே பெரும்பாலோருக்கு தெய்வத்தின் குரல் புத்தகங்கள் தான் நினைவுக்கு வரும். எனக்கென்னவோ காற்றினிலே வரும் கீதம், காமகோடி ராமகோடி ஆகிய இரண்டும் தான் நினைவுக்கு வரும்.

***

காமகோடி ராமகோடி புத்தகமும் ஏறக்குறைய மீரா சரிதத்தைப் போன்றதே. "இதை நான் எழுதினேன் என்பதை விட இதை என்னால் எழுதாமல் இருக்க முடியவில்லை என்பதே உண்மை. எதுவோ ஒன்று இதிலே என் கழுத்தைப் பிடித்துத் தள்ளியது" என்று இந்த நூலின் முகவுரையில் அண்ணா குறிப்பிட்டுள்ளார்.

இந்தப் புத்தகம் என் மனதுக்கு ரொம்பவே நெருக்கமான ஒன்று. இதற்குக் காரணம், போதேந்திராள் அதிஷ்டானம்.

இங்கே கொஞ்சம் சுய புராணம் அவசியமாகிறது.

கும்பகோணத்தில் எனக்கு ஒரு நண்பர் இருக்கிறார். அவர் பெயர் விஜயபாலன். அவர் என்னை அவ்வப்போது ஏதாவது கோவில்களுக்கு அழைத்துச் செல்வதுண்டு.

அந்த நண்பரின் மூலம் பத்மநாத ஸ்வாமி என்னும் வெள்ளாடைத் துறவியின் அறிமுகம் எனக்குக் கிடைத்தது. ஊருக்கு வெளியே தோப்புகளுக்கு நடுவே தனது ஆசிரமத்தில் சத்தமில்லாமல் உட்கார்ந்திருக்கும் அந்த மனிதரின் தொடர்பில் ஏராளமான இளைஞர்கள் உண்டு. அவர்களுக்கு ஏதாவது சின்னச் சின்னப் பொதுக் காரியங்களைச் செய்யுமாறு அந்த ஸ்வாமி உத்தரவு பிறப்பிப்பார். அவர்களும் மிகுந்த ஈடுபாட்டுடன் அவற்றைச் செய்வதுண்டு. குறிப்பாக, கோவில்களில் விளக்கு ஏற்றுவது, அன்னதானம், பாராயணம் முதலானவற்றில் அவருக்கு மிகுந்த ஈடுபாடு.

நான் அண்ணாவுடனும், ஸ்வாமி ஓங்காராநந்தருடனும் தொடர்பில் இருப்பவன் என்பதால் பத்மநாப ஸ்வாமிக்கு என்னை மிகவும் பிடிக்கும். ஒரு நாள் என்னைச் சந்திக்குமாறு இரண்டு இளைஞர்களை அவர் அனுப்பி வைத்தார். அவர்களில் ஒருவர் பெயர் வெங்கட். அவர் கோவிந்தபுரத்தில் வசித்து வருபவர்.

அதற்கு அடுத்த நாள் நண்பர் விஜயபாலன் என்னை கோவிந்தபுரம் அதிஷ்டானத்துக்கு அழைத்துச் சென்றார். அந்த அதிஷ்டானத்தில் ஓங்காரம் ஒலித்துக் கொண்டிருப்பதாக எனக்குத் தோன்றியது. அங்கே இருந்த சமயத்தில் என் மனதில் ஏற்பட்ட பரவசம் வர்ணனைக்கு அப்பாற்பட்டது. மித மிஞ்சிய பரவச

நிலையில் அந்த இடத்தில் இருந்த எதையுமே கவனிக்கத் தோன்றவில்லை. நமஸ்காரமும் பிரதக்ஷிணமும் செய்து விட்டுக் கொஞ்ச நேரம் அமைதியாக அமர்ந்திருந்தேன்.

திரும்பும் போது விஜயபாலன் என்னை வெங்கட் வீட்டுக்கு அழைத்துச் சென்றார். அதிஷ்டானத்தில் ஓம் என்ற சப்தம் கேட்டுக் கொண்டே இருப்பதாக எனது உள்ளுணர்வு சொல்கிறது. இது சரியா என்று அவரிடம் கேட்டேன். “சரி தான். ஆனால், அது ஓம் அல்ல, ராம். பல கோடிக்கணக்கில் ராம நாம ஜபம் பண்ணின பகவந்நாம போதேந்திராள் பிருந்தாவனம் இது” என்று அவர் கூறினார். பிருந்தாவனத்தின் உள்ளே இரவில் அமர்ந்திருந்தால், பின்புறம் ஓடும் வீரசோழம் (காவிரி) நதியிலும் ராம சப்தம் கேட்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

(அதிஷ்டானத்துக்குள் தங்க யாரையும் அனுமதிக்க மாட்டார்கள். சமீப கால வரலாற்றில் மகா பெரியவா மட்டும் ஒரு தடவை இரவில் அதிஷ்டானத்தில் உட்கார்ந்து தியானம் செய்திருக்கிறார்.)

இதற்குச் சில வருடங்கள் பின்னர் காமகோடி ராமகோடி புத்தகம் திவ்ய வித்யா ட்ரஸ்ட் மூலம் வெளியிட ஏற்பாடு நடந்தது. அந்தப் புத்தகத்தின் மூலம் தான் போதேந்திராள் வாழ்க்கையைத் தெரிந்து கொண்டேன். அதிஷ்டானத்துக்குள் எனக்குக் கிடைத்த அனுபவத்துக்கான காரணம் அந்த திவ்ய புருஷரின் வாழ்க்கையே என்பது தெளிவாகப் புரிந்தது.

வட இந்தியா முழுவதும் இஸ்லாமிய ஆக்கிரமிப்பாளர்கள் பிடியில் சிக்கித் தவித்தது. தமிழகம் பெருமளவு தப்பி விட்டது. இதனால் தான் தமிழகத்தில் நமது பண்பாடும் கோவில்களும் பாரம்பரியமும் இன்னமும் கூட ஓரளவு உயிரோட்டத்துடன் இருக்கின்றன என்று நான் நினைப்பதுண்டு. அதில் தவறு இல்லை தான். ஆனாலும், அதைவிட முக்கியக் காரணம் பஜனை சம்பிரதாயமும். அதன் மூலம் தென்னிந்தியா முழுவதும் - குறிப்பாக, தமிழகத்தில் - ஏற்பட்ட பக்தி எழுச்சியே என்பது இப்போது புரிகிறது. பஜனை சம்பிரதாயத்தை முறைப்படுத்தி அமைத்தவர் மருதாநல்லூர் ஸ்வாமிகள். அவருக்கு அஸ்திவாரம் போட்டுத் தந்தது போதேந்திராளும் ஐயாவாளுமே.

காமகோடி ராமகோடி புத்தகத்தில் போதேந்திராள் அதிஷ்டானப் புகைப்படம் இணைக்கப்பட்டிருந்தது. அந்தப் புகைப்படத்தின் தரம் நன்றாக இல்லை. அதை மாற்றலாம் என்று அண்ணாவிடம் சொன்னேன். புகைப்படம் கிடைக்காது. அதிஷ்டானத்துக்குப் போய் நாமே தான் படம் எடுக்க வேண்டும். இது கஷ்டமான வேலை. ப்ரூ.ப் வேலைகள் முடிந்து விட்டன. எனவே, பழைய புகைப்படத்துடனேயே அச்சுப் போட்டு விடலாம் என்று அண்ணா சொன்னார்.

புகைப்படம் எடுப்பதற்கு நான் ஏற்பாடு செய்கிறேன் என்று அண்ணாவிடம் தெரிவித்தேன். அண்ணாவுக்கு உடன்பாடு இல்லை. இருந்தாலும், நான் அடம் பிடித்ததால் சம்மதித்தார்.

கும்பகோணம் விஜயபாலனைத் தொடர்பு கொண்டு புகைப்படம் எடுத்துத் தருமாறு கேட்டேன். அவரும் சம்மதித்தார். மறு நாளே அவர் புகைப்படம் எடுக்கும் வேலையில் இறங்கினார். கும்பகோணத்தில் அவருக்குத் தெரிந்த .ஃபோட்டோகிரா.ஃபர்கள் மூன்று பேர். மூவருமே வர இயலாத நிலையில் இருந்தார்கள்.

கோவிந்தபுரம் நண்பர் வெங்கட்டைத் தொடர்பு கொண்டு உள்ளூர் .ஃபோட்டோகிரா.ஃபர் கிடைப்பார்களா என்று கேட்டேன். அந்த நாட்களில் அவர் கோயம்பத்தூரில் வேலை பார்த்து வந்தார். சரியாக நான் .ஃபோன் பண்ணும் போது தான் கோவிந்தபுரம் வந்து சேர்ந்திருந்தார்.

நான் விஷயத்தைச் சொன்னதுமே, “நல்ல வேளை. என்னைக் கேட்டீர்கள். இல்லாவிட்டால் ஏடாகூடம் ஆகியிருக்கும். .ஃபோட்டோ எடுக்க அனுமதிக்க மாட்டார்கள்” என்று என்னிடம் தெரிவித்த அவர், புகைப்பட அனுமதிக்காக அதிஷ்டான நிர்வாகியைத் தொடர்பு கொண்டார்.

நிர்வாகி திரு. பாலசுப்பிரமணியத்தை நேரில் சந்தித்து ரா. கணபதி அண்ணாவுக்கு அதிஷ்டான .ஃபோட்டோ தேவை, படம் எடுக்க அனுமதி கொடுங்கள் என்று வெங்கட் கேட்டதுமே அவர், “அவரை எப்படி உங்களுக்குத் தெரியும்?” என்று கேட்டாராம். “அவரைத் தெரியாது, அவருடன் இருக்கும் ஸ்ரீதர் என்பவர் எனது நண்பர்” என்று வெங்கட் சொன்னார். உடனே அவர், “அவர் பெயர் ஸ்ரீதர் இல்லை. ஸ்ரீதரன்.

தெய்வத்தின் குரல் ஏழாம் பாகத்தில் ரா. கணபதிக்கு ஒத்தாசை பண்ணி இருக்கார்" என்று குறிப்பிட்டாராம். கேட்பதற்கே ஆச்சரியமாக இருந்தது! தெய்வத்தின் குரலை அன்பர்கள் எவ்வளவு ஆழ்ந்து படிக்கிறார்கள் என்பதற்கு இது ஒரு பெரிய சாட்சி என்று எனக்குத் தோன்றியது.

அவர் இல்லத்தில் இருந்து வெங்கட் என்னைத் தொலைபேசியில் அழைத்தார். என்னிடம் திரு. பாலசுப்பிரமணியம், "ஐயா, நாங்கள் ரொம்ப கன்சர்வேடிவ் டைப். ஃபோட்டோல்லாம் எடுக்க விட மாட்டோம். ஆனா, எனக்கு என்னவோ பெரியவாளே நேர்ல உத்தரவு போடறா மாதிரி ஒரு ஃபீலிங் வருது. நீங்க எத்தனை ஃபோட்டோ வேணும்னாலும் எடுத்துக்கோங்கோ!" என்று கூறினார்.

***

கோவிந்தபுரம் அருகே ஏராளமான தலங்கள் உள்ளன. எனினும், அவற்றில் திருவிசைநல்லூர் பற்றிக் குறிப்பிட வேண்டியது அவசியம்.

இந்த கிராமம் ஸ்ரீதர ஐயாவாள் வாழ்ந்த ஊர். போதேந்திராளும், ஐயாவாளும் இணைந்து இந்த கிராமத்தில் ஒரு மாமரத்தை நட்டதாக அண்ணா எழுதி இருக்கிறார்.

மேலும், பெரியவாளின் குரு, பரமகுரு ஆகிய இருவருடனும் தொடர்பு கொண்ட ஊர் திருவிசைநல்லூர்.

இந்த கிராமத்தைச் சேர்ந்த வேங்கட சுப்பா சாஸ்திரிகளிடம் தான் பெரியவாளின் பரமகுரு வேதாந்த பாடம் படித்தார்.

பெரியவாளின் குரு பூர்வாசிரமத்தில் அவருக்குப் பெரியம்மா மகன். அவரது பூர்வாசிரமப் பெயர் காந்தன். அவரது அவதாரத் தலம் இதுவே.

இவரைப் பற்றிய ஓர் அபூர்வத் தகவல் உண்டு.

குரு, பரமகுரு இருவருமே சமாதி அடைந்த பின்னர் தான் பெரியவா மடத்தின் பீடாதிபதியாக நியமிக்கப்பட்டார். எனவே, பெரியவாளுக்கு குருமுகமாக தீக்ஷை கிடைக்கவில்லை என்றே நாம் நினைத்துக் கொண்டு இருக்கிறோம். இது சரி தான். எனினும், முழுக்கவே சரி என்று சொல்லி விட முடியாது. மிகவும் வினோதமான விதத்தில் குருவிடமிருந்து பெரியவாளுக்கு மந்திர உபதேசம் கிடைத்திருக்கிறது.

சிறு வயதில் ஸ்வாமிநாதன் (பெரியவாளின் பூர்வாசிரமப் பெயர்) குடும்பத்தினருடன் காந்தன் சில காலம் தங்கி இருந்தார். அப்போது காந்தன் மந்திரங்களை ஓதுவதைக் கேட்டுக் கேட்டு ஸ்வாமிநாதனுக்கும் அவை மனப்பாடம் ஆகின. அவரும் பாராயணம் செய்ய ஆரம்பித்தார். எனினும், ஸ்வாமிநாதனுக்குப் பூணூல் போடவில்லை என்பதால் அவரது குடும்பத்தினர் அவர் மந்திர பாராயணம் செய்யக் கூடாது என்று தடை விதித்து விட்டனர்.

அண்ணாவின் காஞ்சி முனிவர் நினைவுக் கதம்பம் புத்தகத்தில் இந்த விவரம் உள்ளது.

**கடைசியாக வெளிவந்த நூல்கள்**

அண்ணா மேற்கொண்ட ஒரு விபரீத முயற்சியைப் பற்றி அவசியம் குறிப்பிட்டே ஆக வேண்டும். அவர் சிறுகதை எழுத மேற்கொண்ட முயற்சியைத் தான் குறிப்பிடுகிறேன். நாலைந்து கதைகள் எழுதி இருக்கிறார்.

அதை ஏன் விபரீத முயற்சி என்று சொல்கிறேன் என உங்களுக்குத் தோன்றலாம்.

வேறு ஒன்றுமில்லை, அவர் எழுதிய சிறுகதைகளைப் படித்தால் ஏதோ ரிஸர்ச் பேப்பர் படிப்பது போல இருக்கும்.

அவ்வளவு தான்.

பெரும்பாலும் அண்ணா பத்திரிகைகளில் தொடர்கள் எழுதுவார். இவை பிற்காலத்தில் நூலாக வெளியிடப்படும். தொடர்கள் அல்லாத தனிக் கட்டுரைகள் அனைத்தையும் தொகுத்து தரிசனம் என்ற நூல் வெளியிடப்பட்டது.

அண்ணா எழுதிய சிறுகதைகளும் இந்த நூலில் இடம் பெற்றுள்ளன.

கும்பகோணம் மடத்துப் பாடசாலை வாத்தியாரான ரங்கராஜனைப் பற்றி அண்ணா எழுதி இருந்த கட்டுரையை தரிசனம் புத்தகத்தில் சேர்க்க வேண்டும் என அண்ணா விரும்பினார். ஆனால், அவரிடம் அதன் பிரதி இல்லை. மேலும், அது எந்தப் பத்திரிகையில், எந்த ஆண்டு வெளியாகி இருந்தது என்ற விவரமும் அவருக்கு நினைவில்லை.

அண்ணா, அந்தக் கட்டுரை வெளிவந்த புதிதில் அந்தப் பத்திரிகைப் பிரதி ஒன்றை ரங்கராஜனுக்கு அனுப்பி இருந்தார். அவரிடம் கேட்டால் பிரதி கிடைக்க வாய்ப்பு உண்டு என்று அண்ணா நினைத்தார். ஏனோ அண்ணா அவருக்கு ஃபோன் பண்ண விரும்பவில்லை. என்னை நேரில் போய் வாங்கி வருமாறு பணித்தார்.

நானும் கும்பகோணம் மடத்துப் பாடசாலைக்குப் போய் ரங்கராஜனைச் சந்தித்தேன். அண்ணா அந்தப் பத்திரிகைப் பிரதியை அனுப்பியது அவருக்கு நன்றாக நினைவில் இருந்தது. தான் அந்தக் கட்டுரையை வாசித்ததாகவும் என்னிடம் தெரிவித்தார். ஆனால், அந்தப் பிரதியை யாரோ வாங்கிக் கொண்டு போனதாகவும், திருப்பித் தரவில்லை என்றும் தெரிவித்தார். இதைத்தவிர அவருக்கு வேறு விவரங்கள் ஞாபகம் இல்லை. எந்தப் பத்திரிகையில் அந்தக் கட்டுரை வெளியாகி இருந்தது என்பது கூட அவருக்கு நினைவில் இல்லை. அந்தப் பிரதியை யாரிடம் கொடுத்தோம் என்பதும் நினைவில்லை. நான் வெறும் கையுடன் திரும்ப வேண்டியதாயிற்று.

தரிசனம் நூலில் அந்தக் கட்டுரையைப் பிரசுரிக்க முடியவில்லை.

ஆன்மிக எழுத்தாளர்களில் முக்கியமானவர் - அதுவும் பெரியவா பற்றி எழுதியவர், தெய்வத்தின் குரலைத் தொகுத்தவர் - இப்படிப்பட்ட அண்ணா இந்த மனிதரைப் பற்றி எழுதி இருக்கிறார். இது அவருக்கு எப்பேர்ப்பட்ட பாராட்டுச் சான்றிதழ்! ஆனால், இந்த மனிதரோ அதைப் பற்றிய ப்ரக்ஞையே இல்லாதவராக இருக்கிறார்! ஏன் அப்படி என்ற கேள்வி எனக்குள் பெரிதாக எழுந்தது.

இதற்குச் சில ஆண்டுகளுக்கு முன்னர் அந்தக் கட்டுரையை நான் படித்திருந்தேன். அதன் விஷயங்களும் ஓரளவு நினைவில் இருந்தன. எனினும் அந்தக் கட்டுரை இந்த மனிதரைப் பற்றியது என்பது அப்போது தான் புரிந்தது.

அந்த ரங்கராஜன் தான் தற்போதைய அகோபில மடத்து ஜீயர் ஸ்வாமிகள்.

இந்த ரங்கராஜனைப் பெரியவா பாடாய்ப் படுத்தி இருக்கிறார். “Nobody can love this beggar like my Father Swami Ramdas and nobody can torture this beggar like my Father Swami Ramdas. My Father killed this beggar because He loved this beggar” என்று தனது குருவைப் பற்றி யோகியார் சொல்வது அச்சு அசலாக ரங்கராஜன்-பெரியவா உறவுக்கும் பொருந்தும். பப்பா ராமதாசர், ஒரு சாதகரைப் பாடாய்ப் படுத்தி, அவரை யோகியாக

உயர்த்தியதைப் போலவே, பெரியவா, இந்த சாமானிய மனிதரைப் பாடாய்ப் படுத்தி, ஜீயர் ஸ்தானத்துக்கு உரிய தகுதிகள் படைத்தவராக உயர்த்தி இருக்கிறார்.

சிவன் சார் அன்பரான ஸ்ரீ சிவராமன், பெரியவா அன்பர்கள் சில நூறு பேரிடம் விரிவான பேட்டிகள் எடுத்து இணையத்தில் வெளியிட்டுள்ளார். அதில் இந்த ஜீயர் ஸ்வாமியின் பேட்டியும் உள்ளது. (https://www.youtube.com/watch?v=K92VFt7rSb8&list=RDCMUCSM86-RCvQaQI2yzPzeSqbA&index=1)

பல வருடங்களுக்கு முன், ஒருமுறை மடத்துப் பாடசாலைக்குள் சில விஷமிகள் புகுந்து அங்கிருந்தவர்களின் பூணூலை அறுத்தனர். அவர்கள் வெளியேறியதும் இந்த விஷயம் பெரியவாளுக்குத் தொலைபேசி வாயிலாகத் தெரிவிக்கப்பட்டது. விஷயத்தைக் கேள்விப்பட்டதுமே பெரியவா, திடுக்கிட்டவராக, "ரங்கராஜன் பூணூலையுமா அறுத்துட்டா?" என்று பதைபதைப்புடன் கேட்டாராம்.

ரங்கராஜன் பூணூலை அவர்களால் அறுக்க முடியவில்லை. காரணம், அவர் பூணூலை இடுப்பில் சுற்றிக் கொண்டு, அதன் மேல் அங்கவஸ்திரத்தைச் சுற்றிக் கொண்டு, நாராயணா, நாராயணா என்று கோஷமிட்டவாறே தரையில் அங்கப் பிரதக்ஷிணம் செய்ய ஆரம்பித்து விட்டார். விஷமிகள் வெளியேறும் வரை அங்கப் பிரதக்ஷிணம் தொடர்ந்தது.

இதன் பின்னர் பெரியவா சற்று நேரம் கண் மூடி தியானத்தில் அமர்ந்தாராம். ஒரு செய்தியைக் கேட்டுத் திடுக்கிட்டுப் போனதும், சம்பந்தப்பட்ட நபருக்காக உடனடியாக தியானத்தில் அமர்ந்ததும் பெரியவா வாழ்வில் நடந்த மிக அபூர்வமான நிகழ்வுகளில் ஒன்று.

அதுமட்டுமல்ல, கண்ணுக்குள் வைத்துக் காப்பது என்று சொல்கிறோம் அல்லவா? அதேபோல, இந்த மனிதரைப் பெரியவா கண்ணுக்குள் வைத்துக் காத்து வந்தார் என்றே சொல்லலாம்.

***

அண்ணாவின் காலத்தில் கடைசியாக வெளிவந்த அவரது நூல் தரிசனம்; அவர் காலத்துக்குப் பின்னர் வெளிவந்த அவரது நூல் "அகத்தியர்: ஐக்கிய சக்தியின் அவதாரம்".

சிறுகதை என்ற விபரீதம் கூடப் பரவாயில்லை. திடீரென்று அண்ணாவுக்கு மிகமிக விபரீத ஆசை தோன்றி விட்டது போலும்! மகா பெரிய ட்ராஜடி நாவல் எழுதும் முயற்சியில் இறங்கி விட்டார். "அகத்தியர்: ஐக்கிய சக்தியின் அவதாரம்" என்பது அந்த நூலின் பெயர்.

அண்ணா எழுத ஆரம்பித்த ட்ராஜடி கதை, கடைசியில், இரட்டை டாக்டரேட்டுக்கான ரிஸர்ச் பேப்பர் மாதிரி, படுபடு சீரியஸ் புத்தகமாக உருவெடுத்து விட்டது. உண்மையிலேயே இது தான் பெரிய ட்ராஜடி. (ட்ராஜிக் காமெடி?)

ரிஸர்ச் பேப்பர் என்பது கேலியாகச் சொல்கிறேனே தவிர, அகத்தியர் புத்தகத்தின் முழுப் பகுதியும் அப்படி இல்லை. அதன் பெரும் பகுதி புராணக் கதை தான். அண்ணாவின் நூல்கள் எல்லாமே கனமானவை தான். (நான் புத்தகத்தின் எடையைச் சொல்லவில்லை, விஷய கனத்தைக் குறிப்பிடுகிறேன்.) அவற்றில் இந்த நூல் ரொம்ப கனமானது என்று சொல்வது சரியான விளக்கமாக இருக்கும். பூமியின் பாரத்தை சமன் செய்யும் அளவு எடை கொண்ட குறுமுனி அல்லவா, அகத்தியர்? போதாக்குறைக்கு, கடலையும் பானகம் பண்ணியவர். அவரைப் பற்றிய நூலும் கனமாகத் தானே இருக்க முடியும்?

யதேச்சையாக ஸ்ரீ கணேஷ் சர்மாவுக்கு அகத்தியர் புத்தகத்தின் கையெழுத்துப் பிரதி கிடைத்தது. இதைத்தொடர்ந்து புத்தகத்தை வெளியிட ஏற்பாடு செய்யுமாறு ஸ்ரீ மோகனராமன் என்னைக் கேட்டுக் கொண்டார்.

கையெழுத்துப் பிரதியை வாங்கிப் புரட்டிப் பார்த்தேன். மிகவும் கனமான சப்ஜெக்ட். மிகுந்த தமிழ் ஆர்வம் உடையவர்கள் தான் அந்தப் புத்தகத்தை விரும்பிப் படிப்பார்கள் என்பது புரிந்தது. இதுபோன்ற ஒரு புத்தகம் வந்திருக்கிறது என்பதை வாசகர்களுக்குத் தெரியப்படுத்துவது முக்கியம். எனவே, பெரியவாளுடன் தொடர்புடைய ஏதாவது அமைப்பு மூலம் இந்த நூலை வெளியிடுவது நல்லது என்று நினைத்தேன்.

அத்தகைய அமைப்பினருக்குத் தான் அண்ணாவின் வாசகர்களுடன் ஓரளவாவது சம்பந்தம் இருக்கும். சிவன் சார் ட்ரஸ்டில் கேட்டுப் பார்த்தேன். வெளியிடுவதற்கு அவர்கள் தயார், ஆனால், புத்தக உருவாக்கத்துக்கு யார் பொறுப்பேற்பது - குறிப்பாக, ப்ரூஃப் படிப்பதற்கு - என்பது அவர்களின் கவலை. நான் பொறுப்பேற்கிறேன் என்று சொன்னதால் அவர்களும் சம்மதித்தார்கள்.

எனது அலுவலகத்திலேயே டிடிபி வேலைகளை முடித்து ப்ரின்ட் எடுத்து ப்ரூஃப் படிக்க ஆரம்பித்தேன்.

சிக்கல் புரிந்தது.

அந்தப் புத்தகம் முழுமையான புத்தகம் அல்ல. பல பகுதிகளைக் காணோம். வாதாபி ஜீரணம், விந்திய கர்வ பங்கம், காவிரி ஜனனம் முதலான பல முக்கிய விஷயங்களைக் காணவில்லை. அந்த நூலில் ஆங்காங்கே அண்ணா குறிப்பிட்டுள்ள விவரங்களைப் பார்க்கும் போது, இவை அனைத்தையுமே அவர் அந்த நூலில் எழுதியுள்ளார் (அல்லது, எழுத விரும்பியுள்ளார்) என்பது புரிந்தது. தொல்காப்பியர் சாபம் பற்றி அந்த நூலில் எழுதி இருப்பதாகவும் அண்ணா குறிப்பிட்டிருக்கிறார்.

ஆனால், இந்தப் பகுதிகள் எதுவுமே கையெழுத்துப் பிரதியில் இல்லை.

(நான் விசாரித்த வரையில், தொல்காப்பியர் சாபம் மிகப் புதிய செய்தி. நான் தொடர்பு கொண்டு விசாரித்த அறிஞர்கள் யாருக்குமே இது பற்றி எந்த விவரமும் தெரியவில்லை.)

பல பகுதிகளைக் காணவில்லை தான், அதேநேரத்தில் ஒவ்வோர் அத்தியாயமும் முழுமையாக உள்ளது, பக்க எண்களும், அத்தியாய எண்களும் வரிசையாக உள்ளன. கடைசி அத்தியாயம் நிறைவுப் பகுதியைப் போலவே உள்ளது. இதுபோன்ற அம்சங்களை வைத்துப் பார்த்தால், மேலே சொன்ன பகுதிகள் இல்லாமலேயே அண்ணா அந்த நூலை நிறைவு செய்திருக்கிறார் என்று கருதவும் இடமுண்டு.

கிடைத்திருந்த கையெழுத்துப் பிரதி பல வருடங்களுக்கு முன்னர் எழுதப்பட்டது என்பதையும் யூகிக்க முடிந்தது. எனவே, அண்ணா அந்த நூலை நிறைவு செய்திருந்தாலும், ஏதோ காரணங்களால் அதை வெளியிட விரும்பாமல் இருந்திருக்கிறார் என்பதும் புரிந்தது.

இப்பொழுது நான் என்ன செய்வது: நூலை வெளியிடலாமா வேண்டாமா?

என்னால் எந்த முடிவுக்கும் வர முடியவில்லை.

இறுதியில், ஏதோ ஒரு தூண்டுதலின் பேரில் பணிகளை முடித்து அனுப்பினேன். அண்ணா எழுதி அச்சுக்கு வராத ஒரு நூலை அச்சிட உறுதுணையாக இருந்த பெருமிதம் இருந்தது உண்மையே. அதேநேரத்தில், அண்ணா வெளியிட விரும்பாத புத்தகத்தை வெளியிட்டு விட்டோமோ என்ற உறுத்தலும் இருந்தது.

எனினும், நிதானமாக யோசித்துப் பார்க்கும் போது, அந்த நூல் என் மூலம் வெளியாக வேண்டும் என்பது அண்ணாவின் சங்கல்பம் என்று நம்பத் தோன்றுகிறது.

<u>காரணம் 1:</u>

ப்ரூஃப் படிப்பதில் எனக்கு மிகுந்த அனுபவம் உண்டு என்பது உண்மையே. ஆனாலும், மிகுந்த அச்ச உணர்வுடனேயே அகத்தியர் புத்தகம் ப்ரூஃப் படித்தேன். அண்ணா நம்மிடையே ஸ்தூலமாக இல்லை என்பது ஒரு காரணம். ப்ரூஃப் படிப்பதில் எனக்கு ஆர்வம் குறைந்து விட்டது என்பதும் முக்கியமான காரணம். இதனால் என் ப்ரூஃப் ரீடிங் தரம் குறைந்து விட்டது. எங்கள் பதிப்பக வெளியீடுகளை ப்ரூஃப் படிப்பதற்கு இரண்டு நண்பர்கள் உதவி செய்வதுண்டு. ஆனால், அவர்கள் அகத்தியர் புத்தகம் ப்ரூஃப் படிக்க ஏற்ற நபர்கள் அல்ல. என்னையும் நம்ப முடியாது, எனது குழுவில் உள்ள பிறரையும் நம்ப முடியாது, அண்ணாவும் இல்லை.

எனினும், அந்தப் புத்தகம் மிக நல்ல விதத்தில் அச்சாகி உள்ளது. அண்ணாவின் புத்தகம் எத்தகைய தரத்தில் உருவாக வேண்டுமோ, அத்தகைய தரத்தில் உருவாகியுள்ளது.

இது எனது முயற்சிக்கும் உழைப்புக்கும் அப்பாற்பட்ட விஷயம். அனுக்கிரகம் என்பதைத் தவிர இதற்கு வேறு ஒரு காரணமும் இருக்க முடியாது.

<u>காரணம் 2:</u>

ப்ரூஃப் படிக்கும் வேலையின் முதற்கட்டம், கையெழுத்துப் பிரதியுடன் லேசர் பிரதிகளை ஒப்பிட்டுப் பார்ப்பது. நான் இந்த வேலையைச் செய்ததே கிடையாது. எனவே, இந்த வேலைக்கு நான் பொருத்தமற்றவன். அதேநேரத்தில், அகத்தியர் புத்தகத்தில் இது மிக முக்கியமாகச் செய்யப்பட வேண்டியது. எனவே, செய்தாக வேண்டிய கட்டாயம்.

மேலும், இந்த வேலையை இரண்டு பேர் சேர்ந்து தான் செய்ய முடியும் - ஒருவர் கையெழுத்துப் பிரதியை வாசிக்க வேண்டும், மற்றவர் லேசர் பிரதியைச் சோதிக்க வேண்டும்.

இந்த வேலையில் ஓர் அன்பர் எனக்கு உதவ முன்வந்தார்.

பணிகள் நடைபெற்ற காலத்தில், அவர் தன் மனதில் இருந்த சில பெரிய கவலைகளை என்னிடம் பகிர்ந்து கொண்டார். தன் நிலைமையைப் பற்றி அவர் குறிப்பிடும் போது அவர் மிகவும் மனம் வருந்தி அழுதார். இது எனக்கு வேதனையாக இருந்தது. அவருக்காக நான் அண்ணாவிடம் மனமுருகிப் பிரார்த்தனை செய்தேன்.

புத்தக வேலைகள் முடிந்தன. அச்சுக்கு அனுப்பி விட்டேன். புத்தகப் பிரதி கைக்குக் கிடைக்கும் முன்பாகவே அவருக்கு ஒரு விபத்து நேரிட்டது. அதைத் தொடர்ந்து அவருக்குத் தலையில் சர்ஜரி செய்யப்பட்டது. அதையடுத்து அவர் கோமா நிலையில் இருந்தார். புத்தகப் பிரதியை அவரால் பார்க்கக் கூட முடியவில்லை. நீண்ட கால கோமாவுக்குப் பின்னர், சில மாதங்கள் முன்பு அவர் மரணமடைந்து விட்டார்.

இது தான் அண்ணா அவருக்குச் செய்த அனுக்கிரமா என்று அண்ணா மீது கோபம் வந்தது. அதேநேரத்தில், வேதனை மிகுந்த அந்த மனிதர் ஒரு புனிதமான பணியில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளும் வாய்ப்பு என் மூலம் கிடைத்தது என்பதை நினைத்தால் மகிழ்ச்சியாகவும் இருக்கிறது.

இதை நினைக்கும் போதெல்லாம் நான் நெகிழ்ந்து போகிறேன்.

அவரது மாமனார் மிகுந்த ஆசார சீலர். தமிழறிஞர். சம்ஸ்கிருதத்திலும் நல்ல தேர்ச்சி உடையவர். தற்போது அவர் இல்லை என்றாலும், அண்ணாவின் அகத்தியர் புத்தக உருவாக்கத்தில் அவரது குடும்பத்தின் பங்களிப்பு இருந்தது என்பது அவரது மொழியறிவுக்கும் ஆசாரத்துக்கும் கிடைத்த மிகப் பெரிய வெகுமானம்.

<u>காரணம் 3:</u>

அந்த நூலில் அண்ணா ஒரு மந்திரத்தைப் பற்றி எழுதி இருந்த தகவல் தவறானது. ஏறக்குறைய அந்த நூலில் இருந்த அத்தனை விஷயங்களுமே எனக்குப் புதிய செய்திகள் தான். இந்நிலையில், ரொம்ப ரொம்ப வினோதமான விதத்தில், இந்த ஒரே ஒரு மந்திரத்தின் பயன்பாடு குறித்த தகவலை மட்டும் சரிபார்ப்பதற்காக இரண்டு சாஸ்திரிகளைத் தொடர்பு கொண்டு விசாரித்தேன். இருவருமே அந்தத் தகவல் தவறானது என்று தெரிவித்தார்கள்.

அண்ணா விஷயத்தில் இதுபோன்ற "யதேச்சையான" விஷயங்கள் எல்லாமே அவரது விருப்பப்படி நடந்தவை என்பது பிற்காலத்தில் புரிய வந்திருக்கின்றன. "நான்" எழுதிய காரேய் கருணை ராமானுஜா புத்தகம் இதற்கு மிகச் சிறந்த உதாரணம். அதுபோலவே இந்த நூலிலும், அவர் செய்யும் வேலை என் மூலம் நடப்பதாக அவர் காட்டியுள்ளார் என்பது எனக்குப் புரிகிறது

<u>காரணம் 4:</u>

அகத்தியர் பற்றிய தகவல்கள் பொதுவெளியில் மிகவும் அரிதாகி விட்டன. நூலகங்களில் சில குறிப்புதவி நூல்கள் இருக்கும் என்பது நன்றாகவே புரிகிறது. எனினும், அண்ணா எழுதியுள்ள இந்த நூல், தமிழ், வரலாறு, தொன்மையான நம்பிக்கை, தத்துவம் முதலிய பல்வேறு அம்சங்களை உள்ளடக்கியது. அகத்தியரைப் பற்றிய இதுபோன்ற ஒரு நூல் தமிழுக்குக் கிடைத்த மிகப்பெரிய ஆவணத் திரட்டு என்றே என் மனம் நம்புகிறது.

ஆராய்ச்சி மாணவர்களுக்கு அது ஒரு பொக்கிஷம்.

யாரோ ஒருசிலருக்குப் பயன்பட வேண்டும் என்ற திவ்ய சங்கல்பத்தின் காரணமாகவே அது வெளியாகி உள்ளது. எனினும், இத்தகைய ஒரு புத்தகம் வெளியாகி உள்ளது என்ற செய்தியே பொதுவெளியில் பிரபலமாகவில்லை.

நூல் வெளியானதற்குக் காரணமான சங்கல்பம் எதுவோ, அதுவே பயனாளிகள் கைக்கு நூல் பிரதிகளைக் கொண்டு சேர்க்கும் என்பது என் நம்பிக்கை.

***

அண்ணா உண்மையில் எவ்வளவு உழைத்திருக்கிறார் என்பதை நான் புரிந்து கொள்வதற்குக் காரணமாக அமைந்ததும் இந்த நூலே.

அண்ணாவின் புத்தக ஷெல்ஃபில் அவ்வப்போது நாஃப்தாலின், வசம்பு அடங்கிய துணிப்பைகளைப் போட்டு வைப்போம் - புத்தகங்களைப் பூச்சி அரிக்காமல் இருப்பதற்காக. புத்தகங்கள் என்றால் அவை புத்தகங்கள் மட்டுமல்ல, நிறைய காகிதங்களும் அவற்றில் இருக்கும். கொத்தாகப் பல காகிதங்களையும் ஒருசில புத்தகங்களையும் சேர்த்து பாலிதீன் கவரில் போட்டு வைத்திருப்பார், அண்ணா. அந்தக் காகிதங்களில் என்ன எழுதி வைத்திருந்தார் என்று நான் ஒருபோதும் பார்த்ததே இல்லை. இதுபோலப் பல ஆயிரக்கணக்கான காகிதங்கள் இருந்தன என்பது மட்டும் நன்றாகத் தெரியும்.

அகத்தியர் புத்தகத்துக்கான கையெழுத்துப் பிரதியை கணேஷ் சர்மா என்னிடம் தரும்போது இரண்டு பெரிய பண்டல்களையும் சேர்த்தே கொடுத்தார். அவற்றில் அண்ணா பயன்படுத்திய ஒருசில புத்தகங்களும் இதேபோன்ற காகிதங்களும் இருந்தன. எனக்குத் தேவை அகத்தியர் புத்தகத்தின் கையெழுத்துப் பிரதி மட்டுமே. அதை மட்டும் எடுத்துக் கொண்டு மீதி விஷயங்களைப் பரணில் போட்டு விட்டேன்.

சமீபத்தில் ஒரு நாள் யதேச்சையாக அந்தப் பையை எடுத்துப் பார்த்தேன். அண்ணாவிடம் இதேபோல ஆயிரக்கணக்கான காகிதங்கள் இருந்தனவே அவற்றில் என்ன எழுதி வைத்திருந்தார் என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வத்தின் காரணமாக, அந்தப் பைக்குள் இருந்த காகிதங்களை எடுத்துப் பார்த்தேன். ஒவ்வொரு கவருக்குள்ளும் ஒருசில காகிதங்கள் இருந்தன. ஒவ்வொரு காகிதக் கட்டும் ஒரு புத்தகத்தின் கையெழுத்துப் பிரதி. ஏதேதோ புத்தகங்களைப் பார்த்து அவற்றைக் காகிதங்களில் எழுதி வைத்திருக்கிறார், அண்ணா.

இவற்றை ஏன் கையால் எழுத வேண்டும் என்பதே புரியவில்லை.

அனேகமாக, இவையெல்லாம் இரவல் வாங்கிய புத்தகங்களாக இருக்கும் என்பது என் யூகம். 1980களின் இறுதியில் தான் இந்தியாவில் ஜெராக்ஸ் இயந்திரம் பரவலாகப் பயன்பாட்டுக்கு வந்தது. அதற்கு முன்னர் டைப்பிங் மட்டுமே. டைப் பண்ணுவதற்குப் பதில் அண்ணா கையாலேயே அவற்றைப் பிரதி எடுத்திருக்கிறார்.

அண்ணா எழுத்தில் உருவாகி அச்சிடப்பட்ட நூல்களின் பக்க எண்ணிக்கை மட்டுமே சுமார் 30 ஆயிரம் பக்கங்கள் இருக்கும். இவற்றில் எதையும் யாரும் அவருக்காக டைப் பண்ணித் தரவில்லை. அனைத்தும் அவரால் எழுதப்பட்டவையே. இது தவிர, தெய்வத்தின் குரலுக்காக அவர் எழுதிய குறிப்புகள் எத்தனை ஆயிரம் பக்கங்களோ?

பெரியவா சொல்லும் வேகத்தில் அண்ணா நோட்ஸ் எழுதிக் கொள்வார். சில சந்தர்ப்பங்களில் அண்ணாவுக்காகப் பெரியவா நிறுத்தி நிறுத்திப் பேசுவதும் உண்டு. பெரியவா உரைகளைப் பதிவு செய்வதற்கு டேப் ரெகார்டர் முதலான சாதனங்களை அவர் பயன்படுத்தியதே இல்லை. வீட்டுக்கு வந்ததும் அவற்றைத் தெளிவான கையெழுத்தில் மீண்டும் ஒருமுறை எழுதுவார். தெய்வத்தின் குரல் ஏழு பகுதிகள் தான் வந்திருக்கின்றன. ஆனால், குறைந்தது மேலும் இரண்டு பாகங்களுக்காவது அவரிடம் விஷயங்கள் இருந்தன. அண்ணாவே என்னிடம் இதைச் சொல்லி இருக்கிறார்.

இவை தவிர, நான் மேலே குறிப்பிட்டுள்ளது போல இரவல் புத்தகங்கள். இவை எத்தனை ஆயிரம் பக்கங்களோ?

தோராயமாக மதிப்பிட்டுப் பார்த்தேன். அனேகமாக, அண்ணா தனது வாழ்நாளில் ஏ-4 காகிதத்தில் சுமார் இரண்டு லட்சம் பக்கங்கள் எழுதி இருப்பார் என்று எனக்குத் தோன்றுகிறது. வாழ்நாளில் என்று சொல்வது தவறு. சுமார் 45 வருடங்களில் என்று சொல்வதே சரியாக இருக்கும். (அண்ணாவின் எழுத்துப் பணி சுமார் 45 வருடங்கள் தான் நீடித்தது.)

மனித உழைப்பா அது!!

### 7. அண்ணாவின் எழுத்து - சில முக்கிய விஷயங்கள்

அண்ணாவின் எழுத்து நடை வசீகரமானது. அதேநேரத்தில் கொஞ்சம் கடினமான உரைநடையும் கூட. புரிந்து கொள்வதற்குக் கொஞ்சம் கஷ்டமாக இருக்கும். கொஞ்சம் கஷ்டம் என்பது கூடப் பரவாயில்லை. சில இடங்களில் ஜவ்வு மாதிரி இழுத்துக் கொண்டே போகும். இதனால், அவரது நூல்களைப் படிக்கும் போது சில சமயம் எரிச்சல் ஏற்படும். அண்ணாவைப் பற்றிப் பேசும்போது ஓர் அன்பர், "அண்ணாவின் எழூத்து வாசகர்களை வாணலியில் போட்டு வறுத்து எடுத்து விடும்" என்று குறிப்பிட்டார். ஆம், அண்ணாவின் எழுத்து நடை அப்படித் தான் இருக்கும்.

உண்மையில், அண்ணா எழுத்தில் நுட்பமான இரண்டு அம்சங்கள் உண்டு.

முதலாவது அம்சம் மொழி சம்பந்தப்பட்டது. மொழி என்பது ஓர் ஊடகம். கருத்துகளை வெளிப்படுத்துவதற்காக நாம் பயன்படுத்தும் ஒரு கருவி. அதேநேரத்தில், "நாம் நினைக்கும் விஷயங்களை அப்படியே வெளிப்படுத்துகிறோமா?" என்றால், "இல்லை" என்று தான் பதில் சொல்வேன். நினைப்பதற்கும் சொல்வதற்கும் இடையில் பெருத்த இடைவெளி இருக்கும். நினைக்கப்படும் கருத்துகளை அப்படியே முழுமையாக வெளிப்படுத்துவது எல்லோருக்கும் சாத்தியப்படாது. ஆனால், தனது எண்ணங்களை அச்சு அசலாக, முழுமையாக வெளிப்படுத்தும் விதத்தில் அண்ணாவின் எழுத்து அமைந்திருக்கும்.

உள்ளதை உள்ளவாறே சொல்வதற்கு அண்ணா மெனக்கெடும் விதம் என்னை மிகவும் கவர்ந்த அம்சம். (சில சமயங்களில் எரிச்சலூட்டுவதாக இருந்ததும் உண்டு.)

அண்ணாவின் மொழிநடை கடினமாக இருக்கிறது என்பது அடிப்படையிலேயே தவறான கருத்து. அவரது சிந்தனை ஆழம் முழுமையாக அப்படியே அவரது எழுத்தில் வெளிப்படுகிறது என்பது தான் சரி.

இவ்வாறு சொல்லும் போது, உடனேயே, "தெய்வத்தின் குரலில் அப்படி இல்லையே, அது படிப்பதற்கு எளிமையாக இருக்கிறதே, ஏன்?" என்ற கேள்வி எழலாம். தெய்வத்தின் குரலும் உண்மையில் அப்படித் தான் இருக்கிறது. ஆனால், கருத்துகளைச் சொல்வதில் பெரியவாளின் அணுகுமுறை வேறு. தெய்வத்தின் குரல் பேச்சு நடையில் இருப்பதும் அதன் எளிமைத் தோற்றத்துக்கான ஒரு முக்கியக் காரணம். மேலும், பெரியவா, ஆழமான விஷயத்தை ஆழமாகச் சொல்லாமல், மேலோட்டமாக, மேலோட்டமாக என்று ஏராளமான விஷயங்களைக் கோத்துக் கோத்துச் சொல்வார். (ஒரே கருத்து பலப்பல பக்கங்களாக விரிவதற்கும் இதுவே காரணம்.)

இதனால், தெய்வத்தின் குரல் படிப்பதற்கு எளிமையாகத் தெரியும். உண்மையில், அண்ணாவின் எழுத்தை விட தெய்வத்தின் குரல் மிகமிகக் கடினமான, கனமான விஷயம். தெய்வத்தின் குரலைத் திரும்பத் திரும்பப் படிப்பவர்கள் அனைவருமே இதை உணர முடியும். தெய்வத்தின் குரலை முழுமையாக உள்வாங்கிக் கொள்வது மிகவும் கடினம். மீண்டும் மீண்டும் படிக்க வேண்டும். இன்னும் இன்னும் ஆழ்ந்து படிக்க வேண்டும். படித்துக் கொண்டே இருக்க வேண்டும்.

இரண்டாவது அம்சம் நூல் உருவாக்கம் சார்ந்தது. நாம் பத்திரிகைகளைப் படித்ததும் தூக்கிப் போட்டு விடுகிறோம். அதுபோலவே, நிறைய புத்தகங்களையும் தூக்கிப் போட்டு விடுகிறோம். ஆனால், சில புத்தகங்களை மட்டும் பாதுகாப்பாக வைக்கிறோம் - மீண்டும் படிப்பதற்காக.

இதற்குக் காரணம் பெர்மனன்ஸி வேல்யூ. சில புத்தகங்களில் உள்ள விஷயங்கள் தனிமனித வாழ்விலும் சமுதாயத்திலும் பல வருடங்கள் தாக்குப் பிடிக்கும். அவை மட்டுமே நீண்ட நாள் உயிர் வாழும்.

இந்த பெர்மனன்ஸி வேல்யூ புத்தகத்துக்குப் புத்தகம் மாறுபடும். எழுத்தாளருக்கு எழுத்தாளர் மாறுபடும். எல்லா எழுத்தாளர்களின் புத்தகங்களுக்கும் இது அமைவது இல்லை. தலைசிறந்த எழுத்தாளரே ஆனாலும், அவரது அனைத்துப் புத்தகங்களுக்கும் பெர்மனன்ஸி வேல்யூ இருக்கும் என்ற உத்தரவாதம் இல்லை. பெர்மனன்ஸி வேல்யூ இல்லாத புத்தகங்கள் பத்திரிகைகளைப் போன்றவை. படித்து முடித்ததுமே அவற்றை நாம் தூக்கிப் போட்டு விடுவோம்.

சற்றே யோசித்துப் பாருங்கள், யாராவது தெய்வத்தின் குரலைத் தூக்கிப் போடுவோமா?

இதற்கு என்ன காரணம்?

தெய்வத்தின் குரலை நாம் மீண்டும் மீண்டும் படிக்க விரும்புகிறோம். பல வருடங்களுக்குப் பின்னரும் படிப்போம். அடுத்த தலைமுறைகளுக்கும் அது தொடரும்.

இதற்குக் காரணமாக அமையும் அம்சத்தைத் தான் பெர்மனன்ஸி வேல்யூ என்று குறிப்பிட்டேன்.

தெய்வத்தின் குரலுக்கு மட்டுமல்ல, அண்ணாவின் எழுத்தில் உருவான புத்தகங்களுக்குமே பெர்மனன்ஸி வேல்யூ ஜாஸ்தி.

எத்தனையோ எழுத்தாளர்கள் சாயி லீலை பற்றியும் பெரியவா அனுக்கிரகம் பற்றியும் எழுதி இருக்கிறார்கள். அண்ணாவும் இவற்றைப் பற்றி எழுதி இருக்கிறார். ஆனால், அண்ணா அவற்றைத் தொகுத்திருக்கும் விதம் மாறுபடும். உதாரணமாக, அன்பு அறுபது, அற்புதம் அறுபது. அதாவது, வெறும் சாயி லீலை அல்ல, அன்பு + லீலை, அற்புதம் + லீலை. பெரியவா பற்றிய நூல்களும் அப்படியே. மைத்ரீம் பஜத, கருணைக் கடலில் சில அலைகள், மகா பெரியவா விருந்து - இதுபோல, கருத்துருவுடன் சம்பவங்களைச் சொல்வதால் அவரது நூல்களுக்கு பெர்மனன்ஸி வேல்யூ ஜாஸ்தி.

ஆங்காங்கே அவர் சுட்டிக் காட்டும் தத்துவ உண்மைகளும், அவரது கருத்தாழமும், அவர் பயன்படுத்தும் மேற்கோள்களும் அவரது நூல்களின் பெர்மனன்ஸி வேல்யூவுக்கான இன்னொரு முக்கிய காரணம்.

சாதகர் ஒருவர் சாயி லீலைகளைப் பற்றித் தெரிந்து கொள்வதற்கும், அதே லீலைகளை அண்ணா புஸ்தகங்கள் மூலம் தெரிந்து கொள்வதற்கும் இடையே வேறுபாடு உண்டு. பொதுவாக ஸ்வாமி லீலைகளைப் படிக்கும் போது பிரமிப்பு மட்டுமே ஏற்படும். அதேநேரத்தில், அண்ணா புஸ்தகங்கள் வழியே அவற்றைப் படிக்கும் போது அவர்களுக்குத் தேவையான ஏராளமான இதர விஷயங்களும் சேர்த்தே கிடைக்கும். அந்த லீலைகளின் பின்னே உள்ள ப்ரேமையைப் புரிந்து கொள்ள முடியும்.

கடந்த சுமார் முப்பது வருடங்களாக எனது வாழ்க்கை நேரடியாகவோ, சுற்றி வளைத்தோ புத்தக உருவாக்கத்துடன் தொடர்புடையதாகவே அமைந்துள்ளது. எனவே, எந்தப் புத்தகத்தைக் கையில் எடுத்தாலும், இயல்பாகவே, எனது அறிவு, அந்தப் புத்தகத்தின் பல்வேறு அம்சங்களை எடைபோடும். அண்ணா புத்தகங்களின் பல அம்சங்கள் என்னை மிகவும் பிரமிக்க வைத்துள்ளன - குறிப்பாக, விஷயங்களைக் கோர்க்கும் அவரது ஆற்றல் போற்றுதலுக்குரிய அம்சம்.

அதேநேரத்தில், புத்தக வடிவம், அச்சு முதலான பல விஷயங்களை அவர் பொருட்படுத்துவதே இல்லை என்ற வருத்தமும் எனக்கு உண்டு. குறிப்பாக, தெய்வத்தின் குரல் பக்க அளவு, பக்க எண்ணிக்கை முதலான அம்சங்கள் குறித்து எனக்கு மிகுந்த அதிருப்தி உண்டு. அண்ணா இதுபோன்ற விஷயங்களை ஒரு பொருட்டாகக் கருதுவதே இல்லை என்பது வேறு விஷயம்.

நான் இங்கே சொல்லி இருப்பவை அண்ணாவின் எழுத்து சம்பந்தப்பட்டவை மட்டுமல்ல, அண்ணாவின் இயல்பு சம்பந்தப்பட்டவையும் கூட. சொல்லும் கருத்துகளை முழுமையாக, அழகாகச் சொல்ல வேண்டும் என்பதும், சமுதாயத்துக்குப் பயனுள்ள விஷயங்களை மட்டுமே சொல்ல வேண்டும், செய்ய வேண்டும் என்பதும் அண்ணாவுக்கு ஸஹ-ஜம் ஆக இருந்தன. ஸஹஜம் (ஸஹ - உடன், ஜம் - பிறப்பு) என்றால், பிறவியிலேயே உடன் வந்தது - அதாவது, இயற்கையாகவே அமைந்தது (அல்லது) இயல்பு - என்று பொருள்.

இவை அண்ணாவின் குண விசேஷங்கள். அவரது வாழ்க்கை முழுவதும் இவற்றைப் பார்க்க முடியும்.

**துணைவேந்தராகவும் ஆகலாம்**

அண்ணாவைப் பார்த்து நான் வியந்த விஷயங்களில் அவரது ஆங்கில அறிவும் ஒன்று.

தமிழிலும் அவருக்கு மிகுந்த அறிவாற்றல் உண்டு. அண்ணாவால் திருப்புகழைப் பிழையில்லாமல் வாசித்து, அதற்குப் பொருளும் சொல்ல முடியும். திருப்புகழைப் பிழையில்லாமல் வாசிப்பதற்கே அசாத்தியப் பயிற்சி தேவை. பொருள் சொல்வதற்குத் தமிழில் ஆழ்ந்த அறிவு தேவை. பள்ளி நாட்களுக்குப் பின் அவருக்குத் தமிழ் அன்னிய பாஷை ஆகி விட்டதே! எங்கிருந்துதான் இவ்வளவு தமிழ் கற்றுக் கொண்டாரோ?

அவரது சம்ஸ்கிருத அறிவும் அத்தகையதே! அவர் முறைப்படி சம்ஸ்கிருதம் பயின்றவர் அல்ல. ஆனால், சம்ஸ்கிருத நூல்களை அவரால் ஓரளவு புரிந்து கொள்ள முடிந்தது.

அண்ணாவின் எழுத்துப் பணிகளுக்கு சாஸ்திர அறிவும் முக்கியத் தேவை. பல்வேறு சாஸ்திர நூல்களிலும் அவருக்கு ஓரளவு பரிச்சயம் இருந்தது.

அவரது மொழியாற்றலுக்கு உண்மையான காரணம் பள்ளி, கல்லூரி அல்லது பாடசாலைப் படிப்பு அல்ல மாறாக, தனது உழைப்பின் மூலம் அவராகவே சம்பாதித்துக் கொண்டது.

தெய்வத்தின் குரல் நூல் தொகுதிகளை உருவாக்குவதற்காகத் தனி ஆளாக அவர் உழைத்த உழைப்பு ஒருபுறம் என்றால், தெய்வத்தின் குரலுக்குத் தேவையான அறிவாற்றலைப் பெறுவதற்காக அவர் எவ்வளவு உழைத்திருப்பார் என்பதை என்னால் கற்பனையே செய்ய முடியவில்லை.

மொழியறிவு என்பது மூளை சார்ந்தது. இலக்கிய ரசனை என்பது இதயம் சார்ந்தது. மொழியறிவு மிக்கவர்கள் எல்லோருக்கும் இலக்கிய ரசனை வாய்த்து விடுவதில்லை. இலக்கிய ரசனை உள்ளவர்கள் எல்லோரும் மொழியறிவைச் சம்பாதித்துக் கொள்ள முடிவதும் இல்லை. அண்ணாவிடம் செறிந்த மொழியாற்றலும், நுட்பமான இலக்கிய ரசனையும் ஒருசேர இருந்தன.

ஞானப் பொருளை சத், சித், ஆனந்தம் என்று விளக்குவது வேதாந்த வழி. காலத்துக்கு அப்பாற்பட்ட இருப்பு, அனைத்துமாகிய அறிவு, குறைவற்ற பூரணமான நித்தியமான ஆனந்தம் என்பது இதற்குச் சொல்லப்படும் விளக்கம்.

ஆனால், தனக்கு வேறான எதுவுமே இல்லை என்று அனைத்தையும் தானேயாகப் பார்ப்பவனுக்கு இருக்கும் அன்பு இந்தப் பிரபஞ்சம் முழுவதையும் தழுவியது அல்லவா? ஞானம் என்பதே ப்ரேமை தானே?

இதைப் பற்றி வேதாந்திகள் அதிகம் பேசுவதில்லை.

ஆனால், அண்ணாவின் எழுத்தில் இந்த ப்ரேமை அம்சம் தான் தூக்கலாக இருக்கும்.

"My Father alone, nothing else, nobody else" என்று தன் அப்பாவிடம் பரிபூரணமாகக் கரைந்து விட்ட அந்தப் "பிச்சைக்கார"ரைப் போலவே, அம்பாள் என்கிற ஒற்றைப் புள்ளியில் கரைந்து விட்டவர் அண்ணா என்பது தான் இந்த ப்ரேமை அம்சத்துக்கான முக்கியக் காரணம். இருந்தாலும், அவரது இலக்கிய ரசனையும் ஒரு துணைக் காரணம்.

ஆனால், மொழியாற்றல் மிக்க இந்த மாமனிதர், கல்லூரியில் படிக்கும் போது கவிதைப் பாடத்தில் ஃபெயில் ஆனார் என்பது ஆச்சரியமான உண்மை.

உலகாயத விஷயங்களுக்கு அப்பாற்பட்ட மெடாஃபிசிகல் வகைக் கவிதைகளிலேயே அண்ணாவுக்கு நாட்டம் அதிகம். கவிதைப் பாடத்தில் தனக்குப் பிடித்த கவிதைகளை மட்டுமே அவர் ஆழ்ந்து படித்திருந்தார். பரீட்சையில் அவற்றில் இருந்து ஒரு கேள்வி கூடக் கேட்கப்படவில்லை. அண்ணா, கேள்வித் தாளை அப்படியே ஒதுக்கி வைத்து விட்டு, தான் படித்த கவிதைகளைப் பற்றி அழகாக எழுதி வைத்தார்.

கேள்விக்கும் பதிலுக்கும் சம்பந்தமே இல்லாததால். விடைத்தாள் திருத்துபவர். அவற்றுக்கு மதிப்பெண் வழங்கவில்லை. அண்ணா ஃபெயில் ஆகி விட்டார்.

அந்த நாட்களில் ஹானர்ஸ் தேர்வுகளில் விடைத்தாள்கள் திருத்தி முடித்த பின்னர் அனைத்து விடைத்தாள்களையும் ஒரு கமிட்டி பரிசீலிக்கும். அண்ணாவின் விடைத்தாளைப் பரிசோதித்த கமிட்டித் தலைவர், அதில் காணப்பட்ட எழுத்து நடையைப் பார்த்து வியந்தார். "இந்தச் சிறு வயதில் இத்தகைய உன்னதமான எழுத்து நடை கொண்ட இந்த மாணவர் மிகுந்த அறிவுத் திறன் கொண்டவராகத் தான் இருக்க முடியும், இவர் வாழ்க்கையில் மிகவும் உயர்ந்த இடத்துக்கு வருவார் என்பதைப் புரிந்து கொள்ள முடிகிறது. யார் கண்டது! இவர் நமது யுனிவர்சிடிக்கே துணைவேந்தராகவும் ஆகலாம்!! (1950களில் நடந்தது இது. அப்போதெல்லாம் துணைவேந்தர்கள் அறிவாளிகளாகவும் நேர்மையாளர்களாகவும் இருந்தார்கள்.) இப்படிப்பட்ட ஒருவரை ஃபெயில் பண்ணிய கெட்ட பெயர் நமக்கு வேண்டாம்" என்று சொல்லி அண்ணாவுக்கு பாஸ் மார்க் போடச் சொல்லி விட்டார்.

உண்மையில், அண்ணாவுக்கு இள வயதிலேயே முதிர்ந்த அறிவாற்றல் இருந்திருக்குமோ என்று பல தடவை நினைத்திருக்கிறேன். அதைப் பற்றி அவரிடம் நான் கேட்டதில்லை. ஆயினும், நான் நினைத்தது சரியே என்பது போல, பிற்காலத்தில் தன்னைப் பற்றி அண்ணா ஒரு விஷயத்தைத் தெரிவித்தார்

அண்ணாவுக்கு இரண்டு வயது ஆகும்போதே ராகங்களின் பெயர்கள் பரிசயமான விஷயமாகத் தெரிந்ததாம். மூன்று வயதில் எந்தவொரு பாடலைக் கேட்டாலும் அது என்ன ராகம் என்பதைக் கண்டு கொள்ள முடிந்தது. நான்கு வயதில், யாராவது ஏதாவது பாடலை ஹம் பண்ணினால் கூட அதன் ராகத்தைச் சொல்ல முடிந்ததாம். ஐந்து வயது ஆகும் போது அவரால் எந்த ராகத்தையும் ஹம் பண்ண முடிந்ததாம்.

இது எப்படி சாத்தியமானது என்று நான் அவரிடம் கேட்டேன். "எனக்குத் தெரியல. ஏதோ பூர்வ ஜன்ம வாசனை-ன்னு சொல்றாளே, அப்படி இருக்குமோ, என்னவோ!" என்று தெரிவித்தார்.

**அண்ணா எழுத்தின் முக்கிய அம்சங்கள்**

அண்ணா எழுத்தில் மூன்று முக்கிய அம்சங்கள் உண்டு. இவற்றை ஆங்காங்கே கண்டுணர முடியும். எனினும், மூன்று அம்சங்களும் முழுமையாக வெளிப்பட்டிருப்பது "நவராத்திரி நாயகி"யில் தான்.

**முதல் அம்சம்: வேதாந்த விளக்கம்**

ஹிந்து சிந்தனையைப் பொறுத்த வரை, வாழ்க்கை என்பது வீடுபேற்றை நோக்கிய பயணம் மட்டுமே.

"வீடு" என்பது "விடு" என்பதன் நீட்சி, "பேறு" என்பது "பெறு" என்பதன் நீட்சி.

எதை விடுவது, எதைப் பெறுவது?

இதை ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாக விளக்குகிறார்கள். ஒவ்வொரு விளக்கமும் நம் தேசத்தின் ஒவ்வொரு சம்பிரதாயமாக மலர்ந்துள்ளது.

அண்ணா ஸ்மார்த்த சம்பிரதாயத்தைச் சேர்ந்தவர். இது ஆதி சங்கரரால் ஏற்படுத்தப்பட்டது, அத்வைதத்தை அடிப்படையாகக் கொண்டது.

பரம்பொருள் ஒன்று மட்டுமே இருக்கிறது, பிரபஞ்சம் என்பது இருப்பது போலத் தெரிவது - உண்மையில் இல்லாதது - என்பதே அத்வைதம்.

அத்வைதத்தைப் பொறுத்த வரை இந்த அறிவு தான் வீடுபேறு.

இந்தத் தத்துவத்தை நிலைநாட்டுவதற்காகச் சொல்லப்படும் விளக்கங்கள் மரபு சார்ந்தவை, காலங்காலமாகச் சொல்லப்பட்டு வருபவை. இந்த அம்சங்களில் சிலவற்றை அண்ணா தனக்கே உரிய விதத்தில் விளக்குவார். இவை அத்வைத மரபில் சொல்லப்படும் விளக்கங்களில் இருந்து சற்றே மாறுபடும்.

“கடலும் அலையும் வேறு வேறு அல்ல” என்கிறது அத்வைதம். அதையே அண்ணா, “ஆம், கடலும் அலையும் வேறு வேறு அல்ல தான், ஆனால், அலையில் கடல் தோன்ற முடியாது, கடலில் தான் அலை தோன்ற முடியும்” என்று விளக்குவார்.

அத்வைதம், மாயைக்கு அதிபதியாக ஈசுவரன் என்ற ஒரு தத்துவத்தைப் பற்றிப் பேசும். அண்ணா, அதை பிரகிருதி அல்லது பராசக்தி என்று சொல்லுவார்.

அண்ணா தரும் இத்தகைய விளக்கங்கள், சாக்தம் (ஆறு மதங்களில் ஒன்று. சக்தி வழிபாட்டை அடிப்படையாகக் கொண்டது.) அத்வைதம் ஆகிய இரண்டும் கலந்ததாக இருக்கும்.

அத்வைதம் என்பது அறிவை மட்டுமே அடிப்படையாகக் கொண்ட தத்துவம் என்று சொல்லலாம் - நம் அறிவைப் பற்றியது அல்ல, பேரறிவு பற்றியது.

அண்ணா, இந்த அறிவை பக்தியின் மூலம் விளக்குவார். அத்வைத ஞானம் என்பது பராசக்தியின் அனுக்கிரகத்தால் கிடைப்பது என்பது அண்ணா சொல்லும் விளக்கம்.

எத்தனையோ இடங்களில் அண்ணா இதுபோன்ற விளக்கங்களை மேலோட்டமாகக் குறிப்பிட்டிருந்தாலும், நவராத்திரி நாயகி நூலின் “முகவுரை என்கிற முக்கிய உரை”யில் தான் இந்த விளக்கத்தை முழுமையாகத் தந்திருக்கிறார்.

காசியில் ஆதி சங்கரர் ஒரு புலையனை விலகிப் போகுமாறு சொன்னது மிகவும் பிரபலமான சம்பவம். இதேபோன்ற இன்னொரு சம்பவத்தை அண்ணா சுட்டிக் காட்டுவதுண்டு. இது வங்காளத்தில் பிரபலமாகச் சொல்லப்படும் கதை.

ஆசார்யாள் கங்கையில் குளிக்க வருகிறார். படித்துறையில் ஒரு பிச்சைக்காரக் கிழவி தனது கால்களை நீட்டியவாறு அமர்ந்திருக்கிறாள். ஆசார்யாளின் சிஷ்யர்கள், அவளைப் பார்த்து, “ஆசார்யாள் குளிக்க வந்து கொண்டிருக்கிறார். வழி விட்டு உட்காரம்மா” என்று சொல்கிறார்கள்.

அதற்கு அந்தக் கிழவி, “உங்க ஆசார்யாள் வராராக்கும்! வரட்டும், வரட்டும்! எனக்கும் அவர் கிட்ட ஒரு சந்தேகம் கேட்கணும்னு இருக்கு” என்றாளாம்.

சிஷ்யர்களுக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. இதற்குள் ஆசார்யாள் அவளுக்கு அருகே வந்து விட்டார்.

ஆசார்யாளைப் பார்த்த அந்தக் கிழவி, “ஓய் ஆசார்யரே, இந்த லோகத்தை மாயை மாயை-ன்னு சொல்றீரே, மாயை-ன்னா இல்லாதது-ன்னு அர்த்தம் சொல்றீரே! ஆனா, இப்போ நீரும் நானும் இல்லையா? ஒருத்தருக்கொருத்தர் பேசிக்கலையா? இது ஏன் இப்படி இருக்கு? இல்லாதது இல்லாததாவே இல்லையே, இருக்கறதா தானே இருக்கு? இது எப்படி சாத்தியமாறது? இதுக்கு உம்ம கிட்ட பதில் உண்டா?” என்று கேட்டாளாம்.

உடனே, ஆசார்யாள் அவளை நெடுஞ்சாண்கிடையாக நமஸ்கரித்தாராம்.

“அம்மா, நீயே தானம்மா அதற்குக் காரணம்! நீ ஜகன் மாயா! லோக மாயா! மகா மாயா! அறிவுக்கு அப்பாற்பட்டவள் நீ! உன்னை யாரால் அறிய முடியும்? உன்னை எப்படியம்மா அறிய முடியும்? உன்னை எப்படியம்மா விளக்க முடியும்?” என்று கேட்டாராம்.

பிச்சைக்காரக் கிழவி வடிவத்தில் வந்த பராசக்தி, தனது சுயரூபத்தில் ஆசார்யாளுக்குக் காட்சி தந்து விட்டு மறைந்தாளாம்.

ஆசார்யாள் வாழ்வில் அண்ணாவுக்கு மிகவும் பிடித்த சம்பவம் இது.

இந்தக் கருத்தைத் தான், அண்ணா, "நவராத்திரி நாயகி" நூலின் முகவுரை என்கிற முக்கிய உரையில், (நூலின் முதல் பதிப்புக்காக எழுதப்பட்ட முன்னுரை) "மகா ஞானியரையும் அவள் மோக மயக்கத்தில் ஆழ்த்துகிறாள்" என்ற புராண வாசகத்தை மேற்கோளாகக் கொண்டு மிகமிக விரிவாக எழுதி இருக்கிறார்.

**இரண்டாவது அம்சம்: கேள்விகள் இல்லாத நிலை**

தத்துவம் என்பது அறிவு பூர்வமான விளக்கத்தைத் தருவது. ஆனால், தத்துவத்தை ஆழ்ந்து படிக்கும் போது, ஒரு கேள்விக்கான பதிலே அடுத்த கேள்வியின் துவக்கமாக அமைந்து விடும். கேள்விகள் முடிவே இல்லாமல் தொடரும்.

அப்படியானால், அறிவின் இறுதி நிலை என்ன?

கேள்விகளுக்கு பதில் கிடைக்கவே கிடைக்காது என்பதை நம் அறிவின் மூலம் புரிந்து கொள்ளும் போது தான் தெளிவு பிறக்கும்.

அண்ணாவின் எழுத்தில் இந்தக் கருத்து அவ்வப்போது இடம் பெறும். எனினும், நவராத்திரி நாயகியின் "நமஸ்காரம்" என்ற தலைப்பில் (நான்காம் பதிப்புக்கான முன்னுரை இது.) இந்தக் கருத்து தெளிவாக விளக்கப்பட்டுள்ளது.

நமது பாரம்பரியத்தில் உபதேசம் என்பது பெரும்பாலும் ரத்தினச் சுருக்கமாக இருக்கும். ஆனால், அதற்கான விளக்கம் பெரிய பெரிய வால்யூம்களாக விரியும். உதாரணமாக, பாகவதம் என்பது நாரதரால் வேத வியாசருக்கு வெறும் நான்கு சுலோகங்களில் சொல்லப்பட்ட உபதேசம் தான். அந்த உபதேசத்தைத் தான் வேத வியாசர் பல லட்சம் சுலோகங்கள் கொண்ட பாகவதம் என்னும் நூலாக அமைத்தார். (தற்போது 18000 சுலோகங்களே நமக்குக் கிடைத்துள்ளன.)

அதுபோலவே, நவராத்திரி நாயகி நூலின் "நமஸ்காரம்" என்ற பகுதி வெறும் பனிரண்டு பக்கங்கள் மட்டுமே. அண்ணா எழுதிய அனைத்து நூல்களும் இந்தப் பனிரண்டு பக்கங்களின் விரிவு என்பது எனது கருத்து. அண்ணா எழுத்தின் சாரம் என்று இந்தப் பகுதியைக் குறிப்பிடுவேன்.

**மூன்றாவது அம்சம்: கேள்விகளே இல்லாத மனிதர்களுக்காக**

கேள்விகள், அவற்றுக்கான விளக்கம், அந்த விளக்கங்ளில் இருந்து பிறக்கும் அடுக்கடுக்கான கேள்விகள்... இறுதியாக, கேள்விகளால் பயனில்லை என்கிற அறிவு....

இவற்றுக்கெல்லாம் காரணம், நமது மனதில் உள்ள தேடல் தானே!

நம் அறிவின் மூலம் இந்த சிருஷ்டி மர்மத்தை அறிந்து விட முடியும் என்ற அகம்பாவம் தானே!

இந்த அறிவு தொலைந்து விட்டால்....?

தேடல் முடிந்து விடும்.

அறிவைத் தொலைப்பது நமக்கு சாத்தியம் இல்லாமல் இருக்கிறது. ஆனால், எத்தனையோ ஜனங்களுக்கு இந்த அறிவே தேவை இல்லாமல் இருக்கிறது. அறிவுக்குப் பதில் அவர்கள் மனதில் நம்பிக்கை முழுமையாக அமர்ந்திருக்கிறது.

அவர்களுக்குக் கேள்விகள் இல்லை. இந்தப் பிரபஞ்சம் என்பது படைப்பா, லீலையா, மாயையா என்பதெல்லாம் அவர்களுக்கு ஒரு பொருட்டே இல்லை. இந்த மனிதர்கள் தங்களை அசாதாரண அறிவாற்றல் ஏதும் இல்லாத சாமானியர்களாக மட்டுமே கருதுபவர்கள். பிரபஞ்சம் என்பது அவர்களைப் பொறுத்த வரை தெய்விகமானது. புராணம் என்பது தங்களுக்குத் தரப்படும் பிரசாதமாகிய பழம். அவர்கள் எந்தக் கேள்வியும் இல்லாமல் அந்தப் பழத்தைச் சுவைத்து ஆனந்தப்படுகிறார்கள்.

"நவராத்திரி நாயகி" நூலின் புராணப் பகுதி இத்தகைய வாசகர்களுக்காகவே.

அறிவு ஏற்படுத்தும் குடைச்சல்கள் எதுவும் இல்லாமல் “அம்மா, நீ அம்மா. நான் உன் குழந்தை” என்று மீண்டும் மீண்டும் அம்பாளை நினைத்து ஆனந்திக்கும் வாய்ப்பைத் தருவது இந்தப் பகுதி.

**8. அண்ணாவும் நானும்**

நிறைய பேர் ஸ்வாமிக்கு சர்வீஸ் பண்ணுகிறார்களே, நாமும் பண்ணினால் என்ன என்ற ஆவல் எழுந்தது. சமிதி உறுப்பினர்கள் தான் சர்வீசுக்குப் போக முடியும் என்று சொன்னார்கள். எனவே, ஒரு சாயி அன்பர் மூலம் சமிதி உறுப்பினர் அட்டை வாங்கிக் கொண்டு வொயிட்ஃபீல்ட் கிளம்பினேன்.

ஆகா, மே மாதம் சென்னையில் வெயில் சுட்டெரிக்கும்! வொயிட்ஃபீல்டில் சுகமான சீதோஷ்ண நிலை. போதாக்குறைக்கு ஆசிரமத்து வெஸ்டர்ன் கேண்டீன் உணவு வகைகள். ஆம், சர்வீஸ் உண்மையில் ரொம்ப சுவையாகவும்(!), சுகமாகவும்(!!) இருந்தது.

சேவைக்கு வந்திருந்த அனைவரிடமும் ஒரு பொதுவான ஏக்கம் இருப்பதைக் கவனித்தேன். இப்போது மட்டுமல்ல, ஒவ்வொரு தடவை தரிசனத்தின் போதும் இதை நான் கவனித்திருக்கிறேன். ஸ்வாமியின் பாத நமஸ்கார் வேண்டும் என்ற ஏக்கமே அது. சாயி அன்பர்களுக்கு எத்தனை தடவை ஸ்வாமியின் பாத நமஸ்கார் கிடைத்தாலும் ஏக்கம் தீராது போலும்!

வொயிட்ஃபீல்டில் இருந்த போது திடீரென்று அண்ணா என்னைச் சென்னை திரும்புமாறு சொல்லி விட்டார். சர்வீஸ் முடிவடைவதற்கு முந்தைய நாளில் நான் அங்கிருந்து கிளம்பி விட்டேன். சர்வீசுக்கு வந்திருந்த சாயி அன்பர்கள் அனைவருக்கும் ரொம்பவே வருத்தம். நாளை ஒரே ஒரு நாள் தான் சர்வீஸ் பாக்கி இருக்கிறது. சர்வீஸ் வந்த அனைவருக்கும் ஸ்வாமி விசேஷ தரிசனம் தருவார். அத்தனை பேருக்கும் பாத நமஸ்கார் கிடைக்கும். இந்த வாயப்பை இழந்து விடாதீர்கள் என்று அனைவருமே சொன்னார்கள்.

நான் என்ன செய்வது? அந்த தினத்தில் தான் அண்ணா என்னைச் சென்னயில் இருக்கச் சொல்லி இருந்தார். சென்னை திரும்பிய என்னை அண்ணா அன்றே திருவண்ணாமலை போகச் சொல்லி இருந்தார் - யோகியார் தரிசனத்துக்காக.

திவ்ய வித்யா ட்ரஸ்டிகளான கண்ணன், யஷோத் ஆகியோருடன் காரில் திருவண்ணாமலை பயணம். அப்போது அச்சாகியிருந்த ஏதோ புத்தகத்தை யோகியாருக்குக் கொடுப்பதற்காகத் தான் அண்ணா எங்களை அனுப்பினார். புத்தகம் பெயர் நினைவில்லை.

யஷோத் வாங்கிக் கொண்டு வந்திருந்த பிஸ்கெட்டைக் கையில் எடுத்த யோகியார் அதில் மிகச் சிறிய பகுதியை உடைத்து அதை மட்டும் சாப்பிட்டார். குழந்தையைப் போல மழலையில் யஷோத் பெயரைத் திரும்பத் திரும்பச் சொன்னார். அந்தப் பெயருக்கு என்ன பொருள் என்பதை விசாரித்தார். சுமார் பத்து நிமிடங்கள் அவருக்கு மிக மிக அருகாமையில் அமர்ந்திருந்தது என்னை மிகவும் பரவசப்படுத்தியது. திரும்பும் போது அனைவரும் அவருக்கு நமஸ்காரம் பண்ணினோம்.

யோகி அன்பரான முகிலன், நமஸ்காரம் பண்ணும் போது ஏன் யோகியாரின் பாதங்களைத் தொடவில்லை என்று கேட்டார். பயம் தான் காரணம் என்று பதில் சொன்னேன். ஐயோ, சாமி பாதத்தை அப்படியே சிக்குனு பிடிச்சுக்கணும் என்று உரிமையுடன் கூறினார். (அதன்பின்னர் யோகியைத் தரிசித்த நாட்களில் அவர் பாதங்களைத் தொட்டு நமஸ்காரம் பண்ணினேன்.)

***

நாங்கள் தரிசனத்துக்கு வரும்போது அண்ணா யோகியாருக்கு ஒரு கடிதம் கொடுத்தனுப்பி இருந்தார். அதில் அண்ணா, கண்ணனைப் பற்றி எழுதி இருந்தார். "அவருக்குக் குழந்தை இல்லை. இதனால் அவரும் அவர் மனைவியும் மிகுந்த மன வேதனையில் இருக்கிறார்கள்" என்று அந்தக் கடிதத்தில் அண்ணா எழுதி இருந்தார். மேலும் அதில், "கண்ணன் தனக்காக பிரார்த்தனை செய்து கொள்ள மாட்டார், எனவே நான் அவருக்காகத் தங்களிடம் (யோகியாரிடம்) பிரார்த்திக்கிறேன்" என்று எழுதி இருந்தார். இதன் தொடர்ச்சியாக, யோகியார் அனுக்கிரகத்தில், அடுத்த மாதமே அவரது மனைவி கருவுற்றார். அவர்களுக்கு ஆண் குழந்தைப் பேறு அமைந்தது.

ஆனால், கடிதத்தில் அண்ணா என்ன எழுதி இருந்தார் என்பது கண்ணன் உட்பட எங்களில் யாருக்குமே அப்போது தெரியாது.

இந்த விவரங்களை, அண்ணா, பின்னர் தான் எல்லோரிடமும் தெரிவித்தார். ஏதோ தீபாவளி மலரிலும் (கல்கி என்று ஞாபகம்.) எழுதி இருந்தார்.

***

இந்தக் காலகட்டத்தில் சில நண்பர்கள் சேர்ந்து ஒரு சிறு பத்திரிகை ஆரம்பித்தோம். அதன் இரண்டாவது இதழை அண்ணா யோகியாருக்குக் கொடுத்தனுப்பினார். அந்தப் பிரதியை யோகியார் தனது தலை மீது வைத்துக் கொண்டார். கைகளால் தடவி ஆசீர்வதித்தார். மூன்றாவது இதழில் அவரது இந்த அனுக்கிரகத்தைப் பற்றி எழுதினேன். டைப்செட்டிங் முடிந்தது. ஆனால், இதழ் அச்சேறவே இல்லை. மூடுவிழா நடத்தி விட்டோம்.

கண்ணன் விஷயத்தில் ப்ராப்திக்குக் (குழந்தைப் பேறு கிடைப்பற்குக்) காரணமான அதே அனுக்கிரகம், எங்கள் பத்திரிகை விஷயத்தில் சமாப்திக்குக் காரணமாக இருந்தது.

பல வருடங்களுக்கு முந்தைய ஒரு சம்பவம் பற்றி அண்ணா என்னிடம் சொல்லியதுண்டு. காங்கிரஸ்காரர் ஒருவரது பத்திரிகை அலுவலகத்துக்குப் பெரியவா போயிருந்தாராம். அங்கே பெரியவாளுக்குப் பாத பூஜை நடந்தது. அதற்கு அடுத்த நாள் பத்திரிகை மூடப்பட்டு விட்டது.

(கல்கியில் சேர்வதற்கு முன்பு அண்ணா கொஞ்ச நாள் பணி புரிந்த பத்திரிகை இது.)

பெரியவா கால் வைத்த நேரம், பத்திரிகை குடிமுழுகிப் போய் விட்டதே என்று பலரும் நினைத்தார்களாம். ஆனால், அந்தப் பத்திரிகை முதலாளி சொன்னாராம்: "சபரி ராமனுக்குப் பழம் கொடுத்தாள், ராமன் அவளுக்கு மோக்ஷம் கொடுத்தான். எனது பத்திரிகைக்கும் அப்படித்தான் ஆச்சு. நான் பெரியவாளுக்குப் பாத பூஜை பண்ணினேன். பெரியவா என் பத்திரிகைக்கு மோக்ஷம் கொடுத்தார்" என்று சொன்னாராம்.

அதேபோல யோகியார் எங்கள் பத்திரிகைக்கு மோக்ஷம் அளித்தார். இல்லாவிட்டால், சில ஆயிரம் ரூபாய்க்குப் பதில் பல லட்ச ரூபாய் நஷ்டத்தைச் சந்திக்க வேண்டி வந்திருக்கும்.

***

இந்தப் பத்திரிகையில் திவ்ய வித்யா ட்ரஸ்ட் விளம்பரம் போட்டிருந்தோம். அதைப் பார்த்து ஓர் அன்பர் எங்களைத் தொடர்பு கொண்டார். அண்ணாவின் அதி தீவிர வாசகரான அவர் பெயர் ரமேஷ் என்றும், அவர் அயனாவரத்தைச் சேர்ந்தவர் என்றும் ஞாபகம்.

அவரைப் பற்றிப் பின்னர் பார்க்கலாம்.

***

யோகியாருக்கு "பிச்சைக்கார" நாமா ஏற்பட்டது எப்படி என்பது பலர் மனதில் இருக்கும் கேள்வி.

கேரள மாநிலம் காஞ்சங்கோட்டில் ஆனந்தாசிரமம் உள்ளது. இந்த ஆசிரமத்தை நிறுவிய பப்பா ராமதாசர் தான் யோகியாரின் குரு. யோகியார் அடிக்கடி சொல்லும் "My Father" பப்பா ராமதாசரையே குறிப்பது. குருவிடம் மந்திரோபதேசம் பெற்றதும் ராம்சுரத் குமார் பைத்தியம் பிடித்தவர் போல ஆகி விட்டார். அவரது செயல்பாடுகளைப் பார்த்த அனைவரும் அவரைப் பைத்தியம் என்றே முடிவு கட்டினர். அவரால் பொருளீட்டவும் முடியாமல் போனது. ஒரு கட்டத்தில் மனைவி மக்களுடன் ஆசிரமத்திலேயே தங்க வேண்டும் என்று அவர்களை அழைத்துக் கொண்டு ஆனந்தாசிரமம் வந்தார். ஆனால் ராமதாசர் அவரை ஆசிரமத்தில் தங்க அனுமதிக்கவில்லை. என்னால் பணம் சம்பாதிக்க முடியவில்லை, குடும்பத்தைக் காப்பாற்ற நான் என்ன செய்வேன் என்று ராம்சுரத் குமார் முறையிட்ட போது பப்பா ராமதாசர், "Go and beg" என்று சொல்லி விட்டார். "நான் பிச்சைக்காரனா பப்பா, பிச்சை தான் எடுக்க வேண்டுமா பப்பா" என்று பப்பா ராமதாசரிடம் யோகியார் உருக்கமாகக் கேட்டதும், அவர் யோகியைக் கண்டு கொள்ளாமல் கதவைச்

சாத்திக் கொண்டதும் வர்ணனைக்கு அப்பாற்பட்ட சோக நிகழ்வுகள். அதன் பின்னர், யோகியார் பிச்சை எடுப்பதற்கு "இடையூறாக" இருந்த அன்பர்களை ரொம்பவும் "கவனமாக"க் கண்டறிந்து அவர்களுக்குத் தடை போட்டார், பப்பா இதைத்தொடர்ந்து சுமார் நான்கு வருடங்கள் யோகியார் பரிவ்ராஜகராகப பிச்சை எடுத்துக் கொண்டே நாடு முழுவதும் சுற்றித் திரிந்தார்.

நான் என்ற எண்ணத்தைத் தன்னிடம் இருந்து அறவே நீக்கிய சம்பவம் இது என இதைப் பற்றிப் பிற்காலத்தில் யோகியார் குறிப்பிடுவார். "Nobody can love this beggar like my Father Swami Ramdas and nobody can torture this beggar like my Father Swami Ramdas. My Father killed this beggar because He loved this beggar" என்று அவர் சொல்லுவார்

"Go and beg" என்று பப்பா ராமதாசர் சொன்னதில் இருந்து அவர் தன்னைப் பிச்சைக்காரராகவே கருத ஆரம்பித்தார். இவ்வாறு வந்ததே "பிச்சைக்கார"த் திருநாமம்

***

பெரியவா ஒருமுறை யோகியாரை டாக்சியில் கோவிந்தபுரத்துக்கு அழைத்துச் செல்லுமாறு ஒரு பக்தர் மூலம் தகவல் சொல்லி அனுப்பினார். ஆனால் யோகியாரோ பெரியவாளைப் பார்ப்பதற்காகக் காஞ்சிபுரம் வந்து விட்டார். (இந்தச் சந்திப்பு குறித்து அனேகமாக அனைவருமே கேள்விப்பட்டிருப்பீர்கள் என்பதால் விரிவாக எழுதவில்லை.) அப்போது பெரியவா யோகியாரின் கோத்திரத்தைத் தெரிந்து கொள்ள விரும்பினார் என்பது முக்கியச் செய்தி. யோகியார் ராம கோத்திரம் என்று பதில் சொன்னார். இதைக் கேட்ட காஞ்சி அன்பர்கள் கேலியாகச் சிரித்தனர். (அப்படி ஒரு கோத்திரம் கிடையாது என்பதால்.)

இதன்பின்னர் பெரியவா, யோகியார் சூரிய வம்சத்தைச் (ஸ்ரீராமனின் வம்சம்) சேர்ந்தவர் என்று சொல்லி இருக்கிறார். (இதைத்தான் யோகியார் ராம கோத்திரம் என்று சொன்னாரோ?)

யோகியாரின் பெயர் ராம் சுரத் குமாரா, ராம் சூரத் குமாரா என்ற ஐயமும் நிறையப் பேரிடம் எழுவதுண்டு. ராம்சுரத் குமார் என்றே யோகியார் தன் பெயரை எழுதி வந்தார். ராமன் மீது ஆராத அன்பு கொண்ட குழந்தை என்பது இதன் பொருள். அவரைத் திருவண்ணாமலையின் தெய்வக் குழந்தை என்றே அவரது அன்பர்கள் கருதுகிறார்கள்.

சூரத் குமார் என்று சொன்னாலும் பொருளுண்டு என்று பெரியவா அண்ணாவிடம் சொல்லி இருக்கிறார். சூரத் என்பது சூரஜ் (சூரியன்) என்ற சொல்லின் மருவு. சூரத் குமார் என்றால் சூரியனின் குமாரர் அதாவது சூரிய வமிசத்தைச் சேர்ந்தவர் என்று பொருள். ராமனும் சூரத் குமார் தான் (சூரிய வம்சத்தைச் சேர்ந்தவன்). யோகியாரின் அன்பர்கள் அவரை ஸ்ரீராமனாகவே பாவிக்கிறார்கள் என்பதும் குறிப்பிடத்தக்க விஷயம்.

***

தெய்வத்தின் குரலைப் பற்றி யோகியார் தனது அன்பர்களிடம் உயர்வாகப் பேசுவதுண்டு. அண்ணாவுக்கு அவ்வப்போது பாராட்டுச் செய்திகளும் அனுப்புவதும் உண்டு. யோகியார் அழைப்பின் பேரில் அண்ணா திருவண்ணாமலை சென்று சில தடவை அவரைத் தரிசித்திருக்கிறார்.

யோகி ஆசிரமத்துடன் எனக்கு நேரடி சம்பந்தம் எதுவும் இல்லை. இருந்தாலும், யோகியாருடன் நெருக்கமாக இருந்த அன்பர்களில் ஒருசிலருக்கு என் மீது மிகவும் பிரியம் உண்டு. இதற்கு ஒரே காரணம் அண்ணாவுக்கு நான் நெருக்கமாக இருந்ததே.

அண்ணாவுக்குப் பணிவிடை செய்ய அன்பர்கள் வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டதற்கும், அவ்வப்போது யாராவது அவருடன் தங்கி அவருக்குப் பணிவிடை செய்ய ஆரம்பித்ததற்கும் யோகியாரே காரணம். ஆரம்ப நாட்களில் அண்ணாவுக்குப் பணிவிடை செய்தவர்கள் யோகி அன்பர்களே. அவர்களில் முக்கியமானவர் சக்திவேல். அண்ணாவின் இறுதி வினாடிகளில் இவர் மட்டுமே அண்ணாவுடன் இருந்தார்.

**எனக்கும் அவள்தான் உனக்கும் அவள்தான்**

இந்தக் காலகட்டத்தில், எழுமலையைச் சேர்ந்த ஸ்ரீ இளங்கோவனும் நானும் வேறு சிலருடன் சேர்ந்து பள்ளிகளுக்கான பாடநூல்கள் தயாரித்து வெளியிடும் பதிப்பகம் ஒன்றை ஆரம்பிக்கலாம் எனத் தீர்மானித்தோம். பல்வேறு ஆலோசனைகள் முடிவடைந்த நிலையில், பதிப்பகத்துக்கு என்ன பெயர் வைப்பது என்ற கேள்வி எழுந்தது. எங்களுக்கு குருமகராஜ், சாரதா, ஸ்வாமிஜி ஆகிய மூன்று பெயர்கள் தோன்றின. இருந்தாலும், அண்ணாவிடம் கேட்போம். அவர் சொல்லும் பெயரையே வைக்கலாம் என்று முடிவு செய்தோம். அண்ணாவிடம் கேட்டால் அவர் சாரதா என்ற பெயரைத்தான் தேர்ந்தெடுப்பார் என்று நான் வேடிக்கையாகக் கூறினேன்.

அண்ணாவிடம் போய்ப் பதிப்பகத்துக்கு என்ன பெயர் வைக்கலாம் என்று கேட்டேன். அண்ணா சிரித்துக் கொண்டே, "நீ யோசிச்சிருப்பியே! அதைச் சொல்லு முதல்லே" என்றார். நாங்கள் யோசித்து வைத்திருந்த மூன்று பெயர்களையும் சொன்னேன்.

உடனே அண்ணா, "சாரதை பெயரே வை. ஆசார்யாளுக்கும் அவ தான். சிருங்கேரிக்கும் அவ தான். காஞ்சிக்கும் அவ தான். நீ சொன்னியே குருமகராஜ் - அவருக்கும் அவ தான். எனக்கும் அவ தான். உனக்கும் அவ தான். பப்ளிகேஷனுக்கும் அவ பெயரே இருக்கட்டும்" என்றார்.

இதற்குச் சில நாட்கள் பின்னர், பதிப்பகத்துக்கு லோகோ தேர்ந்தெடுக்க வேண்டிய தேவை வந்தது. அதில் கல்வியுடன் தொடர்புடைய ஏதாவது சம்ஸ்கிருத வாசகம் போட வேண்டும் என நான் விரும்பினேன். "வித்யா ததாதி வினயம்" என்ற வாசகம் மிகவும் பிரபலம். ஆனால், எனக்கு அது பிடிக்கவில்லை. அண்ணாவிடம் கேட்கலாம் என்று அவரிடம் போனேன்.

அண்ணா அப்போது சுவரைப் பார்த்தவாறு நின்று கொண்டு, கட்டிலின் மீது தனது துணிகளை மடித்து வைத்துக் கொண்டிருந்தார். நான் அவர் முதுகுக்குப் பின்னால் அமர்ந்திருந்தேன். என்ன விஷயம் என்று அண்ணா கேட்டார். "பப்ளிகேஷன் லோகோவுக்கு ஏதாவது ஸான்ஸ்க்ரிட் கொடேஷன் வேணும்" என்றேன். விருட்டென்று தலையை மட்டும் திருப்பி என்னைப் பார்த்த அண்ணா, "வித்யா ததாதி வினயமே போடு" என்றார். வினயமே போடு என்று சொல்லும் போது அவர் குரலில் அழுத்தம் இருந்தது.

அண்ணா சொன்ன விதம் எனக்கு மிகவும் வித்தியாசமாக இருந்தது. நான் என்ன யோசித்திருந்தேன் என்பது தெரிந்தே தான் அவ்வாறு சொன்னாரோ என்ற கேள்வி என் மனதில் எழுந்தது. எனது யூகம் சரியே. இதேபோலப் பிற்காலத்தில் அண்ணாவிடம் எனக்கு நிறைய அனுபவங்கள் கிடைத்தன.

**ஸ்வாமி, பெரியவா, அண்ணா**

எனது நண்பர் ஒருவர் நிறைய வெளிநாட்டினரை பேக்கேஜ் டூர் அழைத்துச் செல்வார். சாரதா பப்ளிகேஷன்ஸ் ஆரம்பிப்பது என்று முடிவான பின்னர் அந்த நண்பருடன் சில நாட்கள் நானும் பல்வேறு இடங்களுக்குச் சென்றிருந்தேன். அப்போது ஆனைமலையில் ரொம்ப விசேஷமான ஓர் அனுபவம் கிடைத்தது.

ஒரு தாய் யானை இறந்து விட்டதால், அதன் குட்டியை, மலைவாழ் மக்கள் உதவியுடன் காட்டிலாகாவினர் வளர்த்து வந்தார்கள். நாங்கள் அனைவரும் நீண்ட நேரம் அந்தக் குட்டியைத் தூக்கியும் கொஞ்சியும் விளையாடினோம். மறு நாள் வேறு பகுதிகளுக்குச் செல்லாமல் மீண்டும் அங்கேயே வந்து அந்தக் குட்டியைக் கொஞ்சி விளையாடினோம்.

சென்னை திரும்பியதும் பதிப்பக வேலைகளுக்காக வெளியூர் போக வேண்டிய சூழல். அதற்கு முன்னால் புட்டபர்த்தி போய் ஸ்வாமியை தரிசனம் செய்து விட்டு வரலாம் என்று ஆசையாக இருந்தது. கிளம்பிப் போனேன்.

அன்றைய தரிசனத்தின் போது ஸ்வாமி எனக்கு ஓரளவு பக்கத்தில் வந்து நின்றார். அவரது கண்கள் யானைக் கண்களைப் போல் எனக்குக் காட்சியளித்தன. மீண்டும் மீண்டும் கூர்ந்து பார்த்தேன். யானைக் கண்களே தான். எனக்குக் குழப்பமாக இருந்தது. வழக்கம் போல வலது கை விரல்களால் காற்றில் எழுதிக்

காட்டுவதும், உள்ளங்கையை அந்தரத்தை நோக்கிக் காட்டுவதுமாய் சுமார் ஒரு நிமிடத்துக்கும் மேல் ஸ்வாமி அங்கேயே நின்றிருந்தார். அவரைப் பார்க்கும் போது, காற்றில் யானை எதையோ எழுதிக் காட்டுவது போலவே எனக்குத் தோன்றியது.

தரிசனம் முடிந்து வெளியே வந்ததும் ஆனைமலை அனுபவம் நினைவு வந்தது. அந்த யானைக்குட்டியின் தாக்கத்தினால் மனதில் ஏதோ பிரமை ஏற்பட்டுள்ளது, அதனால் தான் ஸ்வாமியைப் பார்த்தால் யானையைப் போல் தெரிந்தது என்று தோன்றியது.

தரிசனம் முடித்து அன்று இரவே கிளம்பி மறு நாள் காலை சென்னை வந்து சேர்ந்தேன். வீட்டுக்கு வந்து பல் தேய்த்து விட்டு ஹாலில் அமர்ந்தேன். அயனாவரம் ரமேஷ் வந்து சேர்ந்தார். (நாங்கள் ஆரம்பித்த பத்திரிகை மூலம் இவரது அறிமுகம் கிடைத்தது என்பதை ஏற்கெனவே குறிப்பிட்டிருந்தேன்.)

அவர் எப்போது வந்தாலும் அண்ணா புத்தகங்களைப் பற்றியே பேசிக் கொண்டிருப்பார். அன்றும் அப்படியே. அண்ணாவின் தாயார் மரணத்துக்குப் பின்னர் அவர்கள் வீட்டுக்கு ஸ்ரீ உமேஷ் வந்திருந்ததைப் பற்றிக் கூறினார். (இந்தச் சம்பவம் பற்றி அண்ணா எழுதி இருக்கிறார். ஆனால், அப்போது எனக்குத் தெரியாது.)

அம்மாவின் தகனத்துக்குப் பின்னர் அண்ணா வீட்டுக்கு அவர் வந்த அவர், அம்மாவின் பிரேதப் பகுதிகள் சில அந்த வீட்டில் இருந்ததாகவும் அவற்றை அவரால் பார்க்க முடிந்ததாகவும் அண்ணாவிடம் தெரிவித்தாராம். (பிற்காலத்தில் ஒருமுறை, நான் அண்ணாவுடன் இருக்கும் போது அண்ணாவைப் பார்க்க உமேஷ் வந்திருந்தார். அவர் சென்ற பிற்பாடு அண்ணாவே இந்தச் சம்பவத்தைப் பற்றி என்னிடம் கூறினார்.)

அண்ணாவின் சஷ்டியப்த பூர்த்தியைப் பற்றி ரமேஷ் தெரிவித்த தகவல் தான் ரொம்ப விசேஷமானது. (இந்தச் சம்பவம் பற்றியும் அண்ணா எழுதி இருக்கிறார். ஆனால், அப்போது எனக்குத் தெரியாது.)

பெரியவா கடைசி காலத்தில் உடல்நலக் குறைவால் படுத்த படுக்கையாக இருந்த போது சைகை பாஷையிலேயே உரையாட முடிந்தது. பெரியவா சைகை மூலம் ஏதாவது சொல்வார். அருகில் இருப்பவர்கள் அதைப் புரிந்து கொள்ள முற்சிப்பார்கள். தாங்கள் புரிந்து கொண்டதை உரத்த குரலில் அவரிடம் சொல்லுவார்கள். அவர் சரியென்று ஆமோதிக்கும் வரை பெரியவா சைகை பாஷையில் பேசுவதும், அன்பர்கள் உரத்த குரலில் அவரிடம் கத்திப் பேசுவதும் தொடரும்.

அண்ணாவின் சஷ்டியப்த பூர்த்திக்கு முந்தைய நாள் மடத்து ஊழியர் பாலு அவர்களின் கனவில் பெரியவா காட்சி அளித்தாராம். தனது கடைசி காலத்தில் இருந்தது போலவே இந்தக் கனவில் பெரியவா காட்சியளித்தாராம். சைகை பாஷையில் தும்பிக்கையைக் காட்டுகிறார் பெரியவா.

“தும்பிக்கை என்னது, ஆனையா?” என்று பாலு கேட்கிறார்.

இல்லை என்று கையசைத்த பெரியவா, தும்பிக்கையால் எழுதுவது போல சைகை காட்டுகிறார்.

“எழுதற ஆனை… எழுத்தாளர் ரா. கணபதியா?”

ஆமாம் என்று கையசைத்த பெரியவா ஆறு, பூச்சியம் ஆகிய எண்களைக் காட்டுகிறார்.

“அறுபதுன்னா… சஷ்டியப்த பூர்த்தியா? ரா. கணபதிக்கு ஷஷ்டியப்த பூர்த்தியா? என்னிக்கு?”

நாளை என்று சைகை காட்டிய பெரியவா, தனது ஆசிகளைத் தெரிவிக்குமாறு கைகளை உயர்த்திக் காட்டி மறைந்தார்.

மறு நாள் காலை பாலு அவர்கள் புதுப் பெரியவாளிடம் இந்தக் கனவைச் சொல்லி, மடத்து பிரசாதம், சால்வை முதலான மரியாதைகளுடன் கிளம்பி அண்ணா தங்கி இருந்த மோகனராமன் வீட்டுக்கு வந்து சேர்ந்தார். வீட்டுக்குள் நுழையும் போது திடீரென அவருக்குப் பெரும் குழப்பம் ஏற்பட்டது. ‘கனவில் பெரியவா வந்ததை நம்பி நான் மடத்து மரியாதைகளுடன் ரா. கணபதியைப் பார்க்க வந்து விட்டேன். உண்மையில் அவருக்கு இன்று சஷ்டியப்த பூர்த்தி தானா? இல்லையெனில் நான் மடத்து சார்பில்

சஷ்டியப்த பூர்த்தி மரியாதை என்று அவருக்கு சால்வை போர்த்தினால் மடத்துக்கே இழுக்காகி விடுமே!'' என்ற சந்தேகம் அவருக்குள் எழுந்தது.

இந்தச் சிக்கல் தீர்வதற்காக அவர் மனதுக்குள் பெரியவாளிடம் முறையிட்டார். பெரியவா தற்போது தனக்கு ஏதாவது சமிக்ஞை காட்ட வேண்டும். என்று பிரார்த்தனை செய்தார். உடனே வீட்டு ஹாலில் இருந்த சாயிபாபா படத்தில் இருந்து ஒரு புஷ்பம் கீழே விழுந்தது. மிகுந்த சந்தோஷத்துடன் உள்ளே சென்ற அவர், அண்ணாவுக்கு மடத்து மரியாதைகளை சமர்ப்பித்தார். தனது அறுபதாவது பிறந்த தினத்தன்று பெரியவாளின் ஆசிகளும், மடத்து பிரசாதமும் கிடைத்ததில் அண்ணாவுக்கும் மகிழ்ச்சி.

***

ரமேஷ் கிளம்பிப் போனதும் எனக்கு ஸ்வாமியின் கண்கள் நினைவு வந்தன. எழுதுவது போல அவர் சைகை காட்டியது அண்ணாவைத் தான் குறித்ததோ என்ற கேள்வி மனதில் எழுந்தது. அப்படியே அது அண்ணாவைக் குறித்தாலும், அதற்கு என்ன விளக்கம்? அண்ணாவைப் பற்றி ஸ்வாமி எனக்கு என்ன சொல்கிறார் என்பது புரியவில்லை.

அதை விளக்கியவர் யோகியாரே!

**Sridhar Need not Come to this Beggar for Guidance**
**He can Always Take Guidance from Ra ganapati**

புட்டபர்த்தி தரிசனம் முடிந்து திரும்பிய சில நாட்களில் அண்ணாவைப் பார்க்கச் சென்றிருந்தேன். அன்று அண்ணா மௌனம். அவர் மௌனத்தின் போது நாம் பேசலாம். ஆனால், அவர் எழுதித்தான் காட்டுவார். பதிப்பக வேலைகள் தொடர்பாக விரைவில் நான் வெளியூர் செல்ல இருப்பதைத் தெரிவித்தேன். உடனே அண்ணா, பதிப்பகம் ஆரம்பிப்பது குறித்து யோகியாரிடம் அனுமதி வேண்டுமாறு எழுதிக் காட்டினார். அவரிடம் வெறுமனே ஆசி கேட்க வேண்டாம் என்றும், பதிப்பகம் ஆரம்பிப்பதற்கு அனுமதி தருமாறு கேட்கவும் என்றும் தெரிவித்தார். இப்போது மட்டுமல்ல, எப்போதுமே ஒரு மகானின் அனுமதி கிடைத்து விட்டால் உனது எண்ணம் உறுதியான செயல் திட்டமாகி விடும் என்றும் அவர் தெரிவித்தார்.

(அண்ணா எழுதிக் காட்டிய விஷயம் பசுமையாக நினைவில் உள்ளது என்றாலும் வார்த்தைகள் மறந்து விட்டன. எனினும், ''அவர் ஆசி தருவது போல நடித்து உன்னை ஏமாற்றி விளையாடிப் பார்க்கவும் கூடும்'' என்ற வரியும் ''Then your idea becomes a pucca plan'' என்ற வரியும் நன்றாக நினைவில் உள்ளன.)

அண்ணா கொடுத்த அறிமுகக் கடிதத்தை எடுத்துக் கொண்டு மறு நாளே திருவண்ணாமலை சென்றேன். யோகியாருக்கு மிக அருகில் என்னை அமர வைத்தார்கள். யோகியார் என் கையைப் பிடித்துக் கொண்டார். பின்னர் என் முதுகில் தட்டியவாறே, ''You need not come to this beggar for guidance. Regarding your textbook printing, you can take guidance from Ra. Ganapati. My Father says Ra. Ganapati will always guide Sridhar. Ra. Ganapatiji is competent of guiding Sridhar. He can always take guidance from Ra. Ganapati. My Father says Sridhar need not come to this beggar for guidance. My Father blesses you, my son. My Father blesses you, my son. My Father blesses you, my son'' என்று கூறினார்.

பேசும் சக்தியை நான் முழுமையாகவே இழந்திருந்தேன்.

மறு நாள் அண்ணாவைச் சந்தித்தேன். அன்றும் அண்ணா மௌன விரதம்.

யோகியார் சந்திப்பு விவரங்களைக் கேட்டதும் அண்ணா, ''Take it up, bravo! Swami will (mis)guide you through anna!'' என்று எழுதிக் காட்டினார்.

அண்ணா எழுதிக் காட்டிய (mis)guide என்ற வார்த்தை வேடிக்கையாக இருந்தாலும் எனக்குள் ஓர் உறுத்தலாகவும் இருந்தது.

எங்கள் பதிப்பக வியாபாரம் கடைசி வரை (mis)guidance வழியிலேயே போனது. அண்ணாவை நான் அடிவயிற்றில் இருந்து சபித்திருக்கிறேன் என்று இந்தத் தொடரின் ஆரம்பத்தில் தெரிவித்திருந்தேன். அதற்கு இந்த (mis)guidance உம் ஒரு முக்கிய காரணம்.

***

அனேகமாக, அண்ணா எனக்குச் செய்த மிகப் பெரிய அனுக்கிரகம் இந்த (mis)guidance தான் என்பது எனக்குப் புரிந்த போது அண்ணா காலம் முடிவடைந்திருந்தது.

**அண்ணாவுக்கு எல்லாம் தெரியும்டா, குழந்தை!**

என் மனதில் மிகுந்த விரக்தி உணர்வும் சுய பச்சாதாபமும் அவ்வப்போது தலைதூக்கும். ஏதேதோ காரணங்கள், பழைய நினைவுகள், நிகழ்காலத்து வேதனைகள்...

அண்ணாவிடம் என்னைப் பற்றி வெளிப்படையாகப் பேச வேண்டும் என்று முயற்சி செய்தேன். முடியவில்லை. கூச்சம் மட்டுமல்ல, ஏதோ ஒருவகை அச்ச உணர்வும் இருந்தது.

அண்ணாவிடம் நான் மிகவும் சகஜமாகப் பேசுவதுண்டு. இருந்தாலும், என்னைப் பற்றிப் பேச நா எழவில்லை.

சாரதா பப்ளிகேஷன்ஸ் ஆரம்பித்த புதிதில் அண்ணாவுக்கு ஒரு விரிவான கடிதம் எழுதினேன்.

அதன் பிறகு அவரைப் பார்க்கப் போயிருந்தேன்.

நான் போயிருந்த போது அண்ணா சுவரில் சாய்ந்தவாறு கட்டிலில் அமர்ந்திருந்தார். நான் நமஸ்காரம் பண்ணி விட்டுத் தரையில் அமர்ந்தேன்.

அண்ணா என்னைப் பார்த்துச் சிரித்தவாறே, "மொத்தம் ஆறு பக்க லெட்டர். அதில முழுசா ஒரு பக்கம் எதுக்காக இந்த லெட்டர்ன்னு நீளமான அறிமுகம்!! எல்லாம் எதுக்கு? அண்ணாவுக்கு ஒண்ணுமே தெரியாதுன்னு நினைச்சுண்டியா? அண்ணாவுக்கு ஒண்ணுமே தெரியாதுன்னா நினைச்சுண்டே? அண்ணாவுக்கு எல்லாம் தெரியும்" என்று சொல்லி லேசாக நிறுத்தியவர், என்னைக் கூர்ந்து பார்த்தார். மீண்டும் அழுத்தம் திருத்தமாக, "அண்ணாவுக்கு எல்லாம் தெரியும், அண்ணாவுக்கு எல்லாம் தெரியும்டா, குழந்தே!" என்றார்.

பின்னர், "உன்னளவில நீ எப்படி இருந்தாலும் அண்ணாவுக்கு வருத்தம் இல்லை. பிறத்தியாருக்குக் கெடுதல் பண்ணாம இருந்தால் போதும். உன்னை அண்ணா என் பக்கத்திலயே வச்சிண்டிருக்கேன். ஏன் தெரியுமா? நீ அசடுங்கறதால தான். எதையும் போட்டுக் குழப்பிக்காதே!" என்றார்.

***

எனக்கு எல்லாம் தெரியும் என்றால் என்ன பொருள்? அண்ணா ஸர்வக்ஞர் என்று அர்த்தமா?

எனக்குப் புரியவில்லை. அவரிடம் அதற்கு விளக்கம் கேட்கவும் தோன்றவில்லை.

அதன் பின்னர் அவரிடம் அவ்வப்போது ஏதோ ஒருசில விஷயங்கள் கேட்டதுண்டு. எனினும், பெரிதாக எதுவும் கேட்கத் தோன்றவில்லை. குறிப்பாக, ஆன்மிக விஷயமாக எதுவுமே கேட்கத் தோன்றவில்லை.

தெய்வம் என்ற ஒன்று இருக்கிறது என்ற கருத்து சிறு வயது முதலே மனதில் இருந்து வந்தது. எனினும், பக்தி என்று சொல்லிக் கொள்ளுமளவு பெரிதாக ஒன்றும் இல்லை. அண்ணாவிடம் வர ஆரம்பித்த பின்னர் தான் ஸ்வாமி, பெரியவா, யோகி மூவரின் மீதும் நிஜமான பக்தி உணர்வு ஏற்பட்டது.

ஆனால், இந்தச் சம்பவத்துக்குப் பின்னர் என்னிடம் ஒரு பெரிய மாற்றம் ஏற்பட்டது.

ஸ்வாமி, பெரியவா, யோகி எல்லோருமே எனக்கு அண்ணா தான் என்ற உணர்வு ஏற்பட்டது.

கம்பெனிக்கு சாரதா பெயரை வை என்று சொன்னவர் சாக்ஷாத் சாரதையின் மனித வடிவமே என்று என் மனம் நம்ப ஆரம்பித்தது.

மனம் முழுவதும் அண்ணா, அண்ணா, அண்ணா என்று துதிக்க ஆரம்பித்தது.

சில வருடங்கள் இந்த நிலையே நீடித்தது.

***

இதற்குச் சில மாதங்கள் பின்னர், ஒருமுறை, மாலையில் அண்ணாவைப் பார்க்கச் சென்றிருந்தேன். மாலையில் போனால் அவருடன் சிறிது நேரம் தான் இருக்க முடியும். ஆனால், அண்ணாவுடன் கோவிலுக்குச் செல்ல முடியும். நான் சில நிமிடங்கள் தாமதமாகப் போய்ச் சேர்ந்தேன். அண்ணா மாடியில் இருந்து கீழே இறங்கிக் கொண்டிருந்தார்.

நான் அவரைக் கை கூப்பி வணங்கினேன். கீழே இறங்கியதும் எனது கையைப் பிடித்துக் கொண்ட அண்ணா, மாடிப்படியைக் காட்டி, "உனக்கு நான் ஒரு அவதார புருஷன்!" என்று சொன்னார். "அவ-தாரம் அப்படீன்னா கீழே இறங்கி வர்றது. உனக்கோசரம் நான் கீழே இறங்கி வரேன்" என்றார்.

அவர் படி இறங்கி வந்ததை மட்டும் குறிப்பிடவில்லை என்பது என் மனதுக்குப் புரிந்தது.

***

கடந்த சில நாட்களாக, பழைய சம்பவங்கள் அனைத்தையும் கோவையாக நினைவுக்குக் கொண்டு வந்து அசை போட முயற்சிக்கிறேன். பல விஷயங்களை நம்பவே முடியவில்லை.

அவற்றில் தலையாயது "அண்ணாவுக்கு எல்லாம் தெரியும்டா, குழந்தே!" தான்.

அண்ணாவா அப்படிச் சொன்னார்?

ஆம், சாக்ஷாத் அண்ணாவே தான்.

25 வருடங்கள் கழிந்த பின்னரும் நன்றாக நினைவிருக்கிறது. அந்தக் காட்சி என் கண்ணில் இப்போதும் நிழலாடுகிறது. வார்த்தைகள் அப்படியே நினைவில் இருக்கின்றன.

ஆனாலும், அதை நம்பவே முடியவில்லை.

அண்ணாவை நெருக்கமாக அறிந்த யாராலும் இதை நம்ப முடியாது.

சம்பவத்துக்கு சாக்ஷியாக இருந்த என்னாலேயே நம்ப முடியவில்லை.

ஏனெனில், அது தான் அண்ணா. அவர் தன்னை ஒருபோதும் முழுமையாக வெளிப்படுத்திக் கொண்டதில்லை.

சிற்சில இடங்களில் - மிகச் சில இடங்களில் - குறிப்பாக, நவராத்திரி நாயகி நூலுக்கான முகவுரை என்கிற முக்கிய உரையில் - அண்ணா தனது அனுபூதி நிலையைப் பற்றி லேசாகக் கோடி காட்டி எழுதி இருக்கிறார். அவரது அன்புத் தம்பி ஒருவருக்குக் கடைசி நாட்களில் எழுதிய கடிதத்திலும் இதுபோன்று தன்னைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால், அவையெல்லாம், வெறுமனே மேம்போக்கான வர்ணனை மட்டுமே.

"அண்ணாவுக்கு எல்லாம் தெரியும்டா, குழந்தே!" மட்டுமே எனக்குத் தெரிந்த ஒரே ஒரு விதி விலக்கு.

இதற்குப் பின்னர் பல சந்தர்ப்பங்களில் என்னிடம், அவர், தன்னை ஒண்ணுமே தெரியாத பாமரராகவே குறிப்பிட்டுப் பேசி இருக்கிறார்.

***

“அண்ணாவுக்கு எல்லாம் தெரியும்டா, குழந்தை!”க்குச் சில வாரங்கள் கழிந்த பின்னர் நடந்தது இது.

சாரதா பப்ளிகேஷன்ஸ் சம்பந்தமாக சில முக்கிய முடிவுகள் எடுக்க வேண்டி இருந்தது. சம்பந்தப்பட்டவர்கள் அனைவரும் ஆலோசித்து முடிவு செய்தோம். எடுக்கப்பட்ட முடிவுகளை அண்ணாவிடம் தெரிவித்தேன். அண்ணா வெறுமனே கேட்டுக் கொண்டார்.

மறுநாள் என்னைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, “அண்ணாவுக்குப் பரிபூர்ண சம்மதம்” என்று தெரிவித்தார்.

அத்துடன் கூடவே ஒரு “மங்கல”ச் செய்தியையும் தெரிவித்தார்.

அண்ணாவுக்கு ஸ்வாமி ஒரு மாலை வரவழைத்துக் கொடுத்திருந்தார். அவரது வாழ்வின் முக்கியமான நிகழ்வுகளின் போது அது அறுந்து போகுமாம். இதற்கு முன்னால் ஒரு தடவை அது அறுந்து போனதாம். அதைத் தொடர்ந்து அவரது அம்மா காலமாகி விட்டார்.

முந்தைய நாள் இரவு அந்த மாலை அறுந்து போனதாம். காலையில் தான் அண்ணா அதை கவனித்தாராம். உடனே என்னைத் தொடர்பு கொண்டதாகத் தெரிவித்தார். சாரதா பப்ளிகேஷன்ஸில் எடுக்கப்பட்ட முடிவுகள் அண்ணாவின் வாழ்வில் முக்கியமான விஷயம். எனவே, மாலை அறுந்தது மங்கலமான சூசகம் என்பதே அவர் தெரிவித்த செய்தி.

மரணத்துடன் தொடர்புடையது, மாலை அறுந்து போனது ஆகிய இரண்டையும் மங்கலச் செய்தியாகத் தான் அண்ணா என்னிடம் தெரிவித்தார். நானும் அதை அப்படியே நம்பினேன்.

என்னை அசடு என்று அண்ணா சொன்னது சரி தான்!

***

அப்போது அறுந்த அந்த மாலை அதன்பின்னர் அறுந்து போகவே இல்லை. மிகச் சீக்கிரத்திலேயே காணாமல் போய் விட்டது.

சாரதா பப்ளிகேஷன்ஸில் அப்போது நாங்கள் எடுத்த முடிவு தான் பிற்காலத்திய பிரச்சினைகள் அனைத்துக்கும் பிள்ளையார் சுழியாக அமைந்தது.

அண்ணாவின் (mis)guidance சரியாகத் தான் இருந்திருக்கிறது.

***

அந்த நாட்களில் வாழ்க்கை என்பது எனது expert caretaker இடம் நான் செய்யும் பிரார்த்தனை ஆகி இருந்தது. எது நடந்தாலும் அண்ணாவை நேரில் சந்தித்து அவரிடம் அனைத்து விஷயங்களையும் பகிர்ந்து கொள்வேன். அவருக்கு அருகே இருந்தாலும் இல்லாவிட்டாலும் நாள் முழுவதும் மனம் அவருடனேயே இருக்கும்.

இந்நிலையில் எனக்குத் திருமணம் நிச்சயிக்கப்பட்டது.

சேமிப்பு என்பது ஸேவிங்ஸ் பேங்க் அக்கௌன்ட் மினிமம் பேலன்ஸ் மட்டுமே. பதிப்பகத்தில் இருந்து மாதம் ரூபாய் ஐந்தாயிரம் வரும். அனேகமாக, அது இரண்டு அல்லது மூன்று தவணைகளில் கிடைக்கும்.

வரவு இவ்வளவு தான் என்றாலும், எனக்கென்றே அமைந்து விட்ட நிறைய பிரத்தியேகமான - எழுத்தில் வடிக்க முடியாத - செலவுகள் உண்டு. எனவே, வருமானத்தில் சுமார் பாதியளவு தான் வீட்டுக்குப் போய்ச் சேரும்.

இதுபோன்ற காரணங்களால், எனது பொருளாதார வசதியை வைத்துக் கொண்டு குடும்பம் நடத்த முடியுமா என்ற அச்சம் எனக்கு இருந்தது.

அப்போது ஒருநாள் அண்ணா ஃபோன் பண்ணினார். அவருக்கு வயிற்றுப் போக்கு ஏற்பட்டிருக்கிறதாம். உடல் மிகவும் சோர்வாக இருக்கிறது. பாத்ரூமுக்கு நடந்து போக சிரமமாக இருக்கிறது. உதவிக்கு ஆள் தேவை. மூன்று நாள் இரவு அண்ணாவுடன் தங்க வேண்டும். என்னை வரச் சொன்னார்.

அண்ணா இருந்த அந்த அறை ஒரு வீட்டின் பின்புற போர்ஷன். அந்த வீட்டின் வழியாக அண்ணாவின் அறைக்குள் செல்லலாம். இது தவிர, அண்ணாவின் அறையின் பக்கவாட்டில் தனியாக வேறொரு வழியும் உண்டு. முன்புற வீட்டில் நடுத்தர வயது தம்பதி இருந்தனர். அன்றைய தினம் அவர்கள் ஊரில் இல்லையாம். எனவே, அருகில் உதவிக்கு யாரும் இல்லை.

சாயங்காலம் அண்ணாவிடம் போய்ச் சேர்ந்தேன். நான் போவதற்கு முன்னர் சக்திவேல் வந்திருந்தாராம். அண்ணாவுக்கு வயிற்றுப் போக்கு என்பது தெரிந்ததும் அவர் அண்ணாவுடனேயே தங்குகிறேன் என்று சொன்னாராம். அண்ணாவோ, வேண்டாம் வேண்டாம், நான் ஸ்ரீதரை வரச் சொல்லி விட்டேன், நீ கிளம்பு என்று அவரை அனுப்பி விட்டாராம்.

அண்ணாவுக்கு சக்திவேலை விட எந்த வகையிலும் யாரும் பெட்டர் அல்ல. சக்திவேல் வேண்டாம் ஸ்ரீதர் தான் வேண்டும் என்பது எதற்காக?

புரியவில்லை.

அவரது மாலை நேர வழக்கப்படி அவரைக் கோவிலுக்கு அழைத்துப் போனேன். பின்னர் அவரது அனுஷ்டானங்கள். அதெல்லாம் சிதம்பர ரகசியம். தாழிடப்பட்ட அறைக்குள் தான் நடக்கும். நான் வெளியே போய் சாப்பிட்டு விட்டு வந்து முன்புற வீட்டில் காத்திருந்தேன்.

இரவு சுமார் எட்டரைக்குக் கதவு திறந்தது. அதன்பின்னர் அண்ணா சற்று நேரம் என்னுடன் பேசிக் கொண்டிருந்தார். பின்னர், "எனக்கு ரொம்ப முடியல. டயர்டா இருக்கு. படுத்துக்கறேன்" என்று சொல்லி என்னை முன்புற வீட்டில் படுக்குமாறு சொல்லி விட்டுப் படுக்கப் போய் விட்டார்.

எனக்குச் சுத்தமாக ஒன்றும் புரியவில்லை. வயிற்றுப் போக்கின் காரணமாக அவதிப்படுபவர்களுக்கு பாத்ரூமே கதி. தனது படுக்கைக்கு ஐந்து அடிகள் தள்ளி இருக்கும் பாத்ரூமுக்குப் போக முடியாத அளவு அசதியாக இருப்பவர் - பாத்ரூமின் ப்ளைவுட் கதவைத் திறக்க முடியாத அளவு உடல் பலகீனமாக இருப்பவர் - பதினைந்து அடி நடந்து வந்து, கனமான மரக் கதவைத் திறந்து, என்னைக் கும்பகர்ணத் தூக்கத்தில் இருந்து அடித்து எழுப்பி.....

நிஜமாகவே ஒன்றும் புரியவில்லை. நான் நிம்மதியாகத் தூங்கி விட்டேன்.

காலையில் எழுந்ததும் காலைக் கடன்களை முடித்துப் பல் தேய்த்தேன். அண்ணாவின் அறைக் கதவு திறந்தது. என்னை உள்ளே அழைத்தார். போனேன்.

இரவில் ஊற வைத்திருந்த பாதாம் பருப்பை உரித்துக் கொடுத்தார். சாப்பிட்டேன். அதைத் தொடர்ந்து சூடான, சுவையான தேநீர் கொடுத்தார். குடித்தேன்.

"உனக்கு நாழியாச்சு. வீட்டுக்குக் கிளம்பு. இன்னிக்கு சாயங்காலமும் வந்துடு" என்றார்.

அடுத்தடுத்து மூன்று நாட்கள் அவருடன் ராத்தங்கல், காலை உபசாரம்.

இதைத்தொடர்ந்து மனதில் திருமணம் குறித்த அச்சம் பெருமளவு குறைந்து விட்டது. I'm under expert care என்று நம்பிக்கை உறுதிப்பட்டது.

"நாங்கள் எல்லோரும் அண்ணாவுக்கு விழுந்து விழுந்து சேவை பண்ணுவோம். ஆனால் அண்ணாவோ ஸ்ரீதருக்கு விழுந்து விழுந்து சேவை பண்ணுவார்" என்று நண்பர் இளங்கோவன் அடிக்கடி கூறுவதுண்டு.

உண்மை தான்.

ஆனால், "எல்லாம் தெரிந்த" அண்ணா, ஸ்ரீதரன் என்கிற ஓர் அசடனைத் தன் பக்கத்தில் வைத்துக் கொண்டு அவனுக்கு விழுந்து விழுந்து உபசாரம் பண்ணியது ஏன் என்பது தான் -

அப்போதும் புரியவில்லை, இப்போதும் புரியவில்லை.

**தலைக்கு மேல் இருப்பது யார்?**

வாழ்க்கையில் எத்தனையோ நிகழ்வுகள்.

சில நிகழ்வுகள் வேடிக்கையாக... சில நிகழ்வுகள் வேதனையாக... சில நிகழ்வுகள் வினோதமாக...

சில நிகழ்வுகளுக்கு அர்த்தம் புரிகிறது. சில இடங்களில் புரிந்த மாதிரி இருக்கிறது வேறு சில சந்தர்ப்பங்களில் புரியாமலேயே போய் விடுகிறது.

சிற்சில விதிவிலக்கான சூழ்நிலைகள் வேடிக்கை, வேதனை, வினோதம், புரிந்தது, புரிந்த மாதிரி இருப்பது, புரியாதது - என்கிற அனைத்தும் சேர்ந்த கலந்தாங்கட்டியாக அமைவதும் உண்டு.

இத்தகைய கலந்தாங்கட்டி அனுபவம் ஒன்று -

கோலிவுட் வட்டாரத்திலும் அரசியலிலும் பிரபலமாக அறியப்பட்டிருந்த ஓர் அனாமதேயத்தைச் சந்திக்க நேர்ந்தது.

அனாமதேயம் என்று நான் சொன்னாலும், அவருக்குப் பெயர் உண்டு. அவர் ரமேஷ் என்று அறியப்பட்டிருந்தார்.

ரமேஷ் பிறவி ஊமை. பெரிய குடும்பம். வறிய குடும்பம். அம்மா இல்லை.

ரமேஷின் அப்பா தன்னால் இயன்ற வகையில் ஏதேதோ வழிகளில் இதர பிள்ளைகளைக் கரையேற்றி விட்டார். ரமேஷை என்ன பண்ணுவது என்று தெரியவில்லை.

இந்நிலையில் ஒரு சமயம் அவர்கள் ஊருக்கு அருகே பெரியவா யாத்திரை போய்க் கொண்டிருந்தார். ரமேஷைக் கூட்டிக் கொண்டு தரிசனத்துக்குச் சென்ற அந்த மனிதர், ரமேஷைப் பெரியவா காலடியில் கிடத்தி, "இவனைக் கரையேற்ற வழி தெரியவில்லை. என் காலத்துக்குப் பின்னர் சாப்பாட்டுக்கே வழியில்லாமல் நிர்க்கதி ஆகிவிடுவானோ என்று பயமாக இருக்கிறது. இவனுக்கு ஏதாவது நல்லது நடக்க ஆசீர்வாதம் பண்ணுங்கள்" என்று பிரார்த்தித்தார்.

"பையனை என்னிடமே விட்டு விடு. நான் பார்த்துக் கொள்கிறேன்" என்று அபயம் தந்தாராம், பெரியவா.

ரமேஷ் பெரியவாளிடமே வந்து விட்டான். அவன் சாப்பிட்டானா என்பதை மட்டும் மடத்துப் பணியாளர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்வாராம், பெரியவா. மற்றபடி, மடத்தில் அவனுக்கும் யாருக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை.

சுமார் ஆறு மாதங்கள் கழிந்தன. ஒருநாள் ரமேஷைத் தன் அருகே அழைத்த பெரியவா, அவனிடம், "உனக்கு வாக்குப் பலிதம் இருக்கிறது. ஜோசியம் சொல்வது மாதிரி யாருக்காவது நல்ல வார்த்தைகள் சொல்லிப் பிழைத்துக் கொள். இரண்டு மூன்று நாட்களுக்கு மேல் எந்த ஊரிலும் தங்காதே. பணத்துக்கு ஆசைப்படாதே. குறைந்த பட்சத் தேவைகளுக்குப் பணம் கிடைத்தால் போதும். திருமணம் செய்து கொள்ளாதே" என்று சொல்லி ஆசீர்வதித்து அனுப்பி விட்டார்.

- இது எவ்வளவு தூரம் உண்மை என்று எனக்குத் தெரியாது. எனினும், இது தான் கோலிவுட் மனிதர்கள் மத்தியில் ரமேஷ் பற்றிச் சொல்லப்படும் கதை.

ரமேஷ் திடீர் திடீரென எங்காவது வருவார். யார் வீட்டிலாவது தங்குவார். நாலைந்து பேருக்கு ஏதாவது ஜோசியம் சொல்லுவார். அள்ளி அள்ளிப் பணம் கொடுத்தாலும், அதை வாங்க மறுத்து விட்டு, ஏதோ சில நூறு ரூபாய்களை மட்டும் எடுத்துக் கொண்டு இடத்தைக் காலி செய்து விடுவார்.

கோடம்பாக்கம் பிரபலங்கள் அனைவருமே ரமேஷ் வருகைக்காகத் தவம் கிடப்பதுண்டு என்று கேள்விப்பட்டிருக்கிறேன். ராஜாஜியின் மனம் கவர்ந்த "வொர்கஹாலிக் பையன்" உட்பட அரசியல் பிரபலங்களும் அப்படியே.

எனக்கு முதல் பையன் பிறந்த சில நாட்களுக்குப் பின்னர் ஒருநாள் சினிமா பிரபலம் ஒருவர் இல்லத்துக்கு ரமேஷ் வந்திருந்தார். எனது நண்பர் ஒருவர் அவரைப் பார்ப்பதற்காகச் சென்று கொண்டிருந்தார். என்னையும் அழைத்தார்.

எனக்கு விருப்பம் இல்லை. நண்பரோ என்னை மிகவும் கட்டாயப்படுத்தி அழைத்தார். பெரியவா சம்பந்தம் உள்ள மனிதரைப் பார்த்தால் நான் சந்தோஷப்படுவேன் என்பது அவர் கருத்து.

எனக்கு ஜோசியம் கேட்கும் ஆர்வம் இல்லை. வெறுமனே பார்ப்பதற்காக மட்டும் தானே போகிறோம், பரவாயில்லை என்பதால் அவருடன் கிளம்பினேன்.

ரமேஷ் ஒரு சராசரி மனிதர், படிப்பறிவு இல்லாதவர் என்பது அவரைப் பார்த்த மாத்திரத்திலேயே புரிந்தது.

என் நெற்றியில் இருந்த ஸ்ரீசூர்ணத்தைப் பார்த்த ரமேஷ், என்னிடம், பூணூல் உண்டா என்று சைகை மூலம் கேட்டார். ஆம் என்றேன். வடகலையா, தென்கலையா என்பது அடுத்த கேள்வி. பதில் சொன்னேன்.

தலைக்கு மேலே உட்கார்ந்திருப்பது யார் என்று கேட்டார்.

எனக்குப் புரியவில்லை.

என்னை அழைத்துச் சென்ற நண்பர், இவர் ரா. கணபதி அண்ணாவுடன் இருப்பவர். அண்ணா தான் பெரியவா பற்றி நிறைய எழுதி இருக்கிறார். தெய்வத்தின் குரலைத் தொகுத்திருக்கிறார் என்று என்னை அறிமுகம் செய்து வைத்தார்.

நாற்காலியில் இருந்து எழுந்த ரமேஷ், கை கூப்பி என்னை வணங்கினார். என் தலைக்கு மேலே யாரோ இருப்பதாகச் சொன்னாரே, அவரை வணங்கினாரா, இல்லை, பெரியவா பெயரைக் கேட்டதால் எழுந்த உணர்வெழுச்சியா என்பது எனக்குத் தெரியாது.

"என்னிடம் என்ன கேட்பதற்காக வந்திருக்கிறீர்கள்?" என்று கேட்டார்.

"எதுவும் கேட்கப் பிரியம் இல்லை. சும்மா வந்தேன்" என்று சொன்னேன்.

ஏதாவது கேட்குமாறு வற்புறுத்தினார். நீண்ட வற்புறுத்தலுக்குப் பின்னர், நான், "என் மகன் எதிர்காலம் பற்றி ஏதாவது சொல்லுங்கள்" என்று கேட்டேன்.

"பையன் ரொம்ப நல்லா இருப்பான். ஃபாரின் போயிடுவான்" என்று சொன்ன ரமேஷ், "உங்கள் நிலை தான் கஷ்டமாக இருக்கிறது. உங்களைப் பற்றிக் கேளுங்கள்" என்றார். "எனக்கு எதுவும் வேண்டாம். நான் அண்ணாவுடன் இருக்கிறேன். அவர் பார்த்துக் கொள்வார். அது போதும்" என்றேன்.

"ஆனாலும் நானே சொல்கிறேன். கொஞ்ச நாளில் ஒரு நண்பர் அல்லது சொந்தக்காரர் உங்களுடன் சேர்ந்து பார்ட்னர்ஷிப் மாதிரி ஒரு வியாபாரம் பண்ணலாம் என்று வருவார். அவருடன் சேர வேண்டாம் என்று எல்லாரும் எச்சரிப்பார்கள். ஆனால் தைரியமாக சேர்ந்து பண்ணுங்கள்" என்றார்.

ஏதோ சொன்னார், கேட்டுக் கொண்டேன். பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை. நான் பணம் கொடுத்த போது ரமேஷ் அதை வாங்க மறுத்து விட்டார். அதன் காரணமாகவும், அவருக்குப் பெரியவா சம்பந்தம் உண்டு என்பதாலும் அவர் மீது மிகுந்த மரியாதை ஏற்பட்டது.

ரமேஷ் சொன்னது போல விரைவிலேயே நடந்தது. எனக்குத் தெரிந்த ஒருவர் என்னை அணுகினார். நெருங்கிய நண்பர் அல்ல, என்றாலும், நன்கு அறிமுகமானவரே. உறவினர் அல்ல, அதேநேரத்தில், ஒரே கோத்திரத்தைச் சேர்ந்தவர். அவர் என்னுடன் வியாபார ரீதியான தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ள விரும்பினார்.

(அந்த நண்பருடன் ஏற்பட்ட வியாபாரத் தொடர்பால் சென்னையில் இரண்டு சிறு வியாபாரிகள் தங்கள் வியாபாரத்தையே மொத்தமாக ஏறக்கட்ட வேண்டி வந்தது என்பது எனக்கு அப்போது தெரிந்திருக்கவில்லை.)

இந்த வியாபாரத் தொடர்பால் எனக்கென்று பிரத்தியேக அலுவலகமும், அதைத்தொடர்ந்து ஏற்படுகிற பராமரிப்புச் செலவுகளும் வந்து சேர்ந்தன. சாரதா பப்ளிகேஷன்ஸில் பிரச்சினை மிகப் பெரிதாவதற்கு இதுவே முக்கியக் காரணம்.

ரமேஷ் சொன்னதால் நான் அவருடன் வியாபார சம்பந்தம் வைத்துக் கொண்டேன் என்று சொன்னால் அது பொய். எனக்கு அவருடன் வியாபாரம் செய்வதால் சில உடனடி நன்மைகள் இருந்தன. அதனால் நான் மனம் விரும்பியே அவருடன் வியாபாரம் மேற்கொண்டேன்.

ரமேஷ் சொன்னதால் ஏற்பட்ட மனோதைரியமும் இதற்கு ஒரு துணைக் காரணம்.

குதிரை குப்புறத் தள்ளி, குழியும் பறித்ததாம் என்று சொல்வார்கள். அத்தகைய நிலையும் வந்து சேர்ந்தது.

Expert caretaker-ன் அனுக்கிரகமும் கூடவே இருந்தது. என் தலை தப்பியது.

கொடுக்கல் வாங்கலில் ஏடாகூடமாக மாட்டிக் கொண்டேன் என்பது தான் ஒட்டுமொத்தப் பிரச்சினை. இதில் இருந்து வெளிவர வேண்டுமானால், சம்பந்தப்பட்ட நபர் எனக்கு உரிய பணத்தைத் தர வேண்டும். அவரோ பெரிய கடனாளியாக இருக்கிறார்.

எனது நண்பர் ஒருவரது முயற்சியின் பேரில் சம்பந்தப்பட்ட நபரின் வீட்டை என் பெயரில் எழுதிக் கொடுப்பதாக முடிவானது. இதன் மூலம் எனக்குப் பாதிப் பணமாவது கிடைக்க வழியுண்டு.

பத்திரப் பதிவுக்குச் சுமார் இருபத்தைந்தாயிரம் ரூபாய் உடனடித் தேவை.

இந்தத் தகவல் எனக்குக் கிடைத்த போது காலை சுமார் ஏழு மணி இருக்கும். அப்போது நான் அண்ணாவுடன் இருந்தேன். அன்று மதியத்துக்குள் அந்தப் பத்திரப் பதிவுக்கு நான் தயாராக வேண்டிய நிர்ப்பந்தம்.

அண்ணாவிடம் மொத்த விவகாரத்தையும் பற்றி ஏற்கெனவே சொல்லி இருக்கிறேன். அதுவரை அண்ணா எதையும் கண்டு கொள்ளவில்லை. ஆனால், அன்றைய தினம் மோகனராமனுக்கு ஃபோன் பண்ணி, வங்கியில் இருந்து பத்தாயிரம் ரூபாய் எடுத்துக் கொண்டு வருமாறு கூறினார். வந்த பணத்தை என்னிடம் அப்படியே கொடுத்தார்.

பணம் கிடைத்த மகிழ்ச்சி எனக்கு ஏற்படவில்லை. காரணம், மீதிப் பணத்துக்கு என்னிடம் எந்த வழியும் இல்லை. மொத்தப் பணமும் இல்லாவிட்டால் பத்திரம் போட முடியாது. அதுவரை மேற்கொண்ட முயற்சிகள் அனைத்தும் வீணாகி விடும். எனக்கு வர வேண்டிய பாக்கித் தொகைக்கு வேறு உத்தரவாதம் எதுவும் இல்லை. அண்ணா தந்தது போக என்னிடம் ஆயிரம் ரூபாய் மட்டுமே இருந்தது.

பணத்தை எடுத்துக் கொண்டு அலுவலகம் வந்தேன். அங்கே எனக்காகப் பதின்மூன்றாயிரம் ரூபாய் மதிப்புள்ள பத்திரத் தாள்களுடன் ஒரு வக்கீல் காத்துக் கொண்டிருந்தார்.

அன்று அந்த மனிதர் எனக்கு உதவியது கற்பனைக்கே எட்டாத அதிசயம். இன்று வரை என்னால் அதை நம்ப முடியவில்லை. ஏனென்றால், அவருக்கும் எனக்கும் இருந்த "உறவு" அத்தகையது.

மிதமிஞ்சிய டென்ஷன் காரணமாக அன்று மதியம் நாங்கள் யாரும் சாப்பிடவே இல்லை. மொத்த வேலைகளும் முடிந்து வீடு திரும்பும் வழியில் அனைவரும் ஓர் ஓட்டலில் சாப்பிட்டோம். பில் பணம் கொடுத்த பின்னர் கையில் இருந்த மீதிப் பணத்தை எண்ணிப் பார்த்தேன். சுமார் இருபது ரூபாய் இருந்தது.

அடடா! சும்மா சொல்லக் கூடாது, (mis)guidance-ன் கணக்கு மிகச் சரியாகவே இருந்தது.

**ப்ராப்தமும் ப்ராரப்தமும்**

அண்ணாவுக்குப் பணிவிடைகள் செய்வதற்கான பிள்ளையார் சுழியைப் போட்டவர் யோகியாரே. எனினும், அதில் அவ்வப்போது நிறைய நடைமுறைச் சிக்கல்கள் ஏற்பட்டன. இதனால் ஒவ்வொரு திங்கட்கிழமையும் இரண்டு அல்லது மூன்று பேர் அண்ணாவிடம் சென்று அறையைக் கழுவிச் சுத்தம் செய்வது முதலான பணிகளை மேற்கொள்ள ஆரம்பித்தோம்.

அதன் பின்னர் அண்ணா உடல்நலக் குறைபாட்டால் தி. நகரில் உள்ள அவரது அக்கா வீட்டுக்கு வந்து விட்டார். அண்ணாவின் கடைசி பத்து வருடங்கள் இங்கேயே கழிந்தன. இந்த நாட்களில் மௌன விரதம், அனுஷ்டானம், நிஷ்டை முதலியவற்றுக்கு அண்ணா குட் பை சொல்லி விட்டார்.

இந்தக் காலகட்டத்தில் முழு நேரமாக அண்ணாவுடன் யாராவது இருக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. எனவே, நானும் நண்பர் இளங்கோவனும் அவருடன் மாறி மாறித் தங்க ஆரம்பித்தோம். நீண்ட காலம் இதுபோல அண்ணாவுடன் இருக்க வேண்டி வந்தது. அவரது சிறுசிறு தேவைகளையும் கவனித்துக் கொள்ள வேண்டி வந்தது.

இது சாரதா பப்ளிகேஷன்ஸ் வியாபாரத்தை மிகவும் பாதித்தது. வியாபாரத்தில் அனைத்துப் பிரச்சினைகளும் பூதாகாரமாக வெடித்தது இந்தக் காலகட்டத்தில் தான்.

இந்த நாட்களில் எங்கள் இருவரின் உடல்நிலையும் பாதிப்படைந்தது. குடும்பங்களிலும் சில சமயம் இறுக்கமான சூழல் உருவானது.

எங்கள் இருவரில் யாராவது ஒருவர் இரவில் அண்ணாவுக்கு அருகே படுத்துறங்குவோம். அண்ணா கட்டிலில் படுத்திருப்பார். நாங்கள் தரையில் பாய் விரித்துப் படுத்திருப்போம். அண்ணா இரவில் குறைந்தது மூன்று தடவை பாத்ரூம் போவார். பாத்ரூம் அழைத்துப் போவது, திரும்பிய பின்னர் கை கால்களைத் துடைப்பது, வெந்நீர் தருவது என்று ஒவ்வொரு முறையும் சுமார் ஐந்து நிமிடமாவது தூக்கம் போய்விடும்.

இளங்கோவனுக்குக் கண் விழிப்பதில் பிரச்சினை இல்லை. சத்தம் கேட்டால் உடனேயே முழிப்பு வந்து விடும். இருந்தாலும், அவருக்குமே இந்த ராத்தங்கல் ஒரு வினோதமான அனுபவம். இளங்கோவனின் கால் அண்ணாவின் கட்டில் மீது லேசாகப் பட்டாலும் போதும், உடனேயே தூங்கிக் கொண்டிருக்கும் (?) அண்ணா, "கட்டில் ஆடறது" என்று சொல்வாராம். அதைவிடப் பெரிய ஜோக், அண்ணா எழுந்திருந்து படுக்கையில் உட்கார்ந்ததுமே இளங்கோவனுக்கு முழிப்பு வந்து விடும். ஏதோ ஓரிரு தடவை மட்டுமல்ல, ஒவ்வொரு தடவையும் அப்படியே.

எனக்கும் அதே அனுபவம் உண்டு. தூக்க விஷயத்தில் நான் இளங்கோவனுக்கு நேர்மாறானவன். நான் கும்பகர்ணன் வகையறா. என்னை எழுப்புவதற்கு அண்ணா சிரமப்பட வேண்டாம் என்பதற்காக, நான் அவருடன் படுக்கும் நாட்களில், அவர் படுக்கையில் ஒரு சிறிய பிரம்பை வைத்திருப்பேன்.

அந்தப் பிரம்புக்கு நான் வைத்திருந்த செல்லப் பெயர் waking stick என்பது. ஸ்வாமியின் ஈடிணையற்ற பக்தர்களில் ஒருவர் கஸ்தூரி. வயதான காலத்தில் அவர் நடப்பதற்கு மிகவும் சிரமப்பட்டார். ஒவ்வொரு தடவையும் அன்பர்கள் யாராவது அவரைக் கைத்தாங்கலாக தரிசனத்துக்கு அழைத்துச் செல்வார்கள். அதுபோல உதவி செய்ய வரும் அன்பர்களை அவர் Come, my walking stick என்று கேலியாகக் கூப்பிடுவாராம். அதே பாணியில் இந்தக் குச்சிக்கு நான் வைத்த பெயர் waking stick.

ஆனால், அண்ணா அதைப் பயன்படுத்த வேண்டி வந்ததே இல்லை. அவர் எழுந்திருக்கும் போதே எனக்கும் முழிப்பு வந்து விடும். இது எனக்கு நம்ப முடியாத அதிசயமாக இருந்தது. Waking stick-க்கு வேலையே இல்லை என்ற வருத்தம் வந்ததால், ஒரே ஒரு நாள் மட்டும் தூக்கத்தில் இருந்து எழுந்திருக்காத மாதிரி படுக்கையிலேயே இருந்தேன். அண்ணா waking stick-ஐ எடுத்து என்னை லேசாகத் தட்டினார். சந்தோஷமாக எழுந்திருந்தேன்.

***

அண்ணாவுடன் நான் நிறைய நேரம் செலவிட முடிந்தது சந்தோஷம் தான் என்றாலும், சில நேரம் அண்ணாவின் பிடுங்கல் தாங்க முடியவில்லை. திடீரென ஒருநாள், நான் நமஸ்காரம் பண்ணும் போது, "உனக்குப் பூணூல் போட்டு எத்தனை வருஷம் ஆயாச்சு? நீ ஸந்தியா வந்தனமே பண்றதில்லை. உனக்கு அபிவாதயே கூட சொல்லத் தெரியல. இனிமே என்னை நமஸ்காரம் பண்ணும் போது அபிவாதயே சொல்லு. தினசரி மூணு வேளையும் ஸந்தியா வந்தனம் பண்ணு" என்றார்.

"அண்ணா, நான் பிராமணன் இல்லை. ரொம்ப வருஷம் முன்னால ஆர்எஸ்ஸ்ல சேர்ந்து ஹிந்துவா கன்வெர்ட் ஆயிட்டேன். என்னை ரீகன்வெர்ட் பண்ண ட்ரை பண்றீங்களா?" என்று சொல்லிச் சமாளித்தேன்.

அத்துடன் விட்டு விடுவார் என் நினைத்தேன். நாளாக ஆக அவரது தொல்லை தாங்க முடியவில்லை.

"நீங்க சொல்லிக் கொடுத்தா அபிவாதயே கத்துக்கறேன், ஸந்தியா வந்தனமும் கத்துக்கறேன்" என்று தீர்மானமாகச் சொல்லி விட்டேன்.

அண்ணாவும் ஏதோ குருட்டு தைரியத்தில் ஒத்துக் கொண்டார். எனது கோத்திரத்துக்கு உரிய பிரவரத்தைப் புத்தகம் மூலம் படித்துத் தெரிந்து கொண்டு அபிவாதயே சொல்லிக் கொடுத்தார்.

அந்த அனுபவமே அவருக்குப் போதுமானதாக இருந்தது. ஸந்தியா வந்தனம் பற்றி அதன் பிறகு பேச்செடுப்பதே இல்லை.

யார் கிட்ட?

***

அண்ணாவுக்கு முழு நேரமாக நாங்கள் இருவரும் பணிவிடை புரிந்த காலத்தில், எங்கள் பிரச்சினைகளின் பாரம் தாங்க முடியாமல் சிறிது சிறிதாக உடைந்து போய்க் கொண்டிருந்தோம் என்பது யதார்த்த நிலை.

அண்ணாவுடன் இருந்த காலத்தில் நிறைய நாட்கள் நான் சுய பிரக்ஞையே இல்லாதவனாக இயந்திரம் போல இருந்திருக்கிறேன். அதுமட்டுமல்ல, அந்த நாட்களில் என்னைச் சுற்றி ஏதோ இருள் சூழ்ந்திருந்தது போலவே உணர்ந்தேன். அந்தக் காலத்தில் எனக்கு ஏற்பட்ட பொருளாதாரச் சிக்கல், மிதமிஞ்சிய மன அழுத்தம் ஆகியவற்றின் காரணமாக விரைவிலேயே எனது செவித்திறன் கடுமையாகப் பாதிப்படைந்தது.

மேலும், அண்ணா தங்கி இருந்த வீட்டு டைல்ஸ் எங்களுக்கு ஒத்துக் கொள்ளவில்லை. வீட்டுக்குள் காலில் செருப்பு அணியும் விருப்பமும் இல்லை.

மேலும், அண்ணாவுக்குக் கால் பிடித்து விடுவதை நாங்கள் மிகுந்த பக்தியுடன் செய்தோம் என்றாலும், அது எங்களுக்கு மிகப் பெரிய வேலைப் பளுவாக இருந்தது. அதனால் ஏற்பட்ட உடல் வலி தாங்க முடியவில்லை.

இருந்தாலும், ஏதோ எங்களால் முடிந்த அளவு அவருக்குப் பணிவிடை செய்ய முயற்சித்தோம்.

ஒரு நாள் காலை அண்ணாவின் படுக்கையைக் கையால் தூசி தட்டினேன். அதைத்தொடர்ந்து, அண்ணா என்னிடம், "இளங்கோவன் படுக்கையை வெளியே எடுத்துண்டு போய் நன்னா உதறுவார். நீயானா வெறுமனே கையால தூசி தட்றே. அவர் எல்லா வேலையும் பார்த்துப் பார்த்து சிரத்தையோட பண்றார். நீயானா ஏதோ கடமைக்குப் பண்றா மாதிரி பண்றே. ஏன் இப்படி இருக்கே?" என்றார்.

எனக்கு நிஜமாகவே ஆத்திரம் பொத்துக் கொண்டு வந்தது.

"அண்ணா, நான் என்ன பண்றேனோ, அது தான் உங்களுக்கு விதிக்கப்பட்டது. புரிஞ்சுதா?" என்றேன்.

அண்ணா என்னையே புன்சிரிப்புடன் பார்த்தார். "நீ சொல்றதும் சரியாத் தான் இருக்கு" என்றார்.

***

பிற்காலத்தில் ஸ்வாமி ஓங்காராநந்தர் ஒரு ஜோக் சொன்னார். “ஸ்வாமீ, நீங்க எனக்கு குருவா அமைஞ்சது என்னோட ப்ராப்தம்”னு சிஷ்யன் சொன்னானாம். “நீ சிஷ்யனா அமைஞ்சது என்னோட ப்ராரப்தம்” என்று குரு நினைத்தாராம்.

ஜோக் கேட்டதும் எனக்கு இந்தச் சம்பவம் தான் நினைவு வந்தது.

## 9. பெண்மை என்பதைக் காப்பாற்ற வேண்டும்

அண்ணாவுக்கும் எனக்கும் இடையே ஒரு நீண்ட கேள்வி-பதில் அத்தியாயம் உண்டு. என் மனதில் அவ்வப்போது எழும் கேள்வி அல்லது என்னைச் சுற்றி அவ்வப்போது நடைபெறும் ஏதாவது சம்பவம் குறித்து ஓரிரு நாட்களிலேயே அண்ணாவிடமிருந்து விளக்கம் கிடைக்கும்.

இத்தகைய பல சம்பவங்கள் வேடிக்கையானவை. சில சம்பவங்கள் உச்சந்தலையில் அடிப்பது போல பலமாக இருந்ததும் உண்டு.

இதுபோல நிறைய சம்பவங்கள் உண்டு. அவற்றில் சிலவற்றை மட்டும் இங்கே தருகிறேன்.

***

ஒருதடவை சாரதா அலுவலகத்தில் ஒரு வேலை ஆரம்பிப்பதற்காக நல்ல நாள், நேரம் பார்க்க வேண்டி வந்தது. இளங்கோவனுக்கு ஜோசியம் முதலான விஷயங்களில் ஓரளவு பரிசயம் உண்டு. அவர் பஞ்சாங்கம் பார்த்து நல்ல நாள் முடிவு செய்தார். அவர் சொன்னபடி வேலையை ஆரம்பித்தோம்.

அது ஒரு செவ்வாய்க் கிழமை.

வேலை ஆரம்பித்த பின்னர் நான் அவரைக் கேலி செய்தேன். "செவ்வாய் வெறுவாய் என்பார்கள். செவ்வாய்க் கிழமையை மங்கள வாரம் என்பதே அசட்டுத் தனம். எனக்குத் தெரிந்த ஒருவர் அதைக் கேலி பண்ணுவார்" என்றெல்லாம் ஏதேதோ சொல்லி இளங்கோவனை வெறுப்பேற்றினேன்.

நான் ஒன்று சொல்ல, அவர் பதில் சொல்ல என்று, அன்றைய தினம் காலை முழுவதும் எங்கள் அலுவலகம் முழுவதும் ஒரே சிரிப்பலை.

மாலையில் நானும் சாரதாவைச் சேர்ந்த இன்னொருவரும் அண்ணாவைப் பார்க்கப் போயிருந்தோம். அண்ணா அவரது புத்தக வரிசையில் இருந்து ஒரு புத்தகத்தைத் தேடி எடுக்குமாறு என்னிடம் கூறினார். நான் தேடிக் கொண்டிருந்த போது என்னிடம் ஏதோ கேட்டார். எனக்குச் சரியாகக் காதில் விழவில்லை. "என்ன அண்ணா?" என்று கேட்டவாறு அவரை நோக்கித் திரும்பினேன்.

"சீதைக்கு அனுமார் மோதிரம் கொடுத்த கதை தெரியுமா உனக்கு?"

"தெரியும், அண்ணா."

"பரவாயில்லையே, குழந்தைக்கு ராமாயணம்லாம் தெரிஞ்சிருக்கு. சீதைக்கு அனுமார் மோதிரம் கொடுத்தது செவ்வாய்க் கிழமையன்னிக்கு நடந்தது-ன்னு சொல்லுவா. அதனால தான் செவ்வாய்க் கிழமையை மங்கள வாரம்னு சொல்லுவா."

எனக்குச் சிரிப்பு வந்ததும் உண்மை, என்னுடன் வந்திருந்த நண்பருக்குக் கை கால்கள் நடுங்க ஆரம்பித்ததும் உண்மை.

***

பெரியவாளை சிவபெருமானின் அவதாரம் என்றே போற்றுவதுண்டு. பெரியவா என்ற சிவ அவதாரத்தின் பணி நிறைவாக வெளிப்படுவது தெய்வத்தின் குரலில் தான்.

திடீரென ஒரு தடவை எனக்கு, வியாசருக்காகத் தந்தத்தை ஒடித்து மகாபாரதம் எழுதிய கை தான் பெரியவாளுக்காக தெய்வத்தின் குரல் எழுத வந்துள்ளதோ என்று தோன்றியது. அண்ணாவின் பிறப்பு விநாயகர் சதுர்த்தி என்பதும், அதனாலேயே அவருக்கு கணபதி என்ற பெயர் சூட்டப்பட்டது என்பதும் எனது எண்ணத்துக்கு வலு சேர்ப்பதாக இருந்தது.

இந்த எண்ணம் தோன்றிய ஒருசில நாட்களுக்குப் பின் நானும் இளங்கோவனும் அண்ணாவைப் பார்க்கப் போயிருந்தோம். வழக்கம் போல ஏதேதோ விஷயங்கள் பேசிக் கொண்டிருந்தோம். திடீரென்று அண்ணா,

“வேங்கடேஸ்வரன்-னா வேங்கடத்துக்கே ஈஸ்வரன்-னு அர்த்தம்” என்று ஆரம்பித்து இதேபோன்ற ஈஸ்வரன் என்று வரும் ஒருசில நாமாக்களைக் குறிப்பிட்டு விளக்கினார். பின்னர், “இந்த விநாயகருக்கு மட்டும் வினோதமான பெயர் பார்த்தியோ... விக்னேஸ்வரன்-னு. விக்னம் எல்லாத்துக்கும் ஈஸ்வரன்-னு அர்த்தம்” என்றார்.

இளங்கோவன் அண்ணாவை இடைமறித்து ஏதோ விளக்கம் சொல்ல ஆரம்பித்தார். அண்ணா அவரைக் கவனிக்காமல் சிரித்தவாறே என்னைப் பார்த்துக் கையை நீட்டினார். அவரது வலது கையின் நான்கு விரல்களும் என்னை நோக்கி இருந்தன. கட்டை விரலை மடக்கி உள்ளங்கையில் வைத்திருந்தார். இவ்வாறு என்னை நோக்கி விரல்களை நீட்டியவாறே, “உனக்கு நான் தான் விக்னேஸ்வரன்” என்றார்.

எனக்கு என்ன புரிய வேண்டுமோ, அது புரிந்தது.

***

இளங்கோவன் ஸ்வாமி ஓங்காராநந்தருக்கு மிகவும் நெருக்கமானவர். அவர் அண்ணாவுக்குப் பணிவிடைகள் பண்ணுவது குறித்து ஸ்வாமிஜிக்கு ரொம்ப சந்தோஷம். ஸ்வாமிஜிக்குப் பெரியவா மீது அபார பக்தி. தெய்வத்தின் குரலைத் தொகுத்தவர் என்பதால் அண்ணாவைச் சந்திக்க வேண்டும் என்றும் அவர் விரும்பினார்.

ஸ்வாமி ஓங்காராநந்தர் ராமகிருஷ்ண தபோவனத்தில் சன்னியாசம் பெற்றவர். அண்ணாவோ காஞ்சிப் பெரியவாளுக்கு நெருக்கமானவர். ஸ்வாமிஜி அவரைச் சந்திக்க வந்தால் அண்ணா அவருக்கு நமஸ்காரம் பண்ணுவாரா என்ற கேள்வி என் மனதில் எழுந்தது.

இதற்குச் சில நாட்களுக்குப் பின்னர் விநாயக சதுர்த்தி வந்தது.

விநாயக சதுர்த்தியன்று சாரதா ப்ப்ளிகேஷன்ஸ் அலுவலகத்தில் விநாயக பூஜை பண்ணுமாறு அண்ணா எங்களிடம் கூறினார். பூஜைக்கு என்னென்ன பொருட்கள் வாங்க வேண்டும் என்றும் பெரிய பட்டியல் போட்டுக் கொடுத்தார். மதியம் மூன்று மணிக்கு ஒரு “பெரியவர்” வருவார், அவரே பூஜை பண்ணுவார் என்றும் கூறினார்.

ஸ்ரீசக்ரா, சாரதா நண்பர்கள் அனைவரும் அண்ணா சொன்னது போலவே எல்லாம் ரெடி பண்ணி விட்டு “பெரியவர்” வருகைக்காகக் காத்திருந்தோம். மூன்று மணி கடந்து விட்டது. “பெரியவர்” வரவில்லை.

அங்கிருந்த நண்பர்களில் பெருமாள் என்பவருக்கு ஏதோ உள்ளுணர்வு. திடீரென வெளியே கிளம்பினார். நடைபாதையைக் கடந்து தெருவுக்கு வந்து பார்த்தார். தெரு முனையில் ஒரு கார் நின்று கொண்டிருந்தது. கார் டிரைவர் கீழிறங்கி யாரிடமோ ஏதோ விசாரித்துக் கொண்டிருந்தார். பெருமாள் அவருக்கு அருகே சென்று பார்த்தால்... காருக்குள் அண்ணா அமர்ந்திருந்தார்.

அண்ணா தான் சாரதா அலுவலகத்தில் பூஜை பண்ணப் போகிறார் என்பது எங்கள் அனைவருக்கும் இன்ப அதிர்ச்சியாக இருந்தது.

அண்ணா அலுவலகத்துக்குள் நுழைந்ததுமே அனைவரும் படபடவென்று விழுந்து நமஸ்கரித்தோம். என்னைப் பார்ப்பதற்காக வந்திருந்த ஒரு நண்பரும் அப்போது அலுவலகத்தில் இருந்தார். அவருக்கு ஒன்றுமே புரியவில்லை. வந்திருப்பது யார் என்பது தெரியாமலேயே அவரும் விழுந்து வணங்கினார்.

“பெரியவர்” அண்ணா, சாரதாவில் முறையாக விநாயக பூஜையை நிறைவு செய்தார்.

சிவோ பூத்வா சிவம் யஜேத் என்று சொல்வார்கள். சிவனாகவே மாறி சிவனைப் பூஜிக்க வேண்டும் என்பது இதன் பொருள். “உனக்கு நான் தான் விக்னேஸ்வரன்” என்று சொன்னவரே எங்கள் அலுவலகத்தில் விக்னேஸ்வர பூஜை பண்ணி வைத்தார்.

பூஜை முடிந்ததும் அறையில் இருந்து வெளியே வந்த அண்ணா, ஹாலில் இளங்கோவன் மேசையின் மீது வைக்கப்பட்டிருந்த ஸ்வாமி ஓங்காரநந்தர் படத்தைப் பார்த்து, "இது தான்... இளங்கோ சொல்லுவாரே... அந்த ஸ்வாமிஜியா?" என்று கேட்டார். ஆமாம் என்று சொன்னேன்.

தன்னை நோக்கியவாறு அந்தப் புகைப்படத்தை நன்றாகத் திருப்பி வைத்துக் கொண்ட அண்ணா, சாஷ்டாங்கமாகத் தரையில் வீழ்ந்து வணங்கினார்.

வழக்கம் போலவே, எனக்கு என்ன புரிய வேண்டுமோ, அது புரிந்தது.

அண்ணா காரில் ஏறி உட்கார்நததும், அலுவலகத்துக்குப் புதிதாக வந்திருந்த நண்பர், அண்ணாவுக்கு அருகே சென்று அவரது பாதங்களைத் தொட்டுக் கண்களில் ஒத்திக் கொண்டார்.

அவருக்கு அண்ணா யார் என்றே தெரியாது என்பதால் எனக்கு அந்தக் காட்சி வினோதமாக இருந்தது.

கார் கிளம்பிப் போனதும் அவர், என்னிடம், "ஸ்ரீதர், இவரைப் பார்த்தால் காஞ்சிப் பெரியவரையே நேரில் பார்ப்பது போல இருக்கு" என்று கூறினார்.

இதுபோல டஜன்கணக்கான நிகழ்வுகள் உண்டு.

இவற்றில் அண்ணாவிடம் நான் எப்படி வந்து சேர்ந்தேன் என்பதை விளக்கும் ஒரு நிகழ்வு ரொம்பவே குறிப்பிடத் தக்கது. அதற்கும் "பெண்மை என்பதைக் காப்பாற்ற வேண்டும்" புத்தகத்துக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு.

ஒருமுறை எனது கடந்த காலம் பற்றி நிதானமாக நினைத்துப் பார்த்தேன்.

எனது படிப்பு, கிடைத்த வேலைகள், ஆர்எஸ்எஸ் முழு நேரப் பணி.... இறுதியாக, அண்ணாவிடம் வந்து சேர்ந்தது... இவை எல்லாமே ஒன்றுடன் ஒன்று சம்பந்தமே இல்லாத விஷயங்கள்.

குறிப்பாக, அண்ணாவிடம் நான் வந்ததே அதிசயம் தான். அந்தக் கால கட்டத்தில் எனக்குத் தேவையாக இருந்தது ப்ரின்டிங் ஆர்டர்கள் மட்டுமே. ஆரம்ப காலத்தில் திவ்ய வித்யாவைச் சேர்ந்தவர்கள் அண்ணாவிடம் என்னை அறிமுகம் செய்து வைத்தார்கள். அதற்குப் பின்னர் எனது வேலை முழுக்க முழுக்க திவ்ய வித்யா ட்ரஸ்ட் பொறுப்பாளர்களுடன் தொடர்புடையதே.

ஆனால், நானோ அண்ணாவே கதி என்று ஆகி இருந்தேன்.

இது எப்படி சாத்தியமாயிற்று என்று யோசித்துப் பார்த்தேன்.

இதற்குக் காரணம் நான் அல்ல. எனது பொருளாதாரச் சூழல், அதற்கு உபகாரமாக இருக்கும் திவ்ய வித்யா ட்ரஸ்ட் ஆகியவையும் மேம்போக்கான காரணங்களே. உண்மையில் இது அண்ணாவின் சங்கல்பம் என்று என் மனம் நினைத்தது.

இத்தகைய எண்ணம் தோன்றிய சில நாட்களுக்குப் பின்னர் அண்ணாவைப் பார்க்கப் போயிருந்தேன். அப்போது அண்ணா, தன்னிடம் பெரியவா தெரிவித்த ஒரு விஷயத்தைப் பற்றிக் குறிப்பிட்டார்.

அது ஸ்திரீ தர்மம் பற்றிப் பெரியவா பேசி வந்த விஷயங்கள் பற்றியது. "நான் கன்னா பின்னா-ன்னு என்னென்னவோ பேசிண்டிருக்கேன்-னு எனக்கும் கொடும்பாவி கொளுத்துவாளோ, என்னவோ?" என்று சொன்னாராம், பெரியவா. இதற்குச் சில வருடங்களுக்குப் பின்னர், சில "முற்போக்குகள்" இணைந்து புரி சங்கராசாரியாருக்குக் கொடும்பாவி கொளுத்தினார்கள்.

இந்த சம்பவத்தைப் பற்றி அண்ணா ஏற்கெனவே இரண்டு தடவை என்னிடம் தெரிவித்திருக்கிறார். ஆனால், இந்த முறை, அதன் கூடுதல் விவரங்களைத் தெரிவித்தார். அதைச் சொல்லும்போது இடையிடையே, "பெரியவா வாயால இப்படிச் சொல்லவே மாட்டார்ப்பா, அவரை அறியாமலேயே அவர் வாயிலேர்ந்து வந்துடுத்துப்பா" என்று நிறையத் தடவை சொன்னார்.

அவர் குறிப்பிட்ட விஷயம் இது தான்.

“நான் கன்னா பின்னா-ன்னு பேசிண்டிருக்கேன்-னு எனக்கும் கொடும்பாவி கொளுத்துவாளோ, என்னவோ? ... அது போகட்டும், நான் சொல்றதையெல்லாம் நீயும் எழுதிண்டிருக்கியே, உன்கிட்ட women's liberation ஆட்கள் யாராவது சண்டைக்கு வந்தா என்ன பண்ணுவே? நீ பயந்தாங்கொள்ளியாச்சே?” என்று சொன்ன பெரியவா, “உன் கிட்ட யாராவது வந்து சண்டை போட்டா, எனக்கென்ன தெரியும்-னு சொல்லிடு, என்ன? நானா ஒண்ணும் எழுதல, அந்தக் கிழம் (பெரியவா) சொல்றதைத் தானே எழுதறேன்-னு சொல்லிடு” என்றாராம்.

அடுத்தது தான் க்ளைமாக்ஸ்.

“ஊர் உலகத்தில எத்தனையோ கிழம் இருக்கறச்சே நீ ஏன் அந்தக் கிழவர் கிட்ட மட்டும் போறே-ன்னு கேட்டா என்ன சொல்லுவே?” அண்ணாவின் பதிலுக்குக் காத்திராத பெரியவா தொடர்ந்தாராம்: “நான் எங்கே அவர் கிட்ட போனேன்? அவர் தானே என்னைப் பிடிச்சு இழுத்துத் தன் காலடியில வச்சிண்டிருக்கார்-னு சொல்லிடு” என்றாராம்.

இதைச் சொல்லி முடிப்பதற்குள், அண்ணா, “பெரியவா வாயால இப்படிச் சொல்லவே மாட்டார்ப்பா, அவரை அறியாமலேயே அவர் வாயிலேர்ந்து வந்துடுத்துப்பா” என்று ஏழெட்டுத் தடவையாவது சொல்லி இருப்பார்.

“நீயா என் கிட்ட வர்லடா, நான் தான் உன்னைப் பிடிச்சு இழுத்து என் காலடியில வச்சிண்டிருக்கேன்-னு அவர் வாயாலயே சொல்லிட்டார்ப்பா, நம்பவே முடியலப்பா, பெரியவா இப்படி தன்னை வெளிப்படுத்திக்கவே மாட்டார்ப்பா...”

அண்ணா இவ்வாறு சொன்னது என்னை மிகவும் உணர்ச்சி வசப்பட வைத்தது.

அண்ணாவுக்குப் பெரியவா சொன்ன வார்த்தைகள் தான் எனக்கு அண்ணா தரும் செய்தி என்பது எனக்கு ஸ்பஷ்டமாகப் புரிந்தது.

“உன்னை அண்ணா என் பக்கத்திலயே வச்சிண்டிருக்கேன். ஏன் தெரியுமா? நீ அசடுங்கறதால தான்” என்று அண்ணா என்னிடம் சொன்னதைப் பற்றி ஏற்கெனவே எழுதி இருந்தேன். அப்போது கூட நான் இவ்வளவு தூரம் உணர்ச்சி வசப்படவில்லை.

ஆம், நானாக அண்ணாவிடம் போகவில்லை. அவராம் அவரே தான் என்னைப் பிடித்து இழுத்துத் தன் காலடியில் வைத்துக் கொண்டிருந்தார்.

இப்பொழுது நினைக்கும் போதும் பரவசமாக இருக்கிறது.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள சம்பவம் ஸ்திரீ தர்மம் பற்றிப் பெரியவா கூறிய கருத்துகளுடன் தொடர்புடையது. பெரியவா சொன்ன அந்தக் கருத்துகள் அடங்கிய உரைத் தொகுப்பு தான் “பெண்மை என்பதைக் காப்பாற்ற வேண்டும்” என்ற புத்தகம்.

முதலில் அண்ணா இதை தெய்வத்தின் குரல் ஏழாம் பகுதியில் வெளியிடத் தீர்மானித்திருந்தார். புத்தக வேலைகள் முடிவடைந்த நிலையில் அவருக்கு திடீரென ஒரு சந்தேகம் ஏற்பட்டது. “பெண்மை என்பதைக் காப்பாற்ற வேண்டும்” அத்தியாயத்தையும், “அரசும் மதமும்” என்ற அத்தியாயத்தையும் தெய்வத்தின் குரலில் வெளியிடச் சம்மதமா என்று பதிப்பாளரிடம் கேட்டார். அவர், “பெண்மை என்பதைக் காப்பாற்ற வேண்டும்” அத்தியாயத்தை வெளியிட வேண்டாம், “அரசும் மதமும்” அத்தியாயம் இடம் பெறட்டும் என்று தெரிவித்தார். எனவே, அண்ணா, தெய்வத்தின் குரலில் இருந்து அந்த அத்தியாயத்தை நீக்கச் சொல்லி விட்டார்.

எனக்குள் ஏதோ ஓர் உத்வேகம், அந்த அத்தியாயத்தைத் தனிப் புத்தகமாக நான் வெளியிடுகிறேன் என்று சொன்னேன். அண்ணாவும் அனுமதி தந்தார். “பெண்மை என்பதைக் காப்பாற்ற வேண்டும்” என்ற பெயரிலேயே அதைச் சிறு நூலாக வெளியிட்டேன்.

எனக்குள் ஏதோ ஓர் உத்வேகம் என்று சொல்வது எளிதானது. ஆனால், அப்போது எனக்குள் எழுந்த உணர்ச்சிகளை விவரிப்பது கடினம். இதற்கு நிறையக் காரணங்கள் உண்டு. அவற்றுள் தலையாயது, அண்ணா என்னைத் தன் காலடியில் இழுத்து வைத்துக் கொண்டிருக்கிறார் என்பதைப் பெரியவா வார்த்தைகள் மூலம் எனக்கு உணர்த்தியது ஸ்திரீ தர்மம் பற்றிப் பேசும் போது தான். அந்தச் சந்தர்ப்பத்தில் பெரியவா குறிப்பிட்ட கருத்துகள் அடங்கிய பகுதி தான் "பெண்மை என்பதைக் காப்பாற்ற வேண்டும்" அத்தியாயம்.

என் மனதை மிகவும் கொடூரமாகத் தாக்கிய சம்பவங்களில் முதன்மையானது சென்னை ஆர்எஸ்எஸ் அலுவலக குண்டு வெடிப்பு. நான் விஜயபாரதத்தில் பணிபுரிந்தபோது நடந்த அந்தக் குண்டு வெடிப்பில் எனது நெருங்கிய நண்பர்கள் சிலர் இறந்து விட்டனர், ஆர்எஸ்எஸ்ஸின் அலுவலமாகிய இரண்டு மாடிக் கட்டடம் தரை மட்டமானது.

அந்த கோரச் சம்பவம் ஏற்படுத்திய உளவியல் பாதிப்புகளில் இருந்து என்னால் இன்னும் மீள முடியவில்லை.

பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதல் அது என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். பயங்கரவாதத்துக்கு யார் யாரோ எத்தனையோ காரணங்கள் சொல்கிறார்கள். ஆனால், அந்தக் காரணங்களுக்கெல்லாம் அப்பாற்பட்ட ஒரு காரணத்தை இந்த உரையில் பெரியவா சுட்டிக் காட்டியுள்ளார்.

பெண்மை என்பது மென்மை. ஆண்மை என்பது வன்மை. இரண்டும் வேறு வேறு இயல்பு உடையவை. ஆண் என்பவன் வெளி வேலைகளுக்கானவன், எனவே, அவனுக்கு வன்மை அவசியம். பெண்மை என்பது குடும்பத்தின் உள் காரியங்களுக்கானது. எனவே, அவளுக்கு மென்மை மட்டுமே இயல்பாக உள்ளது.

இயற்கை மனித ஜீவனை இப்படித் தான் படைத்திருக்கிறது.

ஓரளவு வன்மை தூக்கலாக இருப்பதால் ஆண்மை எப்போதுமே one-up-"man"ship ஆக இருக்கிறது - அதாவது, வன்மையில் கூடுதலாக இருப்பது.

ஆணுக்கு இணையாகப் பெண் உருவெடுத்தால், இந்த one-up-"man"ship காரணமாக, ஆணின் வன்மை இயற்கையாகவே அதிகரிக்கும். இதன் காரணமாக, அவனது வன்மை அதிகரித்து அதிகரித்து அசுரத் தன்மையாக உருவெடுக்கிறது.

இயற்கையின் நியதி பாதிப்படையும் போது, இயற்கை எதிர்வினை ஆற்றுகிறது.

- இது தான் பெண்மை புத்தகத்தின் மையக் கருத்து.

ஆர்எஸ்எஸ் காரியாலய குண்டு வெடிப்புக்குக் காரணமானவர்கள் நிச்சயம் மனிதர்கள் அல்ல என்பதை என்னால் சொல்ல முடியும். அவர்கள் கொஞ்சம் கூட மனிதாபிமானமே இல்லாத அசுரர்கள்.

அந்த மனிதர்களுக்கு இத்தகைய அசுரத் தன்மை ஏற்பட முடிந்தது எவ்வாறு என்பதற்குப் பெரியவா சொல்லி இருப்பது தான் சரியான விளக்கமாக எனக்குத் தெரிகிறது.

யாராவது கயவர்கள் பெண்களிடம் தவறாக நடப்பதை அருகில் இருக்கும் ஆண்கள் தட்டிக் கேட்காமல் இருந்தால், அவர்களைப் பார்த்து, "பொம்மனாட்டி கிட்ட தப்பா நடந்துக்கறான், அதை வேடிக்கை பார்க்கறியே, நீயெல்லாம் ஆம்பளையா?" என்று தானே கேட்கத் தோன்றும்?

ஆம், ஆண் என்பவன் பெண்ணுக்குப் பாதுகாப்பு அல்லவா?

ஆனால், தற்போது ஆஃப்கானிஸ்தானில் என்ன நடக்கிறது? தாலிபன் பயங்கரவாதிகள், தங்களது வக்கிரத்துக்குத் தீனி போடுவதற்காக ஆயிரக்கணக்கான சிறுமிகளையும் பெண்களையும் கடத்திப் போகிறார்கள்.

இதை ஏதோ இஸ்லாமிய பயங்கரவாதம் என்று என்னால் கருத முடியவில்லை. இந்த முஸ்லிம் பயங்கரவாதிகளால் கொல்லப்பட்ட கிறிஸ்தவர்களும் ஹிந்துக்களும் சில ஆயிரம் பேர் என்றால், இவர்களால் கொல்லப்பட்ட முஸ்லிம்களின் எண்ணிக்கை பல லட்சங்களைத் தாண்டும். இஸ்லாமியப் பெண்களை இவர்கள் நடத்தும் விதம் கொடூரத்திலும் கொடூரம்.

இதற்கும் இஸ்லாத்துக்கும் என்ன சம்பந்தம்?

இஸ்லாமிய பயங்கரவாதம் என்பது ஒருபுறம் இருக்கட்டும், கிறிஸ்தவத்தைக் கைக்கொண்ட நாடுகளில் மட்டும் என்ன வாழ்கிறது? இதே அட்டூழியங்கள் அங்கே வேறு விதங்களில் தாண்டவமாடுகின்றன. குறிப்பாக, குழந்தைகளிடம் நடத்தப்படும் பாலியல் கொடுமைகள்.

இந்தியாவும் இதற்கு விதி விலக்கு அல்ல.

இவற்றை எல்லாம் ஏதேதோ தவறுகள், குற்றங்கள், மத ரீதியான மோதல்கள் என்று கருத முடியவில்லை. அதைத் தாண்டிய முக்கியமான ஒரு காரணம் இருக்கிறது. மனித இனத்தின் இயல்பு மாறி வருகிறது. மனிதன் அசுரத் தன்மையைக் கைக் கொள்ள ஆரம்பித்து விட்டான் என்றே தோன்றுகிறது.

இதற்குக் காரணம், பெரியவா சொல்வது போல, ஆண் தன்மையைக் கைக் கொள்ளும் பெண்கள் தான் என்றே நம்பத் தோன்றுகிறது. பெண் ஆணைப் போல உருவெடுத்தால், ஆண் அசுரனைப் போல உருவெடுப்பான் என்று பெரியவா சொல்லி இருப்பதன் பொருள் புரிகிறது.

பெண்மை புத்தகம் வெளியான புதிதில் அதை மீண்டும் மீண்டும் படித்தேன்.

தாரயதி இதி தர்ம: (தாங்கி நிற்பது தர்மம்) என்பதே மகா பாரதத்தின் மையக் கருத்து என்று சொல்வார்கள். "தாங்கி நிற்பது தர்மம்" என்பதன் உட்பொருளை எனக்கு உணர்த்தியது இந்தப் புத்தகமே.

தர்மத்தின் வழியில் நடந்தால் ஆத்ம திருப்தியும் நிம்மதியும் கிடைக்கும் என்று பெரியவா அடிக்கடி சொல்வதுண்டு. அதன் பொருள் எனக்குப் புரிகிறது.

"எனது அறிவு, எனது அறிவு" என்று நான் எதைத் தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடுகிறேனோ, அந்த அறிவு என்பது முழுமையான மூடத்தனம் மட்டுமே, இந்தப் பிரகிருதி என்பது எனது அறிவுக்கு அப்பாற்பட்ட விஷயம் என்பது எனக்குப் புரிந்துள்ளது - அதாவது, புரிய வைக்கப்பட்டுள்ளது.

மனித வாழ்க்கையின் குறிக்கோளை அடைய முயற்சிக்காமல் ஏதேதோ அல்ப விஷயங்களின் பின்னால் இத்தனை வருடங்களாக உழன்று கொண்டே இருந்திருக்கிறேன்.

இந்தப் புத்தகம் படித்ததால் எனது வாழ்க்கைப் பயணம் எந்த விதத்திலும் மேம்பட்டு விடவில்லை தான். குணங்களிலோ இதர அம்சங்களிலோ எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை தான்.

அதேநேரத்தில் -

என்னைப் பிடித்து இழுத்துத் தன் காலடியில் வைத்துக் கொண்டிருந்த வஸ்து, எனது அறிவு என்ற மூடத்தனத்தை எனக்குச் சுட்டிக் காட்டிய வஸ்து, எனது வாழ்க்கைப் பயணத்தையும் வழிநடத்தும் என்ற நம்பிக்கை இருக்கிறது.

***

அண்ணா என்னை "பெண்மை என்பதைக் காப்பாற்ற வேண்டும்" புத்தகம் வெளியிட அனுமதித்தாலும், அந்தப் புத்தகத்துக்குத் தமிழ்நாட்டில் நிறைய எதிர்ப்பு வரும் என்று நினைத்தார். குறிப்பாக, அவருக்கு வேண்டாத தொலைபேசி அழைப்புகள் வரும் என்று நினைத்தார்.

எனவே, அண்ணாவுக்கும் அந்தப் புத்தக வெளியீட்டுக்கும் சம்பந்தம் இல்லை, நானாகவே அதை வெளியிடுகிறேன் என்று வாசகர்களை நம்ப வைக்கும் விதத்தில் அந்த நூலுக்கு ஒரு நீண்ட முகவுரையை எழுதினேன்.

சில பத்திரிகைகளில் அந்தப் புத்தகத்துக்கு விமர்சனம் வெளியிட்டிருந்தார்கள். அந்த நாட்களில் மிகப் பிரபலமாக இருந்த ஒரு பத்திரிகையில், அந்தப் புத்தகத்தைக் குறிப்பிட்டு, ஆணாதிக்கமும் வர்ணாசிரம தர்மமும் மீண்டும் தலை தூக்க முயற்சிப்பதாக ஒரு பெரிய கண்டனக் கட்டுரை எழுதி இருந்தார்கள்.

ஆனால், அந்தப் பத்திரிகையில் வெளியான அவ்வளவு பெரிய கட்டுரைக்கு எந்த விதமான பின்விளைவும் இல்லை. அந்தப் பத்திரிகையின் வாசகர்களிடமிருந்து எனக்கு ஒரே ஒரு தொலைபேசி அழைப்பு கூட வரவில்லை. யாரும் கடிதம் போடவும் இல்லை. அந்தப் பத்திரிகையால் ஆணாதிக்கத்தின் கோர முகமாகச் சித்தரிக்கப்பட்ட பெரியவா அந்தப் புத்தகத்தில் பெண்ணடிமைத்தனத்தைப் பற்றி என்ன சொல்லி இருக்கிறார் என்பதைத் தெரிந்து கொள்ள அந்தப் பத்திரிகையின் வாசகர்களில் ஒருவர்கூட ஆர்வம் காட்டவில்லை.

அதேநேரத்தில், பெண்மை புத்தகத்துக்கு அன்பர்கள் மத்தியில் நல்ல வரவேற்பு இருந்தது. ஆனால், என்னால் புத்தகத்தை விற்க முடியவில்லை. அப்போது சாரதா பப்ளிகேஷன்ஸில் இருந்து நான் வெளியேறி விட்டிருந்தேன். எனது அலுவலகத்துக்கும் மூடுவிழா நடத்தியாகி விட்டது. இதனால், புத்தகப் பிரதிகளை வைப்பதற்கு இடம் இல்லாமல் திணறினேன்.

புத்தக விற்பனையில் சில அன்பர்கள் உதவி செய்தார்கள். இருந்தாலும், நிறைய பிரதிகள் தங்கி விட்டன. சில வருடங்களுக்குப் பின்னர், ஓர் அன்பர் தனது மகளின் திருமணத்தில் வழங்கப்பட்ட தாம்பூலப் பையில் வைத்துக் கொடுப்பதற்காக அனைத்துப் பிரதிகளையும் விலைக்கு வாங்கிக் கொண்டார்.

புத்தக விற்பனையில் உதவிய இரண்டு அன்பர்களை அவசியம் குறிப்பிட வேண்டும். ஒருவர் சென்னையைச் சேர்ந்தவர். இன்னொருவர் திருப்பூர்க்காரர். இருவரும் அவ்வப்போது சிற்சில பிரதிகள் வாங்கி, வீடு வீடாகச் சென்று இந்தப் புத்தகத்தைப் படிக்க வேண்டிய அவசியத்தை எடுத்துச் சொல்லி விற்பனை செய்தார்கள்.

இதற்குச் சில வருடங்கள் பின்னர் இருவரும் சத்கதி அடைந்து விட்டார்கள்.

எல்லா விஷயங்களுக்கும் காரணம் புரிந்து விடுவதில்லை. இவர்களது இள வயது மரணமும் அப்படியே.

அதேபோல, ஒருசில அன்பர்கள் எனது வீட்டைத் தேடி வந்து ஓரிரு பிரதிகள் வாங்கிச் சென்ற சம்பவங்கள் என்னை மிகவும் நெகிழச் செய்தன.

95 வயது முதியவர் ஒருவர், பெண்மை புத்தகத்தைப் படித்து விட்டு, “பெரியவாளின் இந்த உரையை வெளியிட்டதன் மூலம் நீ ஜன்ம சாபல்யம் அடைந்து விட்டாய்” என்று மிகவும் உணர்ச்சி பூர்வமாக எனக்குக் கடிதம் எழுதி இருந்தார். அதை இப்போது நினைத்தாலும் கண்கள் பனிக்கின்றன.

***

இதற்குப் பல வருடங்கள் பின்னர், ஓர் அன்பர் மீண்டும் பெண்மை புத்தகத்தை வெளியிடுமாறு கேட்டுக் கொண்டார். அவரே அனைத்துப் பிரதிகளையும் வாங்கி, காஞ்சி மடத்து அன்பர்களைப் பெரிய அளவில் தொடர்பு கொண்டு விற்பனை செய்ய இருப்பதாகத் தெரிவித்தார்.

அதைத் தொடர்ந்து அந்த நூலை மீண்டும் வெளியிட்டேன். அந்த அன்பர் நிறைய பிரதிகள் வாங்கிக் கொண்டார். எங்கள் பதிப்பகத்தின் மூலமும் தற்போது ஓரளவு பிரதிகள் விற்பனை ஆகின்றன. நவராத்திரி முதலிய பண்டிகைகளில் ரவிக்கைத் துணியுடன் பெண்மை புத்தகமும் வைத்துக் கொடுக்கும் பழக்கம் ஏற்பட்டுள்ளது. அதேபோல, திருமணம், உபநயனம் முதலிய சந்தர்ப்பங்களில் பெண்மை புத்தகத்தைத் தாம்பூலப் பையில் போட்டுக் கொடுப்பதும் உண்டு.

இந்நிலையில் ஒருசில அன்பர்கள் அந்த நூலை ஆங்கிலத்தில் வெளியிடுமாறு வேண்டினார்கள்.

அண்ணா காலத்திலேயே “வாய்ஸ் ஆஃப் காட்“ என்ற பெயரில் தெய்வத்தின் குரல் ஆங்கிலத்தில் வெளியாகி இருந்தது. பல்வேறு இந்திய மொழிகளிலும் வெளியாகி இருந்தது. ஸ்வாமி உட்பட வேறு சில

நூல்கள் எத்தனையோ உள்நாட்டு, வெளிநாட்டு மொழிகளில் வெளியாகி இருந்தன. எனினும், அண்ணா இந்த நூல்களைப் பற்றி என்னிடம் பெரிதாக எதுவும் சொன்னதில்லை.

பல வருடங்களுக்கு முன்பு, ஒரு பத்திரிகையில், தெய்வத்தின் குரலின் ஓர் அத்தியாயம் ஆங்கிலத்தில் வெளியாகி இருந்தது. அது குறித்து அண்ணாவுக்கு மிகுந்த வருத்தம். பெரியவா சொல்லி இருப்பதற்கும், அதன் ஆங்கில வடிவத்துக்கும் சம்பந்தமே இல்லை என்னும் விதத்தில் அந்த மொழிபெயர்ப்பு இருந்தது என்று என்னிடம் அண்ணா நிறைய தடவை சொல்லி இருக்கிறார்.

மேலும், அண்ணா சித்தி அடைந்து விட்டார். ஆங்கில வடிவத்தை அவரிடம் வாசித்துக் காட்டி, அவரது சம்மதத்தைப் பெறவும் வழி இல்லை. இந்தக் காரணங்களால் நான் பெண்மை புத்தகத்தை ஆங்கிலத்தில் வெளியிட விரும்பவில்லை.

இந்நிலையில், மணிக்கொடி பத்திரிகை நிறுவனர் "சிட்டி"யின் மைந்தர் ஸ்ரீ. விஸ்வேஸ்வரனை ஒருமுறை சந்திக்க வேண்டி வந்தது. சிறு வயதில் இருந்தே உடல்நலக் குறைவால் அவதிப்பட்டு வந்த அவர் திருமணம் செய்து கொள்ளவில்லை. தனது தங்கை குடும்பத்தினருடன் சேர்ந்து வாழ்ந்து வந்தார். பிரபல மொழிபெயர்ப்பாளரான அவர், ஏராளமான நூல்களைத் தமிழில் இருந்து ஆங்கிலத்துக்கு மொழி பெயர்த்துள்ளார். அவருக்கு மரியாதை நிமித்தமாக, "பெண்மை என்பதைக் காப்பாற்ற வேண்டும்" புத்தகப் பிரதி ஒன்றை அளித்தேன்.

சில மாதங்களுக்குப் பிறகு அவரிடமிருந்து தொலைபேசி அழைப்பு வந்தது. "ஸ்ரீதர் சார், பெரியவா புஸ்தகம் ட்ரான்ஸ்லேஷனுக்காகக் குடுத்தீங்களே, என்னால அதைப் பண்ணவே முடியல. அடுத்தடுத்து நிறைய வேலை வந்துடுத்து. இப்போ என் தங்கை ஹாஸ்பிடல்ல இருக்கா. அவளுக்குக் கேன்சர். நான் தான் கூட இருக்கேன். என்ன பண்றதுன்னே புரியலே. அவளுக்காகப் பெரியவா கிட்ட பிரார்த்தனை பண்ணிண்டே இருந்தேன். நீங்க குடுத்த புஸ்தகம் ஞாபகம் வந்தது. அதை ட்ரான்ஸ்லேட் பண்ண ஆரம்பிச்சேன், தங்கைக்கு மிரகுலஸா க்யூர் ஆறது. டாக்டர்களாலயே நம்ப முடியல" என்று கூறினார்.

"நான் அந்தப் புத்தகத்தை உங்களுக்கு அன்பளிப்பாகத் தான் கொடுத்தேன் - மொழிபெயர்ப்புக்காக அல்ல" என்று அப்போது அவரிடம் சொல்ல எனக்கு மனம் வரவில்லை.

எப்படிச் சொல்ல முடியும்?

பெரியவா அனுக்கிரகத்தில், விஸ்வேஸ்வரனின் தங்கை விரைவிலேயே குணமாகி வீடு திரும்பி விட்டார். நலமாக இருக்கிறார்.

பெண்மை புத்தகம் தான் விஸ்வேஸ்வரனின் கடைசி மொழிபெயர்ப்பு என்று நினைக்கிறேன். மொழிபெயர்ப்பு முடிந்த சில மாதங்களிலேயே, அவர், நிறைய உறவினர்கள் மத்தியில், அனைவருடனும் சந்தோஷமாகப் பேசிக் கொண்டிருந்து விட்டு, நிம்மதியாகக் கண் மூடி விட்டார்.

கொடுத்து வைத்தவர்.

இப்போது எனது பாடு தான் திண்டாட்டமாகி விட்டது. காரணம், அவரது மொழிபெயர்ப்பு மிகவும் கடினமான உரைநடையில் இருந்தது. பெரியவா உரையை மொழிபெயர்க்கிறோம் என்ற பய பக்தியுடன் அவர் மொழிபெயர்த்திருந்தார் கருத்துப் பிசகு வந்து விடவே கூடாது என்கிற அக்கறையில் அவர் மொழிபெயர்த்ததால், அந்த மொழிநடை மிகவும் கடினமான ஒன்றாக அமைந்து விட்டது.

அதை வெளியிட எனக்கு மனம் வரவில்லை, வெளியிடாமல் இருக்கவும் முடியவில்லை.

Divine plan or divine plot - who knows? But divine, anyway.

அந்த நூலின் மொழி நடையைச் சரி செய்வதில் ஆறு பேருடைய உதவியை நாடினேன். அனைவருமே முழு மனதுடன் உதவி செய்தார்கள். அவர்கள் போட்டுக் கொடுத்த திருத்தங்களை ஒருங்கிணைத்துப் புத்தக வேலையை நிறைவு செய்தேன்.

அந்த நூலில், பெரியவா குறிப்பிட்டுள்ள ஒருசில முக்கியக் கருத்துகளை விளக்கும் விதத்தில் சில பெட்டிச் செய்திகளையும் கொடுத்திருக்கிறேன். இவை, நம்மைச் சுற்றி நடக்கும் பல்வேறு சம்பவங்கள், புள்ளி விவரங்கள் ஆகியவற்றின் தொகுப்பு. ஆண்-பெண் சமத்துவம் என்ற பெயரில் யார் யாரோ ஏதேதோ முழங்கி வந்தாலும், பெண்கள் மன ரீதியாகவும், உடல் ரீதியாகவும் பாதிக்கப்படுவது அதிகரித்துக் கொண்டே இருக்கிறது என்பதையும், குறிப்பாக, பெண்கள் மீதான வன்முறை கூடிக் கொண்டே இருக்கிறது என்பதையும் இந்தப் பெட்டிச் செய்திகள் மூலம் அறியலாம்.

பெரியவா சொல்லி இருப்பது தர்மம் என்பதற்கான விளக்கம் என்றால், இந்தப் பெட்டிச் செய்திகள், தர்மத்துக்கு எதிர் வழியில் பயணிக்கும் சமுதாயத்தின் நிலையை விளக்குகின்றன.

டேவிட் எல்கின்ட் என்ற மனோதத்துவ நிபுணரின் கருத்துகளைப் படிக்க வாய்ப்புக் கிடைத்தது. அவரது நூல்கள், தற்காலத்தில் - குறிப்பாக, அமெரிக்காவில் - வளரும் பிள்ளைகளின் மனநிலையை தத்ரூபமாகப் படம் பிடித்துக் காட்டுகின்றன. அமெரிக்காவில் குடும்பம் என்கிற அமைப்பு அடியோடு ஆட்டம் கண்டுவிட்டது. அதனுடைய பாதிப்பை அந்நாட்டுக் குழந்தைகளிடம் நன்றாகவே பார்க்க முடிகிறது.

கூடவே, இந்த மனிதர் இன்னோர் உண்மையையும் சுட்டிக் காட்டுகிறார். பெண் விடுதலை, ஆண்-பெண் சமத்துவம், ஓரினச் சேர்க்கைக்கு அங்கீகாரம் முதலிய கோஷங்கள் எழுவதற்கு முன்பு அந்த நாட்டில் பெண்கள் குடும்பப் பாங்காக இருந்ததையும், அவர்கள் கண்ணியமாக நடத்தப்பட்டதையும் சுட்டிக் காட்டும் நூலாசிரியர், இந்த இயக்கங்களே அமெரிக்காவின் சீர்கேட்டுக்குக் காரணம் என்று குற்றம் சாட்டுகிறார்.

அவர் குறிப்பிடும் இத்தகைய விஷயங்கள், பெண்மை புத்தகத்தில் பெரியவா சொல்லி இருக்கும் உபதேசங்களை நடைமுறை உதாரணங்களுடன் விளக்குவதாகவே எனக்குத் தோன்றியது. இதைத் தொடர்ந்து, அமெரிக்காவில் உருவாகி வளர்ந்த பெண் விடுதலை இயக்கங்களைப் பற்றிக் கொஞ்சம் தெரிந்து கொள்ள முயற்சி செய்தேன். வார்த்தைகளில் வர்ணிக்க முடியாத எத்தனையோ மனோ வக்கிரங்களைப் புரிந்து கொள்ள முடிந்தது.

ஈசுவரா என்று அலறத் தான் தோன்றுகிறது.

சமுதாயத்தின் நிலையைக் கூர்ந்து கவனிக்கும் போது பெரியவாளின் உபதேசங்கள் நன்றாகவே புரிகின்றன.

## 10. எம்எஸ், ராஜாஜி - சில தகவல்கள்

பொதுவாகவே எம்எஸ்ஸைப் பற்றித் தெரிந்தவர்கள் அனைவரும் அவரைத் தாயாகவே போற்றுவதுண்டு என்று அண்ணா சொல்லி இருக்கிறார். அண்ணாவுக்கும் அவர் அப்படியே.

எம்எஸ்ஸிடம் ஏதாவது பொது சேவை என்று பொய்க் காரணம் சொல்லி அவரை ஏமாற்றி விட முடியும். இத்தகைய கச்சேரிகளில் கிடைக்கும் பணம் பெரும்பாலும் பொது சேவைக்கும் போகாது. எம்எஸ்ஸுக்கும் போகாது, நிகழ்ச்சி ஏற்பாடு செய்பவர்களே எடுத்துக் கொள்வார்கள்.

இதேபோல ஒருவர் எம்எஸ்ஸை வைத்து இசைக் கச்சேரி நடத்த வேண்டும் என்று விரும்பினார். அவர் அண்ணாவை நேரில் சந்தித்தார். எம்எஸ்ஸிடம் சிபாரிசு பண்ண வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். அண்ணாவுக்கு அதில் விருப்பம் இல்லை. அவரிடமிருந்து தப்பிப்பதற்காக, எம்எஸ் ஊரில் இல்லை, ஹைதராபாத் போயிருக்கிறார், வருவதற்குப் பத்து நாள் ஆகும் என்று அண்ணா அவரிடம் பொய் சொல்லி விட்டார்.

அவர் கிளம்பிப் போனதும், இந்த நபர் நேரே எம்எஸ் வீட்டுக்குப் போய் விசாரித்தால் என்ன செய்வது என்ற சந்தேகம் அண்ணாவுக்கு ஏற்பட்டது. அண்ணா சொன்ன பொய் அம்பலத்துக்கு வந்து விடும். அது பெரிய மானப் பிரச்சினையாக ஆகி விடும் என்ற அச்சம் வந்தது. எனவே அவர் எம்எஸ் வீட்டைத் தொடர்பு கொண்டு விஷயத்தைத் தெரியப்படுத்த விரும்பினார். உடனடியாக எம்எஸ் வீட்டுக்கு ஃபோன் பண்ணினார்.

அங்கிருந்து பதில் கிடைத்தது: எம்எஸ் ஊரில் இல்லை, ஹைதராபாத் போயிருக்கிறார், வருவதற்குப் பத்து நாள் ஆகும்.

அனேகமாக, அண்ணா தனது வாழ்க்கையில் சொன்ன பொய் இது ஒன்று தான். கடைசியில், அந்தப் பொய்யும் உண்மை ஆகி விட்டது.

***

சதாசிவம் மறைவுக்குப் பின்னர் தான் எம்எஸ்ஸுக்கு பாரத ரத்னா விருது கிடைத்தது. அப்துல் கலாம் தான் அப்போதைய ஜனாதிபதி. அவர் எம்எஸ் ரசிகர். தானே எம்எஸ்ஸுக்கு ஃபோன் பண்ணி அவருக்கு பாரத ரத்னா செய்தியைத் தெரிவிக்க விரும்பினார். போனில் அவர் விஷயத்தைத் தெரிவித்ததுமே, எம்எஸ், "ஐயோ, மாமா இல்லியே! இருந்தா எவ்வளவு சந்தோஷப்பட்டிருப்பார்" என்று சொன்னாராம். உடனேயே பேரன் ஒருவரிடம் ரிசீவரைக் கொடுத்து விட்டு உள்ளே போய் விட்டாராம்.

இது மரியாதைக் குறைச்சலான விஷயம் என்று எனக்குத் தோன்றியது. ஜனாதிபதி தொலைபேசியில் பேசுகிறார், எம்எஸ் அவரைத் தவிர்க்கிறார் என்றால் அதற்கு என்ன காரணம்? இதை அண்ணா என்னிடம் சொன்ன போது எனக்கு இந்தக் கேள்வி தான் பெரிதாக எழுந்தது.

அதற்கு அண்ணா சொன்ன பதில் "இது தான் எம்எஸ். பிற குடும்பத்து ஆடவர்களுடன் தனியாகப் பேசிக் கொண்டிருப்பதை அவர் தவிர்த்து விடுவார்" என்று தெரிவித்தார்.

கர்நாடக சங்கீத மேதையாகத் தான் உலகம் அவரை அறிந்திருக்கிறது. ஆனால், சங்கீத மேன்மையையும் விட, அவரது பெண்மை இயல்புகளும், பணிவும், விருந்தோம்பலும் உயர்வானவை என்று அண்ணா சொல்வதுண்டு.

***

எம்எஸ் சரியான அசடு, அவரை எல்லோரும் ஏமாற்றுகிறார்கள் என்று ஓர் அன்பர் பெரியவாளிடம் போய் முறையிட்டாராம். எம்எஸ்ஸுக்குப் பெரியவா புத்திமதி சொல்லித் "திருத்த" வேண்டும் என்பது அந்த மனிதரின் பிரார்த்தனை.

பெரியவா அவரிடம், "அவள் அசடாகவே இருக்கட்டும்!" என்று அகமும் முகமும் மலர்ந்து சொன்னாராம்.

எம்எஸ்ஸும் கடைசி வரையில் இவர்கள் எல்லோர் பார்வையிலும் “அசடாகவே” இருந்தார்.

**My Colleague Ra. Ganapati**

அண்ணாவுக்கு ராஜாஜி மீது மிகுந்த மரியாதை உண்டு. அண்ணா எழுதிய ஜய ஜய சங்கர நூல் வெளியீட்டு விழாவில் பேசிய ராஜாஜி, அவரை, “My colleague Ra. Ganapati” என்று குறிப்பிட்டாராம். இதை அண்ணா என்னிடம் நாலைந்து தடவை சொல்லி இருக்கிறார். “எப்பேர்ப்பட்ட மகான்ப்பா அவர்! என்னைப் போயி கலீக்னு சொன்னார்” என்று வியப்புடன் சொல்வதுண்டு

அம்மா புத்தகத்தை ராமகிருஷ்ணா மடத்து அண்ணா பாராட்டியதையும், ராஜாஜி ‘My colleague Ra. Ganapati’ என்று குறிப்பிட்டதையும் அவர் தனது எழுத்துக்குக் கிடைத்த மிகப் பெரிய அங்கீகாரமாகக் கருதினார். இருந்தாலும், ராஜாஜி அவரை “கலீக்” என்று குறிப்பிட்டதை அவரால் ஜீரணிக்க முடியவில்லை என்பதும் உண்மை. கலீக் என்ற சொல் சம அந்தஸ்தில் இருப்பவரைக் குறிக்கிறது. அண்ணா மனதில் ராஜாஜி மிக உயர்வான இடத்தில் இருந்தவர். அவருக்குச் சமமானவராகத் தன்னை அவரால் நினைத்துப் பார்க்க முடியவில்லை.

பெரியவாளின் எளிமையைப் போலவே ராஜாஜியின் எளிமையும் அண்ணாவைக் கவர்ந்த விஷயம். ராஜாஜியை மகான், பூஜிதர், தபஸ்வி, ஸந்நியாஸி என்றெல்லாம் அண்ணா என்னிடம் சொல்லியதுண்டு.

***

எனக்குத் தெரிந்த ஒரு பெரியவர் வெளியிட்டிருந்த ஒரு புத்தகத்தில் ராஜாஜியின் பங்களாவில் நடந்த ஒரு சந்திப்பு பற்றிக் குறிப்பிட்டிருந்தார்கள். அண்ணாவுக்கு அந்தச் செய்தி புதியதாக இருக்கும் என்ற நம்பிக்கையில் அவரிடம் அதைக் காட்டினேன். அதைப் படித்ததுமே, “ஐயய்யோ, என்னப்பா இது, ராஜாஜியோட பங்களான்னு போட்டிருக்கா?” என்று அதிர்ச்சியோடு கேட்ட அவர், ராஜாஜி எந்தக் காலத்திலும் பங்களாவில் வசித்ததில்லை என்று சொன்னார். இந்தப் புத்தகம் மறுபடியும் அச்சிட நேர்ந்தால் பங்களா என்ற வார்த்தையை இல்லம் என்று திருத்தி வெளியிடுமாறு அதன் பதிப்பாளர்களிடம் சொல்லச் சொன்னார்.

***

சுதந்திரப் போராட்ட காலத்தில் ஒருமுறை ஏதோ காங்கிரஸ் மாநாட்டுக்காக, கல்கி, ராஜாஜி, சதாசிவம் மூவரும் பஞ்சாப் போக வேண்டி இருந்ததாம். பஞ்சாபில் அப்போது தண்ணீர்ப் பஞ்சமாம். (ஐந்து ஜீவ நதிகள் பாயும் பஞ்சாப் பகுதியில் ஏன் தண்ணீர்க் கஷ்டம் ஏற்பட்டது என்ற விவரம் அண்ணாவுக்குத் தெரியவில்லை. மாநாட்டில் நிறையப் பேர் கூடுவதால் ஏதாவது தட்டுப்பாடுகள், சிரமங்கள் இருந்திருக்கலாம்.) மாநாட்டுக்குப் போவதற்கு முன் கல்கி, சதாசிவம் ஆகியோரிடம் ராஜாஜி, “நீங்கள்லாம் ரொம்ப ஆடம்பரமா வாழறேள். குளிக்கறதுக்கும் துணி துவைக்கறதுக்கும் சேர்த்தே எனக்கு ஒரு பக்கெட் தண்ணீர் தான் செலவாறது. நீங்க ரெண்டு பேரும் என் கிட்ட ட்ரெய்னிங் எடுத்துக்கோங்கோ” என்று சொன்னாராம்.

குளிப்பதற்கும், துணி துவைப்பதற்கும் சேர்த்து எவ்வாறு ஒரே ஒரு பக்கெட் தண்ணீர் போதுமானதாக இருக்க முடியும் என்று நான் அண்ணாவிடம் கேட்டேன். அவருக்கும் அது அதிசயமாகத் தான் இருந்தது. எனினும், சதாசிவம் இந்தச் சம்பவத்தை அடிக்கடி நினைவு கூர்வாராம். ராஜாஜியின் சிக்கனத்தை இதன் மூலம் புரிந்து கொள்ளலாம் என்று அண்ணா என்னிடம் குறிப்பிட்டார்.

***

ராஜாஜி முதல்வராக இருந்த போது ஒரு தடவை ஏதோ ஊருக்குப் போகும் வழியில் கார் ரிப்பேர் ஆகி விட்டது. சில கிலோ மீட்டர் தொலைவில் அரசு பயணியர் விடுதி உள்ளது. தனது ப்ரீஃப்கேஸை எடுத்துக் கொண்ட ராஜாஜி அருகில் இருந்த ஒரு கட்சிக்காரர் வீட்டுக்குப் போய் அங்கிருந்து பயணியர் விடுதிக்கு ஃபோன் பண்ணி அன்று இரவு அங்கே தங்கப் போகிறேன் என்று தகவல் சொன்னார்.

மறு நாள் காலைக்குள் ஏதாவது மெக்கானிக் உதவியுடன் கார் ரிப்பேரை சரி செய்த பின்னர், நேரே விடுதிக்கு வந்து ராஜாஜியை பிக்அப் பண்ணுவதாக கார் ட்ரைவர் உறுதி அளித்தார்.

கட்சிக்காரர் வீட்டில் இருந்து தனி ஆளாக விடுதிக்கு நடந்தே போனார், ராஜாஜி.

விடுதி அறையில் ஒரு புது டேபிள் ஃபேன் இருந்தது. அதைப் பார்த்ததும் ராஜாஜிக்கு சந்தேகம். அந்த ஃபேனை அப்போது தான் வாங்கி இருக்கிறார்கள் என்று தோன்றியது. விடுதி பொறுப்பாளரை அழைத்து அவரிடம் விவரம் கேட்டார்.

"ஃபேன் புதுசு மாதிரி இருக்கு? இப்பத்தான் வாங்கினீங்களோ?"

"ஆமா சார்."

"ஓ! எதுக்காகவாம்? சீஃப் மினிஸ்டர் வராரு. ரூம்ல ஃபேன் இல்லை. அவருக்குப் புழுக்கமா இருக்கும், தூங்க முடியாம கஷ்டப்படுவார்னு வாங்கினீங்களோ?"

"ஆமா சார்."

"ரொம்ப அக்கறையா இருக்கீங்களே! ஃபேன் விலை எவ்வளவோ?"

"நூற்றி ஐம்பது ரூபா சார்."

"அவ்ளோ ரூபாயா? யார் செலவு பண்ணினாங்களோ?"

"நான் தான் சார்."

"நமக்கு சம்பளம் எவ்வளவோ?"

"தொண்ணூறு ரூபா சார்."

"இந்தச் சம்பளத்தை வச்சு வாயைக் கட்டி வயித்தைக் கட்டித் தான் வாழ்க்கை நடத்த முடியும். ஐயா கைக்காசைப் போட்டுச் செலவு பண்ணி சீஃப் மினிஸ்டருக்கு ஃபேன் வாங்கறீங்களாக்கும்?"

"...."

"இந்த மாதிரி செலவை எப்படிச் சரிக்கட்டுவீங்க? வர்றவங்க போறவங்க எல்லார் கிட்டயும் லஞ்சம் வாங்குவீங்க. எங்களுக்கு எவ்ளோ செலவு பாருங்க, சீஃப் மினிஸ்டர் வந்தா நாங்க நூத்தம்பது ரூபாய்க்கு ஃபேன் வாங்கிப் போட வேண்டி இருக்குன்னு சொல்லுவீங்க? ஊழல் இப்படித் தான் ஆரம்பமாகுது" என்று சொன்ன ராஜாஜி, தனது ப்ரீஃப்கேஸைத் திறந்து செக் புக்கை எடுத்தார். நூற்றி ஐம்பது ரூபாய்க்கு செக் எழுதி அந்த மனிதரிடம் கொடுத்தார்.

மறு நாள் காலை கார் ரெடி. அதை ஓட்டிக் கொண்டு ட்ரைவர் விடுதிக்கு வந்து சேர்ந்தார். காரில் ஏறி உட்கார்ந்த ராஜாஜி, விடுதி பொறுப்பாளரிடம், படு தோரணையாக, "ஐயா, என்னுடைய ஃபேன்-ஐ மறந்து போயிட்டீங்களே! எடுத்திட்டு வந்து டிக்கியில வைங்க" என்று சொன்னாராம்.

இந்தச் சம்பவத்தை என்னிடம் தெரிவித்த போது, அண்ணா, என்னுடைய ஃபேன் என்பதை ராஜாஜி சொன்ன மாதிரியே அழுத்தமாக உச்சரித்துக் காட்டினார். எனக்குப் பெரிதாகச் சிரிப்பு வந்தது. ஃபேன் விலை நூத்தி ஐம்பது ரூபாயாச்சே!

ஆனால், இப்போது இந்தச் சம்பவத்தை நினைக்கும் போதெல்லாம் வேதனையாக இருக்கிறது.

முதல் மந்திரியுடன் யாருமே இல்லை... அவரும் டிரைவரும் தான் பயணம் போனார்கள்.... முதல்வரின் லக்கேஜ் ஒரு ப்ரீஃப்கேஸ் மட்டுமே... பயணியர் விடுதிக்கு அவர் தனி ஆளாக நடந்தே போனது... தனக்காக ஃபேன் வாங்கியதைக் குற்றமாகக் கருதியது....

நம் தலைவர்கள் இப்படித் தான் வாழ்ந்திருக்கிறார்கள்.

தற்போதைய நிலையைப் பார்த்தால்.... எங்கேயோ வலிக்கிறது.

***

ஒருமுறை, கதர் சம்பந்தமாக ஏதோ ஒரு பெரிய கண்காட்சிக்கு ராஜாஜியை அழைத்திருந்தார்கள். அவரும் வருகை தந்தார். ஒவ்வோர் உற்பத்திப் பொருளையும் அவருக்குக் காட்டும் போது, அவர்கள், “இயந்திரத்தில் தயாரித்த மாதிரியே... பவர்லூமில் உற்பத்தி பண்ணிய மாதிரியே...” என்பதாக விளக்கினார்கள்.

பின்னர், அவர் கிளம்பும் போது பார்வையாளர்கள் புத்தகத்தில், “இங்கே எல்லாப் பொருட்களுமே இயந்திரத்தில் தயார் செய்யப்பட்டவை போல இருக்கின்றன. இனிமேலாவது கையால் தயாரிக்கப்பட்ட மாதிரியே இருக்கும் பொருட்களை உற்பத்தி பண்ணுங்களேன்!” என்று எழுதினாராம்.

ராஜாஜி வாழ்க்கையில் அண்ணாவுக்கு ரொம்பவும் பிடித்த சம்பவம் இது. நிறைய தடவை இதை என்னிடம் சொல்லி இருக்கிறார்.

***

அரசியலில் காமராஜரும் ராஜாஜியும் எதிரெதிர் அணியைச் சேர்ந்தவர்கள் என்பதை நினைவில் வைத்துக் கொண்டு மேலே படிக்கவும்.

காமராஜர் முதல்வராக இருந்த போது ஒருமுறை ஏதோ சிக்கலான பிரச்சினை ஏற்பட்டது. அவரும் தலைமைச் செயலாளரும் அதைப் பற்றி விவாதித்துக் கொண்டே காரில் வந்தனர். திடீரென காராஜருக்கு ஒரு கேள்வி எழுகிறது. இந்த நேரம் ராஜாஜி முதல்வராக இருந்திருந்தால் என்ன செய்திருப்பார் என்பதே அந்தக் கேள்வி. அதைத் தலைமைச் செயலரிடம் கேட்கிறார். அவர் ராஜாஜி காலத்திலும் பணியில் இருந்தவர். சற்று நேரம் யோசித்த அவர், “அவர் எப்படிக் கையாண்டிருப்பார் என்று என்னால் யூகிக்க முடியவில்லை. இதை நாம் ஏன் யூகிக்க வேண்டும். அவரிடமே கேட்டு விடலாமே!” என்று சொல்கிறார்.

இருவரும் அப்போதே ராஜாஜி இல்லத்துக்கு விரைந்தார்கள்.

வீட்டில் ராஜாஜி மட்டும் தனியே இருந்தார். வீட்டு வாசலில் கார் வந்து நின்றதும், வந்திருப்பவர்கள் யார் என்பதைத் தெரிந்து கொள்வதற்காக வெளியே வருகிறார். முதல்வரையும் தலைமைச் செயலரையும் பார்த்ததும் அவருக்கு வியப்பாக இருக்கிறது. உள்ளே அழைத்துச் சென்று அமர வைத்துத் தண்ணீர் கொடுத்து உபசரிக்கிறார்.

பின்னர் தாங்கள் இருவரும் ராஜாஜியைப் பார்க்க வந்த காரணத்தைக் காமராஜர் அவரிடம் விவரிக்கிறார். உடனே, ராஜாஜி, “நீங்கள் முதலமைச்சர். நான் சாதாரணக் குடிமகன். நீங்கள் உங்களது வீட்டிலோ அலுவலகத்திலோ இருந்து கொண்டு என்னை அங்கே வரவழைத்து இந்தக் கேள்வியைக் கேட்பது தான் முறையாக இருக்கும்” என்று சொன்னாராம்.

***

சிஎன் அண்ணாத்துரை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த போது ராஜாஜி, இரண்டு முறை மருத்துவமனைக்குச் சென்று நலம் விசாரித்தார். மருத்துவமனையில் அண்ணாத்துரை அருகில் இருந்து கவனித்துக் கொண்டவர் அப்போதைய போலீஸ் மந்திரி. அவர் தனது துறை சார்ந்த ஃபைல்களை மருத்துவமனைக்கே வரவழைத்துப் பார்த்துக் கொண்டிருந்தாராம்.

அந்த மந்திரியைப் பற்றி சதாசிவத்திடம் பெருமையாகக் கூறுவாராம், ராஜாஜி:

“சிஎன்ஏக்கு பதிலா இந்தப் பையனை சீஃப் மினிஸ்டர் ஆக்கியிருக்கலாமோன்னு தோணறது. என்ன கமிட்மென்ட் அவனுக்கு! ஹாஸ்பிடல்ல உக்காந்துண்டு ஃபைல்ஸ் பார்த்துண்டிருக்கான்! ரொம்ப வொர்கஹாலிக் டைப்!”

சிஎன் அண்ணாத்துரை மறைவுக்குப் பின்னர், ராஜாஜியின் மனம் கவர்ந்த அந்த "வொர்கஹாலிக் பையன்" முதலமைச்சரானார். அவர் தமிழ்நாட்டில் மதுவிலக்கைத் தளர்த்தி "ஆல்கஹால்" கடைகளைத் திறந்து விட்டார்.

திடுக்கிட்டுப் போன ராஜாஜி, "வொர்கஹாலிக் பையனை" நேரில் சந்தித்து இந்த முடிவைத் திரும்பப் பெற வைப்பதற்காக முயற்சி செய்தார். "வொர்கஹாலிக் பையன்" தரப்பில் இருந்த யாரும் அவரைக் கண்டுகொள்ளவே இல்லை. "வொர்கஹாலிக் பையன்" ராஜாஜியைச் சந்திக்க நேரம் ஒதுக்கவே இல்லை.

மனம் வெறுத்துப் போன ராஜாஜி, சதாசிவத்திடம், "உயிர் வாழும் ஆசையே போய் விட்டது, தரமில்லாத மனிதர்களைப் பதவியில் அமர்த்துவதற்குக் காரணமாக இருந்து விட்டேன். நான் பாவி. தமிழ்நாட்டைச் சீரழித்து விட்டேன். எதிர்கால சமுதாயம் என்னை மன்னிக்கவே மன்னிக்காது" என்று புலம்பினாராம்.

நிஜமாகவே அவருக்கு உயிர் வாழும் ஆசை போய் விட்டது.

சில மாதங்களில் அவரது வாழ்க்கை முடிவடைந்தது.

***

இந்த வரலாற்று நிகழ்வுக்கு ஒரு பிற்சேர்க்கை உண்டு. அதையும் இங்கே அவசியம் குறிப்பிட வேண்டும்.

முதல்வராக இருந்த "வொர்கஹாலிக் பையனை" மதுவிலக்கு விஷயமாக நேரில் சந்திக்க ராஜாஜி பலமுறை முயன்ற போது, வொர்கஹாலிக் பையன் தரப்பைச் சேர்ந்த பலர், "ராஜாஜி தனது சொந்தக்காரர் ஒருவருக்கு அரசு வேலை வேண்டும் என்பதற்காக சிபாரிசு வேண்டி முதல்வரைச் சந்திக்க முயற்சி செய்தார். எங்கள் முதல்வர் அத்தகைய தவறான செய்கைக்கு உடன்படத் தயாரில்லை" என்று மேடைகளில் முழங்கினார்கள்.

அப்போது, ராஜாஜியின் அரசியல் எதிரியான காமராஜர், "ராஜாஜி பொது நன்மைக்காக எந்தவித மரியாதையும் எதிர்பார்க்காமல் யாரிடமும் போய்க் கையேந்துவார். தனது சுயநலத்துக்காக யாரிடமும் போய்க் கெஞ்ச மாட்டார்" என்று காட்டமாக அறிக்கை விடுத்தார்.

## 11. இது தான் ஸ்வாமி

அண்ணாவுக்கு ஸ்வாமி "அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையே" தான். அவரது வாழ்வில் ஸ்வாமியின் லீலைகள் ஏராளம்.

இள வயதில் அண்ணா பார்வைக் கோளாறுக்காகக் கண்ணாடி அணிந்திருந்தார். ஒருமுறை கண்ணாடி காணாமல் போய் விட்டது. அதன் பிறகு அண்ணாவுக்குக் கண்ணாடி தேவைப்படவில்லை. (கடைசி இரண்டு வருட காலத்தில் கண் சர்ஜரிக்குப் பின்னர் கண்ணாடி அணிந்திருந்தார்.)

கண்ணாடியை ஒளித்து விளையாடியது ஸ்வாமியே என்று அண்ணா சொல்லி இருக்கிறார்.

ஸ்வாமி புத்தகம் எழுதுவதற்கு உதவும் விதத்தில் திடீரென சில புத்தகங்கள் அண்ணாவின் அறைக்குள் வந்து சேர்ந்தன. அவை ஜெர்மானிய மொழியில் எழுதப்பட்டவை. அண்ணாவுக்கு அந்த பாஷை தெரியாது. ஆனால், ஸ்வாமியின் அனுக்கிரகத்தால் அவர் அந்த நூல்களை வாசித்துப் பொருள் புரிந்து கொண்டு குறிப்புகளும் எடுத்துக் கொண்டார். அண்ணாவின் தேவை முடிந்ததும் அவை மாயமாய் மறைந்து விட்டன.

அண்ணா ஸ்வாமியின் லீலைகள் பற்றி என்னிடம் நிறையவே சொல்லி இருக்கிறார். சொல்லாததும் ஏராளம் என்பது புரிகிறது. எனினும், அவை அனைத்திலும் என்னை ரொம்பவும் கவர்ந்தது புட்டபர்த்தி செல்ல காசு கொடுத்த லீலை தான்.

ஒருமுறை சில அன்பர்கள் ஒரு வேன் அமர்த்திக் கொண்டு புட்டபர்த்தி போய் வரலாம் என்று திட்டமிடுகிறார்கள். தலைக்கு அறுநூறு ரூபாய் செலவாகும் என்று கணக்கிடுகிறார்கள். அண்ணாவையும் அழைக்கிறார்கள். அண்ணாவுக்கும் பர்த்தி போய் வர ஆசை தான். ஆனால், கல்கி வேலையை விட்டு நின்று விட்ட சமயம் அது. வருமானம் இல்லை. சேமிப்பும் குறைவாகவே இருந்தது. அறுநூறு ரூபாய் செலவு செய்ய தயக்கமாக இருந்தது.

எனவே, அவர் வீட்டில் இருக்கும் ஸ்வாமி படத்தைப் பார்த்து, "ஸ்வாமி, என் கிட்ட காசு இல்லை. நீங்க காசு கொடுத்தா புட்டபர்த்தி வரேன்" என்று சிரித்துக் கொண்டே சொல்லி விட்டார்.

மறுநாள் காலை அண்ணா விபூதி டப்பாவில் கை விட்டு விபூதி எடுக்கும் போது விபூதிக்குள் ஏதோ தட்டுப்பட்டது. என்னவென்று பார்த்தால், இருபத்தைந்து பைசா நாணயம்.

"நீங்க காசு கொடுத்தா வரேன்" என்று தானே அண்ணா சொன்னார். ஸ்வாமி இப்போது காசு கொடுத்து விட்டார். புட்டபர்த்தி கிளம்ப வேண்டியது தானே!

சற்று நேரத்தில் அண்ணா வீட்டுக்கு வந்த ஓர் அன்பர், தங்கள் குடும்பம் காரில் புட்டபர்த்தி செல்வதாகவும், அண்ணாவும் அவர்களுடன் வர வேண்டும் என்றும் சொல்லி, அவரைப் பர்த்தி அழைத்துச் சென்றார்.

காசு கொடுத்தவர் காரும் கொடுத்தனுப்பி விட்டார்.

***

ஆஸ்திகர்கள் மத்தியில் ஸ்வாமியைப் பற்றிப் பிரபலமாகச் சொல்லப்படும் விஷயம் ஒன்று உண்டு:

ஒருமுறை ஸ்வாமி, மூன்று பெரியவர்களையும் தரிசிக்கப் போனார். விஜயேந்திரர் முன்னே சென்றதும் கையைச் சுழற்றினார், மாலை வந்தது. அவருக்கு அணிவித்தார். அதேபோல ஜயேந்திரருக்கும் அணிவித்தார். இறுதியாக, பெரியவா முன்னால் நின்று கையைச் சுழற்றினார். மாலை வரவில்லை. பெரியவா அவரிடம், இதுபோல சித்து வேலைகளில் ஈடுபடக் கூடாது என்று கண்டித்து அனுப்பினார்.

- இதுவே அந்தச் சம்பவம்.

இது நிறைய தடவை என் காதுகளில் விழுந்திருக்கிறது. அண்ணாவிடம் ஒருமுறை இதுபற்றிக் கேட்டேன்.

ஸ்வாமி இம்மூவரில் ஒருவரைக் கூட நேரில் சந்தித்ததே இல்லை என்றும், இதுபோன்ற சம்பவம் யாரோ ஒருவருடைய கற்பனையில் உதித்ததாக மட்டுமே இருக்க முடியும் என்றும் அண்ணா தெரிவித்தார்.

அதேநேரத்தில், ஸ்வாமியின் இறுதிக் காலத்தில் ஜயேந்திரர் அவரை நேரில் சந்திக்க இருந்ததாகவும், ஏனோ அந்தச் சந்திப்பு ரத்தாகி விட்டதாகவும் அண்ணா தெரிவித்தார்.

***

ஸ்வாமியைப் பற்றி யார் யாரோ ஏதேதோ பேசினாலும், ஸ்வாமி அன்பு மலையாகவே இருந்தாலும், ஒருவகையில் பார்த்தால், அன்பர்களுக்கு அவர் கையில் பிரம்புடன் நிற்கும் சட்டாம்பிள்ளையாகவே காட்சி தருவார். அவ்வளவு கண்டிப்பு.

ஆசிரமத்து இளநீர்க் கடையில் கூட ஆண்களுக்கும் பெண்களுக்கும் தனி வரிசை இருப்பதை அண்ணா அழகிய உதாரணமாகக் குறிப்பிடுவார். ஸ்வாமி என்றாலே ஒழுக்கம் தான் என்று அண்ணா அடிக்கடி சொன்னதுண்டு எனினும், அவர் பெரியவாளைப் போல சாஸ்திரீய வழிகளைப் பெரிதும் வலியுறுத்தியதில்லை.

"பெரிதும்" தானே தவிர, வலியுறுத்தவே இல்லை என்று சொல்ல முடியாது.

அண்ணாவின் ஆசார அனுஷ்டானங்களை ஸ்வாமி ரொம்பப் பாராட்டிப் பேசி இருக்கிறார். "ஸ்வாமிக்கு இதெல்லாம் தேவையில்லை, ஆனால், பெரியவாளுடன் சம்பந்தம் இருப்பதால் நீ இப்படித்தான் இருக்க வேண்டும்" என்று அண்ணாவிடம் சொல்லி இருக்கிறார்.

***

ஒருமுறை ஓர் அன்பர், பெரியவாளிடம், "சாய்பாபா எப்பப் பார்த்தாலும் பக்தர்கள் கனவுல போய் காட்சி தர்றாரே! இது சரியா?" என்று கேட்டாராம்.

அதற்குப் பெரியவா, "அவர் அவதாரம். அவதாரம்னா கீழே இறங்கி வர்றது. அதனால அவர் பக்தர்கள் மட்டத்துக்கு இறங்கிப் போய் காட்சி தரத் தான் செய்வார்" என்று குறிப்பிட்டாராம்.

***

ஸ்வாமி பற்றி அண்ணா வாழ்வில் மிக முக்கியமாகக் குறிப்பிடப்பட வேண்டியது என ஒரு சம்பவத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

ஒருமுறை ஒரு பத்திரிகையில் ஸ்வாமி பற்றி அண்ணா ஒரு தொடர் எழுதலாம் என்று முடிவானது. எழுத ஆரம்பிக்கும் முன்பு ஸ்வாமியை தரிசனம் செய்து அனுமதி வாங்க விரும்பிய அண்ணா. அதற்காக புட்டபர்த்தி சென்றார்.

வழக்கமாக, நேரே அண்ணா அமர்ந்திருக்கும் இடத்துக்கு வந்து தலையைத் தட்டி "Go" சொல்லும் ஸ்வாமி, இப்போது அண்ணா இருந்த இடத்தைத் திரும்பிக் கூடப் பார்க்கவில்லை. அண்ணா மூன்று நாட்கள் தங்கி இருந்தார். ஸ்வாமி அவரைக் கண்டு கொள்ளவே இல்லை.

எழுதுவது என்று ஏற்கெனவே ஒத்துக் கொண்டு அந்தப் பத்திரிகையில் அறிவிப்பும் போட்டு விட்டார்கள். எனவே, ஸ்வாமியிடம் அனுமதி வாங்காமலேயே அண்ணா தொடரை எழுத ஆரம்பித்து விட்டார். மிக விரைவாக எழுதி, மொத்தக் கட்டுரைகளையும் ஒருசேர அனுப்பி வைத்து விட்டார்.

அதன்பிறகு ஆரம்பித்தது வில்லங்கம்.

அண்ணா எழுதியதற்கும் பத்திரிகையில் வெளியானதற்கும் சம்பந்தமே இல்லை. அண்ணா ஏதோ எழுதிக் கொடுத்திருந்தார். அத்துடன் தனது சொந்தச் சரக்கைச் சேர்க்கிறேன் பேர்வழி என்ற பெயரில் அந்தப் பத்திரிகை ஆசிரியர் நிறைய தவறான தகவல்களைச் சேர்த்து அதையே பத்திரிகையில் வெளியிட்டார். (பத்திரிகையும் பிரபலமானது, ஆசிரியரும் அப்படியே.)

அண்ணாவுக்கு இது மிகுந்த வேதனையாக இருந்தது. ஸ்வாமி பற்றித் தப்பும் தவறுமாக என் பெயரிலேயே வெளியாகிறதே என்று வேதனை ஏற்பட்டது.

பத்திரிகை ஆசிரியரிடம் போய்க் கேட்க வேண்டும், அவர் ஒத்துக் கொள்ளவில்லை என்றால் தகராறு பண்ணி, தொடரை நிறுத்த வேண்டும். இதுபோன்ற செய்கைகளில் அண்ணாவுக்கு என்றுமே உடன்பாடு இல்லை.

ஸ்வாமிக்குப் பெரிய அபசாரம் பண்ணி விட்டோம் என்ற உறுத்தல் அவருக்கு ஏற்பட்டது. எனவே, மன ஆறுதலுக்காக பர்த்தி சென்றார்.

தரிசனத்தின் போது வழக்கம் போல அவரை நோக்கி விறுவிறுவென வந்த ஸ்வாமி, தலையைத் தட்டி "Go" சொன்னார். இன்டர்வியூ சமயத்தில் அண்ணா அவரிடம் தனது வேதனையைத் தெரிவித்தார்.

அதற்கு ஸ்வாமி, "இதோ பார், நீ சரியாகத் தானே எழுதிக் கொடுத்தாய். அவர்கள் தானே தவறாக வெளியிடுகிறார்கள். அதைப் பற்றி நீ ஏன் கவலைப்படுகிறாய்?" என்று கேட்டாராம்.

அண்ணா, "உங்களைப் பற்றித் தப்பும் தவறுமாக செய்தி வெளியாவதற்கு நான் காரணமாக இருந்து விட்டேன்" என்று சொன்னாராம்.

உடனே, ஸ்வாமி, "ஸ்வாமி பற்றி எந்த மாதிரி செய்தி வந்தாலும் ஸ்வாமிக்கு அது பொருட்டே இல்லை. நீயும் அதுபற்றிக் கண்டு கொள்ள வேண்டாம்" என்று சொன்னாராம்.

இது தான் ஸ்வாமி என்று அண்ணா சொல்லுவார்.

## 12. பெரியவா, அண்ணா - சில தகவல்கள்

அண்ணாவின் அறிவாற்றல் - குறிப்பாக, மொழியறிவு - பற்றிய சில விவரங்களைக் குறிப்பிட்டிருந்தேன். நாளடைவில் பெரியவாளையும் பற்றி ஓரளவு தெரிந்து கொள்ளும் வாய்ப்புக் கிடைத்தது. பெரியவா பற்றிப் படித்துத் தெரிந்து கொண்டதும் உண்டு, அண்ணா மூலம் கேள்விப்பட்டதும் உண்டு.

மடத்து அதிபரான சில மாதங்களிலேயே பெரியவாளின் ஆழ்ந்த ஞானத்தை அனைவரும் தெரிந்து கொண்டனர். அவருக்கு பாஷ்ய பாடம் நடத்திய ஆசிரியர்களின் கேள்விக்கு (அப்போது அவருக்குப் பதினான்கு வயது.) அவர் சொன்ன பதில் அனைவரையும் வியப்படைய வைத்தது. அவருக்குச் சொல்லிக் கொடுக்கப்பட்ட பாடம் மட்டுமல்ல, சொல்லிக் கொடுக்கப்படாத பாடத்தையும் சேர்த்தே அவர் விளக்கினார். (பெரியவா முறைப்படி பாடசாலையில் படித்தவர் அல்ல, கிறிஸ்தவ கான்வென்டில் படித்தவர் என்பதையும் இங்கு நினைவில் கொள்ள வேண்டியது அவசியம்.)

பெரியவாளின் சங்கீத அறிவு, நாட்டிய அறிவு குறித்தும் ஓரளவு கேள்விப்பட்டிருந்தேன். மேலும், அரசியல் சட்டத்தில் பெரியவாளுக்கு அபார அறிவு உண்டு என்பதையும் கேள்விப்பட்டிருந்தேன். இதுகுறித்த ஒருசில சம்பவங்களையும் அறிவேன். அண்ணாவுடன் பெரியவா ஆங்கில இலக்கிய விஷயங்களைப் பற்றி சர்வ சாதாரணமாக உரையாடுவதுண்டு என்பதைப் பற்றியும் படித்திருந்தேன். (கீட்ஸ், ஷெல்லி இருவரின் பாடல்களில் அண்ணா கவனித்திராத சில நுட்பமான இலக்கியக் கருத்துகளைப் பெரியவா சுட்டிக் காட்டியதை அண்ணா என்னிடம் சொல்லி இருக்கிறார். கருணைக் கடலில் சில அலைகள் புத்தகத்தில் எழுதியும் இருக்கிறார்.) பல்வேறு மேற்கத்திய மொழிகளிலும் அவருக்குப் பரிசயம் இருந்தது என்பதையும் கேள்விப்பட்டிருந்தேன்.

இந்நிலையில் ஒருமுறை அண்ணாவைப் பார்க்க வந்திருந்த ஓர் அன்பர் பெரியவாளின் சட்ட அறிவை விளக்கும் விதத்தில் ஒரு சம்பவத்தைப் பற்றிக் குறிப்பிட்டார். அது ஏதோ கோவில் நில அபகரிப்பு விவகாரம் பற்றியது. எல்லா கோர்ட்களிலும் தோற்றுப் போன அந்த விவகாரம் இறுதியாக ப்ரைவி கவுன்சிலுக்குப் போகும் போது அரசு வழக்கறிஞர் பெரியவாளை நமஸ்கரித்து கேஸ் விவரம் தெரிவித்ததாகவும், பெரியவா அவருக்கு மிகமிக நுட்பமான சட்ட அம்சத்தை எடுத்துக் காட்டியதாகவும், அதைத்தொடர்ந்து ப்ரைவி கவுன்சிலில் ஆச்சரியப்படத்தக்க விதத்தில் அந்த கேஸ் ஜயித்ததாகவும் அந்த அன்பர் விவரித்தார். (அந்த வழக்கு பற்றி இதற்கு மேல் வேறு விவரம் எதுவும் என் நினைவில் இல்லை.)

இது எனக்குள் ஒரு பெருத்த கேள்வியை எழுப்பியது. பெரியவாளது ஞானத்தின் ஆழம் ஒருபுறம் இருக்கட்டும். இத்தனை துறைகளில் ஒருவருக்கு ஆழ்ந்த ஞானம் இருப்பது எப்படி சாத்தியமானது என்ற கேள்வி எனக்குள் எழுந்தது. பெரியவாளுக்குப் பல்துறை ஞானம் இருந்தது என்பது சரி. ஆனால், அதை அவர் எவ்வாறு அடைந்தார்? அதற்கு ஏதோ ஒரு கருவியை அவர் பயன்படுத்தி இருக்க வேண்டுமல்லவா?

உதாரணமாக, ஸ்வாமி விவேகானந்தருக்கு ஃபோட்டோஜீனிக் மெமரி என்று சொல்வார்கள். அவர் ஒரு பக்கத்தைப் பார்வையிடும் போதே அந்தப் பக்கத்தில் உள்ள விஷயங்கள் அவர் நினைவில் முழுமையாகப் பதிந்து விடும், இவ்வாறு அவர் என்சைக்ளோபீடியா முழுவதையும் மனப்பாடமாக அறிந்திருந்தார் என்று சொல்வார்கள்.

பெரியவாளும் அதுபோலவே ஏராளமான துறைகள் சார்ந்த நூல்களைப் பார்வையிட்டதன் மூலம் இத்தகைய பல்துறை அறிவைச் சம்பாதித்திருந்தார் என்றே வைத்துக் கொள்வோம். அவருக்கு இருந்த அலுவல்களுக்கு மத்தியில் இத்தனை பல்வேறுபட்ட புத்தகங்களைப் புரட்டிப் பார்க்குமளவுக்காவது அவருக்கு நேரம் இருந்திருக்குமா?

அடுத்த முறை அண்ணாவிடம் சென்றிருந்த போது இதைப்பற்றிக் கேட்டேன். அதற்கு அண்ணா, "இதெல்லாம் புஸ்தகம் படிச்சுத் தெரிஞ்சுக்கறது இல்லை. cosmos-ல் (ஆகாயம், விண்வெளி) இருக்கும் இன்ஃபர்மேஷனுடன் நம் மூளையின் அலைவரிசையை ட்யூன் பண்ணி எடுத்துக் கொள்வது" என்று சொன்னார்.

**நமஸ்காரம், திரஸ்காரம்**

எனக்குத் தெரிந்த ஒரு பெரியவர் இருந்தார். எண்பது பிராயம் கடந்தவர். சிருங்கேரி, காஞ்சி இரண்டு பீடங்களின் மீதும் மிகுந்த மரியாதை உடையவர். தமிழ், ஹிந்தி, சம்ஸ்கிருதம் ஆகிய மூன்று மொழிகளிலும் ஆழ்ந்த தேர்ச்சி உடையவர்.

அண்ணாவைப் பார்க்க வேண்டும் என்று அவர் மிகவும் ஆசைப்பட்டார். ஒருநாள் மாலை அவரை அண்ணாவிடம் அழைத்துச் சென்றேன்.

அப்போது அண்ணா மாலை நேர அனுஷ்டானங்களில் இருந்தார். எனவே, அந்தப் பெரியவரை மருந்தீஸ்வரர் ஆலயத்துக்கு அழைத்துச் சென்றேன். நாங்கள் திரும்பி வரும் போது அண்ணா நடைப்பயிற்சிக்காகக் கடற்கரைக்குச் செல்லத் தயாராக இருந்தார். அவரையும் கடற்கரைக்கே அழைத்து வருமாறு சொல்லி விட்டார்.

அண்ணா வாக்கிங் முடித்துத் திரும்பும் வரை நான் அந்தப் பெரியவருடன் கடற்கரையில் அமர்ந்திருந்தேன். அண்ணா வந்து சேர்ந்ததும் இருவரும் பெரியவா பற்றிக் கொஞ்ச நேரம் பேசிக் கொண்டிருந்தார்கள். கிளம்பும் போது அந்தப் பெரியவர் அண்ணாவை நமஸ்கரிக்க விரும்பினார். அவர் அண்ணாவை விட மிகவும் மூத்தவர். எனினும், அண்ணா அவரை நமஸ்காரம் பண்ண அனுமதித்தார்.

நமஸ்காரம் பண்ணி முடித்ததும் அந்தப் பெரியவர் மனதில் திடீரென ஒருவித கூச்சம் ஏற்பட்டது. தன்னை விடச் சிறியவரை நமஸ்கரித்து விட்டோம் என்பதால் ஏற்பட்ட கூச்சம் அது.

கூச்சத்தைப் போக்கிக் கொள்ளும் விதமாக அவர் ஏதேதோ சமாதானங்கள் சொல்லி, இறுதியாக, "ஆகாசாத் பதிதம் தோயம் யதா கச்சதி ஸாகரம், ஸர்வ தேவ நமஸ்காரம் கேசவம் ப்ரதிகச்சதி (ஆகாயத்தில் இருந்து பெய்யும் மழைத்துளி ஒவ்வொன்றும் எவ்வாறு இறுதியில் சமுத்திரத்தையே சென்றடைகிறதோ, அதேபோல, எந்த தேவதைக்குச் செய்யப்படும் நமஸ்காரமும் இறுதியில் கேசவனையே சென்றடைகிறது" என்று குறிப்பிட்டார்.

அதற்கு அண்ணா, "நமஸ்காரம் மட்டுமல்ல, திரஸ்காரமும் தான். ஸர்வதேவ திரஸ்காரமும் கேசவம் தான் ப்ரதிகச்சதி-ன்னு பெரியவா அடிக்கடி சொல்லுவா" என்று குறிப்பிட்டார். (எந்த தெய்வத்தை இழிவுபடுத்தினாலும் அதுவும் கேசவனையே சென்றடைகிறது என்பது இதன் பொருள்.)

நாம் ஆங்கில வார்த்தைகள் கலந்த தமிழில் பேசுவது போலவே, தமிழ் வார்த்தைகளைச் சேர்த்துப் பெரியவா சொன்ன புதுமையான அந்த சம்ஸ்கிருத சுலோகத்தை அந்தப் பெரியவர் மிகவும் ரசித்தார்.

அண்ணா முழுத் துறவியாகவே வாழ்ந்தவர். எனினும், அவர் துறவற தீக்ஷை பெறவில்லை. வயதில் இளையவர் துறவியாக இருந்தால் மட்டுமே அவரை நமஸ்கரிக்கலாம். பிரம்மசாரியை கிரஹஸ்தர் நமஸ்காரம் பண்ணுவதற்கும் சாஸ்திர அனுமதி கிடையாது.

அண்ணாவை நமஸ்காரம் பண்ணிய அந்தப் பெரியவரும் துறவியைப் போலவே வாழ்ந்தவர் தான். இள வயதிலேயே மனைவியை இழந்த அவர், மீண்டும் திருமணம் செய்து கொள்ளவில்லை. மிக எளிமையான வாழ்க்கையே வாழ்ந்து வந்தார்.

**இதுக்கு மேலே மரியாதை கொடுக்க முடியாது**

அண்ணா வாழ்க்கை ரொம்ப சீரியஸ் பணிகளை உள்ளடக்கியது என்றாலும், அவரிடம் வேடிக்கைப் பேச்சுக்குப் பஞ்சமில்லை. வேதப் பொருளே மானுடக் காயம் தரித்து வந்தது என்று போற்றப்படும் பெரியவாளும் அப்படியேதான்.

பெரியவா ஜோக்குகள் சீரியஸான வேடிக்கை என்று தான் சொல்ல வேண்டும். அவர் சொல்லும் ஜோக்குகள் பெரும்பாலும் மொழி அல்லது தத்துவம் சம்பந்தப்பட்ட விஷயமாகவே இருக்கும். மிகுந்த மொழியறிவும் சாஸ்திர பரிசயமும் உள்ளவர்கள் தான் அவற்றை ரசிக்க முடியும். எனவே, பெரும்பாலும், அவர் சொல்லும் ஜோக்குகளைக் கேட்டால் சிரிப்பு வர வாய்ப்புக் குறைவு தான்.

ஒருமுறை அண்ணா மடத்துக்கு வரும்போது, மடத்தில் இருந்து அவசரமாகக் கிளம்பும் ஓர் அன்பருக்குத் தனது காரில் லிஃப்ட் தர வேண்டி நேரிட்டது. போகும் வழியில் அந்த மனிதர் பெரியவாளின் கருணையை வியந்து பேசிக் கொண்டே வந்தார். அவர், தனது மகளுக்கு நல்ல வரன் அமைய வேண்டும் என்று பெரியவாளிடம் பிரார்த்தனை பண்ணுவதற்காக மடத்துக்கு வந்திருந்தாராம். பெரியவாளும் கருணையுடன் ஆசீர்வாதம் பண்ணினாராம். எனினும், மடத்தில் இருந்து வெளியே வரும் போதே பெரியவாளின் ஆசி பலிதமாகி விடுவது என்பது கற்பனைக்கெட்டாத ஆச்சரியம் அல்லவா என்று அந்த மனிதர் வியந்து கூறினார்.

அதுமட்டுமல்ல, தன் மகளுக்கு வாய்த்த வரன் என்ன சாமானியமான மனிதரா? எப்பேர்ப்பட்ட ஞானம், எப்பேர்ப்பட்ட எழுத்தாற்றல், எவ்வளவு பிராபல்யம்? யாருக்குக் கிடைக்க முடியும் இத்தகைய மாப்பிள்ளை என்று பெரியவாளின் அனுக்கிரக மகிமையைப் போற்றியவாறே வந்தார்.

(அண்ணாவுக்கு எல்லாக் காலத்திலுமே இரவல் கார் தான். அல்லது, வாடகை வண்டியைப் பயன்படுத்தியதும் உண்டு. கார் வாங்கும் அளவு அவருக்குப் பொருள் வசதி இருந்ததே இல்லை. கல்கியில் பணிபுரிந்த காலத்தில் பெரும்பாலும் பேருந்துப் பயணமே. எனினும், பல தடவை சதாசிவம், அவருக்கு காரும், பெட்ரோலுக்கான பணமும் கொடுத்து அனுப்பியதும் உண்டு.)

அண்ணாவுக்கோ ஒரே குழப்பம். அந்த மனிதர் சாக்ஷாத் தன்னையே தான் அவருக்கு மாப்பிள்ளை ஆகப்போகும் வரனாகக் கருதுகிறார் என்பது அண்ணாவுக்கு நன்றாகவே புரிந்தது. இதில் பிரச்சினை பெரியவா சம்பந்தப்பட்டது. இந்த மனிதரிடம் பெரியவா என்ன சொல்லித் தொலைத்தார் என்பது பெரிய கேள்வி. அவர் ஏடாகூடமாக அண்ணாவைப் பற்றி ஏதாவது சொல்லி இருந்தால்....? பெரியவா வார்த்தையை அண்ணாவால் எப்படி மீற முடியும்?

அந்த அன்பரை ட்ராப் பண்ணி விட்டுத் திரும்பிய அண்ணா, குழப்பம் தீராத நிலையிலேயே பெரியவாளிடம் வந்து சேர்ந்தார். தனது சன்னியாசக் கனவு காலாவதி ஆகி விடுமோ என்ற குழப்பமும் பயமும் மட்டுமல்ல, தனது கல்யாண விஷயமாகப் பெரியவா ஏதோ சொல்லி விட்டார் என்று அவர் மீது படு பயங்கர ஆத்திரமும் பொங்க அவரை நமஸ்கரித்து எழுந்தார்.

அந்த அன்பர் சொன்ன விஷயங்களைப் பெரியவாளிடம் தெரிவித்த அண்ணா, “அவர் கிட்ட பெரியவா என்னைப் பத்தி என்ன சொன்னேள்?” என்று தயங்கித் தயங்கிக் கேட்டார்.

“ஐயய்யோ, அப்படியா புரிஞ்சுண்டுட்டான், அவன்? குழந்தைக்கு நல்ல மாப்பிள்ளை அமையும்னு தானே ஆசீர்வாதம் பண்ணினேன்! உன்னாட்டம் மாப்பிள்ளைன்னு சொல்லவே இல்லையே!!” என்ற பெரியவா, “அவன் தப்பாப் புரிஞ்சுண்டதுக்கு நானா பழி? நீ ஏன் என்கிட்ட கோவிச்சுக்கறே?” என்று கேட்டாராம்.

(பெரியவா சொன்னதை அப்படியே என்னிடம் சொல்லிக் காட்டினார், அண்ணா. நல்ல மாப்பிள்ளை என்பதைப் பெரியவா சொன்னது போலவே மிகவும் அழுத்தமான உச்சரிப்புடன் சொன்னார். எனக்குப் பெரிதாகச் சிரிப்பு வந்தது.)

***

பீடாதிபதி முன்னிலையில் நின்று பேசும் போது யாராக இருந்தாலும் உடலை வளைத்து நின்று தான் பேசுவார்கள். மேலும், உள்ளங்கையை வாய்ப்பகுதிக்கு முன்பாக வைத்துக் கொண்டு பேசுவார்கள். (எச்சில் தெறித்து விடாமல் இருப்பதற்காக.)

அண்ணாவும், பெரியவா முன்பாக இருக்கும் சமயங்களில், வாய் பொத்தி நிற்பதுண்டு. ஆனால், அண்ணாவால் நீண்ட நேரம் வளைந்து நிற்க முடியாது. (அண்ணாவின் நிமிர்ந்த முதுகு பற்றிய சில விவரங்களைப் பின்னர் தெரிவிக்கிறேன்.) அன்பர்கள் அனைவரும் கடைப்பிடிக்கும் வழக்கத்தைத் தன்னால் முழுமையாகக் கடைப்பிடிக்க முடியவில்லையே என்ற வருத்தம் அண்ணாவுக்கு இருந்தது. ஒருநாள் பெரியவாளிடம் இதைத் தெரிவித்து மன்னிப்புக் கோரினார், அண்ணா.

“உன்னால இதுக்கு மேல எனக்கு மரியாதை குடுக்க முடியாதுன்னு சொல்றே. பரவாயில்லை, ஏதோ இந்த அளவுக்காவது குடுக்கறியேன்னு நான் சந்தோஷமா அக்ஸெப்ட் பண்ணிக்கறேன்” என்றாராம் பெரியவா.

***

பெரியவாளின் பல்துறை அறிவு பற்றி முந்தைய பதிவு ஒன்றில் குறிப்பிட்டிருந்தேன். அந்தப் பல்துறைகளில் சமையலும் ஒன்று. சமையலின் பல்வேறு நுட்பங்கள் பற்றிப் பெரியவா ரொம்ப ரசித்துப் பேசுவதுண்டு. இதனால் அன்பர்கள் மத்தியில் அவருக்கு அடுப்பாங்கரைச் சாமியார் என்ற திருநாமம் வழக்கில் இருப்பதையும் அண்ணா எழுதி உள்ளார்.

சைத்தான், பிசாசு ஆகிய இரண்டும் அவருக்கு அண்ணா சூட்டிய திருநாமங்கள். பெரியவா மகாசமாதி அடைந்ததும், “என்னைப் பிடித்துக் கொண்டு வலுக்கட்டாயமாக எழுத வைத்த பிசாசு மலையேறி விட்டது” என்று அண்ணா குறிப்பிட்டார். பிசாசு திருநாமம் அவர் எழுத்தில் இல்லை என்றே நினைக்கிறேன். ஆனால் சைத்தான் திருநாமத்தை எழுத்திலும் குறிப்பிட்டிருக்கிறார்.

***

அடுப்பாங்கரை என்றதுமே அடுத்தவர் வீட்டு அடுப்பங்கரைக்குள் “திருட்டுத்தனமாக”ப் பெரியவா நுழைந்த சம்பவம் நினைவுக்கு வருகிறது. 1930களில் நடந்த இந்தச் சம்பவம் மடத்து அன்பர்கள் மத்தியில் மிகவும் பிரபலம். எனினும், மற்றவர்களுக்குப் புதிய விஷயமாக இருக்கலாம் என்பதால் அதை இங்கே தருகிறேன்.

ஒருநாள் இரவு தஞ்சையை அடுத்த ரிஷிவந்தியம் கிராமத்தின் வழியே பெரியவா மேனாவில் (பல்லக்கில்) வந்து கொண்டிருந்தார். அந்த கிராமத்து எல்லையில் தங்கலாம் என்று முடிவானது. மேனா தூக்குபவர்கள் சற்றுத் தள்ளி மரத்தடியில் படுத்து உறங்கி விட்டனர். பெரியவா மேனாவில் ஒடுங்கி அமர்ந்த நிலைவாறு உறங்க ஆரம்பித்தார்.

வழக்கம்போல அதிகாலை மூன்று மணியளவில் உறக்கம் கலைந்து எழுந்த பெரியவா மேனாவிலேயே அமர்ந்திருந்தார். அப்போது அருகே இருந்த ஒரு வீட்டின் வாசல் கதவு தாழ்ப்பாள் நீக்கப்படும் சத்தம் கேட்டது. வீட்டை விட்டுப் பால் பாத்திரத்துடன் வெளியே வந்த ஒரு பாட்டியம்மாள், பால்காரன் இன்னும் வரவில்லை என்று தனக்குத் தானே பேசிக்கொண்டதும் பெரியவா காதில் விழுந்தது. உள்ளே சென்ற பாட்டியம்மாள் வாசல் கதவைத் தாழிட மறந்து விட்டார். அடுத்ததாக, வீட்டின் கொல்லைப்புறக் கதவு திறக்கும் ஓசை கேட்டது. பல நிமிடங்கள் ஆன பின்னரும் அந்தக் கதவு மூடப்பட்ட சத்தம் கேட்கவில்லை. எனவே, அந்தப் பாட்டியம்மாள் கொல்லைப்பறத்தில் இருந்து வீட்டுக்குள் திரும்பி விட்டார், அந்தக் கதவையும் தாழிட மறந்து விட்டார் என்று பெரியவா ஊகித்தார்.

இதன்பின்னர் தான் பால்காரன் வந்தான். அவன் பலமுறை குரல் கொடுத்தும் பாட்டி கதவைத் திறக்கவில்லை. பாட்டி அசந்து உறங்கி விட்டார் என்பதை ஊகித்துப் புரிந்து கொண்ட பெரியவா, மேனாவில் இருந்த ஒரு வெள்ளை சால்வையை எடுத்துப் போர்த்திக் கொண்டு வீட்டின் பின்புறம் வழியாகத் “திருட்டுத் தனமாக” சுவரேறிக் குதித்து வீட்டினுள் நுழைந்தார்.

ஆகா! வாராணசியில் மண்டன மிச்ரர் வீட்டுக்குள் ஆசார்யாள் நுழைந்த சம்பவம் நினைவு வருகிறதா!! அங்கே ஆதி சங்கரர் மரத்தின் உதவியால் சுவரைத் தாண்டினார். இங்கே நவீன கால சங்கரரோ சுவரேறிக் குதித்தார்.

அடுப்பங்கரை வாசலில் வைக்கப்பட்டிருந்த பால் பாத்திரத்தை நிலவொளியின் உதவியால் கண்டுபிடித்த பெரியவா, அதை ஓசைப்படாமல் எடுத்துக் கொண்டு, பாட்டியின் தூக்கம் கலைந்து விடாமல் இருப்பதற்காகப் பூனை மாதிரி நடந்து வீட்டு வாசலுக்கு வந்து பாத்திரத்தைத் திண்ணையில் வைத்தார். சாக்ஷாத் ஜகத்குரு சந்திரசேகர ஸ்வாமிகள் தான் விதவைப் பாட்டி கோலத்தில் வீட்டு வாசலில் நிற்கிறார் என்பதை அறியாத பால்காரரும், தான் கொண்டு வந்திருந்த பாலைப் பாட்டியின் பாத்திரத்தில் ஊற்றிவிட்டு இடத்தைக் காலி பண்ணினார். சந்தடி இல்லாமல் வீட்டுக்குள் நடந்து போய் பால் பாத்திரத்தை அடுக்களை

வாசலில் வைத்த பெரியவா, "திருட்டுத் தனமாக" வந்த வழியிலேயே திரும்பி மீண்டும் மேனாவுக்குள் முடங்கினார்.

உறக்கம் கலைந்து எழுந்த பாட்டியம்மாள் பால் பாத்திரத்தை எடுத்துப் பார்த்தால், உள்ளே பால் நிரம்பி இருக்கிறது. தான் உறங்கிக் கொண்டிருக்கும் போது பால்காரன் வீட்டுக்குள் நுழைந்து பாத்திரத்தில் பாலை ஊற்றி இருக்கிறான் என்று நினைத்த பாட்டிக்கு ஒரே ஆத்திரம். பால்காரன் வீட்டுக்குள் நுழைந்ததைப் பெரிய ஆசாரக் குறைவாகக் கருதிய பாட்டி, வெளியே வந்து, வாய் நிறைய அர்ச்சனையுடன் அவனைத் தேட ஆரம்பித்தாள். பாட்டியின் அர்ச்சனையில் பிரதானமாக இடம் பெற்ற வசவு "கட்டையில போறவன்" என்பதே. "எங்கே போயிட்டான், எங்கே போயிட்டான் கட்டையில போறவன்?" என்று புலம்பிக் கொண்டிருந்த பாட்டியின் முன்னால் சென்று காட்சி அளித்த பெரியவா, "ஒங்கும் போயிடல, இங்கே தான் இருக்கான்" என்று சிரித்துக் கொண்டே சொன்னார்.

பெரியவா திருவாக்கின் மூலம் நடந்த செய்கைகளை அறிந்த பாட்டியம்மாள், தனது பாமர வீட்டுக்குள் பெரியவா பாதம் பதித்ததையும், விஷயம் புரியாமல் தான் பெரியவாளைக் கண்டபடி ஏசியதையும் நினைத்து மிகவும் துக்கப்பட்டு அழ ஆரம்பித்தாள்.

ஆனால் பெரியவாளோ, "பாட்டீ, நீ ஒண்ணும் தப்பாச் சொல்லலை. சரியாத்தான் சொல்லி இருக்கே. நான் கட்டையில போறவன் தானே!" என்று சொல்லித் தன் பாதுகைகளையும் மேனாவையும் சுட்டிக் காட்டினாராம். இரண்டுமே மரத்தால் ஆனவை. (பெரியவா பாதுகை ஃபோட்டோக்களைப் பார்க்கும் போதெல்லாம் எனக்கு இந்தச் சம்பவம் தான் நினைவுக்கு வரும்.)

சிரிப்பு வருகிறது.

சிரிப்பு மட்டும் தானா வருகிறது?

**ரிஷி மந்த்ர த்ரஷ்டா**

ஒருமுறை அண்ணாவுக்கு திடீரென ஒரு சந்தேகம் பிறந்தது. உபநிஷதம் ஒன்றில் உள்ள ஒரு பாட பேதத்தைப் பற்றிய சந்தேகம் அது. அந்த உபநிஷத்தில் உள்ள ஒரு வரியை வைஷ்ணவர்கள் ஒரு மாதிரியும், ஸ்மார்த்தர்கள் வேறு மாதிரியும் சொல்கிறார்கள். வேதத்தில் இதுபோன்ற உச்சரிப்பு வேறுபாடு ஏற்பட வாய்ப்பே இல்லை. இவர்கள் இருவரும் சொல்லும் முறையில் எது சரியானது என்பதே அண்ணாவின் சந்தேகம்.

அண்ணா இந்த சந்தேகத்தைப் பெரியவாளிடம் கேட்டார். பெரியவா, கிண்டலாக, "என் கிட்ட ஏன் கேட்கற? நீ தான் என்னவோ பண்ணுவியே" என்று சொல்லி, மூக்கைப் பிடித்துக் கொண்டு தியானம் பண்ணுவது போலச் செய்து காட்டி, "நீயாவே தெரிஞ்சுக்கோயேன்" என்று சொன்னாராம். அண்ணாவுக்கு ஆத்திரமான ஆத்திரம்! இந்தக் கிழவரிடம் நிஜமாகவே சந்தேகம் தானே கேட்டேன், இதற்கும் கேலி கிண்டல் தானா என்ற வருத்தம் மேலிட்டது. மௌனமாகத் திரும்பி விட்டார்.

சற்று நேரத்தில் திடீரென ஓர் எண்ணம் பளிச்சிட்டது. "தியானத்தில் உட்கார்ந்து நீயாகவே தெரிந்து கொள் என்று பெரியவா சொல்லி இருக்கிறார். அவர் என்ன சொன்னாலும் அது எனக்கு வேத வாக்கு அல்லவா?" என்று அவருக்குத் தோன்றியது. மடத்தின் ஓர் அறைக்குள் சென்று தியானத்தில் அமர்ந்து விட்டார்.

எப்போதும், தியானத்தில் அமர்ந்த உடனேயே அண்ணா சமாதி நிலைக்குள் போய் விடுவார். அன்றும் அப்படியே.

சமாதி நிலை என்பது செயல் மட்டுமல்ல, நினைவும் இல்லாத நிலை. அத்தகைய நிலையில் அவருக்குள் அந்த உபநிஷத் மந்திரம் முழுவதும் அலை வடிவில் காட்சி அளித்ததாம். அண்ணாவால் அதை விளக்க முடியவில்லை. இருந்தாலும், ரிஷிகள் மந்திரங்களைக் கண்டுபிடித்தது இந்த வடிவத்தில் தான் என்பது அவருக்குத் தெளிவாகப் புரிந்தது. மந்திரம் என்பது கேட்கப்படுவது - சப்தம். ஆனால், ரிஷிகள்

மந்திரங்களைப் பார்த்தார்கள் என்று தான் சொல்லப்படுகிறது. "மந்திரங்களைப் பார்த்தவர் ரிஷி" என்ற பொருளில் "ரிஷி மந்திர த்ரஷ்டா" என்று சொல்வார்கள்.

உண்மையில், அது கண்களால் பார்க்கப்படுவதும் அல்ல, காதுகளால் கேட்கட்படுவதும் அல்ல. அது புலன்களுக்கு அப்பாற்பட்ட விஷயம்.

அவருக்குக் கிட்டிய உபநிஷத் வடிவத்தின்படி பார்த்தால் வைஷ்ணவர்கள் சொல்லும் உபநிஷத வரி தான் சரியானது.

தான் புரிந்து கொண்டது சரிதானா என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்காகப் பெரியவாளிடம் போய் அதைத் தெரிவித்தாராம், அண்ணா.

அதற்குப் பெரியவா, "எனக்குத் தெரியுமே, நீ இப்படித் தான் ஏடாகூடமா என்னை வம்பில மாட்டி விட்டுடுவே. நான் என்னவோ ஆசார்யாள் பெயரைச் சொல்லி காலட்சேபம் பண்ணிண்டிருக்கேன். நீயானா ஆசார்யாள் சொன்னதெல்லாம் தப்பு, வைஷ்ணவா சொல்றது தான் சரின்னு பிரசாரம் பண்ண ஆரம்பிக்கறே. தோ பாரு, இந்த சமாசாரத்தை உன்னோட வச்சிக்கோ. யார் கிட்டயும் சொல்லிடாதே!" என்று சொன்னாராம்.

பெரியவா தன்னைப் பற்றி மட்டம் தட்டிப் பேசிக் கொள்வது அன்பர்கள் அனைவருக்கும் பழகிப் போன விஷயமே. அவர் தன்னை மகா மட்டமானவராக வர்ணித்துக் கொள்வதுண்டு. குருடு, பொட்டை, கண்ணும் பொட்டை அறிவும் பொட்டை, முட்டாள்களுக்கு அதிபதி, தந்திரக்காரச் சாமியார், சாப்பிட்டுச் சாப்பிட்டு வயிறு வளர்த்திருக்கேன் - இதுபோல ஏராளமான சுய வர்ணனைகள் உண்டு. பெரியவா தன்னைப் பற்றி இவ்வாறு வர்ணித்துக் கொள்ளும் போது அண்ணா மனதுக்குள் பொங்கிப் பொங்கி அழுவதும் உண்டு.

ஆனாலும், பெரியவா சொன்ன வார்த்தைகளை அண்ணா என்னிடம் கூறிய போது, இது வழக்கமான சுய கேலி வகையைச் சேர்ந்தது அல்ல என்று எனக்குத் தோன்றியது. "பெரியவா சொன்னதுக்கு என்ன அர்த்தம்?" என்று அண்ணாவிடம் கேட்டேன்.

"நீ ஆசைப்பட்டே. நான் அனுக்கிரகம் பண்ணினேன். உண்மையைத் தெரிஞ்சுண்டே. அத்தோட விஷயம் முடிஞ்சது. இதைப் பத்திப் பெருசா வெளியில டமாரம் அடிச்சுடாதேன்னு அர்த்தம். எனக்கு அப்படித்தான் தோணித்து" என்று அண்ணா கூறினார்.

(அண்ணாவைப் பற்றி எழுதும் ஆசை, அது அண்ணாவுக்குப் பிடிக்காத விஷயம் என்பதால் எனக்கு நானே போட்டுக் கொண்ட தடை இரண்டையும் பற்றி விரிவாகச் சொல்லி இருந்தேன். இருந்தாலும், பிற்காலத்தில் அண்ணாவைப் பற்றி நான் எழுத நேர்ந்தால் இந்தச் சம்பவத்தை மிகச் சரியாகவும் முழுமையாகவும் சொல்ல வேண்டும் என்று மனதில் பட்டது. உபநிஷத் பெயர், வரிகள் முதலான விவரங்கள் எனக்கு மறந்து விட்டன. எனவே, அண்ணாவின் கடைசி நாட்களில் அவரிடம் அந்த உபநிஷத் பற்றிய விவரங்களைக் கேட்டேன். அண்ணா சிறிது நேரம் யோசித்துப் பார்த்தார். அவருக்கு நினைவு வரவில்லை.)

அண்ணா நிஷ்டையில் அமர்வதை யாரும் பார்க்கவே வாய்ப்புக் கிடைக்காது. அவர் பூட்டிய அறைக்குள் அமர்ந்து தான் நிஷ்டையில் இருப்பதுண்டு. அண்ணா நிஷ்டையில் அமர்ந்ததுமே சமாதி நிலை அவருக்குக் கை கூடும் என்பதை ஒரே ஒரு தடவை என்னிடம் சொல்லி இருக்கிறார். (மேலே கூறியுள்ள சம்பவத்தை என்னிடம் தெரிவித்த போது.) எனினும், அவரது அன்புத் தம்பியர் பலருக்கும் இது தெரிந்த விஷயமே.

ஓவியர் மணியம் தனது அனுபவத்தை ஏதோ பத்திரிகையில் எழுதி இருந்தார். எனக்கு அந்தச் சம்பவம் சரியாக நினைவில் இல்லை. புட்டபர்த்தியில் இருந்து திரும்பும் போது ரயில் பயணத்தில் அண்ணா, மணியம், இன்னொரு நபர் (பெயர் நினைவில் இல்லை.) வந்து கொண்டிருந்த போது அண்ணா சமாதி நிலையில் அமர்ந்திருந்தாராம். அப்போது ஏதோ பெரிய சப்தம் கேட்டிருக்கிறது. அனைவரும் திடுக்கிட்டுப் போனார்கள். ஆனால், அண்ணாவிடம் சிறு அசைவு கூட இல்லை என்பதை மணியம் கவனித்திருக்கிறார்.

மற்றவர்கள் அருகில் இருக்கும் போது அண்ணா யோக நிஷ்டையில் இருந்தார் என்பது எனக்கு மிகவும் ஆச்சரியமான செய்தியாகவே இருந்தது.

இதேபோன்ற நிகழ்வுகள் பெரியவா வாழ்க்கையிலும் உண்டு. பெரியவா நடந்து போகும்போது கூட சமாதி நிலையில் இருந்திருக்கிறார் என்று அண்ணா எழுதி இருக்கிறார். ஒரு தடவை சாலையில் அவர் நடந்து போகும் போது அருகே ஒரு பெரிய விபத்து நேரிட்டது. அனைவரும் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தனர். ஆனால், பெரியவா நூல் பிடித்தது போல ஒரே நேர் கோட்டில் நடந்து கொண்டிருந்தார். அவரிடம் எந்தச் சலனமும் இல்லை. அதற்குக் காரணம் அப்போது அவர் சமாதி நிலையில் இருந்ததே என்று அண்ணா குறிப்பிட்டிருக்கிறார். அதேபோல, முதுகில் கரையான் அப்பிய நிலையில் பெரியவா பல மணி நேரம் அமர்ந்திருந்த சம்பவமும் உண்டு.

***

அண்ணா யோகியாரிடம் குண்டலினி பற்றி ஏதோ சந்தேகம் கேட்டதை சக்திவேல் கவனித்திருக்கிறார். எனவே அவர், பெரியவாளிடமும் ஸ்வாமியிடமும் இதுபோலவே சந்தகங்கள் கேட்டிருக்க வாய்ப்பு உண்டு என்றும் தோன்றுகிறது.

ஆனால், அதுபற்றி அண்ணா என்னிடம் எதுவும் சொன்னதில்லை.

***

அண்ணாவின் நிமிர்ந்த முதுகு ரொம்ப விசேஷம் என்று சொல்லி இருந்தேன். யோகியாருடன் அண்ணா இருக்கும் வீடியோ யூட்யூபில் வெளியாகி உள்ளது (https://youtu.be/guU5jTUIMW0). அதில் அவரது நிமிர்ந்த முதுகை அன்பர்கள் பார்க்கலாம்.

அண்ணா, அனேகமாக, இரண்டு லட்சம் பக்கங்கள் கையால் எழுதி இருப்பார் என்ற எனது யூகத்தையும் சொல்லி இருந்தேன். ஆனால், அண்ணா டேபிள்-சேர் அதிகம் பயன்படுத்தியதில்லை. தரையில் அமர்ந்த நிலையில் மடியின் மீது ரைட்டிங் பேட் வைத்துக் கொண்டு அதன் மேல் காகிதத்தை வைத்து எழுதுவார். இப்படி எழுதுபவர்களுக்கு விரைவிலேயே கூன் விழும். ஆனால், அண்ணாவின் முதுகு கடைசி வரை நேராகவே இருந்தது. அதற்குக் காரணம் அவரது நிஷ்டை தான் என்பது எனது அனுமானம்.

## 13. பெரியவா கருத்துகள் - ஒரு கண்ணோட்டம்

பெரியவா தீண்டாமையை ஆதரித்தார், தீண்டத்தகாதவர்கள் என்று ஒருசாராரை வெறுத்து ஒதுக்கினார் என்பது பெரியவா பற்றி முன் வைக்கப்படும் முக்கிய விமர்சனம்.

இத்தகைய விமர்சனத்தை முன் வைப்பவர்கள் யார் யார் என்பது எனக்குத் தெரியும். அவர்களது அறிவுத்தரம், ஒழுக்கம், சமுதாய அக்கறை முதலியவை எத்தகையது என்பதும் எனக்குத் தெரியும். எனவே, அவர்களையோ, அவர்களது கருத்துகளையோ ஒரு பொருட்டாகக் கருதுவது, அல்லது, விமர்சனம் என்ற பெயரில் அவர்களால் முன் வைக்கப்படும் உளறல்களுக்கு பதில் சொல்வது முதலிய முட்டாள்தனமான வேலைகளில் நான் இறங்க விரும்பவில்லை.

அதேநேரத்தில், இந்தப் பகுதியைப் படிப்பதால் ஜாதி, சம்பிரதாயம், ஆசாரம் முதலிய விஷயங்களில் ஆஸ்திகர்களுக்குத் தெளிவு ஏற்படும் என்றும் நான் நம்பவில்லை. அப்படியே இருந்தாலும், ஆசாரம், சம்பிரதாயம் முதலிய விஷயங்களைப் பற்றி யாருக்கும் தெளிவு ஏற்படுத்த வேண்டிய கடமை எனக்கு இருப்பதாக நான் நினைக்கவும் இல்லை.

இவற்றையெல்லாம் விட முக்கியமாக, ஆசாரம் பற்றிப் பேசும் தகுதி எனக்கு இருப்பதாக நான் ஒருபோதும் நினைத்ததே இல்லை.

ஆனாலும், இந்த விஷயங்களில் பெரியவாளின் பார்வை பற்றி விரிவாகவே எழுத விரும்புகிறேன்.

காரணம், எனது ஆர்எஸ்எஸ் பின்னணி.

முப்பது வருடங்களுக்கு முன்பாக நான் எழுமலை கிராமத்தில் தங்கி சங்கப் பணியில் ஈடுபட்டிருந்த போது, அந்தப் பகுதியில் ஒரு பெரிய மத மாற்ற முயற்சி நடந்தது. ராமகிருஷ்ண தபோவனம், ஆர்எஸ்எஸ் ஆகிய இரு பெரும் ஸ்தாபனங்களின் துரித நடவடிக்கைகளால் அந்த மத மாற்ற முயற்சி முளையிலேயே கிள்ளி எறியப்பட்டது.

உத்தப்புரம் ஜாதிக் கலவரத்தை ஒருவரும் மறந்திருக்க முடியாது. எழுமலையை ஒட்டி இருக்கும் அந்த கிராமத்தில் ஏற்பட்ட இந்த ஜாதி மோதல் சுமார் இருபத்தைந்து ஆண்டுகள் நீடித்தது. நான் எழுமலையில் இருந்த போது தான் அந்தப் பிரச்சினை ஆரம்பமானது.

என் மனதில் இந்த இரண்டு சம்பவங்களின் தாக்கம் மிக அதிகம்.

ஹிந்து சமுதாயத்தின் மிகப் பெரிய சாபக்கேடு தீண்டாமை என்பது எனது தீர்மானமான கருத்து.

அதேநேரத்தில், நான் அண்ணாவுடன் இருந்தவன். அண்ணாவுக்கோ பெரியவா தான் சகலமும். பெரியவாளோ தீண்டாமையை ஆதரித்தவர் என்று சொல்கிறார்கள்.

எனவே, தீண்டாமை குறித்த பெரியவா பார்வை என்ன என்பதைத் தெரிந்து கொள்வதில் இயல்பாகவே எனக்கு நாட்டம் ஏற்பட்டது.

நான் தெரிந்து கொண்ட விஷயங்களையும், அவற்றின் மூலம் நான் புரிந்து கொண்ட விஷயத்தையும் உங்களுடன் பகிர்ந்து கொள்ள விழைகிறேன்.

***

அன்னதானம் சிவன் பற்றி அன்பர்கள் பலரும் அறிவோம். அவரது வாழ்வு ஸ்ரீமடத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டது. அவர், மகாமகங்கள், பெரிய கும்பாபிஷேகங்கள் முதலியவற்றில் லட்சக்கணக்கான பேருக்கு அன்னதானம் பண்ணி இருக்கிறார்.

அவர் கிருஹஸ்தர் தான் என்றாலும், அவருக்கு வாரிசு கிடையாது. அவரது காலத்துக்குச் சில வருடங்கள் பின்னர் அவர்கள் குடும்பத்தின் சொத்துகள் விற்பனை செய்யப்பட்டன. அவருக்கு உரிய பங்கு என ஏதோ

கொஞ்சம் பணம் கிடைத்தது. அந்தப் பணத்தை என்ன செய்வது என்பது தெரியாமல் அவரது உறவினர்கள் பெரியவாளிடம் கேட்டார்களாம்.

பெரியவா அந்தத் தொகையை ஏதோ ஹரிஜன சேவா ட்ரஸ்டுக்கு நன்கொடையாகத் தருமாறு சொன்னாராம்.

இதற்கு என்ன காரணம் என்று அண்ணாவிடம் கேட்டேன். "பெரியவா கிட்ட யாருப்பா காரணம் கேட்கறது? கண்ணை மூடிண்டு அவர் சொல்றதை செய்ய வேண்டியது தான்" என்று சொன்னவர், "அந்த ஜாதியைச் சேர்ந்தவா யாரோட வயித்துக்கும் அவர் போடலியோ என்னவோ. அந்தக் குறை அவருக்கு வந்துட வேண்டாம்னு பெரியவா பண்ணி இருக்கலாம்" என்றார்.

***

அன்னதானம் சிவன் பற்றி அறியாதவர்களுக்காக அவரைப் பற்றிய சிறிய அறிமுகம்:

1897-ல் அன்னதானம் சிவனின் அன்னதான கைங்கர்யம் ஆரம்பமானது. 1939-ல் அவர் மறையும் வரை தொடர்ந்தது. அவர் நடத்தும் அன்னதானம் லட்சம் பிராமணர்களுக்கு உணவிடுவது என்று சொல்லப்படும். ஆனால், குறைந்தது ஒரு லட்சம் பிராமணர்கள், அதுபோலவே, குறைந்தது ஒரு லட்சம் பிராமணர் அல்லாதோர்கள் அந்த அன்னதானத்தில் உணவருந்தி இருப்பார்கள்.

அவரது சமையலில், சாதத்தைக் கீழே கொட்டி, அதன் மீது சாக்கை விரித்து, சாக்கின் மீது பச்சரிசியைக் கொட்டி, அந்த அரிசியின் மீது இன்னொரு சாக்கைப் போட்டு, அதன் மீது சாதத்தைப் போடுவார்களாம். நடுவில் கொட்டப்பட்ட பச்சரிசி முழுவதுமாக வெந்து விடும்.

அன்னதானம் சிவன், பிரம்மாண்டமான சைஸ் பாத்திரங்களில் சமையல் பண்ணுவார் என்று பெரியவா சொல்வதுண்டு. ரசத்தில் கொத்தமல்லி குறைவாக இருக்கிறது என்று சிவன் சொன்னால், உடனே ஒரு முறம் கொத்தமல்லி அரைத்து ஊற்றுவார்களாம். பதார்த்தங்களில் உப்புக் குறைவாக இருந்தால் ஒரு மரக்கால் உப்பு சேர்க்க வேண்டி வருமாம்.

ஃப்ரிட்ஜ் இல்லாத அந்தக் காலத்தில் குளத்தை ஃப்ரிட்ஜாகப் பயன்படுத்தியவர் அவர். அவ்வப்போது உறைய வைத்த பாலைப் பீப்பாய்களில் அடைத்து, குளத்துக்குள் போட்டு விடுவாராம். அன்னதானத்துக்கு முந்தைய தினம் இரவில் அந்தப் பீப்பாய்களில் இருக்கும் தயிரை எடுத்து மோர் ஆக்குவார்களாம்.

இவையெல்லாம் பெரிய அதிசயம் அல்ல. லட்ச லட்சம் வயிறுகளை நிறைத்த அந்த மாமனிதர் அந்த அன்னதானச் சாப்பாட்டில் ஒரு பருக்கை உணவைக் கூட அருந்தியதில்லை. அன்னதானம் முடிந்ததும் ஏதாவது வீட்டு வாசலில் நின்று ஒரு பிடி சோற்றைப் பிச்சையாக ஏற்பாராம்.

***

"நான் பிராமணாளைத் திட்டலை. பிராமணீயத்தைத் தான் எதிர்க்கறேன்-னு ............ சொல்றானாமே!" என்று ஓர் அன்பர் பெரியவாளிடம் கேட்டாராம். அதற்குப் பெரியவா, "நான் பிராமணனைத் தான் திட்டறேன்!" என்று சொன்னாராம். இதை என்னிடம் சொல்லும் போது அண்ணா, "பிராமணனைத் தான்!" என்பதைப் பெரியவா சொன்னது போலவே மிகவும் அழுத்தி உச்சரித்தார்.

எனக்குத் தெரிந்த வரை, பெரியவா ஒரு ஜாதியின் பெயரைக் குறிப்பிட்டுச் சொல்லித் திட்டியது, அனேகமாக, பிராமண ஜாதியை மட்டுமே! இதற்குக் காரணம், அனைத்து ஜாதியினருக்கும் முன்னுதாரணமாக இருக்க வேண்டிய ஜாதி இப்படி வீணாய்ப் போய் விட்டதே என்ற ஆதங்கம் மட்டுமல்ல, பிராமணன் தனது யக்ஞ கர்மாவைத் துறந்ததால், யாகத்துக்காகவே உருவான பசுக்களின் ஜன்மாவும் வீணாகி வருகிறதே என்பது பெரியவாளின் பெரிய ஆதங்கம். இது தெய்வத்தின் குரல் ஏழாம் பகுதியில் விரிவாகத் தரப்பட்டுள்ளது.

மேலும், ஒரு குடும்பத்தின் ஓரிரு தலைமுறைகள் காயத்ரியுடன் தொடர்பு இல்லாமல் போயிருந்தால் குற்றமில்லை. ஆனால், தொடர்ச்சியாக ஆறு தலைமுறைகள் காயத்ரி ஜபம் விடுபட்டுப் போனால் அந்த

வம்சத்தினரின் பிராமணத் தன்மை அடியோடு போய் விடும் என்பதும் பெரியவாளின் ஆதங்கத்துக்கான ஒரு முக்கியக் காரணம். இதை அவர் ஏராளமான சந்தர்ப்பங்களில் குறிப்பிட்டிருக்கிறார்.

***

ஸ்ரீமடத்து அன்பர்கள் மத்தியில் பிரபலமான ஒரு சம்பவம்.

ஒருமுறை வட இந்திய பக்தர் ஒருவர் மடத்துக்கு நிறைய காணிக்கைப் பொருட்கள் சமர்ப்பித்தார். அவற்றில் விலை உயர்ந்த காஃபி பாக்கெட்டுகளும் இருந்தன. (காஃபி குடிக்கக் கூடாது என்பதைப் பெரிதும் வலியுறுத்துபவர் பெரியவா என்பதை அறிவோம். காஃபி, டீ முதலியவை ஆசாரக் கேடு என்பதே இதற்கு அவர் சொல்லும் காரணம்.)

அந்த அன்பர் மிகுந்த பக்தியுடன் சமர்ப்பித்த அந்த காஃபி பாக்கெட்டுகளை, பெரியவா, மடத்தின் பிராமணர் அல்லாத ஊழியர்களுக்குப் பகிர்ந்து கொடுத்தாராம்.

பெரியவா ஜீவிதத்தில் இதுபோன்ற நிறைய உதாரணங்கள் உண்டு. பிராமணர் அல்லாதோரிடம் அவர் எதிர்பார்க்கும் ஆசாரங்களும், பிராமண அன்பர்களிடம் எதிர்பார்த்த ஆசாரங்களும் வேறு வேறானவை.

***

ஒருமுறை பெரியவா, அண்ணாவிடம், "முன்பெல்லாம்" என்று குறிப்பிட்டுக் கடந்த கால சமுதாயம் பற்றி இரண்டு கேள்விகளை எழுப்பினாராம்.

அனேகமாக, அவர் சுட்டிக் காட்டியது சுமார் 100 வருடங்களுக்கு முந்தைய சமுதாயச் சூழலாக இருக்கலாம்.

"முன்பெல்லாம், யாராவது ஒருவர் தப்புப் பண்ணிட்டா, இவன் என் ஜாதிக்காரன், அதனால இவனை நான் சப்போர்ட் பண்ணுவேன் அப்படீன்னு அவன் ஜாதிக்காரா யாராவது முன்வருவார்களா?"

"இழிவான ஜாதி, எல்லாரும் ஒதுக்கி வச்சுட்டா அப்பிடீன்னு சொல்றாளே, அந்த ஜாதியைச் சேர்ந்தவா யாரையாவது அந்த ஜாதியிலேர்ந்து ஒதுக்கி வச்சிட்டா, அவா, ஆகா, நம்மோட இழிவு போயிடுத்துன்னு நினைச்சு சந்தோஷப்பட்டாளா?"

இதைத் தொடர்ந்து, பெரியவா, "ஜாதி என்றால் என்ன? மொத்த ஜன சமுதாயத்தில அதன் பங்களிப்பு என்ன என்று யாரும் சரியாகப் புரிந்து கொள்வதில்லை" என்று குறிப்பிட்டாராம்.

***

இந்தத் தொடர் எழுத ஆரம்பித்த பின்னர் ஒரு புத்தகம் படிக்க நேர்ந்தது. 1950களில் பவன்ஸ் ஜர்னல் பத்திரிகையில் பெரியவா எழுதி இருந்த கட்டுரை அதில் காணப்பட்டது. அதில் இருந்து ஒரு பத்தியைக் கீழே தருகிறேன்.

… The Sudra did sternly refuse to allow a Brahmana or a Kshatriya to live in his house and a Chandala would stubbornly resist a Brahmin's entrance into his quarters and if a Brahmin happened to enter his locality even accidentally, the Chandalas of the locality would go through some purificatory ceremonies. This indicates that the responsibility for the preservation of the respective disciplinary acharas of any caste did not lie with the concerned caste alone but was common to all.

(சூத்திரர்கள், தங்கள் வீட்டுக்குள் ஒரு பிராமணனையோ அல்லது க்ஷத்ரியனையோ அனுமதிக்கவே இல்லை. தங்கள் பகுதிக்குள் பிராமணர்கள் வருவதைச் சண்டாளர்கள் கடுமையாக எதிர்த்து நின்றார்கள். சண்டாளர்களின் வசிப்பிடத்துக்குள் யதேச்சையாக யாராவது பிராமணர்கள் நுழைந்து விட்டால், சண்டாள ஜாதியைச் சேர்ந்தவர்கள் சில சுத்தி சடங்குகளை மேற்கொள்வதுண்டு. ஒவ்வொரு ஜாதியின் ஆசாரங்களைக் கடைப்பிடிப்பது அந்தந்த ஜாதியினரின் பொறுப்பு மட்டுமல்ல, ஒட்டுமொத்த சமுதாயத்துக்கும் அந்தப் பொறுப்பு இருந்தது என்பதையே இது காட்டுகிறது.)

***

ஆதி சங்கரர், கங்கைக் கரையில் எதிர்ப்பட்ட புலையனை விலகிப் போகச் சொன்னதும், அந்தப் புலையன், “ஆசார்யரே, யாரை விலகிப் போகச் சொல்கிறீர்கள் - உடலையா ஆத்மாவையா?” என்று எதிர்க் கேள்வி கேட்டதும் பிரபலமான சம்பவம். இதைத் தொடர்ந்து ஆசார்யாள் அந்தப் புலையனை நமஸ்கரித்தார். மேலும், மனீஷா பஞ்சகம் என்ற ஐந்து சுலோகங்களின் வாயிலாக, அவர், “ஆத்மாவை உணர்ந்தவர்கள் ஜாதிக் கட்டுப்பாடுகளுக்கு அப்பாற்பட்டவர்கள். அவர்களை நாம் நமஸ்கரிக்க வேண்டும்” என்பதை வலியுறுத்தி உள்ளார்.

பெரியவா அடிக்கடி சுட்டிக் காட்டும் சம்பவம் இது.

அதுபோலவே, ஊர் கூடித் தேர் இழுப்பது பற்றியும் பெரியவா அடிக்கடி குறிப்பிடுவது உண்டு.

ஊரில் உள்ள அனைத்து ஜாதியினரும் இணைந்து, தோளோடு தோள் நின்று, ஒட்டி உரசியபடியே தேர் இழுக்க வேண்டும் என்பது நியமம். அதுமட்டுமல்ல, தேர் இழுப்பதால் நமது உடல் எவ்வளவு வியர்த்துக் கொட்டினாலும், வீடு திரும்பியதும் குளிக்காமலேயே தான் உணவருந்த வேண்டும் என்பதையும் பெரியவா வலியுறுத்திச் சொல்லி இருக்கிறார்.

***

பெரியவா வலியுறுத்திய ஆசாரங்களில் உணவுத் தூய்மைக்கு முக்கிய இடம் உண்டு.

விவேகானந்தர் சொன்னதைக் குறிப்பிட்டு, நேரு, ஹிந்து மதத்தை “அடுப்பங்கரை மதம்” என்று கேலி பண்ணுவதுண்டு. இதைப் பற்றிக் குறிப்பிட்ட பெரியவா, “நேரு ஏதோ ஹிந்து மதத்தை கேலி செய்வதாக நினைத்துக் கொண்டு அப்படிப் பேசுகிறார். (நேரு நாஸ்திகக் கொள்கை உடையவர். அவருக்கு ஹிந்து மதம் பிடிக்காது.) ஆனால் உண்மையில், அடுப்பங்கரை தான் ஹிந்து தர்மத்தின் மையப் புள்ளி” என்று சொல்லி இருக்கிறார்.

நாரதருக்கு சனத்குமாரர் செய்த உபதேசம் சாந்தோக்ய உபநிஷத்தில் உள்ளது. அதில் சனத்குமாரர், “ஆஹார சுத்தெள ஸத்வ சுத்தி:” என்றே தமது உபதேசத்தைத் தொடங்குகிறார். “தூய உணவின் மூலமே மனதின் குணங்கள் தூய்மை அடையும். இதைத் தொடர்ந்து, படிப்படியாக ஈசுவர ஸ்மரணம் சித்திக்கும். அடுத்ததாக, கட்டுகள் அனைத்தில் இருந்தும் விடுபடும் மோக்ஷ நிலை சித்திக்கும்” என்பது இதற்குப் பெரியவா தரும் விளக்கம்.

அண்ணா இதை மகா பெரியவாள் விருந்து என்ற புத்தகத்தில் எழுதி இருக்கிறார்.

***

பெரியவா பொது ஸ்தாபனங்களைப் பெரிதும் மதித்தவர். சமுதாய சேவைகளைப் பெரிதும் ஊக்குவித்தவர். சாஸ்திர ரீதியான வாழ்க்கை என்பதே சமுதாயத்துக்குப் பிரயோஜனப்படும் விதத்தில் வாழ்வது தான் என்று அவர் அடிக்கடி சொல்லுவதுண்டு.

ஆனாலும், அவர், பெரிய பெரிய ஸ்தாபனங்கள் மூலம் சேவைப் பணிகள் செய்வதை முழுமையாகத் தவிர்த்து வந்தார். ஸ்தாபனங்களில் தலைமைப் பொறுப்பு குறித்த போட்டி பொறாமை ஏற்படும் என்பது ஒரு காரணம். அமைப்புகளுக்கு சொத்து சேர்வதால் ஏற்படும் பாதிப்புகளும் ஒரு காரணம்.

எனவே, பெரியவா முன்னெடுத்துச் சென்ற சமுதாய வேலைகள் பெரும்பாலும் ஆங்காங்கே அன்பர்கள் தத்தமது ஆர்வத்துக்கு ஏற்ற விதத்தில் ஏதாவது சேவைப் பணி செய்வதாகவே அமைந்திருக்கும். பிடியரிசித் திட்டமும், அனாதரவாக விடப்படும் பசுக்களைப் பராமரிக்கும் சேவைப் பணிகளும் இதற்குச் சிறந்த உதாரணங்கள்.

1950களில் பெரியவா ஊர் கூடி சேவைப் பணிகளில் ஈடுபட ஊக்குவித்தார். இதைத்தொடர்ந்து, பல்வேறு கிராமங்களில் அனைத்து ஜாதியினரும் தோளோடு தோள் இணைந்து குளம் வெட்டுவது, உழவாரப் பணிகள் முதலானவற்றில் ஈடுபட்டனர்.

அனைவரும் சேர்ந்து பணிபுரியும் அதே நேரத்தில் அவரவருக்கான உணவுக் கட்டுப்பாட்டையும் பின்பற்ற வேண்டும் என்றே அப்போதும் பெரியவா வலியுறுத்தினார்.

***

பெரியவா வலியுறுத்திய ஆசாரங்களைக் கடைப்பிடித்து வருபவர்கள் ஏராளம் பேர் இன்றும் இருக்கத் தான் செய்கிறார்கள். அதிலும், வைதிகர்களுக்கு (வேதத்துக்காகவே வாழ்வை அர்ப்பணித்தவர்கள்) அவர் விதித்த சாஸ்திரக் கட்டுப்பாடுகள் மிகக் கடுமையானவை. இதற்கு மிகச்சிறந்த உதாரணம் கும்பகோணம் மடத்துப் பாடசாலை வாத்தியாரான ரங்கராஜன் (தற்போதைய அஹோபில மடத்து ஜீயர்). இவரது குடும்ப ஆசாரப்படி, இவர் காஞ்சி மடத்தில் உணவருந்த முடியாது. இதைப் பெரியவா முழுமையாக அங்கீகரித்திருக்கிறார்.

அப்படியானால், காஞ்சி மடம் இழிவானதா? தீண்டத் தகாததா? இதை எப்படி பெரியவா ஏற்றுக் கொண்டார் என்பது சிந்திக்கப்பட வேண்டிய விஷயம் அல்லவா?

***

மடத்துடன் நெருங்கிய குடும்பம் ஒன்றில் பிறந்த சிறுவனுக்குப் பூணூல் போடாமல் இருந்தார்கள். அதற்கான காரணம் என்ன பெரியவா விசாரித்த போது, அந்தப் பையனின் தந்தை, உபநயனச் சடங்குக்கான செலவுகளுக்காகப் பணம் சேகரித்து வருவதாகவும், இரண்டு மூன்று வருடங்களில் உபநயனம் நடத்துவதாகவும் வாக்களித்தாராம்.

உடனே, பெரியவா, "எதுகுப் பணம்? பூணூல் போடறதுக்கு என்ன செலவாகும்? குழந்தைக்குத் துணி, வாத்தியார் தக்ஷிணை - இந்த ரெண்டு தான் செலவு" என்று சொல்லி, அடுத்த முகூர்த்த நாளிலேயே அந்தப் பையனுக்குப் பூணூல் போடுமாறு ஏற்பாடு செய்தாராம்.

பெரியவா வாழ்க்கையில் இதுபோன்ற நிகழ்வுகள் ஏராளம் உண்டு. அவர் வலியுறுத்தியது சாஸ்திரப்படியான வாழ்க்கையை மட்டுமே தானே தவிர, அதற்காகச் செய்யப்படும் ஆடம்பரச் செலவுகளை அல்ல.

சாஸ்திரப்படி வாழ்வது என்பதே எளிமையாக வாழ்வது தான் என்பதை அவர் பெரிதும் வலியுறுத்தினார்.

பெரியவாளின் ஒட்டுமொத்த வாழ்வும் நமக்குத் தரும் செய்தியை "எளிமை" என்ற ஒற்றை வார்த்தைக்குள் அடக்கி விடலாம். அவர் அவ்வளவு தூரம் எளிமையாக வாழ்ந்தவர், பிறரும் அவ்வாறே வாழ்வதற்கு ஊக்கம் தந்தவர்.

***

பெரியவா, நாட்டின் பல்வேறு பகுதிகளில் வைதிகர்களுக்கு தக்ஷிணை, சம்பாவனை முதலியவை முறையாகத் தரப்படுகின்றனவா என்பதை அடிக்கடி விசாரித்துத் தெரிந்து கொள்வார். அவரைப் பொறுத்த வரை வைதிகர்களின் ஜீவாதாரம் மிக முக்கியமானது. வைதிகர்கள் எப்படி வாழ வேண்டும் என்பது குறித்த பெரியவாளின் கண்ணோட்டம் இந்த இடத்தில் மிக முக்கியமாகக் குறிப்பிடப்பட வேண்டிய விஷயம்.

மடத்துடன் தொடர்புடைய வைதிகர் யாருக்காவது பெண் குழந்தை பிறந்து விட்டால், உடனேயே பெரியவாளுக்கு அந்தக் குழந்தையின் திருமணத்துக்கான பணத் தேவை குறித்த பொறுப்பு தொற்றிக் கொள்ளுமாம். குழந்தை பிறந்த செய்தி பெரியவாளுக்குத் தெரிந்த பின்னர் மடத்துக்கு வரும் செல்வந்தர் கொடுத்து வைத்தவர். அவரிடம் பெரியவா தாமாகவே முன்வந்து தானம் கேட்பார். "அவனுக்குப் பெண் குழந்தை பிறந்திருக்கு. கிடைக்கிற தக்ஷிணையில ஏதோ காலட்சேபம் பண்ணிண்டு இருக்கான். பெண்

குழந்தைக்குக் கல்யாணம் பண்ண வேண்டாமா? அதுக்கு ரொம்பச் செலவாகுமே! பணத்துக்கு எங்கே போவான் அவன்? நீ ஒண்ணு பண்ணு, அந்தக் குழந்தை பெயர்ல ஒரு ரெண்டாயிரம் ரூபா பேங்க்ல ஃபிக்சட் டெபாசிட் போட்டுடு. அதை வச்சு கல்யாணச் செலவை அவன் சமாளிச்சுப்பான். உனக்கும் ரொம்பப் புண்ணியம் கிடைக்கும்" என்று சொல்லுவார்.

இரண்டாயிரம் ரூபாய் என்பது காலப்போக்கில் - விலைவாசி ஏற்றத்தின் காரணமாக - வளர்ந்து, அதிகபட்சமாக, பத்தாயிரம் ரூபாய் ஆனது.

அந்தப் பெண் குழந்தைக்குத் திருமணம் ஆகும்போது இந்தப் பணம் வட்டியுடன் சேர்த்து எவ்வளவு ரூபாயாகக் கைக்குக் கிடைக்குமோ, அந்தத் தொகைக்குள் திருமணச் செலவு இருந்தால் போதுமானது என்பதே பெரியவாளின் அபிப்பிராயம். இதை எத்தனையோ அன்பர்கள் முழு மனதுடன் ஏற்றுக் கடைப்பிடித்து வாழ்ந்தனர். இப்போதும் அதேபோல ஏராளம் பேர் இருக்கத் தான் செய்கிறார்கள்.

வேதத்தின் அடி வேருக்கு நீர் ஊற்றியவர் பெரியவா என்று பெரியவாளைக் கொண்டாடுகிறோம். அப்பேர்ப்பட்ட பெரியவா, வேதம் சொல்பவர்களின் குடும்பப் பொருளாதாரம் இப்படித் தான் இருக்க வேண்டும் என்று கருதினார். அவர்கள் வசதியான வாழ்க்கைக்கு ஆசைப்படக் கூடாது என்பதைப் பெரியவா ரொம்பவே வலியுறுத்தி வந்தார்.

ஆசாரம் என்ற பெயரில் உணவுத் தூய்மையை வலியுறுத்தியவர் பெரியவா என்று சொல்லும் போது, பெரியவா வலியுறுத்திய உணவுப் பழக்கம் மிகவும் எளிமையானது என்பதையும் சேர்த்தே நினைக்க வேண்டும். உணவுப் பழக்கம் மட்டுமல்ல, ஒட்டுமொத்த வாழ்க்கையும் எளிமையாக இருக்க வேண்டும் என்பதே அவர் வலியுறுத்திச் சொன்ன கருத்து.

உணவுக் கட்டுப்பாடுகள் பிராமணனை மற்ற ஜாதியினரிடம் இருந்து பிரித்து விடும், பிராமணன் தனியாக உணவு சாப்பிடுவதை மற்றவர்கள் வித்தியாசமாகப் பார்க்கிறார்கள் என்று யாராவது பெரியவாளிடம் முறையிட்டால், "உனது உணவு எளிமையாக இருக்கும் பட்சத்தில் அவர்களுக்கு வித்தியாசமான எண்ணம் தோன்றாது. உனது உணவுக் கட்டுப்பாட்டையும் ஆசாரத்தையும் அவர்கள் மதிக்கவே செய்வார்கள்" என்பதே அவர்களுக்குப் பெரியவா தரும் பதில்.

பெரியவா வலியுறுத்திய சாஸ்திரம் என்பது மற்றவர்களிடம் இருந்து பிரிந்து போவது அல்ல, மற்றவர்களுக்கு முன்னுதாரணமாக இருக்க வேண்டிய எளிமை, ஒழுக்கம், நாவடக்கம், புலன் கட்டுப்பாடு, சுயநலமின்மை முதலியவையே.

***

ஒருமுறை தரிசனத்துக்காக வந்திருந்த ஓர் இளம் பெண், பெரியவாளை நமஸ்கரிக்கும் போது, தனது துக்கத்தின் பாரம் தாங்காமல், குலுங்கிக் குலுங்கி அழுதாராம். குடும்ப வறுமையின் காரணமாக வரதக்ஷிணை கொடுக்க முடியாததால் அந்தப் பெண்ணுக்கு வரன் எதுவும் அமையவில்லை என்பதே அவளது மன வேதனைக்குக் காரணம்.

அன்று மாலை உபன்னியாசம் பண்ணும் போது, பெரியவா, அந்தக் காலத்தில் நிலவி வந்த வரதக்ஷிணைக் கொடுமையைப் பற்றி விளக்கினார். அதனால் பல்வேறு குடும்பங்களில் ஏற்படும் பாதிப்புகளையும் விளக்கிய பெரியவா, வரதக்ஷிணைக்கு சாஸ்திர அனுமதி கிடையாது, காஞ்சி மடத்தின் அனுமதியும் கிடையாது, வரதக்ஷிணை வாங்கித் திருமணம் செய்பவர்கள் "காஞ்சிப் பெரியவா ஆசியுடன்" என்று திருமணப் பத்திரிகையில் அச்சிட வேண்டாம், அவர்களுக்கு என்னுடைய ஆசிகள் கிடையாது என்று தெரிவித்தாராம்.

அனேகமாக, தமது வாழ்க்கையில் பெரியவா பயன்படுத்திய மிகக் கடுமையான வார்த்தைப் பிரயோகம் இதுவாகத் தான் இருக்கும். ஜகத்குருவான அவர் "ஒருசிலரை ஆசீர்வதிக்க மாட்டேன்" என்று சொல்வது எவ்வளவு கொடூரமான வார்த்தை!

சாஸ்திரம் என்ற பெயரால் மனிதர்கள் செய்து வந்த கொடுமைகளைத் தான் பெரியவா இவ்வளவு கடுமையான விதத்தில் கண்டித்திருக்கிறார்.

***

ஜாதி சம்பந்தப்பட்ட ஆசாரங்கள் மட்டுமல்ல, மத ஆசாரங்களிலும் பெரியவாளின் நிலைப்பாடு அதேபோலத் தான் இருந்தது.

பெரியவா பற்றிய அகோபில மடத்து ஜீயர் பேட்டி பற்றிக் குறிப்பிட்டிருந்தேன். (அத்தியாயம் 10: கடைசியாக வெளிவந்த நூல்கள்) அதில் அவர், "வடகலை சம்பிரதாயம் பற்றி நான் சரியாகப் புரிந்து கொண்டிருக்கிறேனா என்பதைப் பெரியவா மிகுந்த அக்கறையுடன் கவனிப்பார்" என்று சொல்லி இருக்கிறார். ஒவ்வொருவரும் தங்களுடைய சம்பிரதாயத்தைக் குறைவில்லாமல் கடைப்பிடிக்க வேண்டும் என்பதே பெரியவா வலியுறுத்திய விஷயம்.

***

ஒருமுறை ஏதோ சாஸ்திர பாடம் படிக்க வேண்டும் என்று பெரியவா ஆசைப்பட்டாராம். அந்த சாஸ்திர நூலைப் படித்தவர்கள் யாராவது இருக்கிறார்களா என்று விசாரித்தாராம். அவர் விசாரித்த வரை யாருக்குமே தெரியவில்லை. ஏதோ ஒரு ஜீயருக்கு அந்த சாஸ்திரம் தெரிந்திருந்ததாம். (மன்னிக்கவும். சாஸ்திரப் பெயர், ஜீயர் பெயர் பற்றிய முழு விவரங்கள் நினைவில் இல்லை.) அதை அவர் பெரியவாளுக்குச் சொல்லித் தரத் தயார். ஆனால், பெரியவா மொட்டை போட்ட சன்னியாசி. அவரைப் பார்ப்பது தனது சம்பிரதாயத்துக்கு விரோதமான செயல் என்று அந்த ஜீயர் கருதினாராம்.

எனவே, பெரியவாளுக்கும் அந்த ஜீயருக்கும் நடுவே ஒரு திரை போடப்பட்டு சாஸ்திர பாடம் நடைபெற்றதாம்.

பெரியவா எந்த சாஸ்திரத்தையும் படித்துத் தான் தெரிந்து கொள்ள வேண்டுமா என்ற கேள்வி ஒருபுறம் இருக்கட்டும், பெரியவாளைப் பார்ப்பது கூடத் தனது சம்பிரதாயத்துக்கு விரோதம் (தீட்டு) என்று நினைப்பவரிடம் பெரியவா பாடம் படிக்க வேண்டுமா என்ற கேள்வி ரொம்ப முக்கியமானது அல்லவா?

இங்கே ஓர் அதி முக்கிய விஷயமும் உண்டு.

மடத்தின் கௌரவத்துக்கு பங்கம் ஏற்படுவதைப் பெரியவா அணுவளவும் அனுமதிக்க மாட்டார். காஞ்சி மடத்தின் பீடாதிபதியை இதுபோல (தீண்டத் தகாதவர் போல - சரியாகச் சொல்வதானால், பார்த்தாலே தீட்டு என்பது போல) ஒருவர் நடத்துவது மடத்தின் கௌரவத்துக்குக் குந்தகம் என்று பெரியவா நினைத்திருந்தால் இதற்கு அவர் ஒத்துக் கொண்டிருப்பாரா?

அப்படியானால், இந்தச் சம்பவத்துக்கு என்ன பொருள்?

இவ்வாறு நடத்தப்படுவது பெரியவாளுக்கோ, மடத்துக்கோ கௌரவக் குறைச்சலை ஏற்படுத்தும் விஷயம் என்று பெரியவா நினைக்கவில்லை என்பதாலேயே அவர் இதற்கு ஒத்துக் கொண்டார். மேலும், பிற சம்பிரதாயத்தைச் சேர்ந்தவர்கள் தங்கள் மரபுகளைக் குறைவின்றிக் கடைப்பிடிப்பதைப் பெரியவா மதித்தார், அவர்களை அவ்வாறு நடந்து கொள்ள ஊக்குவித்தார் என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும்.

(பெரியவா வாழ்க்கையில் நடந்த இதுபோன்ற சம்பவங்களைக் குறிப்பிடும் போது, அண்ணா, "மஹதோ மஹீயான், அணோர் அணீயான்" என்ற உபநிஷத் கருத்தைக் குறிப்பிடுவார். பெரிதினும் பெரிதான அது அணுவை விடச் சிறியதாகவும் இருக்கிறது என்பது இதன் விளக்கம்.)

இன்னொரு விஷயத்தையும் இங்கு சுட்டிக் காட்ட வேண்டியது அவசியம். பெரிவாளைப் பார்ப்பது கூடத் தனது ஆசாரத்துக்கு உகந்தது அல்ல என்று கருதிய அந்த ஜீயர், பெரியவாளுக்கு சாஸ்திர பாடம் சொல்லித் தர மாட்டேன் என்று சொல்லவில்லை.

இது தான் இந்தியாவின் கல்விப் பாரம்பரியம்.

தகுதியுள்ள ஒருவர், சாஸ்திர விஷயங்களில் சந்தேகம் கேட்கும் போது, அந்த சாஸ்திரம் தெரிந்தவர்கள், அதை அவருக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டும். இது அவர்களது அடிப்படைக் கடமை. இதை மீறுவது அவர்கள் படித்த சாஸ்திர பாடங்களுக்கும் அவர்களுக்குச் சொல்லிக் கொடுத்த குருமார்களுக்கும் அவர்கள் செய்யும் மிகப் பெரிய துரோகம்.

(தெய்வத்தின் குரல் ஏழாம் பகுதியில் உள்ள அறிவுக்கும் இல்லை அடைக்கும் தாழ் என்ற அத்தியாயத்தில் பெரியவா, விஷ்ணு புராணக் கதை ஒன்றை விளக்கி இருப்பதும் இங்கே நினைவு கூரத் தக்கது.)

***

ஹிந்து மதத்தின் பல்வேறு சம்பிரதாயங்கள் மட்டுமல்ல, கிறிஸ்தவ, முஸ்லிம்கள் விஷயத்திலும் பெரியவா இத்தகைய அணுகுமுறையையே மேற்கொண்டிருந்தார். அவர்களுக்கு மடத்துப் பிரசாதங்களை அவர் ஒருபோதும் தந்ததில்லை. ஏனெனில், அது அவர்கள் மரபுக்கு விரோதமானது. மேலும், அவர்கள் தங்கள் மதத்து சம்பிரதாயங்களைக் கடைப்பிடிக்கிறார்களா என்பதையும் பெரியவா விசாரிப்பது உண்டு. அவர்கள் மதத்தில் இருக்கும் - அவர்கள் அறிந்திராத - கடமைகளை அவர்களுக்கு எடுத்துக் காட்டிய நிகழ்வுகளும் உண்டு.

கிறிஸ்தவ, முஸ்லிம் மதத்தைச் சேர்ந்தவர்கள் ஹிந்து மதத்தில் இருந்து அங்கே போனவர்களே. இருந்தாலும், அவர்கள் மீண்டும் ஹிந்து மதத்துக்குத் திரும்புவதைப் பெரியவா ஆதரிக்கவில்லை. அவர்கள் தங்கள் மதத்துக்கான ஆசரணைகளைக் குறைவில்லாமல் கடைப்பிடிக்க வேண்டும் என்பதையே அவர் பெரிதும் வலியுறுத்தினார்.

(இதற்கு மிகப் பெரிய விதிவிலக்கு ஒன்றும் உண்டு. அதைப் பின்னர் விளக்குகிறேன்.)

***

பெரியவாளை காந்திஜி சந்தித்த சம்பவம் பற்றி அனைவரும் கேள்விப்பட்டிருப்போம். இருவரும் என்ன பேசினார்கள் என்ற விவரம் வெளியே தெரியவில்லை என்றே பலரும் கருதுகிறார்கள். உண்மையில், காந்தியுடன் தான் பேசிய விஷயங்கள் பற்றிய விவரங்களைப் பெரியவாளே சொல்லி இருக்கிறார். இது பெரியவா வாழ்க்கைச் சரித்திரத்திலும் வெளியாகி உள்ளது.

நிற்க -

விமர்சனம் என்ற பெயரில் முன் வைக்கப்படும் உளறல்களுக்கு பதில் சொல்வதில்லை என்று இந்த அத்தியாயத்தின் தொடக்கத்தில் குறிப்பிட்டிருந்தேன். அதற்கு விதிவிலக்காக, பெரியவா-காந்தி சந்திப்பு பற்றிச் சொல்லப்பட்ட ஒரு விமர்சனத்தை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

இதை முன்வைத்திருப்பவர் ஒரு பிரபல எழுத்தாளர். அவர் கீதையை முழுமையாக உணர்ந்தவராம். மேலும், அவர் ஒரு செவ்விலக்கியப் படைப்பாளியாம். (அப்படித்தான் அவர் தன்னைப் பற்றிச் சொல்லிக் கொள்கிறார்.)

பெரியவா-காந்தி சந்திப்பு பற்றி அந்த எழுத்தாளர் குறிப்பிட்டிருக்கும் சில விஷயங்களைப் பார்க்கலாம்.

> இக்காலகட்டத்தில்தான் காஞ்சி மடாதிபதி சந்திரசேகர சரஸ்வதி காந்தியைச் சந்திக்க விரும்பி தூதனுப்பினார். அப்போது சந்திரசேகரருக்கு 31 வயதுதான். அவரோ அவரது மடமோ புகழ்பெற்ற ஒன்றாக இருக்கவில்லை. ஆனால் காந்தியைச் சுற்றி இருந்த பிராமணர்கள் காந்தி சந்திரசேகரரைச் சந்திக்க வேண்டுமென ஆசைப்பட்டார்கள்.
>
> காந்தி சந்திரசேகரரைத் தவிர்த்ததாகத் தெரிகிறது. காரணம் வெளிப்படை. காந்தி தீண்டாமை குறித்துப் பேசிவந்த கருத்துக்கள் சந்திரசேகரருக்குப் பிடிக்கவில்லை. அது இந்துமதத்தை அழித்துவிடும், அதற்கு சாஸ்திர சம்மதம் இல்லை என சந்திரசேகரர் சொல்லியனுப்பியிருந்தார்.

> தாழ்த்தப்பட்ட மக்கள் பிறவி இழிவு கொண்டவர்கள், அவர்களை உயர்சாதியினர் பார்ப்பதும் தீண்டுவதும் பெரும் பாவமே ஆகும் என வாதிட்டார்.

இது பச்சைப் பொய் என்பதை விளக்க வேண்டிய தேவை இல்லை.

காந்திஜி சமுதாயத்தின் பல்வேறு முக்கியஸ்தர்களுடன் தீண்டாமை பற்றி விவாதம் நடத்தினார். அவர்களில் பெரியவாளும் ஒருவர். பெரியவாளைப் பற்றிய அறிமுகம் அவருக்கு ராஜாஜி, சத்திய மூர்த்தி, ஹிந்து ரங்கஸ்வாமி ஐயங்கார் ஆகியோர் மூலம் ஏற்பட்டதே.

சனாதன தர்மத்தின் மிக முக்கியமான பீடங்களில் ஒன்றான காஞ்சி மடத்தின் அதிபதியை சுதந்திரப் போராட்டத்தின் ஒப்பற்ற தலைவராகிய காந்தி சந்தித்ததால், இயல்பாகவே, நாட்டு மக்களில் பலர் இந்தச் சந்திப்பை மிக மிக முக்கியமான நிகழ்வாகக் கருதினார்கள். ஆனால், காந்திஜியோ பெரியவாளோ இந்தச் சந்திப்பை வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாக எந்த இடத்திலும் குறிப்பிடவே இல்லை.

பெரியவா வலியுறுத்தியது அவரவர் ஜாதி ஆசாரங்களை மட்டுமே. அதற்கு உகந்த சமுதாயச் சூழல் அமைய வேண்டும் என்பதாலேயே ஒருவர் மற்றவரிடமிருந்து விலகி இருக்க வேண்டும் என்று வலியுறுத்தினார். யாரும் இழிவானவர்கள் என்று அவர் ஒருபோதும் கூறியதில்லை.

இந்த எழுத்தாளர் எவ்வளவு அலட்சியமாகவும் சர்வ சாதாரணமாகவும் பொய் பேசுகிறார் என்பதை விளக்குவதற்கு ஒரு சிறிய உதாரணம். மகா பெரியவா ஜனனம் 20 மே 1894. காந்திஜி-பெரியவா சந்திப்பு நடந்தது 15 அக்டோபர் 1927. இந்தச் சந்திப்பின் போது பெரியவாளுக்கு வயசு 33 என்பதைக் கூட இந்த எழுத்தாளரால் புரிந்து கொள்ள முடியவில்லை.

கேவலம்.

> பாலக்காட்டில் நெல்லிச்சேரியில் காந்தி தங்கியிருந்த இடமருகே பாலக்காட்டு காங்கிரஸ்காரரின் இல்லத்துக்கு சந்திரசேகரர் வந்தார். காந்தி சூத்திரர் ஆதலால் சந்திரசேகரர் அவருக்கு முறையான 'தரிசனம்' கொடுக்க விரும்பவில்லை. சந்திப்பை காங்கிரஸ்காரரின் தொழுவத்தில் வைத்துக்கொள்ள விரும்பினார். அதை காந்திக்கு ராஜாஜி சிரித்துக்கொண்டே தெரிவித்தபோது காந்தி 'தொழுவம் சுத்தமாக இருந்தால் எனக்கு ஆட்சேபணை இல்லை' என்றார்.

காந்திஜியைச் சந்திக்க வேண்டும் என்பதற்காக அவ்வளவு மெனக்கெட்டு தூது அனுப்பிய பெரியவா, அவருக்கு முறையான தரிசனம் கொடுக்க விரும்பாததற்கு என்ன காரணம் என்பதைச் சொல்ல வேண்டிய கடமை இத்தகைய எழுத்தாளர்களுக்குக் கிடையாது. கீதையை முற்றிலும் உணர்ந்தவர்கள் உண்மை பேச வேண்டிய கட்டாயம் இல்லையோ, என்னவோ!

அதேநேரத்தில், பெரியவாளின் மனதுக்கு மிகவும் பிடித்த இடம் மாட்டுத் தொழுவமே என்பதையும், எத்தனையோ சான்றோர்கள் அவரை மாட்டுத் தொழுவத்தில் தான் தரிசித்திருக்கிறார்கள் என்பதையும் அன்பர்கள் அனைவரும் அறிவார்கள்.

வேத ரக்ஷணம் என்பதன் மறு வடிவம் கோ ரக்ஷணம் என்றே வாழ்ந்து காட்டியவர் பெரியவா

நமது சாஸ்திரங்களில் உத்தமம், மத்திமம், அதமம் என்ற அளவுகோல்கள் அடிக்கடி பயன்படுத்தப்படும். சாஸ்திரப்படியான செயல்களில் உயர்நிலையில் இருப்பது எது, நடுநிலை எது, கீழ்நிலை எது என்பதே இவ்வாறு சுட்டிக் காட்டப்படும். குளியல்களைப் பொறுத்த வரை பரம உத்தமமான குளியல் என்பது பசுவின் குளம்படி தூசியில் குளிப்பதே என்பதைப் பெரியவா சுட்டிக் காட்டியிருக்கிறார்.

சூத்திரர் என்று பெரியவா யாரையும் இழிவாகப் பேசியதோ நடத்தியதோ இல்லை. பிராமணர் என்பதால் யாரையும் போற்றியதும் இல்லை. அவரவருக்கு விதிக்கப்பட்ட சாஸ்திர கர்மாக்களை வலியுறுத்துவதே தமது பணி என்று கொண்டவர் அவர். அவரது பார்வையில் பிராமணர்களுக்கான கடமைகள் வேறு, இதர ஜாதியினருக்கான கடமைகள் வேறு. அவ்வளவே.

சந்திப்பு 15 நிமிடத்துக்கும் குறைவாகவே நடந்தது. ராஜாஜியும் பாலக்காட்டைச் சேர்ந்த இரு காங்கிரஸ்காரர்களும் கலந்துகொண்டார்கள். உரையாடலில் இருவரும் இந்துஸ்தானியில் பேசிக்கொண்டார்கள். சந்திரசேகரர் கண்ணீருடன் இந்துமதத்தை அழிக்கவேண்டாம் என காந்தியைக் கேட்டுக்கொண்டார். இந்தக் கோரிக்கையை விடுப்பதற்காகவே அவர் பல நூறு கிலோமீட்டர் நடந்து தஞ்சாவூரில் இருந்து வந்திருந்தார்.

செவ்விலக்கியம் இப்படித் தான் இருக்கும் என்பது புரிகிறது.

காந்திஜி, பெரியவா - இருவருமே அந்தச் சந்திப்புக்காகப் பாலக்காடு வரவில்லை. இருவருமே அந்தப் பகுதியில் இருந்ததால் ஒருவரை ஒருவர் சந்திக்க முடிந்தது.

சந்திப்பு ஒரு மணி நேரம் நீடித்தது. பெரியவா ஸம்ஸ்கிருதத்திலும், காந்திஜி ஹிந்தியிலும் பேசிக் கொண்டார்கள்.

பெரியவா, காந்தி இருவரும் மட்டும் தனித்துப் பேசினார்கள். ராஜாஜி வெளியே அமர்ந்திருந்தார்.

இந்த விவரங்கள் அந்தக் காலத்திலேயே பிரபல பத்திரிகைகளில் வெளி வந்திருக்கின்றன.

காந்தி மிக்க பணிவுடன் 'ஒரே ஒரு சுருதி நூலில் ஒரே ஒரு வரியையாவது ஆதாரமாகக் காட்டுங்கள். நான் யோசிக்கிறேன்' எனக் கேட்டுக்கொண்டார். சந்திரசேகரர் கீதையைச் சுட்டிக்காட்ட காந்தி கீதையின் அந்த வரி தவறாக விளக்கப்படுகிறது, ஏனென்றால் அந்தப் பொருளுக்கு முற்றிலும் மாறாகவே மொத்த கீதையும் உள்ளது என்று சொன்னார்.

சந்திரசேகரரால் மேலே பேசமுடியவில்லை. காந்தி 'உங்களை சந்தித்ததில் மகிழ்ச்சி. நான் ஒரு மௌல்வியைச் சந்திக்கவேண்டும்' என்று சொல்லி சந்திப்பை முடித்துக்கொண்டார்.

பெரியவா சொன்ன கீதை விளக்கம் தவறு என்று எழுதுவதை சாதா வகைப் பொய் என்று ஒதுக்க முடியாது. பொய்யிலேயே பிறந்து பொய்யிலேயே வாழ்க்கை நடத்தி வரும் ஒரு பிரஹஸபதிக்கு தான் இது சாத்தியம்.

சுமார் 100 வருடங்களுக்கு முன்பு நடந்த இந்தச் சம்பவம் பற்றிப் பல்வேறு பத்திரிகைகளில் வெளியான செய்தியைக் கூட மூடி மறைத்து ஒரு பொய்த் தகவலை இந்த எழுத்தாளர் சொல்லி இருப்பதை உங்களுக்குத் தெரியப்படுத்த விரும்புகிறேன்.

1927 ல் நடந்த இந்தச் சந்திப்பு குறித்த முழுமையான விவரங்கள் வெளியானது 1980களில் தான் என்றாலும், சந்திப்பு நடந்த தினத்திலேயே, அது பற்றிய சில விவரங்கள் வெளியாகின. காந்திஜி பெரியவாளுடன் பேசிக் கொண்டிருப்பதை எவ்வளவு உயர்வாகக் கருதினார் என்பதை அவை விளக்குகின்றன.

பெரியவாளுடன் காந்திஜி உரையாடிக் கொண்டிருந்த போது அவருக்கு நேரம் போனதே தெரியவில்லை. காந்தியின் இரவு உணவுக்கான நேரம் வந்தது. (அவர் சூரிய அஸ்தமனத்துக்கு முன்பே இரவு உணவை முடித்துக் கொள்பவர். அவரது நேரம் தவறாமை உலக அளவில் பிரசித்தி பெற்றது என்பதை அனைவரும் அறிவோம்.) மாட்டுத் தொழுவுக்குள் பிரவேசித்த ராஜாஜி, இரவு உணவுக்கான நேரம் அது என்பதை அவருக்கு நினைவூட்டினார். அப்போது, காந்திஜி, ஸ்வாமிகளுடன் பேசிக் கொண்டிருப்பதே தனக்கு நிறைவாக இருக்கிறது என்றும், எனவே, இரவு உணவு வேண்டாம் என்றும் சொல்லி விட்டார்.

இது அன்றைய காலத்திலேயே பிரபலமாகப் பேசப்பட்ட விஷயம். பெரியவா-காந்தி சந்திப்பு பற்றிய செய்திகள் அனைத்திலுமே, காந்திஜி தனது உணவைப் புறக்கணித்துப் பெரியவாளுடன் பேசிக் கொண்டிருந்த விஷயம் தான் முக்கியமாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

மேலும், இந்தச் சம்பவம் பற்றி காந்திஜி தனது கடிதங்களில் எழுதியுள்ள விவரங்கள் 1985 அக்டோபர் 15 அன்று ஸ்டேட்ஸ்மேன் பத்திரிகையில் வெளியாகி உள்ளன. கிஷோரிலால் மசுர்வாலா, கங்கா பென்

ஆகிய இருவருக்கும் காந்திஜி எழுதியுள்ள கடிதங்களில், பெரியவாளின் கருத்துகள் தன்னுடைய கருத்துகளில் இருந்து வேறுபட்டிருப்பதாகவும், எனினும், தான் அவற்றைப் பெரிதும் மதிப்பதாகவும் குறிப்பிட்டிருக்கிறார். மேலும், பெரியவாளை அவர் சாந்தி ஸ்வரூபர் என்றும் வர்ணித்துள்ளார். பெரியவாளின் சாந்திக்குக் காரணம் அவரது ஞானமே என்பதைக் குறிப்பிடும் வகையில் துளசிதாசரின் செய்யுள் ஒன்றையும் மேற்கோள் காட்டியுள்ளார். பெரியவா-காந்தி சந்திப்பு நிகழ்ந்தது 1927 அக்டோபர் 15-ம் தேதி. இந்தக் கடிதம் 1927 அக்டோபர் 17-ம் தேதி எழுதப்பட்டுள்ளது.

> சந்திரசேகரரிடம் காந்தி கொஞ்சம் உதாசீனமாகவே நடந்துகொண்டதாக அன்று பிராமணர்கள் நினைத்தனர். அது உண்மையும் கூட. காந்தி பக்தரான கல்கி போன்றவர்கள்கூட சந்திரசேகரரை கடுமையாக, நேரடியாகத் தாக்கி எழுதியமைக்கும் இந்நிகழ்வு ஒரு தூண்டுகோல். தீண்டாமையை ஒழிப்பது வழியாக காந்தி இந்துமதத்தை அசுத்தமாக்குகிறார் என சந்திரசேகரர் சொன்னதற்கு 'நீங்கள் ஒன்றும் ஜகத்குரு [உலகின் குரு] அல்ல, ஒரு மடாதிபதி மட்டுமே. அந்த இடத்தில் இருந்தால் போதும்' என கல்கி பதில் எழுதினார்.
>
> கல்கி ஸ்மார்த்தர். அன்றைய பிராமணர்களால் வழிபடப்பட்டவர். ஆகவே இந்த தாக்குதல் சந்திரசேகரரை அதிர்ச்சி அடையச்செய்தது. அதன்பின் தீண்டாமைக்கு ஆதரவாக நேரடியாகப் பேசுவதைக் கட்டுப்படுத்திக்கொண்டார். அல்லது அந்த அமைப்பு அவரை கட்டுப்படுத்தியது. ஆனால் கடைசிக்காலம் வரை அவர் சாதிநோக்கும் தீண்டாமை நோக்கும் கொண்டவராகவே நீடித்தார். அவரது நூல்களே சான்று.
>
> சந்திரசேகரர் பின்னரும் பல உரைகளில் அவரது தீண்டாமைச் சிந்தனையை முன்வைத்துப் பேசினார். அவை அச்சாகியும் உள்ளன. தீண்டாமை சட்ட விரோதமாக ஆனபின் அந்த உரைகள் பலவும் திருத்தி எழுதப்பட்டன. இன்று காந்தியை சந்திரசேகரர் சந்தித்தது ஸ்மார்த்த பிராமணர்களின் நூல்களில் பலவாறாகத் திரித்து எழுதப்படுகிறது. காந்தி அவரைச் சந்தித்து காலில் விழுந்து ஆசிபெற்றார் என்றுகூட எழுதியிருக்கிறார்கள்.

செவ்விலக்கியப் படைப்பாளி, அல்லவா? அவரால் இப்படித்தான் எழுத முடியும்!

இந்த எழுத்தாளர் எழுதியுள்ள வரலாற்றுக் கதைகளில் இந்தியாவின் க்ஷத்திரிய பாரம்பரியமும், ஆன்மிக, தெய்விக விஷயங்களில் பிராமணர்களின் பங்களிப்பும் மிகவும் கொச்சையாகவே வர்ணிக்கப்பட்டிருக்கும்.

ஒருவரது மனதில் இருக்கும் குணங்களும் எண்ணங்களும் தானே அவரது எழுத்தில் வெளிப்பட முடியும்?

கல்கி பற்றியும், காலில் விழுவது பற்றியும் இந்த மனிதர் சொல்லி இருக்கும் விஷயங்களும் இவரது எண்ணங்களின் பிரதிபலிப்பே. இத்தகைய கருத்துகள் கொச்சையானவை, அருவருப்பானவை.

நமஸ்காரம் செய்வது பணிவின் வெளிப்பாடு. இந்தியப் பண்பாட்டின் ஒப்பற்ற அம்சங்களில் ஒன்று அது.

இந்தியப் பாரம்பரியத்தில் கல்விக்கான அடிப்படைத் தகுதியே பணிவு தான்.

மனித வாழ்வின் நோக்கம் இறைவனை அடைவதே. அதற்கான வழி சரணாகதி. பணிவின் முதிர்ச்சியே சரணாகதி. அதைக் கற்றுத் தருவதே கல்வியின் நோக்கம். அதனால் தான் வித்யா ததாதி விநயம் (பணிவைத் தருவதே கல்வி) என்று சொல்லப்படுகிறது.

அதேநேரத்தில், ஸ்தாபனங்களைப் பொறுத்தவரை, அவற்றின் சமுதாய அந்தஸ்து கருத்தில் கொள்ளப்பட வேண்டிய விஷயம். எனவே, ஒரு பீடாதிபதியை நமஸ்காரம் செய்வதும் செய்யாததும் அவரவர் ஸ்தாபனத்தையும், அதில் அவர் வகிக்கும் ஸ்தானத்தையும் பொறுத்த விஷயம்.

மேலும், நாம் நமஸ்கரிப்பதால் பீடாதிபதிகளுக்குப் பெருமையும் அல்ல, நாம் நமஸ்காரம் பண்ணினால் தான் அவர்களது ஆசிச் சக்தி நமக்குக் கிடைக்கும் என்பதும் அல்ல.

அவர்களை நமஸ்கரிப்பதால் நமக்குப் பணிவு வளர்கிறது என்பதே முக்கியம்.

அதிலும், ஆதி சங்கரர் ஸ்தாபித்த பீடங்களில், பீடாதிபதிகளுக்குச் செய்யப்படும் நமஸ்காரம் நாராயணனுக்கு உரியது என்பதே சம்பிரதாயம். அதனாலேயே நாம் சங்கர மடங்களின் பீடாதிபதிகளை நமஸ்கரிக்கும் போது, அவர்கள் நாராயண என்று சொல்கிறார்கள். நாராயணனின் பிரதிநிதியாக நின்று நமது நமஸ்காரத்தை அவர்கள் அங்கீகரிக்கிறார்கள் என்பதே இதற்கு விளக்கம். ஸ்ரீமுகங்களில் தங்களது கையெழுத்துக்குப் பதில் நாராயண ஸ்மிருதி என்று எழுதுவதற்கும் இதுவே காரணம்.

நான் நமஸ்காரத்தைப் பற்றி மட்டுமே குறிப்பிட்டேன் - இந்த எழுத்தாளர் சொல்லி இருக்கும் “காலில் விழும் கலாசார”த்தைப் பற்றிக் குறிப்பிடவில்லை.

மேலும், பெரியவா உரைகள் எதையும் யாரும் திருத்தி எழுதவில்லை என்பதையும், ஆரம்ப நாட்கள் முதல் அவரது கருத்துகளில் எந்த மாற்றமும் இல்லை என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்தில் அனைவருக்கும் தெரிவிக்க விரும்புகிறேன்.

முந்தைய அத்தியாயத்தில் பவன்ஸ் ஜர்னல் கட்டுரையைப் பற்றிக் குறிப்பிட்டிருந்தேன். அது 1956-ல் வெளியானது. அதாவது, காந்திஜி சந்திப்புக்கு 30 வருடங்களுக்குப் பின்னர் வெளியானது. அந்தக் கட்டுரையில் உள்ள கருத்துகளும் காந்திஜியிடம் பெரியவா கூறிய கருத்துகளும் ஒன்றே தான்.

பெரியவாளுக்குச் சொந்தக் கருத்து என்று எதுவுமே இல்லை என்பது தான் அவரது மிகப் பெரிய விசேஷம். முழுக்க முழுக்க சாஸ்திர வழிகளை மட்டுமே ஏற்றுக் கொண்டவர் அவர். அந்த வழிகளையே நமக்கும் அவர் எடுத்துச் சொன்னார். எனவே, அவரது கருத்துகள் காலத்துக்கு ஏற்ப மாற்றம் அடையாதவை.

அதேநேரத்தில், சாஸ்திரம், சட்டம் - இரண்டுக்கும் இடையே வேறுபாடு என்று வரும்போது பெரியவா நூறு சதவிகிதம் சட்டத்தை மதித்தே செயல்பட்டிருக்கிறார்.

ஜனநாயக ரீதியில் அரசின் திட்டங்களை விமர்சனம் செய்ய வேண்டிய சந்தர்ப்பங்களிலும், அவர், அரசாங்கத்துக்குக் கட்டுப்பட்ட குடிமகனாக மட்டுமே தனது கருத்துகளைக் கூறுவதுண்டு. ஒரு சாதாரணக் குடிமகனைப் போல மிகுந்த பணிவுடனேயே அத்தகைய கருத்துகளை அவர் முன் வைத்திருக்கிறார் என்பதை இந்த இடத்தில் அழுத்தம் திருத்தமாகச் சொல்லிக் காட்ட விரும்புகிறேன்.

அதேநேரத்தில், பீடாதிபதியாக நின்று அவர் பேசும் சமயங்களில் அவரது வாக்கு ஒவ்வொன்றும் உத்தரவாக வெளிப்பட்டதும் உண்டு.

அது தான் பெரியவா - மஹதோ மஹீயானாகிய அது அணோர் அணீயானாகவும் இருக்கிறது.

பெரியவா இவ்வாறு கருத்துச் சொன்னதற்கும் அடிப்படைக் காரணம் அவரது பீடாதிபத்தியக் கடமையே தவிர, சுய விருப்பத்தின் பேரில் அவர் பேசியதில்லை. புதுப் பெரியவா பீடாதிபதியானதைத் தொடர்ந்து, இத்தகைய கருத்துகளைச் சொல்வதையும் அவர் படிப்படியாகக் குறைத்து விட்டார்.

இதைப்பற்றி அண்ணாவிடம் சொல்லும் போது அவர், “இப்பத் தான் நிஜ ஸந்நியாஸியாட்டம் எல்லாத்திலேர்ந்தும் ஒதுங்கி இருக்கேன்” என்று ஒருசில தடவை குறிப்பிட்டிருக்கிறார். தெய்வத்தின் குரல் ஏழாம் பகுதியில் அரசும் மதமும் அத்தியாயத்தின் முன்னோட்டப் பகுதியில் இத்தகைய ஒரு சம்பவத்தை அண்ணா எழுதியும் இருக்கிறார்.

இதே எழுத்தாளர், இன்னோரிடத்தில், அறியாமையில் உள்ள ஜனங்கள் அவரைத் துறவி என்றும் ஞானி என்றும் கொண்டாடுவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

கீதையை முற்றும் உணர்ந்தவரான இந்த எழுத்தாளருக்கு மகா பெரியவாளை ஞானி என்று சொல்வது அறியாமையாகத் தான் தெரியும். ஆனால், பெரியவா ஒரு துறவி என்பது கூடவா புரியாது?

இந்த மனிதருக்குப் பெரியவா மீது மரியாதை இருக்க வேண்டாம், ஆனால், ஒரு பாரம்பரியம் மிக்க பீடத்தின் தலைவரைப் பற்றி எழுதுகிறோம், அவரது பெயரைக் குறிப்பிடுவதற்குச் சில மரபுகள்

இருக்கின்றன என்பது கூடத் தெரியாதவரா, இவர்? இதேபோல, நாஸ்திகத் தலைவர்கள் யாரையாவது பற்றி இவரால் எழுத முடியுமா?

பாவம், பரிதாபத்துக்குரியவர்!

யாருடைய விமர்சனத்துக்கும் பதில் சொல்வது எனது வேலை அல்ல. அதேநேரத்தில், உண்மை தெரிந்தவர்கள் என்று தங்களைச் சித்தரித்துக் கொள்ளும் இத்தகைய மனிதர்களும் இருக்கிறார்கள், இதுபோன்று நல்லவர் வேடம் போட்டுத் திரியும் பலருடைய கருத்துகள் நம்மைச் சுற்றி உலா வருகின்றன என்பதை உங்கள் அனைவருக்கும் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அதிலும், இன்றைய சமூக வலைத்தள யுகத்தில் இத்தகைய ஏராளமான கருத்துகள் நம்மை வந்தடைகின்றன.

அண்ணாவுடன் இருந்தவன் என்கிற முறையில் இதை உங்கள் அனைவருக்கும் சுட்டிக் காட்ட வேண்டியது என்னுடைய கடமை என்று நான் நினைக்கிறேன்.

அதற்காகவே இந்த எழுத்தாளரின் கருத்துகளை உதாரணம் காட்டினேன் - அவரையோ அவரது உளறல்களையோ ஒரு பொருட்டாக மதித்து அல்ல.

இது தேவையில்லை என்று உங்களில் சிலர் நினைக்கலாம்.

அதேநேரத்தில் இதைப் பிழையான செய்கை என்று கருத மாட்டீர்கள் என்று நம்புகிறேன்.

***

பெரியவா-காந்தி சந்திப்பின் போது பெரியவா தெரிவித்த சில கருத்துகளைப் பார்க்கலாம்.

- பாரதப் பண்பாடு மிகத் தொன்மையானது. இதன் கல்வியும் மனித ஒழுக்கமும் மேம்பட்டவை. இதற்கு முக்கியக் காரணம் இந்த தேசத்தின் வர்ணப் பாகுபாடே.

- அனைவருக்கும் பொதுவான கடமைகள் உள்ளன. ஒவ்வொரு பிரிவினருக்குமான விசேஷ கடமைகளும் உள்ளன. இவற்றை அவர்கள் முறையே கடைப்பிடிப்பது ஒட்டுமொத்த சமுதாயத்துக்கு நன்மை தரும்.

- சாதாரணத் தண்ணீருக்கு இருக்கும் குணம் வேறு. வெந்நீரின் குணம் வேறு. இரண்டையும் கலந்தால் அவற்றின் குணங்கள் போய் விடும், அதனால் எந்தப் பிரயோஜனமும் இல்லை. வர்ணக் கலப்பும் அத்தகையதே.

- ஒரு மா மரம் உள்ளது. அதில் பல்வேறு கிளைகள் உள்ளன. ஒவ்வொரு கிளையிலும் ஒவ்வொரு சமயத்தில் பூக்கள் உற்பத்தியாகின்றன. காய்களும் அப்படியே. ஆனால், மரம் என்னவோ ஒன்று தான். அதேபோலத் தான் ஜன சமுதாயமும். பல்வேறு பிரிவுகளும் ஒரே சமுதாயத்தின் அங்கங்களே.

- இயற்கையாக உருவாகி வளர்ந்த வழிபாட்டு முறைகளைத் தலைகீழாக மாற்றுவது சமுதாய வாழ்க்கைக்குக் கேடு விளைவிக்கும்.

- அரசியல்வாதிகள் மத விஷயங்களிலும், சமுதாய விஷயங்களிலும் தலையிடுவதாலேயே நமது மதம் பலவீனமாயிற்று.

- ஆதிகாலம் தொட்டு நம் தேசத்தில் கடைப்பிடிக்கப்பட்டு வரும் வழக்கங்கள், தூய்மை குறித்த கட்டுப்பாடுகள் முதலியவை நமது சமுதாயத்துக்கு உதவியாக இருந்தன. இந்தக் கட்டுப்பாடுகளைத் தற்போது சிலர் தோஷம் என்று நினைக்கிறார்கள். இந்தக் கட்டுப்பாடுகள் எந்த ஒரு ஜாதியையும் உயர்ந்தது என்றோ, இன்னொன்றைத் தாழ்ந்தது என்றோ சொல்வதில்லை. கட்டுப்பாடுகளை விட்டுவிட்டால் சமுதாயம் ஒரு பிரயோஜனமும் அடையாது வீணாகி விடும்.

- சாஸ்திரப் பிரமாணங்கள் மீதும் சனாதன தர்மத்தின் மீதும் நம்பிக்கை உள்ள ஜனங்களுக்குக் கஷ்டம் கொடுப்பதும் அகிம்சைக்கு விரோதமான போக்கே.

- ஆலயங்கள் புனிதமானவை என்றும் கர்ப்பகிருகத்தில் கடவுள் இருக்கிறார் என்றும் நம்புகிறவர்களுக்காக ஆலயங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஆலயத்தின் தூய்மை பற்றி ஆகம சாஸ்திரங்கள் மிகவும் உயர்வாகப் பேசியுள்ளன. இத்தகைய சாஸ்திரங்களின் மீது நம்பிக்கை இல்லாதவர்களும், தூய்மைக் கட்டுப்பாடுகளை ஏற்றுக் கொள்ளாதவர்களும் ஆலயப் பிரவேசத்துக்கு அருகதை இல்லாதவர்களே.

இவையே காந்திஜியிடம் பெரியவா தெரிவித்த முக்கிய கருத்துகள்.

***

நான் சிறு வயதில் பார்த்த மடி-ஆசாரங்கள் எனக்கு இன்னும் பசுமையாக நினைவில் உள்ளன. எங்கள் பாட்டி மடியாக சமையல் பண்ணுவாள். சமையல் முடிவதற்கு முன் அவளை நாங்கள் தொட்டு விட்டால் தீட்டு.

இது தீண்டாமையா?

எங்கள் தாத்தா மடித்துணி உடுத்திக் கொண்டு பூஜை பண்ணுவார். பூஜை முடிவதற்குள் அவர் மீது நாங்கள் பட்டு விட்டால் தீட்டு.

இது தீண்டாமையா?

சாப்பிட்ட இடத்தைப் பசுஞ்சாணி கொண்டு துடைப்பது நம்மை நாமே இழிவுபடுத்திக் கொள்ளும் செயலா?

இதுபோல ஏராளமான சின்னச் சின்ன விஷயங்கள் உண்டு.

பெரியவா சொல்லும் ஆசாரங்களும் இந்த வகையைச் சேர்ந்தவையே.

நான் பார்த்தவை 1970களில் இருந்த அக்கிரகாரப் பழக்கங்கள்.

இத்தகைய ஆசாரங்கள் குறித்து அண்ணா ஒரு விஷயம் கூறினார். அது 1940களின் நிலை பற்றியது.

“குடும்பத்தில் இருபது, முப்பது பேர் இருப்பார்கள். வருமானம் என்னவோ மாசம் பதினைந்து, இருபது ரூபாய் கூட இருக்காது. இந்த வருமானத்துக்குள் அவர்கள் எளிமையான விதத்தில் குடித்தனம் நடத்தினார்கள். எந்தவித ஆசார அனுஷ்டானங்களையும், விரதங்களையும், பண்டிகைகளையும், இதர கர்மாக்களையும் விட்டு விடாமல் அனைத்தையும் முறையாகக் கடைப்பிடித்து வாழ்ந்தார்கள். நான் பார்த்தது முழுமையான பிராமண வாழ்க்கை அல்ல - fag end of it. உன் காலத்தில் நீ இதைக் கூடப் பார்த்திருக்க வாய்ப்பு இல்லை.”

இந்த எளிமையும் மன நிறைவும் தற்காலத்தில் எங்கே போயின?

இதற்கு யார் காரணம்?

இவற்றை எல்லாம் புரிந்து கொண்ட போது, உண்மையில், பெரியவா சொன்னது எதுவும் தீண்டாமை அல்ல, அந்த ஆசார விஷயங்கள் அனைத்தும் ஓர் ஒழுங்குக்கு உட்பட்ட வாழ்க்கை முறையை மட்டுமே என்பது புரிகிறது.

“ஆத்மவத் ஸர்வபூதாநி ய:பச்யதி ஸ பச்யதி என்று சொல்லி இருப்பதை எல்லோரும் கடைப்பிடிப்போம். நம்மை எவ்வாறு பார்க்கிறோமோ, அதேபோலப் பிறரையும் பாவிப்போம். இதயத்தின் அடி ஆழத்தில் இருந்து அனைவரையும் உண்மையாக நேசிப்போம். பிறரது ஜாதியையோ சமுதாய அந்தஸ்தையோ பொருட்படுத்தாமல், கஷ்டத்தில் இருக்கும் ஜனங்களை நாமாகவே தேடிப் போய் அவர்களுக்கு சேவை பண்ணுவோம். அதேநேரத்தில் நமக்கான ஆசாரங்களையும் முழுமையாகக் கடைப்பிடிப்போம். இத்தகைய வாழ்க்கை முறை நமக்குள் எந்த மன மாசுகளும் ஏற்படாமல் பாதுகாக்கும், போட்டி பொறாமைகளை அகற்றும், தற்போதைய சமுதாயத்தில் காணப்படும் தீங்குகளுக்கான ஒரே நிவாரணம் இது தான்.”

- இது தான் பெரியவா சொன்னது.

நியமங்கள் அனைத்துக்கும் அடி நாதமாக இருப்பது அன்பு அல்லவா?

***

“வேற்றுமையில் ஒற்றுமை, வேற்றுமையில் ஒற்றுமை” என்று நம் பண்பாட்டைப் பற்றிப் பேசுகிறோம்.

ஆனால், உண்மையில் இது, ஒன்றே பலப்பலவாகக் கிளைத்த மரம் போன்றது.

உருவமோ, குணமோ இல்லாத பரம்பொருள் எவ்வாறு நானாவித ஜட சேதனப் பொருட்களால் உருவான பிரபஞ்சமாகப் பரிணமிக்கிறதோ, அதுபோலவே தான் ஹிந்து மதமும் இருக்கிறது.

ஹிந்து மதத்தின் பல்வேறு பிரிவுகள், அவற்றின் உட்பிரிவுகள், ஒன்றுக்கொன்று வேறுபட்டுத் திகழும் விதவிதமான ஜனக் கூட்டங்கள்

- இவை அனைத்துக்கும் ஆணி வேராகத் திகழ்வது தர்மம் என்கிற தத்துவமே.

அது சனாதனமானது - அதாவது, என்றும் இருப்பது. எனவே தான், ஹிந்து மதத்தை சனாதன தர்மம் என்கிறார்கள்.

தர்மம் என்கிற அந்த அடிப்படைத் தத்துவத்தை நம்மால் புரிந்து கொள்ள முடிவதில்லை.

தர்மத்தை நமக்குப் புரிய வைக்கும் விதத்தில் அன்றாட நியமங்கள், கடமைகள் முதலான வடிவங்களில் விளக்குபவையே சாஸ்திரங்கள்.

இவற்றை நமக்குத் தந்தவர்கள் மகரிஷிகள். நம்முடைய புலன்களுக்கும் அறிவுக்கும் அப்பாற்பட்ட ஆற்றல் அவர்களுக்கு இருந்தது. மேலும், அவர்கள் சுயநலத்துக்கு அப்பாற்பட்டவர்கள். இந்த இரு காரணங்களால், அவர்கள் தான் நமக்குச் சிறந்த வழிகாட்டிகளாக இருக்க முடியும்.

ரிஷிகள் நமக்குத் தந்த விஷயங்களையே நாம் சாஸ்திரம் என்று அழைக்கிறோம்.

இந்த சாஸ்திரங்களின் பல்வேறு அம்சங்களையே நியமங்கள், ஆசாரங்கள் முதலியவற்றின் மூலமும், பல்வேறு உதாரணங்களின் மூலமும் வெவ்வேறு கோணங்களில் எத்தனையோ சந்தர்ப்பங்களில் பெரியவா விளக்கி இருக்கிறார்.

அவற்றின் தொகுப்பு தான் தெய்வத்தின் குரல்.

தெய்வத்தின் குரல் என்பது தர்மத்தின் குரல்.

“சாஸ்திரம், தர்மம் முதலியவற்றை நம்மால் எளிதில் புரிந்து கொள்ள முடிவதில்லை. அதேநேரத்தில், பெரியவா எவ்வாறு நடந்து கொண்டார், என்ன சொல்லி இருக்கிறார் என்பதை மட்டும் தெரிந்து கொண்டால் போதுமானது. அது தான் தர்மத்துக்கான விளக்கம். ஏனெனில், பெரியவா தர்மத்துக்குப் புறம்பாக எந்தச் செயலும் செய்ததும் இல்லை, எந்தக் கருத்தையும் மொழிந்ததும் இல்லை.”

- பெரியவா பற்றி அண்ணா அடிக்கடி சொல்லும் கருத்து இது.

## 14. சாஸ்திரம் என்பது என்ன?

ஓர் ஆய்வுக் கட்டுரைக்காக, கம்யூனிசம் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டி வந்தது.

கம்யூனிசம் என்ற பெயரில் சில நாடுகளில் சர்வாதிகாரிகள் லட்சக்கணக்கான மக்களைக் கொன்று குவித்தது பற்றி ஏற்கெனவே ஓரளவு படித்திருக்கிறேன். அதேபோல, கம்யூனிசம் எவ்வாறு அந்தந்த நாட்டுப் பொருளாதாரங்களை அடியோடு நாசம் செய்தது என்பது குறித்தும் ஓரளவு கேள்விப்பட்டிருந்தேன்.

ஆனால், என் மனதில் வேறு ஒரு முக்கியமான கேள்வி எழுந்தது.

சீனாவில், ஜனநாயகம் வேண்டும் என்று கோரி, ஆயிரக்கணக்கான மாணவர்கள் தியான்மென் சதுக்கத்தில் அறப் போராட்டம் நடத்தினார்கள்.

அந்நாட்டு அரசாங்கத்துக்கு அந்தப் போராட்டத்தில் உடன்பாடு இல்லை. அந்நாட்டு ஆட்சியாளர்கள் சர்வாதிகாரிகள், அவர்களால் ஜனநாயகத்தை ஆதரிக்க முடியாது என்பதைப் புரிந்து கொள்ள முடிகிறது

அந்த மாணவர்களைக் கலைந்து போகச் செய்வதற்கு எத்தனையோ வழிகள் உள்ளன. ஆனால், அந்த ஆட்சியாளர்கள், அந்த மாணவர்கள் மீது ராணுவ டாங்கிகளை ஏற்றி நசுக்கிக் கொன்றார்கள். தப்பித்து ஓட முயன்றவர்களையும் விரட்டிப் பிடித்துக் கொடூரமாகக் கொலை செய்தார்கள்.

வார்த்தைகளில் வர்ணிக்கவே முடியாத படு பயங்கரம்!!

எல்லா கம்யூனிச நாடுகளிலும் இத்தகைய கோரமான வன்முறைகள் சகஜமாகவே இருந்திருக்கின்றன, இருந்து வருகின்றன.

எல்லா கம்யூனிச நாடுகளிலுமே ஒரே மாதிரி இத்தகைய வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன என்பதை அறியும் போது, இயல்பாகவே, இத்தகைய கொடூரமான படுகொலைகளுக்குக் காரணமான ஏதோ ஓர் அம்சம் அந்த சித்தாந்தத்துக்கு உள்ளேயே இருக்கிறது என்று தான் நினைக்கத் தோன்றுகிறது.

அது என்ன என்பதைத் தெரிந்து கொள்ள விரும்பினேன். கம்யூனிசம் பற்றி நான் தெரிந்து கொண்ட விஷயங்கள், பெரிவாளின் உபதேசங்களை எனக்குத் தெளிவாகப் புரிய வைத்தன.

### ஐரோப்பிய சிந்தனை, பெரியவா

கம்யூனிசம் பற்றித் தெரிந்து கொள்வதற்காக கார்ல் மார்க்சின் கருத்துகளைக் கொஞ்சம் புரட்டிப் பார்த்தேன்.

எல்லோருக்கும் எல்லா வளமும் சரிசமமாக

- இது தான் கம்யூனிசம் உருவாக்க விரும்பும் மனித சமுதாயம்.

இதை அமலுக்குக் கொண்டு வரும் பொருட்டு வர்க்கப் போராட்டம், சோஷலிச சர்வாதிகாரம் முதலிய சில அணுகுமுறைகளை முன்வைக்கிறார், கார்ல் மார்க்ஸ்.

எல்லோருக்கும் என்றால் என்ன, எல்லாம் என்றால் என்ன, வளம் என்றால் என்ன, சமம் என்றால் என்ன?

தனிநபர்களால் ஆன குடும்பம், குடும்பங்களால் உருவாகும் சிறுசிறு ஜனக் கூட்டம், இந்தக் கூட்டங்களை உள்ளடக்கிய பெருந்திரளான சமுதாயம்....

இத்தகைய சமுதாயத்தில் எத்தனை விதமான மனிதர்கள் வாழ்கிறார்கள்? அவர்களின் தேவைகள் என்னென்ன? இந்தத் தேவைகளை நிறைவேற்றுவதற்கான பொருட்கள் என்னென்ன, பணிகள் என்னென்ன?

இந்த ஜனங்களுக்கு மத்தியில் பரஸ்பர உறவு என்ற ஒன்று இருக்கிறதே, அது எப்படித் தோன்றியது, அதற்கு அடிப்படையாக இருக்கும் அன்பு என்ற அம்சம் எப்படி வந்தது?

இந்த மனிதர்களுக்கு மனம் என்ற ஒன்று இருக்கிறதே, அது இல்லாமல் தனிமனிதனின் இயக்கமே இல்லையே, அந்த மனதுக்குத் தேவைப்படும் விஷயங்கள் என்னென்ன?

இது போன்ற அம்சங்கள் இருக்கின்றன என்பதையே மார்க்ஸ் அறிந்திருக்கவில்லை, அவரைப் பொறுத்த வரை சமுதாயம் என்பது ஓர் இயந்திரத்தைப் போன்றது, அதன் உதிரி பாகங்களே தனி மனிதர்கள். இந்த இயந்திரத்தின் உயிராக அமைவது மூலதனம்.

இந்த லட்சணத்தில், மார்க்ஸ், உலகம் முழுவதும் ஒரே குடும்பமாக விளங்கும் சமுதாயத்தைப் படைக்கப் போவதாகச் சொல்கிறார். அந்தச் சமுதாயத்தில் பெண்கள், ஒட்டுமொத்த சமுதாயத்துக்கும் பொதுவான சொத்தாக (common and communal property) இருப்பார்களாம். ஆம், கம்யூனிச சமுதாயத்தில் தனிக் குடும்பமே கிடையாதே! எனவே, பெண்கள், குழந்தைகள் உட்பட எல்லாமே பொதுச் சொத்து தான்

பெரிய பொருளாதார சித்தாந்தம் என்று சொல்லப்பட்ட கம்யூனிச சிந்தனை இது தான்.

இப்போது என் மனதில் ஓர் அடிப்படைக் கேள்வி எழுகிறது.

மார்க்ஸிய சிந்தனை ஒரு பைத்தியக்காரத்தனமான உளறல் என்பதை என்னைப் போன்ற ஒரு சாமானியனால்கூடப் புரிந்து கொள்ள முடிகிறது! ஆனால், இத்தகைய ஒரு சிந்தனைக்கு ஐரோப்பியர்கள் மத்தியில் பெருத்த வரவேற்பு இருந்தது எப்படி? எத்தனையோ சிந்தனையாளர்கள் மார்க்ஸின் பின்னால் அணிவகுத்தார்களே, மார்க்ஸியத்தை அறிவியல் பூர்வமானது என்று கொண்டாடினார்களே, அது எப்படி சாத்தியமாயிற்று?

இந்தப் பைத்தியக்காரத்தனத்தைப் பெரிய அறிவாற்றல் என்று அவர்களால் போற்ற முடிந்தது எப்படி?

சிந்தனையாளர்களாகிய அவர்கள் யாருக்குமே சிந்திக்கும் ஆற்றல் இல்லையா?

இதுவே எனக்குள் எழுந்த கேள்வி.

ஐரோப்பிய சரித்திரத்தில் இதற்கான பதிலைத் தேட ஆரம்பித்தேன். அது எனக்குச் சில விஷயங்களைப் புரிய வைத்தது.

ஐரோப்பிய சரித்திரத்தைப் புரட்டினால், "கம்யூனிசமே தேவலை" என்று நினைக்கத் தோன்றும். அத்தனை அத்தனை கிளர்ச்சிகள், போர்கள், வன்முறை வெறியாட்டங்கள், குவியல் குவியலாகப் பிணங்கள்....

இவற்றுக்கான காரணங்களை அரசியல், மதம், தத்துவம் என்று மூன்று விதங்களில் புரிந்து கொள்ளலாம்.

1. **அரசியல்**

ரோமானிய சாம்ராஜ்யம் தான் மனித குலத்துக்கு ஜனநாயகம் என்கிற ஆட்சித் தத்துவத்தைக் கொடுத்தது என்று நமக்குப் பாடநூல்களில் சொல்லித் தருகிறார்கள். ஜனநாயகம் என்பது மக்களுக்காக, மக்களால்.... என்றெல்லாம் போதனை செய்கிறார்கள்.

இரண்டுமே தவறானவை.

ஆட்சிமுறை எவ்வாறு இருக்க வேண்டும் என்பதற்கான அடிப்படை எதுவுமே தெரியாத அந்நாடுகளைச் சேர்ந்த ஆட்சியாளர்கள், அவ்வப்போது பல்வேறு விதமான பரிசோதனைகளை மேற்கொண்டார்கள். இவற்றுக்கு எதிர்ப்புகளும் ஏற்பட்டன, மக்கள் ஆதரவும் இருந்தது. இவற்றால் பல்வேறு குழப்பங்கள், கிளர்ச்சிகள், புதிய புதிய அணுகுமுறைகள் என்று காலப்போக்கில் பல வலி மிகுந்த மாற்றங்களை அந்நாடுகள் சந்தித்தன.

இங்கே முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியது பரிசோதனைகளையே. ஒவ்வொரு காலகட்டத்திலும் அந்நாடுகள் பல்வேறு விதமான சமுதாய அமைப்பையும், நிர்வாக அணுகுமுறையையும் ஏற்படுத்தின. இவை அனைத்துக்கும் பரிசோதனைக் களமாக இருந்தது அந்நாட்டு மக்கள் சமுதாயம்.

2. **மதம்**

ஐரோப்பாவில் ஏராளமான மத நம்பிக்கைகள் இருந்தன. இவற்றுக்குள்ளே பொதுமையும் உண்டு, வேற்றுமைகளும் உண்டு, அடிதடிகளும் உண்டு.

புதிய மதமாகிய கிறிஸ்தவம் பெரிதாக வளர்ந்ததும் சமுதாயச் சூழல் மாறியது.

கத்தோலிக்க மதம், அரசாட்சி உட்பட்ட பல்வேறு விஷயங்களைத் தனது பிடிக்குள் கொண்டு வந்தது. தனது வலிமையான நிர்வாக அமைப்பின் மூலம் அது ஆட்சி நிர்வாகத்தையும் மக்களின் அன்றாட வாழ்க்கையையும் கட்டுப்படுத்தியது.

மிகவும் பிரமாண்டமான அமைப்பாக அது உருவெடுத்ததால், அதற்கான பொருளாதாரத் தேவையும் மிகுதியாக இருந்தது. தனது பொருளாதாரத் தேவைக்காக மக்களின் வளங்களைச் சுரண்டத் தலைப்பட்டது.

எனவே, மதம் என்பது ஆட்சியில் எந்த அளவு தலையிடலாம், சமுதாயத்தில் அதன் பங்களிப்பு என்ன, மதத்துக்கு சமுதாய மக்கள் எவ்வளவு தூரம் அடிபணியலாம், மனித குணங்களை வளர்த்தெடுப்பதில் மதத்துக்கு மட்டும் தான் பொறுப்பு உள்ளதா - இதுபோன்ற பல்வேறு அம்சங்களில் அவ்வப்போது மோதல்கள், அதிகார வரம்புகளைத் தாண்டுதல், சுரண்டல்கள் ஏராளமாக நடைபெற்றன.

ஒவ்வொரு முறையும் புதிய புதிய அணுகுமுறைகள், பரிசோதனைகள், தலைகீழ் மாற்றங்கள்....

இத்தனை பரிசோதனைகளுக்கும் களமாக இருந்தது அந்த மக்கள் சமுதாயம்.

### 3. **தத்துவம்**

ஏறக்குறைய நமது நாட்டில் இருந்தது போன்ற நால் வருண அமைப்பு தான் பண்டைய ஐரோப்பாவிலும் இருந்தது. நமது நாட்டில் அதன் வடிவம் வேறு, ஐரோப்பாவில் அதன் வடிவம் வேறு.

அரசர்கள், நில உடைமைதாரர்கள் முதலியோர் கைகளில் ஆட்சிப் பொறுப்பு இருந்தது. இரண்டாவது பிரிவினர், வியாபாரிகள். இரு பிரிவினருக்கும் பணிபுரியும் ஏவலர்கள் மூன்றாவது பிரிவினர்.

இம்மூன்று பிரிவுகளும் பிறப்பின் அடிப்படையிலேயே அமைந்திருந்தன

சமுதாயத்தின் நான்காவது பிரிவாக சர்ச் இருந்தது. இது மதம் சார்ந்தது. மத போதனைகள் மனிதர்களிடையே நன்னெறியை வளர்க்கத் துணைபுரிந்தன.

மக்களின் கல்வி என்பது பெரும்பாலும் குடும்பத்தையும் தொழில் அமைப்பையும் சார்ந்தே விளங்கியது. நாளாவட்டத்தில் அரசாங்கமும் சர்ச்சும் கல்விக் கூடங்களை ஏற்படுத்தும் முயற்சியில் இறங்கின. எனினும், சில நூறு வருடங்களுக்கு முன்பு வரை கல்வி என்பது வாழ்க்கைத் தேவைகள் (livelihood) சார்ந்ததாக மட்டுமே இருந்தது.

இதுபோலப் பிறப்பின் அடிப்படையிலோ, மதத்தின் அடிப்படையிலோ அமையாத இன்னொரு பிரிவும் அங்கே உருவாகி வளர்ந்தது. இந்த வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் தங்களைச் சிந்தனையாளர்கள் என்று அழைத்துக் கொண்டார்கள். இவர்கள் எதிர்காலக் கனவுகளில் மிதந்தார்கள். புதியதோர் உலகம் படைக்க வேண்டும் என்று இவர்கள் விரும்பினார்கள். சமுதாய அமைப்பின் ஒவ்வோர் அம்சத்தையும் இவர்கள் கேள்விக்கு உட்படுத்தினார்கள்.

காலப்போக்கில் இந்த வர்க்கம் பெரும் பலம் கொண்டதாக வளர்ந்தது. ஐரோப்பிய நாடுகளின் ஆட்சிமுறை, கல்வி, பல்வேறு அமைப்புகளின் அதிகார வரையறை முதலியவற்றைத் தீர்மானித்ததில் இந்த வர்க்கத்தின் பங்களிப்பு அதிகம். கல்வி நிறுவனங்கள் அரசாங்கத்தாலும் சர்ச்சாலும் உருவாக்கப்பட்டிருந்தாலும், அவற்றில் போதிக்கப்படும் விஷயங்களை முடிவு செய்தவர்கள் இவர்களே.

இந்த வர்க்கத்தினர் ஆங்காங்கே சிறிய-பெரிய குழுக்களாக இருப்பார்கள். அவர்களில் யாராவது ஒரு மையப்புள்ளி இருப்பார். அவர் தனது அறிவுக்கு எட்டிய விஷயங்களை மற்றவர்களுடன் பகிர்ந்து

கொள்வார். அவரது அறிவுத் தரம், சிந்தனை ஆற்றல், அவர் முன்வைக்கும் கருத்தினால் சமுதாயத்துக்கு ஏற்பட முடிகிற நன்மைகள் முதலியவற்றை அறிந்து கொள்வதில் யாருக்கும் அக்கறை கிடையாது.

ஒரு கருத்தை முன்வைப்பவரும், அவரைச் சார்ந்தவர்களும் எழுப்பும் கூச்சலைப் பொறுத்து அந்தக் கருத்து மக்கள் மத்தியில் வலிமை பெறும். தடி எடுத்தவன் தண்டல்காரன் கதை தான்.

இத்தகைய "வலுவான" கருத்துகள் மக்கள் சமுதாயத்தின் மீது பரிசோதனை செய்யப்படும்.

இந்த வர்க்கத்தைச் சேர்ந்தவர் தான் மார்க்ஸ். இந்த வர்க்கத்தைச் சேர்ந்த அனைவருமே சிந்தனையாளர்கள் என்று அழைக்கப்பட்டதால் மார்க்ஸும், இயல்பாகவே, சிந்தனையாளர் ஆகி விட்டார்.

மார்க்ஸுக்குப் பின்னால் பெரிய கும்பல் சேர்ந்தது. இதர கருத்துகளைப் போலவே மார்க்ஸிய தத்துவமும் மக்கள் மீது பரிசோதித்துப் பார்க்கப்பட்டது. அதன் விளைவாக, சில கோடிப் பேர் கொடூரமாகக் கொல்லப்பட்டார்கள். இந்தத் தத்துவம் மனிதர்களை மனித உயிர்களாகப் பார்க்காத காரணத்தால், மனிதக் கொலைகள் கம்யூனிஸ்டுகளுக்கு ஒரு பொருட்டாகத் தெரிவதில்லை.

மொத்தத்தில், ஐரோப்பிய சிந்தனைப்படி பார்த்தால், புதிய கருத்துகள் அவ்வப்போது தோன்றும். அவை மக்கள் மீது பரிசோதிக்கப்படும். சில கருத்துகள் நீடித்து நிலைக்கும். பிற கருத்துகள் மறைந்து விடும். மனித குல முன்னேற்றம் என்பது இப்படித் தான் நிகழ்கிறது.

**ஒட்டுமொத்த விளைவு**

காலப்போக்கில் ஏற்பட்ட விஞ்ஞான, தொழில்நுட்பக் கண்டுபிடிப்புகளும் ஐரோப்பிய சமுதாயத்தில் பெருத்த மாற்றங்களை ஏற்படுத்தின.

இதுபோன்ற ஏராளமான அம்சங்களால் ஏற்பட்ட ஒட்டுமொத்த விளைவுகளில் இரண்டை மட்டும் இங்கு குறிப்பாகக் கவனிக்க வேண்டியது அவசியம்.

1. அரசு நிர்வாகம் என்பது மையப்படுத்த ஒன்றாக உருவெடுத்தது. அசுர பலத்துடன், மிகப்பெரிய ராணுவக் கட்டமைப்புடன், அழிக்கும் சக்தியுடன் அது திகழ்ந்தது. எனவே, மக்கள் அரசாங்கத்துக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தால், அரசு நிர்வாகம் அவர்களை நசுக்கும் அளவு பலமாக இருந்தது.

அரசாங்கம் சிறிய தவறு செய்தாலும் அதன் விளைவுகள் ஜனங்களைப் பெருமளவு பாதிக்கும் என்ற நிலை ஏற்பட்டது.

சிக்கல் மிகுந்த நிர்வாக அமைப்புகளின் விளைவாக, நீதி பரிபாலனமும் சிக்கல் மிகுந்ததாக ஆனது.

மக்களுக்கு நன்மை என்பதை, அரசாங்கம் பல்வேறு மக்கள் குழுக்களின் வாயிலாகவே புரிந்து கொள்ள வேண்டும். எனவே, மையப்படுத்தப்பட்ட அரசில் மக்கள் குழுக்களின் பிரதிநிதிகள் அவசியம்.

இவர்கள் அவ்வப்போது கூடி விவாதித்து மக்களுக்கு நன்மையான விஷயங்களை முடிவு செய்து அவற்றை அமல்படுத்துவார்கள்.

- இது தான் மக்களாட்சி என்ற கருத்து வேரூன்றியது. இது தான் நல்ல நிர்வாகம் என்ற சிந்தனை மேலோங்கியது. இதர சிந்தனைகள் கீழ்த்தரமாகக் கருதப்பட்டன. ஆசிய நாடுகள் முதலியவற்றில் இத்தகைய சிந்தனை இல்லாததால், அந்தச் சமுதாய மக்கள் கீழ்த்தரமானவர்களாகக் கருதப்பட்டார்கள்

2. ஓர் இயந்திரம் இருக்கிறது. நாளாவட்டத்தில் அதில் நாம் புதிய புதிய மாற்றங்களைச் செய்கிறோம். காலப்போக்கில், அதன் உற்பத்தி கூடுகிறது, செலவுகள் குறைகின்றன, தரம் கூடுகிறது, சிரமங்களும் விரயங்களும் குறைகின்றன. இது தொழில்நுட்ப முன்னேற்றம் எனப்படுகிறது.

அதுபோலவே, மனிதர்களின் வசதிகள், செல்வ வளங்கள் முதலானவற்றைக் கூட்டுவதற்காக அவ்வப்போது ஏதாவது கருத்துகள் எழும். இவை புதிய சிந்தனை என்று போற்றப்படும்.

புதிய கருத்துகள் மக்கள் சமுதாயத்தின் மீது பரிசோதனை செய்யப்படும்.

மனித குலத்தின் முன்னேற்றம் என்பது இவ்வாறு தான் ஏற்படுகிறது என்பது ஐரோப்பிய நாடுகளின் தீர்மானமான கொள்கை ஆகி விட்டது. இதுபோன்ற காரணங்களால், அவ்வப்போது ஏதேதோ கருத்துகள் புதிது புதிதாக முளைத்துக் கொண்டே இருக்கும், அவை மக்கள் மீது பரிசோதிக்கப்பட வேண்டும் என்று ஆகி விட்டது. இவற்றால் ஏற்படும் மாற்றங்களை முன்னேற்றம் என்று அவர்கள் நம்புகிறார்கள்.

மனித வாழ்வின் இலக்கு என்று அவர்கள் சமுதாயத்தில் எதுவுமே நிர்ணயிக்கப்படவில்லை. எனவே, வாழ்க்கை எந்தத் திசையில் பயணிக்க வேண்டும் என்பதில் அந்தச் சமுதாயத்தினருக்குத் தெளிவில்லை.

ஒவ்வொரு கருத்தும் அந்தச் சமுதாயங்களை ஒவ்வொரு திசையில் அலைக்கழித்தது.

தற்போதும் அதே நிலை தான் நீடிக்கிறது.

**பெரியவா உபதேசங்கள்**

அறம், பொருள், இன்பம், வீடு என்பது நமது தர்மத்தின் மிக அடிப்படையான கருத்து. இங்கே வாழ்வின் குறிக்கோள் என்பது வீடுபேறு மட்டுமே. அதற்கான பாதையில் காமமும் உண்டு, செல்வமும் உண்டு. வாழ்க்கையின் ஒவ்வோர் அம்சமும் அதனதன் அளவில் முக்கியமானதே. அதேநேரத்தில், மனித வாழ்வின் நோக்கம் வீடுபேறு அடைவது மட்டுமே.

மனிதனின் வாழ்க்கைக்கான பாதையை இதுவே நிர்ணயிக்கிறது.

வீடுபேற்றை நோக்கிய பயணம் என்பதே முன்னேற்றம், இதர திசைகளில் போவது தடுமாற்றம்.

இந்தப் பாதையை நிர்ணயித்தவர்கள் மகரிஷிகள். அவர்கள் புலன்களுக்கு அப்பாற்பட்ட ஆற்றல் கொண்டவர்கள். சுயநலம் இல்லாதவர்கள். எனவே, அவர்கள் தான் மனித குலத்தை வழிநடத்தும் தகுதி உடையவர்கள். புலன்களுக்கு அப்பாற்பட்ட ஆற்றல்கள் மூலம் அவர்களால் கிரகிக்கப்பட்ட உண்மைகளையே நாம் சாஸ்திரங்கள் என்கிறோம்.

இரண்டு வருடங்களாக கொரோனா சூழல் நிலவுகிறது. இதற்கான தீர்வு என்று மேற்கத்திய வைத்திய முறை புதிய தடுப்பூசிகளை உருவாக்கி அதை ஆயிரக்கணக்கான மனிதர்களின் மீது பரிசோதித்துப் பார்க்கிறது. ஆனால், இந்தியாவின் சித்த, ஆயுர்வேத மருத்துவர்களோ, பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட வைத்திய சாஸ்திர நூல்களைப் புரட்டிப் பார்த்து கொரோனாவுக்கான தீர்வைக் கண்டறிகிறார்கள்.

சாஸ்திரம் தரும் உண்மைகள் சத்தியம். சத்தியம் என்பது எக்காலத்துக்கும் பொருந்தும். சத்தியம் என்பது புரிந்து கொள்ளப்பட வேண்டியது. அதைச் சந்தேகிப்பதும், பரிசோதித்துப் பார்ப்பதும் அறிவீனம்.

சாஸ்திரத்தில் சொல்லப்பட்டுள்ள விஷயத்தைப் புரிந்து கொண்டு செயல்படுவதே நம் கடமை. இதை ஏற்று நடப்பதற்குப் பெயர் தான் சிரத்தை. சிரத்தை என்றால் சாஸ்திரக் கருத்துகள் மீது வைக்கப்படும் நம்பிக்கை.

இந்தியாவின் தலைசிறந்த சிந்தனையாளர்கள் என்று கொண்டாடப்படுபவர்கள் ஆசார்யாள், ராமாநுஜர் முதலானோர். இவர்கள் எழுதிய பாஷ்யங்களே இவர்களது சிறப்பு. இந்த பாஷ்யங்கள், ஐயாயிரம் வருஷத்துக்கு முற்பட்ட வியாசர் எழுதிய பிரம்ம சூத்திரத்துக்கான விளக்கங்களே.

இந்தியாவைப் பொறுத்த வரை, சிந்தனை என்பது புதியதாக ஏற்பட்டு, சமுதாயத்தின் மீது பரிசோதிக்கப்பட்டு, உருமாற்றம் அடைந்து, விரிவடைந்து வளர்வது அல்ல.

ரிஷிகளால் ஏற்கெனவே அறிதியிட்டுச் சொல்லப்பட்ட சத்தியத்தை மனிதர்கள் புரிந்து கொள்ள முயற்சிப்பதே இந்திய சிந்தனை. இதுவே இந்தியாவில் சம்பிரதாயங்கள் என்ற வாழ்க்கைப் பாதைகளை உருவாக்குகிறது.

இங்கே ஆசார்யர்கள் முதல் அரசன் வரை சமுதாயத் தலைவர்கள் அனைவரும் தர்மம் என்கிற தத்துவத்தைக் காப்பதையே தங்கள் கடமையாகக் கொண்டிருந்தார்கள். அந்தத் தத்துவத்தை விளக்குபவையே சாஸ்திரங்கள்.

இதைத் தான் பெரியவா சொல்கிறார்:

“எனக்கென்று தனிக் கருத்து எதுவும் கிடையாது. கருத்துச் சொல்வதற்கு எனக்கு என்ன தகுதி இருக்கிறது, என்ன உரிமை இருக்கிறது? சாஸ்திர வழிகளை மக்களுக்குக் காட்டுவதற்காக ஏற்படுத்தப்பட்டவையே தர்ம பீடங்கள். ஒரு ஜட்ஜ், சட்டப் புத்தகத்தைப் பார்த்துத் தீர்ப்புச் சொல்வதைப் போலவே, நாங்களும், சாஸ்திரத்தில் உள்ள விஷயங்களைத் தான் மக்களுக்கு எடுத்துக் காட்டக் கடமைப்பட்டுள்ளோம்.”

ஆம், இதற்கு மேல் சொல்வதற்கு என்ன இருக்கிறது?

**அரசும் மதமும்**

தெய்வத்தின் குரம் ஏழாம் பகுதியில் இரண்டு அத்தியாயங்களைப் பற்றிக் குறிப்பிட்டிருந்தேன். அதில் பெண்மை அத்தியாயம் பற்றிய சில தகவல்களையும் கூறி இருந்தேன்.

இரண்டாவது அத்தியாயம், அரசும் மதமும்.

நம் நாட்டில் மதச்சார்பின்மையைக் கட்டிக் காப்பதற்காகவே பிறந்தவர்கள் ஏராளம். பெண்களின் விடுதலைக்காகப் பாடுபடுபவர்களை விட இவர்களது எண்ணிக்கை அதிகம். இவர்கள் குரலுக்கு டெசிபல் வேல்யூவும் அதிகம்.

அரசும் மதமும் அத்தியாயம் இவர்களது வாய்க்கு அவல் போடுவது போன்று அமைந்துள்ளது

தெய்வத்தின் குரம் ஏழாம் பகுதி வெளியானதும், இந்த அத்தியாயம் பற்றிய விவாதங்கள் மீடியாவை ஆக்கிரமிக்கும், ஓரிரு மாதங்களாவது பெரியவாளுக்கு “அர்ச்சனை” நடக்கும் என்று நான் நம்பினேன்.

ஆனால், இதில் உள்ள கருத்துகள் பற்றி ஒரே ஒரு எதிர்ப்புக் குரல் கூட எழவில்லை.

***

அரசும் மதமும் என்பது ஒரு ஸ்ரீமுகம். பெரும்பாலும் ஸ்ரீமுகங்கள் கால் பக்க, அரைப்பக்க ஆசியுரைகளாக மட்டுமே இருக்கும். ஆனால், இந்த ஸ்ரீமுகம் பக்கம் பக்கமாக விரிகிறது.

1947-ல் சுதந்திர பாரதத்துக்குப் பெரியவா இரண்டு ஸ்ரீமுகங்கள் அளித்தார். முதலாவது ஸ்ரீமுகம் பொதுமக்களுக்கானது. இரண்டாவது ஸ்ரீமுகம் ஆட்சியாளர்களுக்கானது.

முதலாவது ஸ்ரீமுகம் கல்கி உட்பட நிறைய பத்திரிகைகளில் வெளியானது.

இரண்டாவது ஸ்ரீமுகம் “ஒரு தலைவருக்கு”ப் பிடிக்காது என்பதால் வெளியிடப்படவில்லை. பெரியவா இதுபோன்ற ஒரு ஸ்ரீமுகம் அளித்திருக்கிறார் என்ற தகவல் கூட யாருக்கும் தெரியாமலேயே போய்விட்டது.

கல்கியில் 1947 ஆம் ஆண்டு வெளியான ஸ்ரீமுகத்தை 1972 ம் ஆண்டு மீண்டும் பிரசுரிக்க விரும்பினார்கள். இதற்காக அண்ணா பெரியவாளைப் பார்க்கப் போயிருந்தார்.

அப்போது பெரியவா புதியதாக ஒரு ஸ்ரீமுகம் டிக்டேட் பண்ணினார். இது, 1947-ன் இரண்டு ஸ்ரீமுகக் கருத்துகளையும் உள்ளடக்கியது.

எனினும், இந்தப் புதிய ஸ்ரீமுகத்தைத் தமது ஜீவிய காலம் முடிந்த பின்னர் வெளியிடுமாறு பெரியவா கூறி விட்டார். எனவே, இது கல்கியில் வெளியாகவில்லை.

பெரியவா காலத்துக்குப் பின்னர் தெய்வத்தின் குரல் ஏழாம் பகுதியில் தான் இது முழு வடிவில் வெளியானது.

இதை 1947 ஸ்ரீமுகம் என்று வைத்துக் கொள்வதும் 1972 ஸ்ரீமுகம் என்று வைத்துக் கொள்வதும் அவரவர் விருப்பம். எப்படி இருந்தாலும், இதில் உள்ள விஷயங்கள் சுதந்திர இந்தியாவில் சட்டத்தைத் தீர்மானிக்கும் நிலையில் இருப்பவர்களுக்காகப் பெரியவா விடுத்துள்ள செய்தி என்பதில் மாற்றுக் கருத்து இல்லை.

***

செக்யூலரிசம் என்றால் என்ன, மத மாற்றம் என்றால் என்ன, மத மாற்றம் எத்தகையதாக இருக்க வேண்டும், சேவை என்ற போர்வையில் நடைபெறும் மத மாற்றம், மாற்று மதத்துக்குப் போனவர்கள் மீண்டும் ஹிந்து மதம் திரும்புவதை ஊக்குவிக்க வேண்டிய அவசியம், பொது சிவில் சட்டம் முதலான பல்வேறு விஷயங்களைப் பற்றிப் பெரியவா இதில் குறிப்பிட்டுள்ளார்.

குறிப்பாக,

- சேவை என்ற பெயரில் பயனாளிகள் மனதில் ஒருவித நன்றி உணர்ச்சியை ஏற்படுத்தி, அதன் மூலம் மத மாற்றம் செய்வதைக் கற்பழிப்புக்கு இணையான குற்றமாகப் பார்க்க வேண்டும், கடுமையான தண்டனை தரப்பட வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

- இந்த தண்டனை மிகமிகக் கடுமையானதாக இருக்க வேண்டியது அவசியம். தண்டனையை நினைத்துப் பார்ப்பதால் மனதில் ஏற்படும் அச்ச உணர்வு, ஒருவனை, இக்குற்றத்தில் ஈடுபடாமல் தடுக்கும் என்கிற அளவு கடுமையான தண்டனை தரப்பட வேண்டும் என்றும் வலியுறுத்துகிறார்.

- ஹிந்து மதம் தான் இந்த நாட்டின் பூர்விக மதம். எனவே, ஹிந்து மதம் தான் இந்தியாவின் அரசு மதமாக இருக்க வேண்டும்.

- அரசியல் சுதந்திரத்துக்காகப் போராடியது போலவே, மக்கள், ஆன்மிக சுதந்திரத்துக்காகப் பெரிய அளவில் போராட வேண்டும் என்றும் பெரியவா அறைகூவல் விடுக்கிறார்.

***

இந்தியாவின் கிறிஸ்தவர்களும் முஸ்லிம்களும் ஆதியில் ஹிந்து மதத்தைச் சேர்ந்தவர்களே. அவர்கள் பலர் மீண்டும் ஹிந்துக்களாக மதம் மாறுவதும் இயல்பாக நடந்து வருகிறது.

இவ்வாறு அவர்கள் ஹிந்து மதத்துக்குத் திரும்புவதைப் பெரியவா ஆதரிக்கவில்லை. அவரவர் மதத்துக்கு ஏற்ற ஆசரணைகளை முறையாகக் கடைப்பிடித்தால் போதுமானது என்றே அவர் சொல்வதுண்டு.

ஆனால், இந்த ஸ்ரீமுகத்தில் பெரியவா அவர்கள் மீண்டும் ஹிந்து மதத்துக்குத் திரும்புவதை ஆதரித்துப் பேசி இருக்கிறார்.

இதைக் குறிப்பிட்ட ஓர் அன்பர், பெரியவாளின் நிலைப்பாட்டில் இதுபோன்ற முரண்பாடு காணப்படுகிறதே, இதை விளக்க முடியுமா என்று கேட்டார்.

இதை யாரும் விளக்க வேண்டியதே இல்லை. இந்த ஸ்ரீமுகத்தின் தொடக்கத்தில், பெரியவாளே, இதை விளக்கி இருக்கிறார். இந்த ஸ்ரீமுகம் சாஸ்திரக் கருத்து அல்ல என்றும் தற்போதைய சூழலில் மத விஷயங்களில் அரசாங்கம் போடும் சட்டங்கள் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதற்கான வழிகாட்டுதல் மட்டுமே என்பதை அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஹிந்து மதத்தின் பாரம்பரியம் மிக்க பீடத்தின் தலைமைப் பொறுப்பில் இருப்பதால், ஒட்டுமொத்த ஹிந்து சமுதாயத்தின் சார்பிலும் அவர் இந்தக் கருத்துகளை முன் வைத்துள்ளார்.

இந்த ஸ்ரீமுகத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள மொழிநடை ரொம்பவே குறிப்பிடத்தக்கது.

பெரியவாளின் உரைகள் கருத்தாழம் மிக்கவை. எனினும், அவரது வாக்கியங்கள் மிகவும் எளிமையாகவே அமைந்திருக்கும். ஆனால், இந்த ஸ்ரீமுகத்தின் மொழிநடை மிகவும் கடினமாக அமைந்துள்ளது. தான் சொல்ல வரும் கருத்தைக் கொஞ்சம் கூட மாற்றிப் பொருள் கொண்டுவிட முடியாத அளவு மிகக் கடினமான அளவில் வாக்கியங்களை அமைத்துள்ளார், பெரியவா.

ஒருவகையில் பார்த்தால், இது சட்டத் துறையில் இருப்பவர்கள் பயன்படுத்துவதைப் போன்ற மொழிநடை.

பெரியவா இத்தகைய மொழிநடையைக் கையாள்வதே இல்லை.

இத்தகைய வாக்கியங்களை ஒருவர் பயன்படுத்துவது, என்னைப் பொறுத்த வரை, எழுத்து நடையில் மட்டுமே சாத்தியம். எழுதி, அடித்துத் திருத்தி, மீண்டும் படித்துப் பார்த்துச் சரிசெய்து.... என்று உருவாக்கப்பட வேண்டிய வகையைச் சேர்ந்தது இத்தகைய எழுத்து நடை.

ஆனால், பெரியவா எந்தவித முன்தயாரிப்பும் இல்லாமல், மளமளவென்று டிக்டேட் பண்ணி இருக்கிறார். அண்ணாவால் அதே வேகத்தில் அதை எழுதிக் கொள்ள முடியவில்லை.

இந்தச் செய்தி எனக்குப் பெரு வியப்பைத் தந்தது.

அதன்பிறகு தெய்வத்தின் குரலை அவ்வப்போது படிக்கும் போது பெரியவாளின் மொழிநடையைக் கூர்ந்து கவனிக்க முயற்சி செய்திருக்கிறேன்.

ஆம், எத்தனை எத்தனை விஷயங்கள் அவர் வாயிலிருந்து அடுக்கடுக்காக வந்து விழுகின்றன!

மளமளவென்று வேகமாகப் பேசும் போது, ஒரு மனிதர், இத்தனை விஷயங்களையும் இவ்வளவு கோவையாகச் சொல்ல வேண்டுமென்றால், அதற்கு அசாத்திய முன்தயாரிப்பு தேவை. அவ்வாறு தயாரிக்கப்பட்ட உரையை மனப்பாடம் பண்ண வேண்டியதும் அவசியம். அல்லது, குறிப்புகளையாவது கையில் வைத்திருக்க வேண்டும்.

ஊஹூம், பெரியவா இதுபோல ஒருநாளும் தனக்கான உரைகளைத் தயார் செய்வது கிடையாது.

இது எனக்குப் பெரிய அதிசயமாகத் தெரிந்தது.

ஓர் அன்பரிடம் இதைப் பற்றிக் குறிப்பிட்டேன். அவர், பர்த்ருஹரியின் சுலோகம் ஒன்றை விளக்கினார். "நம்மைப் போன்ற சாமானியர்களுக்குப் பொருளின் பின்னே வார்த்தைகள் செல்லும். மகான்களின் வார்த்தைகளுக்குப் பின்னே பொருள் கை கட்டியவாறு பின்தொடரும்" என்பதே அந்த சுலோகத்தின் விளக்கம்.

***

பெண்மை என்பதைக் காப்பாற்ற வேண்டும் அத்தியாயத்தைப் போலவே, இந்த அத்தியாயமும் என்னை மிகவும் சிந்திக்க வைத்தது.

காஷ்மீர் 370வது பிரிவு ரத்தானதும் என் மனதில் ஓர் உணர்வு எழுந்தது. மிகக் கடுமையான மத மாற்றச் சட்டமும், பொது சிவில் சட்டமும் வெகு தொலைவில் இல்லை என்று என் மனம் நம்பியது.

இத்தகைய சூழலில் இந்த ஸ்ரீமுகத்தின் கருத்துகள் மக்களைப் பெரிய அளவில் சென்றடைவது நல்லது என்று என் மனம் நம்பத் தலைப்பட்டது இதற்கு ஏதாவது செய்ய வேண்டும் என்ற எண்ணம் தோன்றியது.

அதேநேரத்தில், இந்த ஸ்ரீமுகத்தில் பெரியவாளின் மொழிநடை மிகவும் கடினமாக இருப்பதால், தற்காலத்திய இளைய சமுதாயத்தினரால் அதைப் புரிந்து கொள்ள முடியாது என்று நினைத்தேன். மொழிநடையை நான் எளிமைப் படுத்துகிறேன் என்று நான் நினைத்து, பெரியவாளின் வார்த்தைகளை மாற்றினால் அன்பர்கள் யாருக்காவது மன வருத்தம் ஏற்படுமோ என்ற அச்சமும் ஏற்பட்டது.

நீண்ட தயக்கத்துக்குப் பின், ஓர் அன்பரிடம் எனது ஆவலையும், எனக்கு ஏற்படும் அச்சத்தையும் பற்றிக் குறிப்பிட்டு, நான் என்ன செய்வது என்று அவரது ஆலோசனையைக் கேட்டேன்.

நான் அவரைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டபோது அவர், அப்போது தான், நயப்பாக்கம் கோவிலில் யோக நிஷ்டையில் இருக்கும் பெரியவாளை தரிசித்து விட்டு வெளியே வந்து கொண்டிருந்தார். "எனக்கென்னவோ, பெரியவா கிட்டேர்ந்து உத்தரவாறதுன்னு தோணறதுப்பா. சந்தோஷமா பண்ணு" என்று அவர் சொன்னதைத் தொடர்ந்து, எனது தயக்கம் அகன்றது.

ஸ்ரீமுகத்தின் எளிய வடிவத்தை சமூக வலைத்தளங்கள் மூலமாக நிறைய பேரிடம் பகிர்ந்து கொண்டேன். அதைத்தொடர்ந்து, அதை ஒரு சிறிய நூலாகவும் வெளியிட்டுள்ளேன்.

15. **தெய்வத்தின் குரல் - சில தகவல்கள்**

"தெய்வத்தின் குரல், தெய்வத்தின் குரல்" என்று நாம் அனைவரும் தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடுகிறோம். அண்ணா என்றால் பெரும்பாலோருக்கு தெய்வத்தின் குரல் தான் நினைவு வரும்.

தெய்வத்தின் குரல் முழுக்க முழுக்க அண்ணாவின் உழைப்பு என்பதையும் முன்னரே சுட்டிக் காட்டி இருக்கிறேன். ஆனால், அந்த உழைப்பைத் தாண்டிய மிக முக்கியமான இன்னோர் அம்சமும் உண்டு.

"நாம் நமது வாழ்க்கையை வாழ்கிறோம்" என்று சொல்கிறோம்.

எப்படி வாழ்கிறோம்?

நமக்குத் தெரிந்த விதத்தில் வாழ்கிறோம். சட்டப்படி.... நமக்குத் தெரிந்த தர்ம-நியாயங்களின் படி... மனசாட்சிப்படி.... நமது அறிவுக்கு எட்டிய வரையில்...

உண்மையில், நாம் எப்படி வாழ வேண்டும்?

தர்மத்தின் வழியில் வாழ வேண்டும்.

- இது தான் சனாதன தர்மத்தின் அடிப்படைக் கருத்து.

தர்மம் என்றால் என்ன? அதை நாம் எவ்வாறு தெரிந்து கொள்வது?

தர்மம் என்பது மிகவும் சூக்ஷ்மமானது. அதை நம்மால் புரிந்து கொள்ள முடியாது. அதேநேரத்தில் வாழ்க்கையின் ஒவ்வொரு நிலையிலும், ஒவ்வொரு சூழலிலும் நாம் தர்மத்தைப் புரிந்து கொண்டு அதன்படி நடந்து கொள்வதற்கான வழிகாட்டுதல் நமது மதத்தில் உள்ளது.

இத்தகைய வழிகாட்டிகளே சாஸ்திரங்கள். இவை பிரமாணங்கள் எனப்படுகின்றன. அதாவது, தர்மம் என்கிற தத்துவத்தை நமக்குப் புரிய வைப்பதற்கான சாதனங்கள்.

எனவே, தர்மப்படி வாழ்வது என்பது, நம்மைப் பொறுத்த வரை, சாஸ்திரப்படி வாழ்வதே.

சாஸ்திரங்கள் என்னென்ன, அவற்றை நாம் எவ்வாறு படித்துத் தெரிந்து கொள்வது என்பது அடுத்த கேள்வி.

சாஸ்திரங்கள் பல தரப்பட்டவை. அதுமட்டுமல்ல, அவற்றை நாம் வெறுமனே புத்தகங்கள் மூலம் தெரிந்து கொள்ளக் கூடாது. குருவிடமிருந்து முறையாகக் கற்றுக் கொள்ள வேண்டும்.

இது பலருக்கு சாத்தியப்படாத விஷயம். அதிலும், தற்காலச் சூழ்நிலையில் இது மிகச் சிலருக்கு மட்டுமே சாத்தியப்படுகிறது.

அப்படியானால், மற்றவர்கள் சாஸ்திரக் கருத்துகளை எவ்வாறு புரிந்து கொள்வது?

இதற்கான ஓர் எளிய தீர்வு தான் குருவின் உபதேசங்கள்.

குருவின் வழிகாட்டுதல்களை, நாம், நம்மால் முடிந்த விதங்களில் - நேரில் சென்று கேட்பது மட்டுமல்ல, புத்தகங்கள் வழியாகவும் - தெரிந்து கொள்ளலாம்.

நம் அனைவருக்கும் சாத்தியமான வழி இதுவே.

தெய்வத்தின் குரல் என்பது ஜகத்குருவாகிய மகா பெரியவாளுடைய உபதேசங்களின் தொகுப்பு.

எனவே, தெய்வத்தின் குரல் என்பது, தற்காலச் சூழலில், நமக்குக் கிடைத்திருக்கும் சாஸ்திரப் பிரமாணம்.

தெய்வத்தின் குரல் மூலம் நமது மதக் கருத்துகளை நாம் அறிந்து கொள்கிறோம் என்று சொல்வது மேலோட்டமான கருத்து.

உண்மையில், தர்மம் என்ற தத்துவத்தைத் தற்காலச் சூழலில் நாம் அறிந்து கொள்வதற்கான முறையான சாஸ்திரப் பிரமாணம் தெய்வத்தின் குரல் என்று சொல்வதே முழுமையானது.

தெய்வத்தின் குரல் ஒரு சாஸ்திரப் பிரமாணம் என்பது தான் அதன் உண்மையான மகத்துவம்.

அந்தக் குரலுக்குச் சொந்தக்காரர் பெரியவா என்று சொல்லும் போது, அந்தக் குரலை நமக்குப் புத்தக வடிவில் தந்தது தான் அண்ணாவின் உண்மையான மகத்துவம் என்பதையும் சேர்த்தே சொல்ல வேண்டியது அவசியம்.

"சாஸ்திரம், தர்மம் முதலியவற்றை நம்மால் எளிதில் புரிந்து கொள்ள முடிவதில்லை. அதேநேரத்தில், பெரியவா எவ்வாறு நடந்து கொண்டார், என்ன சொல்லி இருக்கிறார் என்பதை மட்டும் தெரிந்து கொண்டால் போதுமானது. அது தான் தர்மத்துக்கான விளக்கம். ஏனெனில், பெரியவா தர்மத்துக்குப் புறம்பாக எந்தச் செயலும் செய்ததும் இல்லை, எந்தக் கருத்தையும் மொழிந்ததும் இல்லை." என்று பெரியவா பற்றி அண்ணா சொல்வதுண்டு என்று கூறி இருந்தேன்.

பெரியவா மொழிந்த கருத்துகளை - அதாவது, தர்ம விளக்கங்களை - நமக்குத் தொகுப்பாக அளிப்பவை தெய்வத்தின் குரல் தொகுதிகளே.

பெரியவா சாஸ்திரங்களுக்கான அதாரிடி என்றால், பெரியவாளின் குரலுக்கு அதாரிடி அண்ணா.

சாஸ்திரப் பிரமாணத்தைத் திரட்டித் தருவது என்பது வெறும் தொகுப்பு நூல் தயாரிக்கும் உழைப்பு அல்ல, அது கத்தியின் மீது நடப்பதற்கு ஒப்பானது. அண்ணா ஏதாவது தவறு செய்து விட்டால், அது பெரியவாளின் தவறாகி விடும், சாஸ்திரக் கருத்துகள் திரிக்கப்பட்டு விடும்.

தெய்வத்தின் குரல் வாசகர்களில் சாமானியர்கள் மட்டுமல்ல, சாதகர்களும் உண்டு, முறையாக சாஸ்திரம் படித்தவர்களும் உண்டு. பல்வேறு சம்பிரதாயங்களைச் சேர்ந்த பெரியவர்களும் உண்டு.

தெய்வத்தின் குரலில் ஒரு தவறு ஏற்பட்டால், அது சாமானியர்களுக்குத் தவறான வழிகாட்டுதலாக அமைந்து விடும் என்பதோடு, மேலோரின் கண்டனத்துக்கும் இலக்காகி விடும்.

இந்த அம்சத்தைப் புரிந்து கொண்டால், அண்ணாவின் பணி எவ்வளவு மகத்துவம் வாய்ந்தது என்பது புரியும்.

இதில் வேறு சில விஷயங்களும் உண்டு.

பெரியவா ஒரே ஓர் இடத்தில் நிகழ்த்திய சொற்பொழிவை ஓர் அத்தியாயமாக அச்சிடுவது என்றால் அது ஓரளவு எளிய வேலையாக இருக்கும். ஆனால், தெய்வத்தின் குரல் அவ்வாறு உருவாக்கப்பட்டது அல்ல. தெய்வத்தின் குரலின் ஓர் அத்தியாயம் என்பது பல்வேறு இடங்களில் பெரியவா மொழிந்த கருத்துகளின் தொகுப்பு. அவற்றை ஒருங்கிணைத்து ஒரே அத்தியாயமாக அமைத்திருக்கிறார், அண்ணா.

இதற்காக அண்ணா, பெரியவா அன்பர்கள் பலரையும் தொடர்பு கொண்டு அவர்கள் எழுதிய குறிப்புகளை வாங்கிப் பயன்படுத்தியது உண்டு. அதேபோல, தெய்வத்தின் குரலில் ஆங்காங்கே சில நுட்பமான விஷயங்களை விளக்கும் விதத்தில் அடைப்புக் குறிகளுக்குள் (within brackets) தரப்பட்டுள்ள விளக்கங்கள், அடிக்குறிப்புகள் (footnotes) முதலியவற்றை எழுதுவதற்குப் பலரது வழிகாட்டுதல்களை நாடியதும் உண்டு.

ஆனால், இதையெல்லாம் விட முக்கியமானது, பெரியவாளின் அருட்சக்தி அண்ணாவின் உள்ளிருந்து இயக்கியது என்பதே.

ஒவ்வொரு முறை அண்ணா குறிப்பெடுத்துக் கொண்டதை வீட்டில் வந்து முழுமையாக எழுதும் போதும் அவர் தனக்குள் பெரியவாளின் குரல் ஒலித்ததாகவும், அந்த வழிகாட்டுதலின் அடிப்படையிலேயே பெரியவா கருத்துகளை முழுமையான விதத்தில் எழுதிக் கொள்ள முடிந்தது என்றும் சொல்லி இருக்கிறார்.

தெய்வத்தின் குரல் ஏழாம் பகுதி வேலைகள் வழக்கமான வேகத்தில் நடைபெறவில்லை. அடுத்த பாகம் மிகவும் தாமதமாகிறதே என்று நிறைய அன்பர்களுக்கு வருத்தம். அப்போது, என்னிடம் அண்ணா, "பாவம்,

நிறையப் பேர் வருத்தப்படறா. ஏன் டிலே ஆகறது-ன்னு!! காரணம் என்ன-ன்னு எனக்குத் தானே தெரியும்! நானா எழுதறேன்? அதுவா வர்றது. அந்த ஃப்ளோ இருந்தா தானே எழுத முடியும்?" என்று தெரிவித்தார்.

ஏழாம் பாகத்தில் இடம் பெற்றுள்ள அரசும் மதமும் அத்தியாயத்தின் முன்னோட்டப் பகுதியில், இத்தகைய அனுக்கிரக விஷயம் பற்றி விரிவாகவே எழுதியிருக்கிறார்.

என்னால் இதை ஓரளவு புரிந்து கொள்ள முடிகிறது. காரணம், அண்ணா டேப் ரெகார்டர் முதலான எலக்ட்ரானிக் சாதனங்களைப் பயன்படுத்தி, ரெகார்ட் பண்ணி, எதுவும் எழுதவில்லை. அதிகபட்சமாக, சில சொற்பொழிவுகளை அதுபோல கேசட் வடிவில் அவர் கேட்டிருக்கலாம். ஆனால், தெய்வத்தின் குரலுக்கு அவர் இதுபோன்ற சாதனங்களைப் பயன்படுத்தியே இல்லை என்பதை நான் அறிவேன்.

***

பெரியவா, அண்ணா, தெய்விகம் முதலிய எல்லா விஷயங்களையும் மறந்து விட்டு, தெய்வத்தின் குரலை ஒரு சராசரி நூலாக மட்டும் பார்த்தால் கூட, அது ரொம்ப விசேஷமானதே.

கடந்த முப்பது வருடங்களாக நான் பதிப்பகப் பணியில் இருந்து வருகிறேன். இத்தனை வருடங்களில் நான் விதவிதமான அச்சுப் பிழைகளைப் பார்த்திருக்கிறேன். என்னைப் பொறுத்த வரை, பிழைகள் இல்லாத புஸ்தகம் என்பது மிகமிக அபூர்வமான விஷயம்.

தெய்வத்தின் குரலும் இதற்கு விதிவிலக்கு இல்லை. தெய்வத்தின் குரல் வாசிக்கும் போது அதில் உள்ள ஒருசில பிழைகள் என் கண்ணில் பட்டிருப்பதும் உண்மையே! எனினும், தெய்வத்தின் குரலில் பிழைகள் மிகவும் குறைவு தான் - பிழைகளே இல்லை என்று கருத முடிகிற அளவு குறைவானவையே.

குறைந்தது இரண்டு பேராவது ப்ரூஃப் படித்தால் தான் இதுபோன்ற பிழைகளே இல்லாத (அல்லது, மிகமிகக் குறைவான எழுத்துப் பிழைகள் மட்டுமே உடைய) புத்தகத்தை உருவாக்க முடியும்.

அதுமட்டுமல்ல, ஒரு புத்தகத்தை எழுதியவர் அந்தப் புத்தகத்தின் ப்ரூஃப் படிக்கும் போது அவர் கண்களில் எழுத்துப் பிழைகள் படுவதற்கான வாய்ப்பு மிகவும் குறைவு.

தெய்வத்தின் குரல் ஏழாம் பகுதி தவிர மீதி ஆறு பாகங்களையும் அண்ணா மட்டுமே ப்ரூஃப் படித்தார். ஏறக்குறைய அச்சுப் பிழைகளே இல்லை என்று சொல்ல முடிகிற அளவு மிகக் குறைவான பிழைகளுடன் வெளிவந்துள்ள நூல் தொகுதி அது.

என் பார்வையில் இது மிகப் பெரிய விஷயம்.

சில நாட்களுக்கு முன்பு தெய்வத்தின் குரல் இரண்டாவது பகுதியின் பழைய பிரதி ஒன்றைப் பார்க்க நேரிட்டது. அது லெட்டர் ப்ரஸ்ஸில் அச்சாகி இருந்தது. 1985-86 வாக்கில் தான் இந்தியாவில் அச்சுத்துறையில் கம்ப்யூட்டரின் பயன்பாடு ஆரம்பித்தது. இதற்குள் தெய்வத்தின் குரல் மூன்று பகுதிகள் வெளியாக விட்டன. அதுமட்டுமல்ல, அவற்றின் அடுத்தடுத்த பதிப்புகளும் வெளியாக விட்டிருந்தன. இதில் மலைக்க வைக்கும் விஷயம் என்னவென்றால், லெட்டர் ப்ரஸ்ஸில் அச்சிடும் போது ஒவ்வொரு தடவையும் புதிதாக அச்சுக் கோப்பார்கள், திரும்பவும் ப்ரூஃப் படிக்க வேண்டும்.

ஆரம்ப காலத்தில் வெளியான அத்தனை பதிப்புகளையும் அண்ணா ப்ரூஃப் படித்திருக்கிறார் என்பதை என்னால் யூகித்துப் புரிந்து கொள்ள முடிகிறது.

***

தற்போது நம்மிடையே பெரியவா ஸ்தூலமாக இல்லை. பெரியவா ஜீவிதத்தில் நடந்த விஷயங்கள், அவரது உபதேசங்கள் முதலானவற்றை நாம் புத்தகங்கள் வாயிலாகவே அறிய முடியும். நம்மிடையே இருக்கும் ஒருசில அன்பர்கள் வாயிலாக அறிந்து கொள்வதும் சாத்தியமே. எனினும், அதற்கான வாய்ப்புகள் அனைவருக்கும் கிடைத்து விடுவதில்லை.

பெரியவா-காந்திஜி சந்திப்பு பற்றி ஓர் எழுத்தாளர் சொல்லி இருக்கும் பொய்களைப் பற்றி எழுதி இருந்தேன். அவருக்குப் பெரியவா மீதும் நமது பாரம்பரியத்தின் மீதும் மரியாதை இல்லை. எனவே, அவரது செயல் இப்படித் தான் இருக்கும் என்பதைப் புரிந்து கொள்ள முடிகிறது. அதுபற்றிய வருத்தம் எதுவும் இல்லை.

ஆனால், பெரியவா மீது பக்தி இருக்கிறது என்று சொல்லிக் கொள்ளும் எத்தனையோ பேர், தற்காலத்தில், அவரைப் பற்றி இல்லாததும் பொல்லாததுமாகப் பல்வேறு தளங்களில் எழுதி வருவதைப் பார்க்கும் போது மிகவும் வேதனையாக இருக்கிறது. காலப்போக்கில் இது மேன்மேலும் அதிகரிக்கும் என்பதும் கண்கூடாகவே தெரிகிறது.

அதேநேரத்தில், பெரியவா வாழ்க்கைச் சம்பவங்கள் குறித்து அண்ணா எழுதியுள்ள பல்வேறு நூல்களும், தெய்வத்தின் குரல் தொகுப்பும் பெரியவாளின் வாழ்க்கை, வாக்கு ஆகிய இரண்டையும் அப்படியே நமக்குத் தருகின்றன. அதிலும் குறிப்பாக, தெய்வத்தின் குரல் தான் பெரியவா என்னுமளவு அந்த நூல் உள்ளது.

எவ்வாறு இனிமேல் பெரியவாளை நாம் விக்கிரகம், படங்கள் முதலிய
அர்ச்சை வடிவங்களில் மட்டுமே தரிசிக்க முடியுமோ, பெரியவாளின் குரலை எலக்ட்ரானிக் சாதனங்கள் வழியாக மட்டுமே செவிமடுக்க முடியமோ, அதுபோலவே, அவரது உபதேசங்களை தெய்வத்தின் குரல் வழியாக மட்டுமே முழுமையாக அறிய முடியும்.

அண்ணாவின் பணிகள் நிறைவு பெறவில்லை என்பது குறித்து மேட்டூர் ஸ்வாமிகள் வருத்தம் தெரிவித்ததைக் குறிப்பிட்டிருந்தேன். இதேபோல எத்தனையோ பக்தர்களுக்கும் அண்ணா மீது வருத்தம் இருக்கலாம்.

இத்தகைய வருத்தம் போற்றுதலுக்குரியது, மதிக்கத் தக்கது.

அதேநேரத்தில், அண்ணா எந்த அளவு தெய்வத்தின் குரலைத் தொகுத்திருக்கிறாரோ, அது தான் - அது மட்டுமே தான் - பெரியவா என்பதே தற்காலத்திய நிலை.

ஆம், தெய்வத்தின் குரல் மட்டுமே தான் பெரியவாளின் முழுமையான உபதேசங்கள். இதை நாம் விரும்பினாலும் சரி, விரும்பாவிட்டாலும் சரி, இது தான் யதார்த்தம்.

இந்த உண்மையைப் புரிந்து கொண்டால் அண்ணா உழைத்த உழைப்பின் மகத்துவம் புரியும்.

பாமரர்கள் மட்டுமல்ல, ஆன்ம சாதகர்களும், உயர்ந்த ஆன்மிக அனுபவங்கள் கிடைக்கப் பெற்ற மேலோரும், ஹிந்து தர்மத்தின் பல்வேறு சம்பிரதாயங்களின் தலைவர்களும் கூட, இதற்காக, அண்ணாவுக்கு நன்றிக்கடன் பட்டிருக்கிறார்கள்.

***

ஆர். வெங்கட்ராமன் சொன்னதன் பேரில், சோவும் எஸ். குருமூர்த்தியும் தெய்வத்தின் குரலில் இருந்து சில பகுதிகளை மட்டும் தேர்ந்தெடுத்து சிறிய நூல் ஒன்றை உருவாக்க விரும்பினார்கள். தெய்வத்தின் குரல் பெரிய நூலாக இருப்பதால், நிறைய பேர் அதை வாசிக்க முடிவதில்லை என்பதாலேயே இந்த முயற்சி.

இது தொடர்பாக அண்ணாவிடம் அனுமதி கேட்பதற்காக சோவும் எஸ்ஜியும் அவரை நேரில் சந்தித்தார்கள். இந்தச் சந்திப்பைப் பற்றி என்னிடம் அண்ணா சொன்னபோது சோவின் பணிவை ரொம்பவும் பாராட்டிப் பேசினார். சோவின் பணிவு தனக்கு மிகவும் வியப்பைத் தந்ததாகவும் குறிப்பிட்டார்.

அந்தப் புத்தகத்தை அவர்கள் உருவாக்கிய விதமும் கொஞ்சம் வியப்பான செய்திதான். தெய்வத்தின் குரலில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகளை அச்சிடுவது என்றால், முதலில் அவற்றை கம்ப்யூட்டரில் டைப் பண்ண வேண்டும். டைப் பண்ணினால் ப்ரூஃப் படிக்க வேண்டிய தேவை ஏற்படும். ஆனால் சோவுக்கும் எஸ்ஜிக்கும் ப்ரூஃப் படிப்பதில் உடன்பாடு இல்லையாம். தெய்வத்தின் குரலில் உள்ள மாதிரி அப்படியே வர வேண்டும் என்பதற்காக அந்தப் பகுதிகளைத் துண்டு துண்டாக வெட்டி எடுத்து ஒரு

காகிதத்தில் ஒட்டி ஃபிலிம் எடுத்து அச்சிட்டார்கள். இவ்வாறு பண்ணும்போது அச்சுத் தரம் பாதிப்படையும். இருந்தாலும் பரவாயில்லை, நாம் ப்ரூஃப் படித்தால் பிழைகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது என்று அவ்விருவரும் முடிவு செய்தார்கள். பெரியவா கருத்துகளை வெளியிடுகிறோம், அதில் பிழைகள் வந்து விடவே கூடாது என்ற பயபக்தியின் காரணமாகவே அவர்கள் இத்தகைய முடிவை எடுத்தார்கள்.

அண்ணா என்னிடம் இதைச் சொன்னபோது அண்ணாவின் உழைப்புதான் எனக்கு நினைவு வந்தது. தெய்வத்தின் குரலில் இருந்து ஒருசில பகுதிகளை மட்டும் வெளியிடுவதற்கே சோவைப் போன்ற ஒரு பெரிய பத்திரிகை ஆசிரியருக்கு இவ்வளவு அச்சம் வருகிறது என்றால், அதுவே தெய்வத்தின் குரல் என்கிற நூலின் தரத்துக்கான பெரிய அத்தாட்சி.

தெய்வத்தின் குரலுக்கான அத்தனை விஷயங்களையும் திரட்டுவது, நோட்ஸ் எடுப்பது, கையெழுத்துப் பிரதி தயார் செய்வது, ப்ரூஃப் படிப்பது... அப்பப்பா, அண்ணா தனி ஆளாகத்தானே இத்தனை வேலைகளையும் பண்ணினார்? அண்ணாவின் கையெழுத்துப் பிரதிகளைப் பார்த்து மோகனராமன் தனது அழகான கையெழுத்தில் இன்னொரு பிரதி எழுதித் தருவார். (அதையும் அண்ணா ஒருமுறை ப்ரூஃப் படித்த பின்னர்தான் பதிப்பகத்துக்கு அனுப்புவார்.) வேறு சில விதங்களில் உதவியவர்களும் உண்டு. ஆனால், அவையெல்லாம் மிகவும் குறைவானவையே. ஏழாவது பகுதி மட்டும் நான் ப்ரூஃப் படித்தேன். அந்தப் பகுதிக்கான வேலைகள் நடந்த போது, "நான் ப்ரூஃப் படிக்கல, நீயே எல்லா வேலையும் பார்த்துடு" என்று என்னிடம் அண்ணா சொன்னாலும், இறுதியில், அவருமே தான் ப்ரூஃப் படித்தார்.

இவற்றைத் தவிர அந்தப் பணிகளில் அண்ணாவுக்கு எந்த வகையிலும் யாரும் ஒத்தாசை செய்தது இல்லை தெய்வத்தின் குரல் நூல் உருவாக்கம் முழுக்க முழுக்க அண்ணாவின் உழைப்பு மட்டுமே.

கோபம், சாபம் என்றெல்லாம் அண்ணாவைப் பற்றி இதற்கு முன்னர் சொல்லி இருந்தேன். (அவையெல்லாம் சத்தியமான சத்தியம் தான்.) ஆனாலும், சில சமயம் அண்ணாவைப் பார்க்கும் போது பாவமாக இருந்தது என்பதும் உண்மை.

பாவம், பரிதாபம் எல்லாம் என் மனதில் எழுந்த உணர்ச்சிகளே தவிர, அண்ணா பரிதாபத்துக்கு உரியவராக ஒருபோதும் இருந்தது கிடையாது. அங்கே கம்பீரம் மட்டுமே இருந்தது - ராஜ கம்பீரம் அல்ல, துறவின் காம்பீர்யம் அது!

தெய்வத்தின் குரல் உருவாக்கத்தில் அண்ணாவின் உழைப்பு பற்றி எழுதி இருந்தேன். தெய்வத்தின் குரலுக்காக அண்ணா தனது வாழ்நாளின் பெரும் பகுதியைச் செலவிட்டது உண்மை. ஆனால், தெய்வத்தின் குரல் என்பது பெரியவா என்ற சாகரத்தின் முழுப் பரிமாணம் அல்ல. அந்த சாகரத்தின் ஒரு சிறிய பகுதியைத் திரட்டுவதற்கே ஒரு மனிதரின் முழு வாழ்வும் தேவைப்பட்டது என்றால் அந்த சாகரம் எவ்வளவு பெரியது! எவ்வளவு ஆழமானது!!

***

அண்ணாவின் உழைப்பையோ, பெரியவாளின் ஆழத்தையோ பார்த்து வியப்பது எல்லோருக்கும் சாத்தியம் தான். ஆனால், தெய்வத்தின் குரலுக்கு இன்னொரு பரிமாணம் உண்டு. அதை யாராலும் கண்டறிய முடியாது!

தனி மனிதர்கள் மீது தெய்வத்தின் குரல் ஏற்படுத்திய தாக்கம் தான் அது!!

ஒரே ஒரு சிறிய உதாரணத்தை மட்டும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

அண்ணாவின் அன்புத் தம்பியரில் ஒருவர் சமுதாய சேவை செய்யும் ஓர் அமைப்பில் உறுப்பினராக இருந்தார். அவருக்கு அந்த அமைப்பு கூடுதல் பணிகளை ஒப்படைக்க விரும்பியது. இதனால் அந்த அமைப்புக்காக அவர் அதிக நேரம் செலவு செய்ய வேண்டி நேரிடும். அவருக்கு அதில் நாட்டமில்லை.

இதற்குக் காரணம், தெய்வத்தின் குரல்.

அந்த நூலை ஆழ்ந்து படிக்கப் படிக்க, சாஸ்திரப்படி தனது வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வேண்டும், வேத ரக்ஷணத்துக்காக நேரம் செலவிட வேண்டும் முதலிய சிந்தனைகள் அவருக்குள் பெரிதாக எழுந்தன. எத்தனையோ பேர் பொது வாழ்வில் இருக்கிறார்கள், ஏதேதோ சேவைகள் செய்கிறார்கள். ஆனால், வேதங்களை அடுத்த தலைமுறையினருக்கு விட்டுச் செல்லும் பணிகளைக் கவனிப்பதற்குப் போதிய ஆட்கள் இல்லை. எனவே, அத்தகைய பணிகளில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் அவருக்குள் எழுந்தது.

அதேநேரத்தில் அந்த அமைப்பினர் அனைவரும் மிக நல்லவர்கள். அதிலிருந்து விலகினால் அதன் உறுப்பினர்கள் மனம் கஷ்டப்படும். யாரையும் நோகடிப்பது அவர் நோக்கமல்ல. எனவே, இந்த விஷயத்தில் என்ன முடிவெடுப்பது என்ற குழப்பம் அவருக்கு ஏற்பட்டது. அவர் அண்ணாவுக்கு ஃபோன் பண்ணி, தனது இக்கட்டான சூழலைக் குறிப்பிட்டார். “நான் என்ன முடிவு எடுக்கறது, அண்ணா? எனக்கு வழிகாட்டுங்கள்” என்று வேண்டினார்.

அண்ணா அவரிடம் நேரடியாக எந்த முடிவும் சொல்லவில்லை. மாறாக, “இறைவன் எங்கும் இருப்பவன், உனக்குள்ளும் இருக்கிறான். நீயே இந்த விஷயம் பற்றி யோசித்துப் பார். உனக்கு எது சரி என்று தோன்றுகிறதோ, அதையே செய்” என்று கூறினார். இறைவன் எங்கும் இருக்கிறான் என்பதை விளக்குவதற்கு அவரிடம் அரவிந்தரின் ஜெயில் வாசத்தை உதாரணம் காட்டினார், அண்ணா. “அந்த ஜெயில்ல இருந்த வார்டனைப் பார்த்தா வாசுதேவன்தான் தெரியறான், கூட இருக்கற கைதிகளைப் பார்த்தா வாசுதேவன் தான் தெரியறான். ஜெயில் கம்பி கூட அவருக்கு வாசுதேவனாத்தான் தெரிஞ்சதாம். கோர்ட்ல மாஜிஸ்ட்ரேட் சீட்ல வாசுதேவன் தான் உக்காந்திண்டிருக்கான். லாயர் வாசுதேவன், கூடி இருக்கறவா எல்லாருமே வாசுதேவன். அதையேதான் உனக்கும் சொல்றேன். நீயும் வாசுதேவன் தான். உனக்குள்ளே இருக்கற வாசுதேவனே உனக்கு வழிகாட்டுவான். உனக்கு என்ன தோணறதோ, அதையே பண்ணு” என்று சொல்லி விட்டார்.

மறு நாள் அந்த அன்பர் அண்ணாவுக்கு ஃபோன் பண்ணினார். “எனக்குப் புரியறது, அண்ணா. நான் அனுஷ்டானம் பண்றேன்” என்று சுருக்கமாகச் சொல்லி முடித்து விட்டார். சாஸ்திர ரீதியிலான அனுஷ்டானங்கள் மட்டுமல்ல, வேத ரக்ஷணத்துக்கான பல்வேறு பணிகளிலும் அவர் முழுமையாகத் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு வருகிறார்.

எத்தனையோ சமுதாயப் பெரியவர்களையும், சாதகர்களையும், வேதாந்த விசாரத்தில் ஈடுபட்டுள்ளவர்களையும் சந்திக்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்துள்ளது. இவர்கள் அனைவரிடமும் தெய்வத்தின் குரலின் தாக்கம் இருப்பதைக் கவனித்திருக்கிறேன்.

அண்ணாவுக்கு இறுதி அஞ்சலி செலுத்த வந்தவர்களில் ஒருவர், “சனாதன தர்மத்தின் சாராம்சத்தைப் பட்டி தொட்டியெங்கும் கொண்டு சென்றவர் ரா. கணபதி” என்று அண்ணாவைப் பற்றிக் குறிப்பிட்டார்.

பரம சத்தியம்.

## 16. துறவு என்பது

அண்ணா எலக்ட்ரானிக் சாதனங்களை அதிகம் பயன்படுத்தியதே இல்லை.

அவரிடம் ஒரு ட்ரான்சிஸ்டர் இருந்ததைப் பார்த்திருக்கிறேன். திருவான்மியூர் அறையில் அவர் தங்கி இருந்த போது ஒரு மினி ஃப்ரிட்ஜ் வைத்திருந்தார். அந்த அறையில் கட்டில் கிடையாது. வெறும் பாய், விரிப்பு, தலையணை மட்டுமே பயன்படுத்துவார்.

உடல்நிலை பாதிப்பு ஏற்பட்டு தி. நகர் வீட்டுக்கு வந்த பின்னர் தான் ஓரளவு வசதியான கட்டிலையும் படுக்கையையும் பயன்படுத்தினார். இறுதிக் காலத்தில் படுக்கைப் புண் வந்து விடக் கூடாது என்பதற்காக டாக்டர்கள் அறிவுரையின் பேரில் விசேஷமான படுக்கையைப் பயன்படுத்த வேண்டி வந்தது. டாக்டர்கள் வற்புறுத்தியதால் அறையில் ஏசி மாட்டுவதற்குச் சம்மதித்தார். ஆனாலும், ஏசி ஓடிக் கொண்டிருக்கும் போது, அண்ணா, அறைக் கதவைத் திறந்தே வைத்திருப்பார்.

(இதில் ஒரு விந்தையான விஷயத்தையும் நான் கவனித்திருக்கிறேன். அண்ணா மிகுந்த வெம்மையான தினங்களிலும் கழுத்து வரை போர்த்திக் கொண்டு தான் உறங்குவார். மிகவும் சூடான நீரையே அருந்துவார். அவருக்குக் குளித்து விடும் போது பாத்ரூம் அனலாக இருக்கும். அவ்வளவு சூடாகத் தண்ணீர் விட வேண்டும். எனக்கு வியர்த்துக் கொட்டும். ஆனால், அண்ணாவுக்கு வியர்க்காது.)

அவருக்குத் தொலைபேசி இணைப்பு இல்லை. தங்கி இருந்த வீடுகளில் இருக்கும் தொலைபேசியே அவருக்குப் போதுமாக இருந்தது. கடைசி காலத்தில் தான் அவரது பெயரில் லேண்ட்லைன் தலைபேசி தேவைப்பட்டது. அப்போது ஒரு மொபைல் வைத்திருந்தார். அதை அவர் அதிகம் பயன்படுத்தவும் இல்லை.

பெரும்பாலும், அவர் பயணங்களைத் தவிர்த்து விடுவார். தவிர்க்க இயலாத சூழலில் அன்பர்கள் யாராவது அவரைக் காரில் கூட்டிச் செல்வார்கள். அல்லது டாக்சியில் போவதும் உண்டு. மற்றபடி, அவருக்குச் சொந்த வாகனம் எதுவும் கிடையாது.

அண்ணாவிடம் டிவி இல்லை. தங்கி இருக்கும் வீடுகளில் டிவி இருந்தால் மாலை நேரம் செய்திகள் மட்டும் பார்ப்பார். கடைசி காலம் சுமார் எட்டு ஆண்டுகளாக அதுவும் இல்லை.

எனக்குத் தெரிந்த வகையில் இவை தான், அதிகபட்சமாக, அவர் பயன்படுத்திய விலை உயர்ந்த பொருட்கள்.

அண்ணாவின் புத்தகங்களை வைக்க இடமில்லாமல் நாங்கள் ரொம்பவே கஷ்டப்பட்டிருக்கிறோம். அவ்வப்போது அவர் புத்தகங்களைக் கழித்துக் கட்டுவதுண்டு. இருந்தாலும் அவரிடம் நிறையப் புத்தகங்கள் இருந்தன. ஆனால், புத்தகங்களுக்கு அப்பாற்பட்ட அவரது உடைமைகள் அனைத்தையும் வைப்பதற்கு ஒரே ஒரு சிறிய அலமாரி போதும்.

அண்ணாவின் எளிமை அவருக்கு எளிதான விஷயமாக இருந்தது என்பதும் உண்மை, எங்களில் சிலரால் அதை ஜீரணிக்க முடியவில்லை என்பதும் உண்மை.

அதையும் விட, அண்ணா பணம் சம்பாதித்த "லட்சணத்தை" நினைத்தால் வேதனை மட்டுமல்ல, ஆத்திரமும் வரும். அவரது உழைப்புக்கும் வருமானத்துக்கும் ஏணி வைத்தாலும் எட்டாது.

சில பதிப்பகங்களில் தருவதாக வாக்களித்த பணத்தைத் தர மாட்டார்கள். அண்ணா அவர்களிடம் கடுமை காட்ட மாட்டார். அதிலும், ஒரு பெரிய பதிப்பாளர் நடந்து கொண்ட விதம் என்னை மிகவும் ஆத்திரத்துக்கு உள்ளாக்கியது. அவரும் அண்ணாவுக்குப் பணம் தர மாட்டார். அண்ணாவும் அவரிடம் வற்புறுத்திப் பணம் கேட்க மாட்டார். "நீ அவனுடைய பாவச்சுமையை அதிகரிக்கிறாய்" என்று ஸ்வாமி அண்ணாவின் கனவில் வந்து திட்டினாராம். அதன்பின்னர் அண்ணா, அந்தப் பதிப்பாளரிடம் பண விஷயத்தைக் கொஞ்சம் கண்டிப்புடன் பேசினார்.

அப்போது அந்தப் பதிப்பாளர் தருவதாக வாக்களித்த தொகை - ஒரு பெரியவர் தலையீட்டின் பேரில் - வேறு ஒருவருக்குக் கொடுக்கப்பட்டு விட்டது.

திவ்ய வித்யா ட்ரஸ்ட் இருந்த ஒரே காரணத்தால் அண்ணாவுக்குப் பணப்பிரச்சினை எழவில்லை.

அண்ணா, சில வேத பாடசாலைகளுக்கும் கோசாலைகளுக்கும் தொடர்ந்து நன்கொடை அனுப்புவார். அவ்வப்போது செய்திப் பத்திரிகைகளில் உதவி கோரி வெளியாகும் விளம்பரங்களின் அடிப்படையிலும் சிலருக்குப் பணம் அனுப்புவார்.

அண்ணா முறைப்படி சந்நியாசம் வாங்கவில்லை. காவி உடை அணிவதும் இல்லை. அவர் ஒரு பிரம்மசாரி மட்டுமே. இருந்தாலும், அவர் குடும்ப நிகழ்ச்சிகளுக்குப் போவதில்லை. ஒருமுறை ஒரு திருமணத்துக்குப் போக வேண்டும் என்ற கட்டாயம். ஆனால், ஸ்வாமி அதற்குத் தடை போட்டு விட்டார். அப்போது ஸ்வாமி அவரை “நைஷ்டிகீ” என்று குறிப்பிட்டாராம்.

நிகழ்ச்சிகளுக்குப் போவதில்லை என்றாலும், ஆசீர்வாதமாகப் பணம் கொடுக்கத் தவற மாட்டார்.

பணவரவு விஷயத்தில் அவர் காட்டும் அக்கறையின்மை எனக்கு எரிச்சலாகவே இருக்கும். அதேபோல, மற்றவர்களுக்காக அவர் செலவு செய்யும் விதம் வேடிக்கையாக இருக்கும். வரவு, செலவு - இரண்டையுமே அவர் ஒரு பொருட்டாக மதிக்கவில்லை.

அதேநேரத்தில், பணத்தை அவர் அலட்சியமாக நினைத்ததும் இல்லை. தனக்காகச் செலவு செய்யும் போது மிகவும் சிக்கனத்தைக் கடைப்பிடிப்பார். பிறருக்குப் பணம் தரும் போது மிகுந்த கடமை உணர்வுடன் கொடுப்பார்.

அவரது பர்ஸ் அலமாரியில் தான் இருக்கும். அண்ணா ஒருபோதும் பணத்தைப் பூட்டி வைத்தது இல்லை. ஒருமுறை அவருக்குப் பணிவிடை புரிவதற்காக ஓர் இளைஞரை யாரோ அனுப்பி இருந்தார்கள். அவர் அண்ணாவின் பர்சில் இருந்து அவ்வப்போது பணம் திருட ஆரம்பித்தார்.

இதை அண்ணா என்னிடம், “அவன் எனக்குத் தெரியாதுன்னு நினைச்சுண்டு அப்பப்ப ஐநூறு ரூபா நோட்டை எடுத்துப் பாக்கெட்ல வச்சிப்பான்” என்று சிரித்துக் கொண்டே தெரிவித்த போது, நான் மிகவும் கஷ்டப்பட்டு ஆத்திரத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டேன்.

அண்ணாவின் அனுக்கிரகத்தில் அந்த இளைஞருக்கு உயர்ந்த உத்தியோகம் கிடைத்தது. விரைவிலேயே நல்ல மண வாழ்க்கையும் அமைந்தது.

அண்ணா மீது எழும் எரிச்சல், கோபம், வேடிக்கை என்றெல்லாம் நான் சொன்னாலும், அவர் செயல்களை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை என்பதே உண்மை.

புரிந்து கொள்ளும் ஆர்வமும் காலப்போக்கில் மறைந்து விட்டது.

***

அண்ணா ஒல்லியானவர், இள வயதில் பல வருடங்கள் நுரையீரல் பாதிப்பால் அவஸ்தைப்பட்டவர்.

வாழ்க்கையில் அவர் உணவருந்திய நாட்களை விட உபவாசம் இருந்த நாட்கள் அதிகம். மௌனமும் அப்படியே. வாரத்தில் நான்கு நாட்கள் மௌன விரதம் இருப்பார். இதைத்தவிர, ஒவ்வொரு வருடமும் ஒரு மாதம் தனிமையில் மௌன விரதம் இருப்பார்.

அண்ணாவின் அப்பா காலம் முடிந்த பின்னர், ஒருமுறை, அவரது அம்மா வெளியூர் போக வேண்டி இருந்தது. பையன் சிரமப்படாமல் சமைத்துச் சாப்பிட்டுக் கொள்வதற்கு ஏற்ற வகையில், பல்வேறு பொடி வகைகள் முதலியவற்றைத் தயார் செய்து வைத்து விட்டு அவர் ஊருக்குக் கிளம்பினார். 48 நாட்களுக்குப் பின்னர் ஊரில் இருந்து திரும்பி வந்து பார்த்தால், அனைத்துப் பொருட்களும் அப்படியே இருந்தன. அண்ணா சமையலே பண்ணவில்லை.

“சாப்பிடவே இல்லையா?” என்று அம்மா கேட்டாரம். அதற்கு அண்ணா, “தண்ணீர் சாப்பிட்டேன். போதுமாக இருந்தது” என்று சொன்னாராம். அண்ணா இதை என்னிடம் தெரிவித்தபோது, நான், “நீங்க சாப்பிடலேன்னு

அம்மா வருத்தப்படலியா?" என்று கேட்டேன். "இல்லை. அம்மாவும் இதுபோல நிறைய நாட்கள் உபவாசம் இருப்பதுண்டு. அதனால் அவளுக்கு இது வித்தியாசமாகத் தெரியவில்லை" என்று குறிப்பிட்டார்.

அவரது கடைசி பத்தாண்டுகள் மட்டுமே உபவாசமும் இல்லை, மௌனமும் இல்லை. அந்த நாட்களிலும் அவர் குறைந்த அளவு உணவு மட்டுமே உட்கொண்டார். மௌனத்துக்குப் பதிலாக மந்திர ஜபத்தில் இருப்பார். ஏதாவது வேலை, உறக்கம் முதலான சந்தர்ப்பங்கள் தவிர, மீதி நேரம் முழுவதும் மந்திர ஜபம் தான். அவரது கடைசி வருடங்கள் பெரும்பாலும் படுக்கையில் தான் கழிந்தன. எனவே, படுத்த நிலையிலேயே மந்திர ஜபம் பண்ணுவார். உள்ளே மந்திரம் ஓடும் வேகத்துக்கு ஏற்ப அவரது தலை இருபுறமும் அசையும்.

"ஆரம்ப நாட்களில் பெரியவாளே மந்திர தீக்ஷை கொடுப்பதுண்டு. சில வருடங்களுக்குப் பின்னர், பெரியவா முன்னிலையில் மடத்து மானேஜர் தான் மந்திர உபதேசம் பண்ணி வைப்பார்" என்று ஒருமுறை அண்ணா என்னிடம் தெரிவித்தார். அப்போது நான் அவரிடம், "உங்களுக்கு எப்படி, அண்ணா? பெரியவாளே மந்திரம் கொடுத்தாரா, மானேஜரா?" என்று கேட்டேன். "பெரியவா தான்" என்று சொன்ன அண்ணா, சற்று நிதானித்து, "கனவில் கொடுத்தார்" என்று கூறினார்.

அண்ணாவுக்குப் பெரியவா மந்திர உபதேசம் பண்ணவில்லை என்றே அன்பர்கள் பலரும் நம்புகிறார்கள். ஆனால், அண்ணாவே என்னிடம் தெரிவித்த தகவல் இது.

***

கடைசி வருடங்களில் அண்ணா வயிற்று உபாதையால் அவதிப்பட்டார். தாள முடியாத வயிற்று வலி. டாக்டர்கள் ஏதேதோ வியாதிக்கு மருந்து கொடுத்தார்கள். அலோபதி மருத்துவர்கள் தவிர, ஆயுர்வேத, ஹோமியோ மருத்துவர்களிடமும் மருந்து வாங்கிச் சாப்பிட்டார். சும்மா சொல்லக் கூடாது, எந்த டாக்டர் பேச்சையும் அண்ணா மீறவில்லை. அனைத்து மருத்துவர்கள் கொடுத்த அனைத்து மருந்து மாத்திரைகளையும் சளைக்காமல் சாப்பிட்டார்.

ஒருமுறை டாக்டர் குமரேஷ் (யோகியார் அன்பர்) சக்திவேலிடம், "அவருக்கு உடம்புக்கு ஒண்ணுமே இல்லை. வயிறு ஒட்டி விட்டது. அவரைச் சாப்பிடச் சொல்லுப்பா" என்று கூறினார். "அதை நீங்களே சொல்லுங்க டாக்டர்" என்று சக்திவேல் சொன்னார். அதன்பிறகு, அந்த மருத்துவர் மருந்து மாத்திரை கொடுப்பதுடன் நிறுத்திக் கொண்டார்.

கடைசி வருடங்களில் நான் ஓரிரு மாதங்களுக்கு ஒரு தடவை தான் அண்ணாவைப் பார்க்கப் போவதுண்டு. ஒவ்வொரு தடவையும் என்னிடம் அண்ணா தனது வயிற்று வலியைப் பற்றிக் கூறுவார். "வயித்து வலி தாங்க முடியல. வயித்து மேல லாரி நிக்கறா மாதிரி பாரமா அழுத்தறது" என்று சிரித்துக் கொண்டே சொல்லுவார். எனக்கும் சிரிப்பு தான் வரும்.

வயிற்று வலி ஒருபுறம் இருக்கட்டும், நாள் முழுவதும் படுத்த படுக்கையாக இருக்கும் மனிதருக்கு உடல் வலி எவ்வளவு அதிகமாக இருக்கும் என்பதை யாருமே எளிதாகப் புரிந்து கொள்ள முடியும்.

ஆனால், அண்ணாவின் முகம் அன்றலர்ந்த தாமரை போல இருக்கும்.

கடைசி நாட்களில் பாத்ரூம் போவதற்குக் கூட அவரைத் தூக்கிக் கொண்டு போக வேண்டி இருந்தது. உட்காருவதற்கும் சிரமப்பட்டார். ஆனால், அப்போதும் அவரது முகம் மலர்ச்சியாகவே இருந்தது.

ஒருமுறை ஒரு பிரபல மருத்துவமனையில் அண்ணாவை அட்மிட் பண்ண வேண்டி வந்தது. நான் முதலில் போய் அவருக்காக அட்மிஷன் போட்டேன். சிறிது நேரத்தில் இளங்கோவன் அவரை மருத்துவமனை அழைத்து வருவதாக ஏற்பாடு.

அண்ணாவால் மாடியில் இருந்து கீழே இறங்க முடியவில்லையாம். எனவே, இளங்கோவன் அவரைத் தூக்கிக் கொண்டு வந்து, காரில் அமர்த்தி விட்டு, டூவீலரில் ஆஸ்பத்திரி வந்து சேர்ந்தார்.

சற்று நேரத்தில் அண்ணா காரில் மருத்துவமனை வந்தடைந்தார். காருக்குள் அவர் அமர்ந்திருந்த கோலத்தைப் பார்த்ததும், இளங்கோவன், என்னிடம், “ஸ்ரீதர், இவர் முகத்தைப் பாருங்க. எப்படி உட்கார்ந்திருக்கார் பாருங்க. உபன்னியாசம் பண்ண வர்றவங்க மாதிரி ஜம்முனு வர்றார். இவரைப் பார்த்தா யாராவது உடம்பு சரியில்லாதவர்னு சொல்லுவாங்களா?” என்று கேட்டார்.

இருவரும் விழுந்து விழுந்து சிரித்தோம்.

ஒருமுறை ஓர் அன்பர், பெரியவாளிடம், “ஞானிக்கு வலி உண்டா?” என்று கேட்டாராம்.

அதற்குப் பெரியவா, “வலி உண்டு, வேதனை இல்லை” என்று பதில் சொன்னாராம்.

இது அண்ணாவுக்கு நூறு சதவிகிதம் பொருந்தும்.

**அண்ணாவின் கடைசி நிமிடங்கள்**

அண்ணா தி. நகரில் தனது அக்கா வீட்டில் தங்க ஆரம்பித்த சமயம் -

அந்தக் காலகட்டத்தில் ஒரு நாள் காலையில் அண்ணாவிடம் போயிருந்தேன். நான் வீட்டுக்குள் நுழைந்த போது அண்ணா ஹாலில் இருந்தார். உள்ளே நுழைந்ததுமே என் கையைப் பிடித்துக் கொண்டார். “உடம்புக்கு ரொம்ப முடியல. அனுக்கிரகம் பண்ணணும்னு ஒரு டிவோடீ மூலமா ஸ்வாமிக்கு லெட்டர் கொடுத்து அனுப்பி இருந்தேன். தரிசனத்தின் போது, ஸ்வாமி, நேரே அவர் கிட்ட வந்து கணபதியை சீக்கிரமா ஸ்வாமி கிட்ட கூப்ட்டுக்கறேன்-னு சொன்னாராம். அவ்ளோதான், எனக்கு வேற வினையே வேண்டாம்! ஸ்வாமி சொல்லிட்டாரோல்லியோ!! எனக்கு இப்போதைக்கு சாவே வராது. இன்னும் பத்து வருஷம் உயிரோட இருப்பேன்” என்று சிரித்துக் கொண்டே கூறினார்.

அண்ணா வழக்கம் போல ஸ்வாமியைக் கேலி பண்ணுகிறார் என்று தான் நினைத்தேன். ஆனால், அதன் பின்னர் ஏறக்குறைய பத்து வருடங்கள் தான் உயிருடன் இருந்தார்.

தி. நகர் இல்லம் வந்ததுமே அண்ணா, தனது எழுத்துப் பணிகளைப் பெருமளவு குறைத்துக் கொண்டார். மறு பதிப்புக்கு வரும் புத்தகங்களை ப்ரூஃப் படிப்பதும் நின்று விட்டது.

அண்ணா “கிளம்பத் தயாராகி விட்டார்” என்ற உணர்வு எனக்கு அடிக்கடி ஏற்பட்டது.

இந்தக் காலகட்டத்தில், “நான் இப்போதைக்கு மரணமடைய விரும்பவில்லை. சில நெருங்கிய அன்பர்களுக்கு நிறைய கர்மா பாக்கி இருக்கிறது. அவர்களுக்காக இன்னும் சில வருடங்கள் மந்திர ஜபம் பண்ண விரும்புகிறேன்” என்று மோகன்தாசிடம் (அண்ணாவுக்குப் பணிவிடை புரிந்தவர்.) அண்ணா ஒரு தடவை தெரிவித்தார்.

இதற்கு சுமார் மூன்று வருடங்கள் பின்னர் அண்ணா உணவு அருந்துவது மிகவும் குறைந்தது. தினசரி ஓரிரு கைப்பிடி உணவு என்பது, இரண்டு மூன்று ஸ்பூன் கஞ்சி மட்டுமே என்கிற அளவுக்குக் குறைந்தது. இரவு உறக்கத்துக்கான மாத்திரை தவிர இதர மருந்துகள் அனைத்துக்கும் குட் பை சொல்லி விட்டார்.

“கிளம்பிய பின்” யார் யாருக்கு என்ன செய்தி சொல்ல வேண்டும், யார் டெத் சர்டிஃபிகேட் கொடுக்க வேண்டும், யார் காரியம் பண்ண வேண்டும் - என்று லிஸ்ட் போட்டு, உரிய நபர்களிடம் தகவல் சொல்லி இருந்தார்.

ரொம்ப விதிவிலக்காக, தன்னுடைய புகைப்படப் பிரதியைச் சிலருக்கு வழங்கவும் ஏற்பாடு செய்தார்.

அனேகமாக, வைகுண்ட ஏகாதசியன்று அண்ணா “கிளம்புவார்” என்று நம்பினேன்.

ஆனால், அண்ணா, சிவ ராத்திரியைத் தேர்ந்தெடுத்தார்.

வழக்கமாக மாலையில் ஜன்னலை மூடி, திரையை இறக்கி வைத்திருப்போம். அன்று ஜன்னலைத் திறந்தே வைக்குமாறு சொல்லி விட்டார்.

மாலை ஆறு மணி முதல் வெட்ட வெளியையும் சுவரில் இருந்த ரமணர், பெரியவா படங்களையும் மாறி மாறிப் பார்த்தவாறே இருந்தார். 6.20 முதல் 6.40 வரை, நிதானமாக ஒவ்வொரு படத்தையும் கூர்ந்து பார்த்தார். அவரது கை சக்திவேலின் கையைப் பற்றியவாறே இருந்தது. பின்னர், சக்திவேலைப் பார்த்து மெல்லிய குரலில் "பை பை" என்று சொல்லியவாறு உயிர் நீத்தார்.

தகவல் கிடைத்து நான் அங்கு வந்து சேர்ந்த போது சுமார் எட்டு மணி இருக்கும்.

சிறிது நேரம் அண்ணாவின் பூத உடலைப் பார்த்துக் கொண்டே இருந்தேன். அண்ணா ஏற்கெனவே ஒல்லியான தேகம். இப்போது இன்னும் மெலிந்திருந்தார் என்பதை அப்போது தான் கவனித்தேன். ஈரத்துணியைப் பிழிவது போல உடலைச் சக்கையாகப் பிழிந்து விட்டார் என்பது புரிந்தது.

அன்புத் தம்பியர் சிலர் வந்து சேர்ந்தனர். அன்று இரவு அனைவரும் கண் விழித்திருந்தோம்.

அண்ணா இருந்தார், இப்போது மறைந்து விட்டார் என்ற உணர்வு எங்களில் யாருக்கும் இருக்கவில்லை. எப்போதும் போல சகஜமாகப் பேசிக் கொண்டிருந்தோம்.

பெரியவாளின் மகாசமாதி பற்றி அண்ணா எழுதி இருந்தது எனக்கு நினைவு வந்தது.

"பெரியவா வேத தர்மப்படி **நடந்தார்** என்று சொல்வது சரி. ஆனால், அவர் எப்படி **இருந்தார்**?" என்ற கேள்வியை எழுப்பி, அதற்கு, "இருந்தார் என்று இறந்த காலத்தில் சொல்லப்படவே முடியாத நித்தியப் பொருளே பெரியவா" என்று விளக்கமும் சொல்லி இருப்பார்.

அண்ணாவுக்கும் அது பொருந்தும்.

அண்ணா இருந்தார் என்று சொல்வதும் பொருத்தமற்றது என்றே எனக்குத் தோன்றுகிறது. அவர் இருந்தார் என்று சொல்வதை விட இல்லை என்று சொல்வதே சரியாக இருக்கும் என்றே நான் நினைக்கிறேன்.

ஏனெனில், அவர் எதிலும் இருந்ததாக எனக்குத் தெரியவில்லை.

துறவு என்றால் துறப்பது, விடுவது என்று சொல்கிறோம். விடுவதற்கு எதுவோ இருந்தால் தானே துறக்க முடியும்? விடுவதற்கு அண்ணாவிடம் எதுவுமே இருந்ததாக எனக்குத் தெரியவில்லை.

மரணம் என்ற ஒன்று தான் அவரை இல்லாமல் ஆக்கி விட்டது என்றும் எனக்குத் தோன்றவில்லை.

இதை வேறு எப்படி விளக்குவது என்பதும் புரியவில்லை. புரிந்து கொள்ளவோ, விளக்கவோ அவசியம் இருப்பதாகவும் தோன்றவில்லை.

இருந்தாலும் -

அந்தப் பிஞ்சுப் பாதங்களை இனிமேல் பிடிக்க முடியாது.

முகம் மலர்ந்த சிரிப்பைப் பார்க்க முடியாது.

கை விரல்கள் முழுவதும் விபூதியைத் தழையத் தழைய எடுத்து நெற்றியில் பூசிக் கொள்ளும் அழகைப் பார்க்க முடியாது.

"பெரியவா மாதிரி வருமாப்பா!" "பெரியவா மாதிரி வருமாப்பா!" "பெரியவா மாதிரி வருமாப்பா!" என்று திரும்பத் திரும்பச் சொல்லும் வார்த்தைகளைக் கேட்க முடியாது.

இது தான் கொஞ்சம் வருத்தமாக இருக்கிறது.

***

அண்ணா சித்தியாகி சுமார் இரண்டு வருடங்கள் கழித்து, பெரியவா அன்பர் ஒருவருடன் பேசிக் கொண்டிருந்தேன். அண்ணா இறந்த விதம் பற்றி அவர் என்னிடம் விசாரித்தார்.. அண்ணாவுக்கு இறுதி

மூச்சு வரை சுயநினைவும் பேச்சும் இருந்தது என்பதைக் கேட்டதும், அவர், இத்தகைய மரணம் மிகப்பெரிய யோகிகளுக்குமே கிடைக்காது, மிக அரிய வகை மரணம் இது என்று குறிப்பிட்டார்.

***

சக்திவேலைப் பற்றிக் கொஞ்சம் சொல்ல வேண்டியது அவசியம்.

யோகியார் அன்பரான சக்திவேலை, யோகியார், அண்ணாவுக்கு தாரை வார்த்து விட்டார்.

ஆரம்ப நாட்களில் அண்ணாவுக்குப் பணிவிடை செய்வதில் அவருக்கு இஷ்டமே இல்லை. அவர் மனம் முழுவதும் யோகியாரிடம் மட்டுமே இருந்தது.

அவர் அண்ணாவுக்குப் பணிவிடை செய்ய ஆரம்பித்த நாட்களில் அவருக்கு நிறைய நடைமுறைச் சிக்கல்கள் இருந்தன. குறிப்பாக, அவர் வேலை பார்க்கும் இடத்துக்கும் அண்ணா தங்கி இருந்த இடத்துக்கும் இடையே இருந்த தூரம் மிக முக்கியமான பிரச்சினையாக இருந்தது.

அண்ணாவிடம் மனம் ஒட்டாத நிலையிலும், மிகுந்த ஈடுபாட்டுடன் அண்ணாவுக்கு அவர் பணிவிடை புரிந்து வந்தார். "பெரியவாளுடன் இருந்தவர், தெய்வத்தின் குரலைத் தொகுத்து வருபவர்... இப்படிப்பட்ட ஒருவருக்கு சர்வீஸ் பண்ணுவது மிகவும் புண்ணியம்" என்று ஒவ்வொரு விஷயத்தையும் பார்த்துப் பார்த்துப் பண்ணுவார்.

ஒருநாள், யோகியார் அவருக்குச் சில பணிகள் கொடுத்து அனுப்பி இருந்தார். வழியில் எந்த இடத்திலும் சாப்பிடக் கூடாது என்று கட்டளையும் போட்டிருந்தார். அனைத்தையும் முடித்து விட்டு அண்ணாவிடம் செல்ல வேண்டும் என்றும் உத்தரவு.

வரிசையாக எல்லா வேலைகளையும் முடித்து விட்டு இரவில் அண்ணாவிடம் வந்து சேர்ந்தார், சக்திவேல். பின்னிரவு நேரமாதலால், கதவைத் தட்ட விருப்பம் இல்லாமல் படியிலேயே அமர்ந்து உறங்கத் தீர்மானித்தார்.

அவர் அமர்ந்ததும் கதவு திறந்தது. வெளியே வந்த அண்ணா அவரை உள்ளே அழைத்தார்.

உள்ளே நுழைந்ததும், இலையைப் போட்டு அண்ணாவே அவருக்கு உணவு பரிமாறினார்.

இதன் பின்னர், வேறொரு சந்தர்ப்பத்தில், அண்ணா, "இதோ பார், சக்திவேல். உனக்கு நான் தான், எனக்கு நீ தான். இதை யாராலும் மாற்ற முடியாது" என்று சொன்னார்.

கடைசி வரை இந்த உறவு தொடர்ந்தது. அண்ணா உயிர் பிரிந்த போது சக்திவேல் மட்டுமே அவருடன் இருந்தார்.

இந்த அத்தியாயம் எழுதும் போது சக்திவேலைத் தொடர்பு கொண்டு அண்ணாவின் இறுதி நிமிடங்களை விவரிக்குமாறு வேண்டினேன். ஒவ்வொரு நிகழ்ச்சியையும் படிப்படியாக விவரித்தார். அப்போது, அண்ணாவின் இறுதி நிமிடங்களில், அவர் தன்னுடைய கையைப் பிடித்திருந்த போது தனக்கு ஏற்பட்ட அதீத உணர்வை விளக்க முடியவில்லை என்று சொன்னார். அதேநேரத்தில், "முதன் முதலாக யோகியார் என் கையைப் பிடித்த போதும் இதே போன்ற உணர்வு எனக்கு ஏற்பட்டது" என்றும் தெரிவித்தார்.

## இறுதி யாத்திரை

மறு நாள் காலையில் இருந்தே அன்பர்கள் அஞ்சலி செலுத்த வர ஆரம்பித்தார்கள்.

எழுத்தாளர் ரா. கணபதி மறைந்து விட்டார் என்று ஊடகங்களில் வெளியாகி இருந்தாலும், பெரும்பாலான அன்பர்களுக்கு, ரா. கணபதி என்ற பெயருக்கு மேல் அவரைப் பற்றித் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. அவரது வீட்டு விலாசத்தை யாரிடம் கேட்டு அறிவது?

எனவே, அதிகம் பேர் வர முடியாத நிலைமை.

உறவினர்கள், அண்ணாவுக்குப் பணிவிடை புரிந்த அன்புத் தம்பியர் உட்பட, மொத்தத்தில், சுமார் நூற்றி ஐம்பது பேர் தான் இறுதி அஞ்சலி செலுத்தினார்கள்.

அண்ணாவை எத்தனையோ தடவை பார்த்திருக்கிறேன். ஏதேதோ என்னால் இயன்ற பணிவிடைகளும் செய்திருக்கிறேன்.

செய்ததும் செய்யாததும் ஒருபுறம் இருக்கட்டும், “இதோ, இவர் என்னுடையவர்” என்கிற எண்ணம் நெஞ்சம் முழுவதும் நிறைந்து இருந்தது என்பது உண்மை. ஆனால், அண்ணா, அண்ணா என்று இதுவரை நாங்கள் அனைவரும் பார்த்து வந்த, பேசி வந்த அந்த உடல் மறைந்து விட்டது. இனி, அவரவர் உள்ளத்துக்குள் தான் அவரது இயக்கம் இருக்க முடியும்.

அதுமட்டுமல்ல, இப்போது இந்த உடலுக்கு அவரது உறவினர்கள் மட்டுமே காரியம் பண்ண முடியும். அவற்றில் நான் செய்வதற்கு ஒன்றும் இல்லை.

“இங்கே எனக்கு என்ன வேலை?” என்ற கேள்வி தான் எனக்குள் பெரிதாக ஓடியது. எதிலும் மனம் ஒட்டவில்லை. அந்த இடமே எனக்கு அன்னியமாகி விட்டது போன்ற உணர்வு.

ஏதேதோ சிந்தனைகள்... வழக்கம் போல குழப்பங்கள்...

அஞ்சலி செலுத்த வருபவர்கள் தங்கள் இரங்கல் செய்திகளை வழங்கும் பொருட்டு ஒரு விசிட்டர்’ஸ் நோட்புக் வைக்கப்பட்டிருந்தது.

எனக்கு அதைப் பார்க்கவே மனதுக்குக் கஷ்டமாக இருந்தது. “தான்” என்கிற ஒன்று அறவே இல்லாமல் இருந்த அண்ணாவுக்கு எதற்காக இரங்கல்? அவர் “இருந்தாரா இல்லையா?” என்பதையே புரிந்து கொள்ள முடியாதவாறு தான் அவரது வாழ்க்கை இருந்தது. இப்போது அவர் இறந்து விட்டார் என்றும் அந்த மரணத்துக்கு அனுதாபச் செய்தி கொடுப்பதும் எதற்காக என்ற கேள்வியே மேலோங்கியது.

ஆனாலும், உலக வழக்கு, இறுதி ஸம்ஸ்காரங்கள் முதலான எத்தனையோ விஷயங்கள் இருக்கின்றன. இவற்றில் நான் செய்வதற்கு ஒன்றுமே இல்லை.

அண்ணாவின் ஒண்ணு விட்ட தம்பி துரைஸ்வாமி இறுதி காரியங்கள் பண்ணினார்.

தகனம், அஸ்தி கரைப்பு முதலான சடங்குகள் முடியும் வரை இயந்திரம் போலவே இருந்தேன்.

அண்ணா கல்கியில் பணிபுரிந்த காலகட்டத்தில் பெரியவா நீண்ட நடைப்பயணத்தை ஆரம்பித்தார். இந்தப் பயணம் பல வருடங்கள் நீடித்தது.

அண்ணாவுக்குப் பெரியவாளைப் பார்க்காமல் இருக்க முடியவில்லை.

அந்தக் காலத்தில் தகவல் தொடர்பு வசதிகளும் குறைவு. பெரியவாளை தரிசனம் செய்து விட்டு வந்தவர்கள் மூலம், பெரியவா இருக்கும் இடத்தைத் தெரிந்து கொண்டு அங்கே செல்ல வேண்டும். பெரியவா அந்த ஊரில் தான் இருப்பார் என்பதற்கு எந்த உத்தரவாதமும் கிடையாது. அந்த ஊர் ஜனங்களிடம் விசாரித்துத் தெரிந்து கொண்டு அவர்கள் சுட்டிக் காட்டும் திசையில் போய்ப் பெரியவா இருக்கும் இடத்தை அடைய வேண்டும்.

அண்ணா இதேபோல ஒருமுறை பெரியவாளை தரிசனம் செய்யப் போயிருந்தார்.

அப்போது பெரியவா ஆந்திராவில் ஏதோ ஒரு சிறிய கிராமத்துக்கு வெளியே பாழடைந்த கட்டடத்தில் தங்கி இருந்தார்.

அண்ணா போய்ச் சேர்ந்த போது மதிய நேரம். பெரியவா வெளியே வரும் வரை அண்ணா அந்தக் கட்டடத்தின் வாசலிலேயே காத்திருந்தார்.

நீண்ட நேரத்துக்குப் பின்னர் பெரியவா வெளியே வந்தார். அண்ணா அவரை நமஸ்கரித்தார்.

அண்ணாவைப் பார்த்துப் பெரியவா, "என்ன விஷயம்? எதுக்கோசரமா வந்தே?" என்று கேட்டாராம்.

அதற்கு அண்ணா, "என்னால பெரியவாளைப் பார்க்காம இருக்க முடியல" என்று சொன்னாராம்.

உடனே, பெரியவா, "ஓ, இந்த உடம்பு.... இது தான் பெரியவாளோ?" என்று கேட்டு விட்டு, விருட்டெனத் திரும்பி உள்ளே போய் விட்டாராம்.

அண்ணா இந்தச் சம்பவத்தை என்னிடம் சொன்ன போது, "என்னவோ தெரியலைப்பா... எனக்குள்ள ஒரு இழை அறுந்து போனா மாதிரி இருந்தது. அன்னிலேர்ந்து எனக்குப் பெரியவாளைப் பார்க்கணும்னே தோணல. அதுக்கப்பறம் நிறையத் தடவை பெரியவாளைப் பார்க்கப் போயிருக்கேன். ஏதாவது வேலை விஷயமா போனது தான்... பெரியவாளைப் பார்த்தே ஆகணும்ங்கற ஃபீலிங் அடியோட போயிடுத்து. அந்த மாதிரி நினைப்பே வரல" என்று குறிப்பிட்டார்.

(இழை அறுந்து போனா மாதிரி என்று அண்ணா சொன்ன போது கத்திரிக்கோலால் கத்திரிப்பது போலத் தனது இடது கையால் செய்து காட்டியது இன்னும் பசுமையாக நினைவிருக்கிறது.)

பெரியவா மகா சமாதி ஆனபோது அண்ணா அவரைப் பார்க்கப் போகவில்லை.

காரணம், பெரியவா அந்த உடல் தான் என்று அண்ணா நினைக்கவில்லை.

அது நித்திய வஸ்து. அது எங்கும் போகவில்லை.

என்னைப் பொறுத்த வரை அண்ணாவும் அப்படியே.

**துறவு என்பது...**

ஒருமுறை நானும் இளங்கோவனும் அண்ணாவைப் பார்க்கப் போயிருந்தோம். அன்று அண்ணா எனக்கு ஒரு வேஷ்டியும், இளங்கோவனுக்கு இரண்டு வேஷ்டிகளும் கொடுத்தார். நான் அலுவலகத்துக்கு பேண்ட்-சட்டையில் வருபவன், இளங்கோவன் எப்போதுமே வேஷ்டி அணிபவர். எனவே தான் எனக்கு ஒரு வேஷ்டியும், அவருக்கு இரண்டு வேஷ்டிகளும் என்பது எனக்குப் புரிந்தது.

அண்ணா கொடுப்பது எதுவானாலும், என்னைப் பொறுத்த வரை, அது பிரசாதமே. ஆனால், இளங்கோவன் பார்வை வேறு. அவரைப் பொறுத்த வரை, "நாம் கிரஹஸ்தர்கள். நாம் தான் அண்ணாவுக்குக் காணிக்கைப் பொருட்கள் தர வேண்டும். அவரிடமிருந்து எதையும் எதிர்பார்க்கக் கூடாது" என்பது அவர் எண்ணம். எனவே, வேஷ்டிகளை மிகுந்த கூச்சத்துடனேயே அவர் வாங்கிக் கொண்டார்.

இளங்கோவன், "அண்ணா, எனக்கு எதுக்கு அண்ணா இதெல்லாம் தரீங்க? நாங்க தான் அண்ணா உங்களுக்கு சர்வீஸ் பண்ணணும்" என்றார். அதற்கு அண்ணா, "பரவாயில்லைப்பா, நான் பிரியமா தரேன். வாங்கிக்கோ" என்றார்.

இளங்கோவனின் கூச்சம் குறையவில்லை. "அண்ணா, ரெண்டு வேஷ்டி குடுத்திருக்கீங்க, ஒரு வேஷ்டியை யாருக்காவது குடுத்துடட்டுமா?" என்று கேட்டார்.

உடனே அண்ணா, "இளங்கோ, அதை நான் உனக்குக் கொடுத்துட்டேன். இப்போ அது உன்னோடது. அதை நீ என்ன பண்ணினா எனக்கென்னப்பா?" என்றார்.

“பிறரிடம் கொடுத்து விட்ட” பொருட்களை மட்டுமல்ல, தன்னிடம் இருந்த “தன்னுடைய” என்றே சொல்லப்படும் பொருட்களையும் அண்ணா தன்னுடையதாகக் கருதவில்லை.

அவர் துறவறம் ஏற்கவில்லை. அதேநேரத்தில், அவரிடம் துறப்பதற்கு எதுவும் இல்லை. தானாகவே வந்து சேர்ந்த விஷயங்களையும் துடைத்து எறிந்து விட்டார்.

***

அண்ணா காலம் முடிந்த உடனேயே திவ்ய வித்யா ட்ரஸ்டின் ஆயுளும் முடிவடைந்தது.

புத்தகங்களின் ஃபிலிம்களோ, பிரின்ட்அவுட்களோ, கம்ப்யூட்டர் ஃபைல்களோ அவர்களிடம் கைவசம் இல்லை. ட்ரஸ்ட் டீட் உட்பட அனைத்தும் தொலைந்து விட்டன.

பதிப்பகத்தின் சொத்து என்பது புத்தக ஸ்டாக் அல்ல - ஃபிலிம்களும் கம்ப்யூட்டர் ஃபைல்களுமே.

இனி, அண்ணாவின் புத்தகங்களை மீண்டும் அச்சிடுவது என்றால், அனா, ஆவன்னாவில் இருந்து தான் ஆரம்பிக்க வேண்டும்.

இது என்ன பொறுப்பற்றதனம் என்று அதன் ட்ரஸ்டிகள் மீது கோபம் வந்தது. இந்தக் கோபம் பல மாதங்கள் நீடித்தது.

(இந்த விஷயத்தில் திவ்ய வித்யா ட்ரஸ்டிகளை மட்டும் குற்றவாளிக் கூண்டில் ஏற்றுவது தவறு, என்னையும் சேர்த்தே தான் ஏற்ற வேண்டும். ஒரு பத்திரிகையில் வெளிவந்த கட்டுரைத் தொடர்களை என்னிடம் கொடுத்த அண்ணா, தனது காலத்துக்குப் பின்னர் அதை நூலாக வெளியிடுமாறு கூறி இருந்தார். அண்ணா என்னிடம் கொடுத்த அச்சுப் பிரதியைத் தொலைத்து விட்டேன். டைப் பண்ணி வைத்திருந்த ஃபைல்கள் இருந்த ஹார்ட் டிஸ்க் பழுதாகி விட்டது. தொடர் வெளிவந்த பத்திரிகை அலுவலகத்திலும் பிரதி இல்லை.)

அண்ணா காலத்துக்குப் பின்னர், அண்ணாவின் சில புத்தகங்களை திவ்ய வித்யா இணையதளத்தில் வெளியிட்டிருந்தார்கள். விரைவிலேயே அதன் ஆயுளும் முடிந்து விட்டது.

போன வருடம் திவ்ய வித்யா ட்ரஸ்டி ஒருவரைத் தொடர்பு கொண்டு, அந்த இணையதளத்தைப் புதுப்பிக்கலாமே என்று கேட்டேன். அது நடைமுறையில் சாத்தியமில்லை என்பதை அவர் விளக்கினார். மேலும், தன்னிடம் திவ்ய வித்யா வெளியிட்ட புத்தகங்கள் சிலவற்றின் பிரதிகள் இருப்பதாகவும் அதை உரிய விதத்தில் பயன்படுத்திக் கொள்ள முடியுமா என்று கேட்டார்.

திவ்ய வித்யா ட்ரஸ்டிகளுக்கு “அர்ச்சனை” பண்ணிக் கொண்டே அந்தப் பிரதிகளை ஓர் அன்பருக்கு அனுப்பி வைத்தேன். அவர் அவற்றைப் பலருக்குப் பிரசாதமாக வினியோகம் செய்தார்.

எனது நண்பர் ஒருவர், அடிக்கடி, “தான தர்மம் பண்ண ஆசைப்பட்டால் ட்ரஸ்ட் நடத்து. பணம் சம்பாதிக்க ஆசைப்பட்டால் வியாபாரம் நடத்து” என்று சொல்வதுண்டு. இது தான் எனக்கு மீண்டும் மீண்டும் மனதில் தோந்றியது. திவ்ய வித்யா ட்ரஸ்டை எதற்காக ஆரம்பித்தார்கள், எவ்வாறு நடத்தினார்கள் என்பதை நிதானமாக யோசித்துப் பார்த்தேன்.

அது, ஸ்வாமி சொன்னதன் பேரில், அண்ணா உத்தரவின்படி ஆரம்பிக்கப்பட்டது. அதன் நோக்கம் அண்ணா புத்தகங்களை சலுகை விலையில் விற்பனை செய்வது மட்டுமே.

அதன் ட்ரஸ்டிகளுக்குப் பதிப்பக வேலையில் நாட்டமோ, அனுபவமோ, தொடர்புகளோ கிடையாது.

அண்ணா மீதான பக்தியின் காரணமாக மட்டுமே அவர்கள் ட்ரஸ்ட் நடத்திக் கொண்டிருந்தார்கள். இதனால் தனிப்பட்ட ரீதியில் அவர்களுக்குப் பொருளாதார இழப்பும், நேர விரயமும் ஏற்பட்டன. அதை அவர்கள் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டார்கள்.

இதற்கு ஒரே காரணம் அண்ணா மீதான பக்தி மட்டுமே.

ஆனால், திவ்ய வித்யா ட்ரஸ்ட் என்பது ஒரு பதிப்பகம். அதை வியாபாரமாக நடத்த வேண்டும். அது அவர்களுக்கு சாத்தியப்படவில்லை. திவ்ய வித்யா ட்ரஸ்ட், ஐம்பது ரூபாய் புத்தகத்தை முப்பது ரூபாய்க்கு விற்பனை செய்தது உண்மையே. இதனால் யாருக்கு என்ன ஆதாயம்? இந்தக் காலத்தில், ஐம்பது ரூபாய்க்கும் முப்பது ரூபாய்க்கும் என்ன வித்தியாசம்?

ஆனால், இதே புத்தகங்களை வியாபார ரீதியில் நடைபெறும் பதிப்பகங்கள் வெளியிட்டிருந்தால் பத்தாயிரம் பிரதிகளுக்குப் பதில் ஐம்பதாயிரம் பிரதிகள் விற்பனை ஆகியிருக்குமே!

இதையெல்லாம் விடப் பெரிய விஷயம், அண்ணா எழுதிய அனைத்து நூல்களையும் திவ்ய வித்யா ட்ரஸ்ட் வெளியிட்டது தான். பல்வேறு பதிப்பகங்கள் செய்த வேலைகள் அனைத்தும் திவ்ய வித்யாவில் குவிக்கப்பட்டன. திவ்ய வித்யா ட்ரஸ்ட் அஸ்தமனமானதும், அதனுடன் சேர்ந்தே அத்தனை புத்தகங்களும் அஸ்தமனமாகி விட்டன.

எவ்வளவு பெரிய முட்டாள்தனம் இது!

இந்த முட்டாள்தனத்துக்கு யார் காரணம்?

அண்ணா, அண்ணா, அண்ணா மட்டுமே!

தனது உடலைச் சக்கையாகப் பிழிந்தது போலவே தனது நூல்களையும் பிழிந்து, அனைத்தையும் அஸ்தமனம் ஆக்கி விட்டார்.

அகஸ்தியர், அம்மா, ஜயஜய சங்கர, காமகோடி ராமகோடி முதலான சில நூல்கள் மட்டும் அண்ணா காலத்துக்குப் பின்னர் வேறு பதிப்பகங்களால் வெளியிடப்பட்டுள்ளன. என் பார்வையில் இவையும் ஏற்கெனவே அஸ்தமனம் ஆகி விட்டன. காரணம், இவற்றின் மறு பதிப்பு வெளியாவதற்கான சாத்தியக் கூறு எதுவும் என் கண்களில் தென்படவில்லை.

திவ்ய வித்யா ட்ரஸ்ட் என்பதில் ஒளிந்திருந்த "திவ்ய சங்கல்பம்" இது தான்.

இந்த "அஸ்தமன" கைங்கர்யத்தில் தெய்வத்தின் குரல், ஸ்வாமி ஆகிய இரண்டு மட்டுமே விதி விலக்கு.

இவை இரண்டு மட்டுமே அண்ணாவிடமிருந்து "தப்பிய" நூல்கள்.

தெய்வத்தின் குரல் முழுக்க முழுக்க பெரியவாளின் கருத்துகளே. "அது சமுதாய நன்மையை உத்தேசித்து பெரியவா சொன்ன கருத்துகளின் திரட்டு. அதன் மீது எனக்கு எந்த உரிமையும் கிடையாது" என்று அண்ணா என்னிடம் தெரிவித்துள்ளார். எனவே, தெய்வத்தின் குரலில் தன்னுடைய பெயரைப் போட்டுக் கொள்வதில் அண்ணாவுக்கு விருப்பம் இல்லை. தன்னைப் பெரியவா பாத சம்பந்தம் உள்ளவராகக் காட்டிக் கொள்வதற்காக மட்டுமே அதில் தனது பெயரை வெளியிட்டார். அதிலும், தான் தொகுப்பாசிரியர் மட்டுமே என்பதை மறக்காமல் குறிப்பிட்டிருப்பார்.

தற்போதைய பதிப்புகளில் முதல் பக்கத்தில் அண்ணாவின் பெயர் இடம் பெறுகிறது. ஆனால், இதில் அண்ணாவுக்கு உடன்பாடு இல்லை. அவர் தனது பெயரை முகவுரையில் மட்டுமே வெளியிட அனுமதித்தார், அதிலும், அந்தப் பெயரின் கீழே தொகுப்பாசிரியர் என்று போட வேண்டியது கட்டாயம்.

பெண்மை இரண்டாவது பதிப்பில் நான், தொகுப்பாசிரியர் என்று போடாமல் வெறுமனே ரா. கணபதி என்று போட்டிருந்தேன். புத்தகப் பிரதியைப் பார்த்ததுமே, "ஐயய்யோ என் பெயரை ஏன் போட்டாய்?" என்று கேட்டார். "அது உங்கள் சாய்ஸ் இல்லை அண்ணா, என்னோட சாய்ஸ். அப்படித் தான் போடுவேன்" என்று சொன்னேன். அண்ணாவுக்குச் சிரிப்பு வந்து விட்டது. அதன்பிறகு இதைப்பற்றி வேறு ஒன்றும் சொல்லவில்லை.

அண்ணா தன்னையோ, தனது எழுத்தையோ, தனது வாழ்க்கையையோ ஒரு பொருட்டாகக் கருதவில்லை. தெய்வத்தின் குரல், ஸ்வாமி ஆகிய இரண்டு நூல்கள் உருவாக்கம் மட்டுமே அதற்கு விதிவிலக்கு.

இந்த இரண்டு நூல்கள் இருக்கும் வரை “தவிர்க்க முடியாமல்” ரா. கணபதி என்ற பெயரும் இருக்கும்.

ஆம், “தவிர்க்க முடியாமல்” தான். மற்றபடி, அண்ணா, தனது பெயரையும் ஒட்டுமொத்தமாகத் துடைத்துப் போட்டு விட்டார்.

சில நாட்களுக்கு முன்பு தெய்வத்தின் குரல் ஆங்கில வடிவம் கண்ணில் பட்டது. அண்ணாவின் பெயரே இல்லாமல் வெளியிட்டிருக்கிறார்கள்.

அதைப் பார்க்கும் போது அடிவயிற்றில் இருந்து ஆத்திரமும் அழுகையும் பீறிட்டன. மிகவும் கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டேன்.

அண்ணா இல்லாமல் தெய்வத்தின் குரல் எப்படி நமக்குக் கிடைத்திருக்கும்? மொத்த வாழ்க்கையையும் தெய்வத்தின் குரலுக்காக அர்ப்பணித்து, சுமார் பத்தாயிரம் பக்கத் தொகுப்பு நூலை உருவாக்கியவரின் பெயரே இல்லாமல் அந்தத் தொகுப்பை வெளியிடுவதற்கு இவர்களுக்கு எப்படி மனசு வந்தது? இது அடுத்தவர் உழைப்பைத் திருடுவதற்குச் சமமானது அல்லவா?

ஜீரணிக்க முடியவில்லை.

ஆனால், அண்ணாவுக்கு இது மிகவும் சந்தோஷமாக இருக்கும். தனது பெயர் கூட இந்த உலகத்தில் இல்லாமல் துடைத்துப் போட விரும்பியவர் அவர்.

துறவு என்பது உடைமைகளையோ, உறவுகளையோ, பந்த பாசங்களையோ தொலைப்பது அல்ல.

துறவு என்பது தன்னைத் தொலைப்பது, பரிபூரணத்தில் இரண்டறக் கலப்பது.

இது தான் அண்ணா.

## 17. அண்ணாவின் அனுக்கிரகம்

அண்ணாவுடன் நான் பல வருடங்கள் இருந்திருக்கிறேன். ஆனாலும், எனக்கென்னவோ அவரிடம் ஆன்மிக விஷயமாக எதுவும் கேட்கத் தோன்றவில்லை. அவராக ஏதாவது சொன்னால் கேட்டுக் கொள்வேன். மற்றபடி, நானாக அவரிடம் எதுவும் கேட்டதில்லை.

அண்ணா ஒரு ப்ரொஃபசர் வீட்டில் தங்கி இருந்த சமயம். ஒருமுறை சில மளிகை சாமான்கள் வந்திருந்தன. அவற்றையெல்லாம் உரிய டப்பாக்களில் போடுமாறு சொன்னார், அண்ணா.

நான் தரையில் ஒரு பேப்பரை விரித்து, எந்தப் பொருளும் கீழே சிந்தாமல், ஒவ்வொரு பொருளையும் நிதானமாக அதற்குரிய டப்பாவில் போட்டேன்.

நான் வேலை செய்யும் விதத்தை அண்ணா வேடிக்கை பார்த்துக் கொண்டே அமர்ந்திருந்தார்.

என்னைப் பார்த்து, "பரவாயில்லையே, நன்னா வேலை பார்க்கறயே! பேசாம நான் ஒரு மளிகைக் கடை போட்டிருக்கலாம். எனக்கு நல்ல அசிஸ்டென்டா இருந்திருப்பாய்!" என்றார்.

அவர் சொன்னாலும் சொல்லாவிட்டாலும், ஒரு மளிகைக் கடை முதலாளிக்கும், அவரது அசிஸ்டென்டுக்கும் உள்ள சம்பந்தம் மாதிரி தான் அவருக்கும் எனக்குமான உறவு இருந்தது.

எனக்கு அவரிடம் சில எதிர்பார்ப்புகள் இருந்தது உண்மை. ஆனாலும், அண்ணா எனது எதிர்பார்ப்புகளையும், பிரார்த்தனைகளையும் புறக்கணித்தே வந்தார் என்பதும் உண்மை.

ஆரம்ப நாட்களில், சாரதா பப்ளிகேஷன்ஸ் நல்ல நிலைக்கு வரும், ஓரளவு பணம் சம்பாதிக்க முடியும் என்ற நம்பிக்கை இருந்தது. விரைவிலேயே அதுவும் பொய்த்துப் போனது.

அண்ணாவிடம் வருவதற்கு முன்பு ஓரளவு பக்தி இருந்தது. அதைத் தொடர்ந்து அண்ணா மீது முழுமையான பக்தியும் நம்பிக்கையும் ஏற்பட்டது.

ஆனால், இவை எல்லாம் சில வருடங்களே நீடித்தன.

அதன் பின்னர் விரக்தியும் சபித்தலும் தான்.

ஆனால், அண்ணா-ஸ்ரீதரன் உறவு என்பது இது மட்டுமே அல்ல.

அண்ணா காலம் முடிந்ததும் விரக்தி மிக அதிகமானது. அண்ணா எனக்கு எதுவுமே பண்ணவில்லை என்று என் மனம் ஓலமிட்டது.

அதேநேரத்தில், அண்ணா எனக்கு ஏதோ செய்தி சொல்லி இருக்கிறார் என்று என் உள் மனம் சொன்னது. முதலில் நான் அதைப் புறக்கணித்தேன். நாளாக ஆக, அந்த எண்ணம் வலுத்தது.

சக்திவேலிடம் இதைப் பகிர்ந்து கொண்டேன். அண்ணா என்னைப் பற்றி ஏதாவது சொல்லி இருக்கிறாரா என்று அவரிடம் கேட்டேன்.

"அவன் சில காரியங்களைப் பண்ணணும்-னு இருக்கு. அதைப் பண்ணுவான்" என்று அண்ணா தன்னிடம் சொன்னதாக அவர் தெரிவித்தார்.

நான் பண்ண வேண்டியது என்ன காரியம் என்பது புரியவில்லை. ஆனால், அந்தக் காரியம் எப்படி நடக்கும் என்பது, சில வருடங்களுக்குப் பின்னர், தெளிவாகவே "புரிய வைக்கப்பட்டது" - "நான்" எழுதிய காரேய் கருணை ராமாநுஜா புத்தகத்தின் மூலம்.

அண்ணா காலத்துக்குப் பின்னர், ஒரு நண்பரின் வேண்டுகோளின் பேரில் ஸ்ரீரங்கம் கோவிலைப் பற்றி ஒரு புத்தகம் எழுத வாய்ப்புக் கிடைத்தது. அதைத் தொடர்ந்து, ராமாநுஜர் ஆயிரமாவது ஆண்டில், ராமாநுஜரைப் பற்றியும் ஒரு புத்தகம் எழுதுமாறு ஓர் அன்பர் கேட்டுக் கொண்டார்.

சில காரணங்களால் எனக்கு அதில் உடன்பாடு இல்லை. அதேநேரத்தில் எழுதும் ஆசையும் இருந்தது. எனவே, எழுதலாமா, வேண்டாமா என்று முடிவெடுக்க முடியாமல் தடுமாறினேன்.

இரண்டு பெரியவர்களிடம் இதைப் பற்றி முறையிட்டேன். இருவருமே எழுதுமாறு பணித்தார்கள். ஆசியும் வழங்கினார்கள்.

தடுமாற்றம் இருந்த போதிலும், சிற்சில ஊர்களுக்குப் போய், சில புத்தகங்களைச் சேகரித்துக் கொண்டேன்.

வழியெங்கும் ஏராளமான சுப சகுனங்கள் தென்பட்டன.

இறுதியாக, ஸ்ரீவில்லிபுத்தூர் வந்தேன். ஆண்டாள் அவதாரத் தலத்தில் அவளுக்கென்று ஒரு தனி சன்னிதி உண்டு. அங்கே அவளைத் தரிசித்தேன். அர்ச்சகருக்கு என்ன தோன்றியதோ, என் கையில் ஒரு தாமரைப் புஷ்பத்தைக் கொடுத்தார்.

அதைக் கண்ணில் ஒத்திக் கொண்டு நிமிர்ந்தேன். எதிரில் ஸ்ரீராமானுஜர் சித்திரம்.

வழக்கமாக, அந்தச் சித்திரத்தைப் பார்த்தால் எனக்குச் சிரிப்பு தான் வரும். காரணம், ராமானுஜர் திரிதண்டம் தரித்தவர், விசிஷ்டாத்வைதி. ஆனால், அந்தச் சித்திரத்தில் அவர் அத்வைத சந்நியாசிகளைப் போல ஏகதண்டத்துடன் காட்சி தருவார்.

ஆனால், ஏனோ, அன்று எனக்குச் சிரிப்பு வரவில்லை. மாறாக, எனக்குப் பின்னால் இருந்து யாரோ “அண்ணா” என்று அழைப்பது போன்ற உணர்வு ஏற்பட்டது.

ஆகா, நல்ல சகுனம்.

ஆண்டாளுக்குச் சீர் செய்ததால் ராமானுஜரை ஆண்டாள் தனது அண்ணாவாகக் கொண்டாடினாள் என்பது ஐதிகம். எனவே, ஆண்டாளே, தனது அண்ணாவான ராமானுஜரைப் பற்றி எழுதச் சொல்லி உத்தரவு கொடுக்கிறாள் என்று என் மனம் நம்பியது.

தரிசனம் முடித்து காரில் ஏறி அமர்ந்தேன்.

திடீரென என் மனதில், “அண்ணா என்றதும் எனக்கு ராமானுஜர் நினைவு எப்படி வந்தது?” என்ற கேள்வி எழுந்தது. அண்ணா தனது கடைசி காலத்தில் என்னைச் செய்யுமாறு பணித்த ஒரு வேலையும், நான் எனது வழக்கமான சோம்பேறித்தனத்தால் அதைச் செய்யாமலேயே விட்டதும் ஞாபகம் வந்தது.

அது ராமானுஜரின் குருவாகிய யாதவப் பிரகாசர் பற்றிச் சொல்லப்பட்டு வரும் தவறான கருத்தைப் பற்றியது.

யாதவப் பிரகாசர் ஓர் அத்வைதி என்றே பொதுவாகச் சொல்லப்பட்டும் நம்பப்பட்டும் வருகிறது. ஆனால், அது தவறு.

ராமானுஜர் ஆயிரமாவது ஆண்டில் அவரைப் பற்றி நிறைய புத்தகங்கள் வெளியாகும். அனைத்து நூல்களிலும் இதே தவறான கருத்து தான் இடம் பெறும்.

இதை எனக்கு விளக்கிய அண்ணா, “நீ உனக்குத் தெரிந்த மீடியா நண்பர்களிடம் சொல்லி, இந்தத் தவறைச் சரி செய்ய ஏற்பாடு செய்” என்று கூறினார்.

நான் சில நண்பர்களிடம் பேசினேன். இதற்கு என்ன செய்வது என்பது அவர்களுக்குப் புரியவில்லை. எனவே, நான் அண்ணாவிடம், “ஒருசில வைணவப் பெரியார்களிடம் இதைப் பற்றிப் பேசிப் பார்க்கட்டுமா?” என்று கேட்டேன். “அவசியம் பண்ணு” என்றார்.

ஆனாலும் நான் யாரையும் சந்திக்க முயற்சி செய்யவே இல்லை. அலட்சியம், சோம்பேறித்தனம் முதலியவை ஒரு காரணம்.

“ராமானுஜரைப் பற்றி மட்டுமல்ல, எல்லா ஆசார்ய புருஷர்களைப் பற்றியும் ஏராளமான கட்டுக்கதைகள் உலா வருகின்றன. இதையெல்லாம் யார் சரி பண்ணுவது, எப்படிப் பண்ணுவது? அண்ணாவுக்கு எதற்கு இந்த வெட்டி வேலை?” என்ற எண்ணம் இன்னொரு காரணம்.

போகிறேன், போகிறேன் என்று தட்டிக் கழித்து விட்டேன். இதைத் தொடர்ந்து அண்ணாவே இந்த விஷயம் பற்றிச் சிலருக்குக் கடிதம் எழுதினார்.

அண்ணா காலத்துக்குப் பின்னர் எனக்குள் இது பெரிய மன உறுத்தலாக உருவெடுத்தது. ஒருசிலரைப் பார்த்து விஷயத்தைச் சொல்லுவது கடினமான வேலையா? அண்ணா சொன்ன ஒரு சிறிய பணியைச் செய்யாமல் அலட்சியமாக இருந்து விட்டோமே என்று மிகவும் வருத்தமாக இருந்தது.

எனக்குத் தெரிந்த ஒரு வைணவப் பெரியவரைச் சந்தித்து இது பற்றி விளக்கினேன்.

அவர், “ரா. கணபதி தான் தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறார். யாதவப் பிரகாசரை அத்வைதி என்று குறிப்பிடும் வழக்கம் வைணவர்களிடம் இருப்பது உண்மை. ஆனால், அவர் அத்வைதி அல்ல என்பதற்கு ராமானுஜரே சாட்சி. அத்வைத சித்தாந்தத்துக்கு மறுப்புத் தெரிவிப்பது போலவே, ராமானுஜர், யாதவப் பிரகாச சித்தாந்தத்துக்கும் மறுப்புத் தெரிவிக்கிறார். அதற்கு என்ன அர்த்தம்? அத்வைதம் வேறு யாதவப் பிரகாச சித்தாந்ததம் வேறு என்பது தானே? யாதவப் பிரகாச சித்தாந்தம் என்பது அத்வைதத்தில் இருந்து கிளைத்த ஒரு சித்தாந்ததம். இதனால் தான் அவரை அத்வைதி என்று தவறாகக் குறிப்பிடும் வழக்கம் ஏற்பட்டிருக்கிறது. அதற்கு வைஷ்ணவத்தில் எந்த முக்கியத்துவமும் இல்லை. எனவே, அதைப் பெரிதுபடுத்திக் கொள்ள வேண்டியதில்லை” என்று குறிப்பிட்டார்.

அதற்கு மேல் எனக்கு வேறு எதுவும் செய்யத் தோன்றவில்லை.

ஆண்டாள் கோவிலில் இருந்து கிளம்பும் போது இந்தச் சம்பவங்கள் எனக்கு நினைவு வந்தன. “ஆம், ராமானுஜரைப் பற்றி எழுத வேண்டும், அதில் யாதவப் பிரகாசர் விஷயத்தை சந்தேகத்துக்கு அப்பாற்பட்ட விதத்தில் தெளிவாகச் சொல்ல வேண்டும்” என்ற உறுதி பிறந்தது. இது அண்ணாவே எனக்குக் கொடுத்துள்ள உத்தரவு என்ற உறுதியான நம்பிக்கையும் ஏற்பட்டது.

நூல் தயாரிப்புக்காக நான் சேகரித்திருந்த புத்தகங்கள் அனைத்தும் மணிப்பிரவாள நடையில் அமைந்தவை. அவற்றைப் படித்துப் புரிந்து கொள்வது மிகவும் கடினம். ராமானுஜர் பற்றி ஓர் உருப்படியான புத்தகம் எழுதும் அளவுக்கு விஷய அறிவைச் சம்பாதிப்பது எப்படி என்ற கேள்வி எழுந்தது.

அதேநேரத்தில், “எந்த வஸ்து எழுதச் சொல்லி உத்தரவு கொடுக்கிறதோ, அதுவே, எழுதுவதற்குத் தேவையான அறிவையும் கொடுக்கும்” என்ற தெளிவும் பிறந்தது.

விரைவிலேயே “காரேய் கருணை ராமானுஜா” புத்தகமும் பிறந்தது. அதன் டைப்பிஸ்ட் வேலைக்கும், ப்ரூஃப் ரீடிங் வேலைக்கும் மட்டுமே நான் பொறுப்பாளி.

அண்ணா, தன் வேலையைத் தானே செய்து கொண்டார் - என் மூலமாக.

“சுட்ட சட்டி சட்டுவம் கறிச்சுவை அறியுமோ?” என்ற வரி, அந்த நூல் உருவாக்கத்தில் என்னைக் குறிப்பதற்குப் பொருத்தமான வாசகம்.

***

ஒரு ஞாயிற்றுக் கிழமையன்று அண்ணாவைப் பார்க்கப் போயிருந்தேன். திருவான்மியூர் அறையின் முன்புறத்தில் இருக்கும் வீட்டில் பூஜை அறை உண்டு. அண்ணா அங்கே அமர்ந்திருந்தார். என்னையும் உள்ளே வந்து உட்காரச் சொன்னார்.

அப்போது, “யார் யாரோ வந்து என் கிட்ட ப்ரார்த்தனை பண்றா. அனுக்ரஹம் பண்ணணும், ஆசீர்வாதம் பண்ணணும்ங்கறா. போன வாரம் பத்மா ஸ்ரீநாத் வந்திருந்தா. அவளுக்கு அமெரிக்கா போறதுக்கு விசா டிலே ஆயிண்டே போறதாம். அவ பொண்ணு இங்கே டெலிவெரிக்காக வரணுமாம். பொண்ணு

வர்றதுக்குள்ள ஸ்டேட்ஸ் போயி வேலையை முடிச்சுட்டு வரணுமேன்னு இருக்கு. நீங்க தான் அனுக்ரஹம் பண்ணணும் அண்ணா-ன்னு என் கால்ல விழுந்தா. என்னை நமஸ்காரம் பண்ணிட்டுப் போன மறு நாள் அவளுக்கு விசா வந்திடுத்தாம். உங்களோட அனுக்ரஹம் தான் அண்ணா-ன்னு ஃபோன் பண்ணினா....

“எல்லாரும் என் கால்ல விழறாளே, எனக்கு என்ன தெரியும்னு தோணும். அம்பாள் கிட்ட ப்ரார்த்தனை பண்ணுவேன். அம்மா, இவா எல்லாரும் என் கிட்ட ப்ரார்த்தனை பண்றா. இவாளுக்கு நல்லது எது, கெட்டது எது-ன்னு இவாளுக்குத் தெரியலை. எனக்கும் தெரியாது. உனக்குத் தான் தெரியும். எல்லாருக்கும் எது நல்லதோ, அதைத் தான் நீ பண்ணுவே. அதையே இவாளுக்கும் பண்ணு-ன்னு ப்ரார்த்தனை பண்ணிக்கறேன்-னு வேண்டிப்பேன்” என்று குறிப்பிட்டார்.

இந்த வார்த்தைகள் என் மனதில் ஆழமாகப் பதிந்தன.

(பத்மா ஸ்ரீநாத் என்பவர் எனக்கு நன்றாகத் தெரிந்தவர் போல அண்ணா அந்தச் சம்பவத்தைக் குறிப்பிட்டார். ஆனால், அவர் யார் என்பதே அப்போது எனக்குத் தெரியாது. அந்தப் பெயரை அப்போது தான் முதன் முதலாகக் கேள்விப்பட்டேன். வெகு விரைவிலேயே அண்ணா மூலமாக அவருடைய அறிமுகம் கிடைத்தது. பிற்காலத்தில் சாரதா பப்ளிகேஷன் வெளியிட்ட நூல்களின் ஆங்கில மொழிநடையைச் சரி செய்து தந்தவர் அவரே. தற்போது வரை, பள்ளிக் கல்வி சம்பந்தமான விஷயங்களில் எனது வழிகாட்டியாக விளங்குபவரும் அவரே.)

***

அண்ணா பணிபுரிந்த காலத்தில் கல்கி பத்திரிகையில் வாரம் இரண்டு சிறு கதைகள் பிரசுரிப்பார்கள். பெரும்பாலும், கதைகளைத் தேர்ந்தெடுக்கும் வேலை அண்ணாவிடம் வந்து சேரும். இதைப் பற்றி ஒருமுறை என்னிடம் குறிப்பிட்டார்:

“ஃபைலை என் கிட்ட கொடுத்து ரெண்டு கதை செலக்ட் பண்ணித் தரச் சொல்லுவா. நான் அந்தக் கதைகளையெல்லாம் படிச்சுப் பார்ப்பேன். எந்த அடிப்படையில செலக்ட் பண்றதுன்னே எனக்குப் புரியாது. நல்லா இருக்கு, நல்லா இல்லைன்னு எதை வச்சு முடிவு பண்றது? இதுக்கு எதாவது யார்ட்ஸ்டிக் இருக்கா? அந்தக் கதையை எழுதினவனுக்கு அது பிடிச்சுத் தானே இருக்கு? இல்லேன்னா அவன் எழுதியே இருக்க மாட்டானே! அவனை மாதிரியே இருக்கற மத்தவாளுக்கும் அதைப் பிடிக்கத் தானே செய்யும்? இதுக்கெல்லாம் தகுதி-ன்னு ஒண்ணை யாரு முடிவு பண்றது? எந்த அடிப்படையில முடிவு பண்றது?”

இந்தக் கேள்வி அடிக்கடி என் மனதில் எழும்.

சரி எது, தவறு எது? தகுதி என்றால் என்ன, தகுதியின்மை என்றால் என்ன?

ஆம், வாழ்க்கையில் நாம் பயன்படுத்தும் அளவுகோல்கள் எத்தகையவை?

இவற்றையெல்லாம் யார் முடிவு செய்வது? எந்த அடிப்படையில் முடிவு செய்வது?

***

தெய்விக விஷயம் தான் எழுதுகிறோம் என்றாலும், எழுத்துப் பணிகளை, அண்ணா, ஒரு சுமையாகவே கருதினார். துறவறம் ஏற்க வேண்டும் என்ற எண்ணம் அவருக்கு இருந்தது.

துறவறம் வேண்டும் என்று இரண்டு முறை பெரியவாளிடம் அனுமதி கேட்டுப் பார்த்தார். பெரியவா பதிலேதும் சொல்லவில்லை.

மூன்றாவது முறை அனுமதி கேட்டுப் போனபோது, அண்ணா, “இமய மலையில் ஏகாந்தமாய் அமர்ந்து தவம் செய்யும் நாள் எப்போது வாய்க்குமோ?” என்று பொருள் தரும் ஒரு சித்தர் பாடலைப் பாடி விட்டு, பெரியவா முகத்தையே பார்த்துக் கொண்டு நின்றிருந்தாராம்.

அதற்குப் பெரியவா, “நான் இங்கே உக்கார்ந்து வயிறு வளர்த்திண்டிருப்பேனாம், நீ என்னடான்னா, என்னை விட்டுட்டு தனியா ஹிமாலயாஸ் போயி தபஸ் பண்ணி மோக்ஷம் போயிடுவியாம். தோ பாரு, நான் உருப்பட மாட்டேன், உன்னையும் உருப்பட விட மாட்டேன்” என்று சொன்னாராம்.

(பெரியவா, “நான் உருப்பட மாட்டேன், உன்னையும் உருப்பட விட மாட்டேன்” என்பதை ராகத்தோடு சொன்னாராம். அண்ணா அப்படியே அதை எனக்குப் பாடிக் காட்டினார்.)

அண்ணாவுக்குப் பெருத்த ஏமாற்றம்.

சிறிது நேரத்துக்குப் பின்னர், அண்ணாவிடம் பெரியவா, “எழுத்து-ங்கற கர்மா வாய்ச்சிருக்கு. ஸத் விஷயம்-னாலும் எழுதறது பிடிக்கலே. பரவாயில்லை. முடிஞ்ச வரைக்கும் பண்ணிண்டிரு. எதையும் புரிஞ்சுக்க முயற்சி பண்ண வேண்டாம். புரிஞ்சுக்க வேண்டிய அவசியமும் இல்லை. உன்னால புரிஞ்சுக்கவும் முடியாது” என்று சொன்னாராம்.

அதன்பிறகு அண்ணா துறவறம் பற்றிப் பேச்சே எடுக்கவில்லை.

***

ஒருமுறை ஒரு மனிதருடன் எனக்கு ஓர் உரசல். அவரை நேரில் சந்தித்துச் சண்டை போட வேண்டும் என்று முடிவு செய்திருந்தேன். சில காரணங்களால் அது தாமதமாகிக் கொண்டு இருந்தது. அந்தக் காலகட்டத்தில் அண்ணாவைப் பார்க்கப் போகாமல் தவிர்த்து வந்தேன். நேரில் போனால், ஒளிக்காமல் எல்லா விஷயங்களையும் அண்ணாவிடம் சொல்லி விடுவேன். திட்டுவதோ, சண்டை போடுவதோ அண்ணாவுக்குப் பிடிக்காது. எனக்குத் தடை போட்டு விடுவார். அதன் பின்னர் என்னால் அந்த மனிதரிடம் கோபத்தைக் காட்ட முடியாது. எனவே, அண்ணாவிடம் போவதைத் தாற்காலிகமாகத் தவிர்த்தேன்.

அண்ணாவோ, ஏதேதோ பணிகளைச் சொல்லி அனுப்பிய வண்ணம் இருந்தார், அத்தனை வேலைகளையும் முடித்து, உரிய பொருட்களை எடுத்துக் கொண்டு நானே அண்ணாவிடம் போக வேண்டிய நிலை ஏற்பட்டது. வேறு வழியில்லாமல் நேரில் போய் விட்டேன்.

இருந்தாலும், சண்டை விஷயத்தை அண்ணாவிடம் சொல்லாமல் தவிர்க்க விரும்பினேன். அண்ணா விடவில்லை. “வேற என்ன விஷயம், வேற என்ன விஷயம்?” என்று திரும்பத் திரும்பக் கேட்டார். அதற்கு மேல் என்னால் மறைக்க முடியவில்லை. முழு விவகாரத்தையும் அண்ணாவிடம் ஒப்பித்தேன்.

“சாரதா பப்ளிகேஷன்ஸை நீ தான் நடத்தறயா?” என்று கேட்ட அண்ணா, “இல்லைடா குழந்தை, அம்பாள் தான் நடத்தறா. அண்ணா சொல்றேன். சாரதா பப்ளிகேஷன்ஸை சாரதை தான் நடத்தறா. அம்பாளே நடத்தறாள்-னா ஏன் இவ்வளவு அப்ஸ் அன்ட் டௌன்ஸ்-னு உனக்குத் தோணலாம். உனக்குப் புரியாது. உன்னால புரிஞ்சுக்கவும் முடியாது. புரிஞ்சுக்க முயற்சியும் பண்ணாதே.... இஃப் அட் ஆல், உன்னால யார் கிட்டயாவது இந்த விஷயத்தைப் பத்தி அன்பா பேச முடிஞ்சா பேசு. இல்லாட்ட அப்படியே விட்டுடு” என்றார்.

***

வாழ்வில் எனக்கு சம்பந்தமே இல்லாத காரணங்களால் எனக்கு ஏற்பட்ட பாதிப்புகள் ஏராளம். இது தான் கர்ம வினை என்பதோ என்று நினைத்தேன். இதைப்பற்றி அண்ணாவிடம் கேட்கலாம் என்று தோன்றியது.

ஒருமுறை அண்ணாவிடம் போயிருந்த போது, “அண்ணா, கர்மா, கர்மா-ன்னு சொல்றாளே, அண்ணா” என்று ஆரம்பித்தேன். அண்ணா என்னை மேற்கொண்டு பேசவே விடவில்லை

“இதோ பாரு, ஒரு பைத்தியம் தன்னைத் தானே சவுக்கால அடிச்சுக்கறதுன்னா அதுக்கு என்ன காரணம் சொல்லுவே? அது பைத்தியம். அப்படித்தான் இருக்கும். அதுக்கு யாரு என்ன காரணம் சொல்றது? பராசக்தியும் பைத்தியம் தான். அவள் மகா மாயை. அவ என்ன பண்றா, ஏன் பண்றா-ன்னு நம்மால புரிஞ்சுக்க முடியாது. குழப்பிக்காதே” என்றார்.

***

அண்ணாவுடன் பல வருடங்கள் இருந்தும் என்னிடம் எந்த மாற்றமும் இல்லை தான்.

அதேநேரத்தில் -

எது நல்லது, எது கெட்டது என்று இந்த உலகத்தில் சொல்கிறோமோ, அது உண்மையில் நல்லது-கெட்டது அல்ல என்பது புரிகிறது.
என்னால் எதையும் புரிந்து கொள்ள முடியாது என்கிற தெளிவு இருக்கிறது.
வாழ்க்கையில் எதையோ புரிந்து கொள்ள வேண்டும் என்கிற ஆர்வம் மறைந்து விட்டது.

அதாவது -

புரிய வைக்கப்பட்டிருக்கிறது.
தெளிவு தரப்பட்டிருக்கிறது.
ஆர்வம் அகற்றப்பட்டிருக்கிறது.

இது தான் அண்ணா எனக்குச் செய்த அனுக்கிரகம்.

**18. நந்தவனத்தில் ஓர் ஆண்டி**

அண்ணாவின் உழைப்பை வார்த்தைகளில் வர்ணிக்க முடியாது. கற்பனையே செய்ய முடியாத அளவு கடுமையான உடல்-மன-புத்தி ரீதியான உழைப்பு அது. பக்கம் பக்கமாக - மலை மலையாக - நுணுக்கி நுணுக்கி - பார்த்துப் பார்த்து - அணு அணுவாக ரசித்து - மிகுந்த ஈடுபாட்டுடன்.... இதுபோன்ற ஏராளமான அடைமொழிகள் மூலமாகவும் அவரது உழைப்பை முழுமையாக விவரித்து விட முடியாது.

அவரது எழுத்துப் பணி மட்டுமல்ல, அவரது வாழ்க்கையின் ஒவ்வொரு செயலும் திட்டமிட்ட ரீதியில் ஒழுங்குப்பாட்டுடன், அழகாக அமைந்திருக்கும். எல்லாச் செயல்களும் குறித்த நேரத்தில் நடைபெறும்.

அவர் அறையில் எந்தப் பொருளும் இடம் மாறாது. கடைசி பத்து வருடங்களில் புத்தக வாசிப்பு அறவே நின்று விட்டது. மிகச்சில புத்தகங்கள் மட்டுமே அப்போது அவரிடம் இருந்தன. அவை டீபாய் மீது வைக்கப்பட்டிருந்தன. அந்தப் புத்தகங்களை நான் எப்போதாவது எடுத்துப் புரட்டுவேன். மூன்றாவதாக வைக்கப்பட்டிருக்கும் புத்தகத்தை எடுத்தால், அதை மீண்டும் மூன்றாவதாகவே வைக்க வேண்டும்.

“ஐயோ, தாங்கலைடா சாமி” என்று தான் சொல்லத் தோன்றும்!

சில சமயம் அண்ணாவைப் பார்க்கும் போது பாவமாக இருக்கும் என்று சொல்லி இருந்தேன்.

“இந்த ஒட்டடைக் குச்சி தேகத்தால் எப்படி இவ்வளவு உழைக்க முடிந்தது?” என்று வியப்பு ஏற்படுவதும் தவிர்க்க முடியாதது. ஒட்டடைக் குச்சி மட்டுமல்ல, அந்த தேகத்துக்கான எரிபெருள் பெரும்பாலும் சுடு தண்ணீர் மட்டுமே. அத்தகைய கடுமையான உபவாசப் பழக்கம்.

பரிதாபம், வியப்பு முதலியவை எல்லாம் ஆரம்ப காலத்தில் எழுந்த உணர்ச்சிகள். நாளாக ஆக, அண்ணா எனக்கு வேடிக்கைப் பொருளாகி விட்டார். குறிப்பாக, இறுதி வருடங்களில் அவர் தனது வயிற்று வலியைப் பற்றிச் சிரித்துக் கொண்டே சொல்லும் போது நான் பெரிதாகச் சிரிப்பேன்.

நூல்களுக்காக அவர் உழைத்த உழைப்பு ஒருபுறம் இருக்கட்டும், அவரது குணங்களும் போற்றத் தக்கவையே. அண்ணா, எங்களில் சிலரை மிக அபூர்வமாக எப்போதாவது திட்டியதுண்டு, கண்டித்துப் பேசியதும் உண்டு. பொது வாழ்வில் இருக்கும் சிலரை விமர்சனம் செய்து பேசியதும் குறை கூறியதும் உண்டு, சிலருக்கு இத்தகைய விஷயங்களைக் கடிதம் மூலம் எழுதியதும் உண்டு.

ஆனால், அவர் யாருக்குமே கெடுதி நினைத்ததில்லை.

அவரது வாழ்வில் பிறருக்கு அவர் வழங்கிய அதிகபட்சத் தண்டனை, அவர்களைச் சந்திக்காமல் தவிர்ப்பது மட்டுமே.

பிறருக்கு அண்ணா கெடுதி நினைக்கவில்லை என்பதைப் போலவே, பிறர் அவருக்குக் கெடுதி நினைக்கவில்லை என்பதும் முக்கியமானது. முதல் புத்தகம் வெளியான போதே புகழின் உச்சிக்குப் போனவர், அவரது காலத்தின் அதென்டிக் ஆன்மிக எழுத்தாளர்... இப்படிப்பட்ட பிரபலமான மனிதர் மீது பலருக்கும் பொறாமை ஏற்படுவது இயல்பான விஷயமே. ஆனால், அண்ணா மீது பொறாமை கொண்டவர்கள் மிகவும் குறைவு என்பது ஆச்சரியம் தான்.

அவரது எழுத்தையும் - குறிப்பாக, தெய்வத்தின் குரலையும் - சிலர் குறை கூறியதுண்டு. என் காதுபடவே அவ்வாறு பேசிய ஒருவரும் உண்டு. ஆனால், இதெல்லாம் மிகவும் குறைவு தான்.

பெரியவாளே அண்ணாவைக் கண்டித்திருக்கிறார் - தெய்வத்தின் குரல் என்ற தலைப்புக்காக.

தன்னை "தெய்வம்" என்று அண்ணா குறிப்பிட்டதில் பெரியவாளுக்கு உடன்பாடு இல்லையாம். (அனேகமாக, பெரியவாளுக்கு உடன்பாடு இல்லாத செயலை அண்ணா செய்தது இது மட்டுமே என்று நினைக்கிறேன்.)

அண்ணாவுக்குப் பணம் தராமல் ஏமாற்றிய ஒருசிலர் உண்டு.

எனினும், அவரை இழிவாகப் பேசியவர்கள் அல்லது அவரிடம் மரியாதைக் குறைவாக நடந்து கொண்டவர்கள் யாருமே இல்லை.

மாறாக, அவரைக் கொண்டாடியவர்கள் தான் அதிகம். எத்தனையோ அன்பர்கள் மனதில் பெரியவாளுக்கு அடுத்த இடத்தில் வீற்றிருப்பவர் அண்ணா. ஆனால், ஒரு வித்தியாசம், அவர்கள் பெரியவாளைப் பலமுறை தரிசித்திருப்பார்கள். எத்தனையோ புகைப்படங்களிலும் பார்த்திருப்பார்கள். அண்ணாவை நேரில் சந்தித்திருக்கவும் மாட்டார்கள், புகைப்படங்களில் பார்ப்பதற்கும் வாய்ப்புக் கிடைக்காது.

இதுபோன்ற பல்வேறு காரணங்களால், அண்ணாவுக்குப் பணிவிடை செய்த அன்பர்கள் பலரின் கண்ணோட்டத்தில், அண்ணா, "வாழ்க்கையை முழுமையாக வாழ்ந்தவர், நிறைவாக வாழ்ந்தவர்".

ராமாயண உபன்னியாசகர்கள் ஒரு மங்கள சுலோகம் சொல்வார்கள்:

சுந்தரே சுந்தரீ லங்கா சுந்தரே சுந்தரீ சீதா
சுந்தரே சுந்தரீ கதா சுந்தரே கிம் ந சுந்தரம்?

(சுந்தர காண்டத்தில் லங்கை அழகானது, சுந்தர காண்டத்தில் சீதை அழகானவள், சுந்தர காண்டத்தில் கதை அழகானது. சுந்தர காண்டத்தில் அழகில்லாதது எது?)

நிறைய அன்பர்களின் பார்வையில் அண்ணாவின் வாழ்வும் அப்படியே.

ஆனால், அண்ணாவைப் பற்றிய என்னுடைய பார்வை வேறு..

"நான் வாழ்கிறேன்" என்று சொல்கிறேன். அதைப் புரிந்து கொள்ள முடிகிறது. நான் நன்றாக வாழ்கிறேனா, உருப்படியாக வாழ்கிறேனா என்பது வேறு விஷயம். ஆனாலும், "நான் எனது வாழ்க்கையை வாழ்கிறேன்" என்பதில் யாருக்குமே மாற்றுக் கருத்து இருக்க முடியாது.

ஆனால், அண்ணா அவரது வாழ்க்கையை "வாழ்ந்தார்" என்பதை என்னால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

அவரது உழைப்பைப் பற்றி நான் சொன்ன அனைத்தும் உண்மை. சொல்லாமல் விட்டது தான் அதிகம். ஆனால், அந்த உழைப்பில் அவர் இருந்தாரா என்பதே எனது கேள்வி.

நான் இந்தத் தொடர் எழுத ஆரம்பித்ததும், அன்பர் மோகன் தாஸ், என்னிடம், "அண்ணா என் உடைமைப் பொருள்" என்ற தலைப்புக்கான காரணத்தை வினவினார். "அவர் எனக்கு உடைமைப் பொருள் தானே?" என்று கேட்டேன். உடனே, மோகன், "நானும் அண்ணாவை அப்படித்தான் பார்க்கிறேன்" என்றார். அதற்கு நான், "நாம் இருவர் மட்டுமல்ல, இன்னும் நிறைய அன்பர்கள் உண்டு. ஒவ்வொருவருக்கும் அவர் உடைமைப் பொருள் தான்" என்று குறிப்பிட்டேன்.

இதற்குக் ஒரு காரணம், அண்ணா மீது எங்கள் ஒவ்வொருவருக்கும் இருக்க முடிகிற ஸ்வாதீனம்..

ஆனால், அதை விட முக்கியக் காரணம், அண்ணா "தனக்கு உரியவராக இல்லாதது" தான்.

"நந்தவனத்தில் ஓர் ஆண்டி - அவன்
நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டி
கொண்டு வந்தானொரு தோண்டி - அதைக்
கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத்தான்டி"

என்று ஒரு பிரபலமான சித்தர் பாடல் உண்டு.

"பத்து மாதம் தாயின் கருவில் தவமிருந்து பெறப்பட்ட உடல் இது. அறியாமையால் ஏதேதோ வீண் செயல்கள் செய்து இந்த வாழ்க்கையை வீணடித்து விட்டு, இறந்து போகிறோம்" என்று இதற்குப் பொருள் சொல்கிறார்கள்.

இது நம்மைப் போன்ற பலரின் வாழ்க்கையைச் சித்தரிப்பதாகச் சொல்கிறார்கள்.

எனக்கென்னவோ, இதை வேறு விதமாகப் பொருள் கொள்ள வேண்டும் என்றே தோன்றுகிறது. இந்தப் பாடல் நம்மைப் போன்றவர்களுக்குப் பொருந்தாது, அண்ணாவைப் போன்றவர்களுக்குத் தான் பொருந்தும் என்றும் தோன்றுகிறது.

ஏனெனில், "நான் வாழ்கிறேன்" என்பது சரி.

ஆனால், "அண்ணா வாழ்ந்தார்" என்பது தவறு.

அவர் வாழ்க்கையை "விளையாடினார்" என்று சொன்னால் சரியாக இருக்கும்.

கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத்து விட்டுப் போய் விட்டார்.

"சொப்பு விளையாட்டு முடிஞ்சுது. கிளம்பறேன். டாடா பைபை" என்று சொல்லி வீட்டுக்குப் புறப்படும் குழந்தையைப் போலவே அவர் "பை பை" சொல்லி விட்டுக் கிளம்பியதும் இதையே காட்டுகிறது.

அவர் "இருந்தார்" என்று சொல்லப்பட்ட காலத்திலும் கூட அவர் "இல்லை" என்பதே எனது கருத்து. அண்ணா "வாழ்ந்த" வாழ்க்கை ஒரு கானல்நீர், மாயத்தோற்றம், பொய்க் கனவு.

ஏனெனில், அந்த வாழ்க்கையின் எந்த அம்சத்திலும் அவர் ஒட்டவே இல்லை.

தாமரை இலைத் தண்ணீர் தான்.

***

அண்ணா பற்றி எழுதும் விருப்பம், எழுதுவதில் தயக்கம் - ஆகிய இரண்டையும் பற்றிச் சொல்லி இருந்தேன்.

நான் என் செயலை எவ்வளவு தூரம் நியாயப்படுத்தினாலும், நான் அண்ணாவைப் பற்றிப் பொதுவெளியில் எழுதியது, அண்ணாவின் கண்ணோட்டத்தில், தவறானதாகவே தெரியும்.

அகோபில மடத்து ஜீயர் (பூர்வாசிரமத்தில் ரங்கராஜன்) பற்றிக் குறிப்பிட்டிருந்தேன். அவர் பல இடங்களில் பெரியவாளைப் பற்றி உயர்வாகப் பேசுவதுண்டு. அவர் ஒரு பாரம்பரிய குரு பீடத்தின் அதிபர். பெரியவா, அந்த சம்பிரதாயத்தில் இருந்து வேறுபடும் சம்பிரதாயத்தின் அதிபராக இருந்தவர். எனவே, பெரியவா பற்றி அந்த ஜீயர் அத்யந்த பக்தியுடன் பேசுவது அவர் சம்பிரதாயத்தைச் சேர்ந்த பலருக்கு உவப்பான விஷயமாக இருக்காது என்பது நிச்சயம்.

அவரது சம்பிரதாயத்தைச் சேர்ந்தவர்கள் ஒருபுறம் இருக்கட்டும், பெரியவாளுக்கு நிச்சயம் உடன்பாடு இல்லாத விஷயம் இது என்பதை என்னாலேயே புரிந்து கொள்ள முடிகிறது.

எனக்கே புரிகிற இந்த விஷயம் அந்த ஜீயருக்குத் தெரியாதா?

ஆனாலும், அவர் பெரியவா பற்றிப் பேசி வருகிறார்.

இதற்கான காரணத்தை அவர் சொல்கிறார்: "பெரியவா பற்றி நான் பேசணும். அவரைக் கொண்டாடணும். இல்லேன்னா நான் க்ருதக்னன் (நன்றி கெட்டவன்) ஆயிடுவேன்." இதைச் சொல்லும் போதெல்லாம் அவர் கண்களில் உணர்ச்சி பொங்கும், தாரை தாரையாகக் கண்ணீர் பெருகும்.

என் நிலையும் அது தான். எத்தனையோ அன்பர்களின் நிலையும் அது தான்.

அண்ணா, அண்ணா, அண்ணா என்று நான் அவரைக் கொண்டாட வேண்டும்.

இல்லாவிட்டால் நான் நன்றி கெட்டவன் ஆகி விடுவேன்.

இது அண்ணா சம்பந்தப்பட்டது அல்ல - ஸ்ரீதரன் சம்பந்தப்பட்டது மட்டுமே.

நான் மட்டுமல்ல, தெய்வத்தின் குரலுக்காகவும், "ஸ்வாமி"க்காகவும், இதர நூல்களுக்காகவும் அன்பர்கள் அனைவரும் அண்ணாவுக்கு நன்றி சொல்ல வேண்டும், அவரைக் கொண்டாட வேண்டும்.

அண்ணாவின் "வாழ்க்கை" மட்டுமல்ல, அவரது "பை பை" மரணமும் கொண்டாடப்பட வேண்டிய விஷயமே. அந்த மரணத்தில் துக்கம் இல்லை. ஆனந்தம் மட்டுமே இருந்தது.

"தெய்வத்தின் குரல்" பாணியில் சொல்வதானால், அவரது பிறப்பு மங்களாரம்பம், மறைவு மங்களாரத்தி.

ஆம், அண்ணா மங்கள வஸ்து.

அது பூஜிக்கப்பட வேண்டியது, கொண்டாடப்பட வேண்டியது.

அண்ணாவைப் பற்றி எழுத வேண்டும் என்ற விருப்பம், கூடவே கூடாது என்ற எண்ணம் - ஆகிய இரண்டுக்கும் நடுவே ஊசலாடித் தவித்தேன் என்பது உண்மையே.

ஆனால், முழுக்க முழுக்க மனம் விரும்பியே இதை எழுதி இருக்கிறேன்.

ஒருவகையில், "நான்" எழுதினேன் என்று சொல்வது உண்மை அல்ல.

இந்தத் தொடர் வெளிவந்த இத்தனை நாட்களும் அண்ணா பற்றிய எண்ணங்கள் என்னை முழுமையாக ஆக்கிரமித்து இருந்தன. பெரும்பாலான நேரம் கம்ப்யூட்டர் முன்னே அமர்ந்து உணர்ச்சி மேலீட்டில் தத்தளித்துக் கொண்டிருந்தேன்.

என்னை மீறிய ஏதோ ஒன்று தான் என்னை இயக்கி இந்தத் தொடர் உருவாகக் காரணமாக இருந்தது என்பது சத்தியம்.

"நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோ நம:"

- என்ற நமஸ்கார அஞ்ஜலியுடன் நிறைவு செய்கிறேன்.

நமஸ்காரம் அவளுக்கு மட்டுமல்ல, அவளது அம்சங்களே ஆன உங்களுக்கும் தான்.

**ச்ரேயோ பூயாத் ஸகல ஜனானாம்.**